**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©
**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 27-8-2018 Issued: 27-8-2018

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
# (பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
# (FIFTEENTH ASSEMBLY)

வெள்ளிக்கிழமை, ஜனவரி 12, 2018—தொகுதி 36—எண் 2

**Friday the 12th January 2018—Volume 36—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

விலை ரூ. 3.00] **[Price Rs. 3.00**

12-1-2018

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 331-386 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) தூத்துக்குடி தொகுதி, விசைப் படகு மீனவத் தொழிலாளர்கள் பாதிப்பு | 387-389 |
| திருமதி பி. கீதா ஜீவன் | 387 |
| மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 387-389 |
| (ஆ) சென்னை, யானைக்கவுனி பாலப் பணிகள் விரைந்து முடித்தல் | 389-392 |
| *திரு. பி.கே. சேகர்பாபு | 389-390 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 390-392 |
| (இ) குட்கா பிரச்சினை வழக்கு குறித்து | 392 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 392 |
| **3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 | 393 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 393 |
| (ஆ) தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமுன்வடிவு, 2018 | 393-394 |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 394 |
| (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2018 | 412 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 412 |

| | பக்கங்கள் |
|---|---|
| **4. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2017–2018, அளித்தல்—** | 394-403 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 394-403 |
| **5. அரசினர் தீர்மானங்கள்—** | |
| (அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் முன்மொழியப்பெற்று வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளுதல் | 404 |
| (ஆ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் | 651-652 |
| (இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் | 718-720 |
| **6. அறிவிப்புகள்—** | |
| (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2017–2018, முன்மொழிதல் (ஆ.செ.) | 405 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2018 (ஆ.இ.) | 412 |
| (இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 (ஆ.இ.) | 654 |
| **7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2017–2018, வாக்கெடுப்பு** | 405-411 |
| மாண்புமிக திரு. ஓ. பன்னீர்செல்வம் | 405 |
| **8. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்–விவாதத்திற்கான பதிலுரை—** | 413-651 |
| மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 593-636, 639-640, 646,650 |





| | பக்கங்கள் |
|---|---|
| 8. **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்– விவாதத்திற்கான பதிலுரை—** தொடர்ச்சி | |
| திரு. துரைமுருகன் | 612-613,615, 636,637 |
| திரு. எ.வ. வேலு | 637-638 |
| திரு. என். சுரேஷ் ராஜன் | 638 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 638-639,648 |
| திருமதி எஸ். விஜயதரணி | 640-641 |
| திரு. தங்கம் தென்னரசு | 641 |
| *மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் | 642 |
| மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 642 |
| திரு. வி.வி. இராஜன் செல்லப்பா | 643 |
| *திரு. பழனிவேல் தியாக ராஜன் | 643-644 |
| திரு. ஜெ. அன்பழகன் | 644-645 |
| *மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 645-646 |
| திரு. என். முருகுமாறன் | 647 |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 648 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 649-650 |
| **9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2018 | 652-654 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 652-653 |

பக்கங்கள்

9. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — 654,671

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 654-659, 662-663,671

திரு. மு.க. ஸ்டாலின் — 655-656,659, 661-663, 667-668

திரு. கரி. இராமசாமி — 656

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி — 660-661,662, 664,668-669

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் — 664-666

திரு. துரைமுருகன் — 666-667

(இ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — 671-673

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 671-673

(ஈ) தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — 673-675

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 673-675

(உ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — 675-677

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 675-677

(ஊ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — 677-877

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 678,681-683 685-686





பக்கங்கள்

9. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** தொடர்ச்சி

திரு. மா. சுப்பிரமணியன் — 678-680

திருமதி எஸ். விஜயதரணி — 680-681

திரு. மு.க. ஸ்டாலின் — 684

(எ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — 687-689

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 687-688

(ஏ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — 689-694

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 689,692-693

*திரு. கே.என். நேரு — 689-690

திருமதி எஸ். விஜயதரணி — 690-691

திரு. துரைமுருகன் — 691-692

(ஐ) தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — 694-704

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 694,698-704

திரு. டி. செங்குட்டுவன் — 694-697

திருமதி எஸ். விஜயதரணி — 697-698

திரு. துரைமுருகன் — 700

(ஒ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 — 704-712

பக்கங்கள்

**9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** தொடர்ச்சி

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 704-705, 708,710

திரு. கு. பிச்சாண்டி 705

திருமதி எஸ். விஜயதரணி 706-708

(ஓ) தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமுன்வடிவு, 2018 710-712

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 710-712

(ஔ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2018 712-714

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் 712-714

(அஅ) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 714-716

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில் 714-716

(அஆ) தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 716-718

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில் 716,718

**10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 720-721

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஹேவிளம்பி, மார்கழி 28, திருவள்ளுவர் ஆண்டு 2048

## 2018 ஜனவரி 12, வெள்ளிக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு"

உலகில் மகிழ்ச்சியுடன் வாழ்கிறவர்களின் உயர்வுக்குக் காரணமாய் விளங்குவது, அனைவரிடமும் அன்பு செய்து வாழும் வாழ்க்கையே ஆகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**31—**

### விற்பனைப் பத்திரம்

***1576—திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, ஊரப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினால் ஒதுக்கீடு பெற்றவர்களில் முழுத் தொகையையும் செலுத்தியவர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். இத்திட்டப் பகுதியினுடைய நிலம் வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்ய அரசிடம் அரசாணை பெற பிரேரணை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது. நில மாற்ற அரசாணை வரப்பெற்றதும் கிரயப் பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

**திருமதி ம. வரலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். செங்கல்பட்டு தொகுதியில் காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள, ஊரப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில் செல்லியம்மன் நகர் பகுதியில் 165, 169 மற்றும் 171 ஆகிய சர்வே எண்களைக் கொண்ட பகுதிகளைத் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் 1993 ஆம் ஆண்டு கையகப்படுத்தியது. அந்த ஆண்டே குடிசை மாற்று வாரியம் சுமார் 186 நபர்களுக்கு வீடுகளை ஒதுக்கீடு செய்துள்ளது. ஒதுக்கீடு பெற்றவர்களில் 96 நபர்கள் முழுத் தொகையையும் செலுத்தி வாரியத்திடம் தவணை ஏதும் இல்லை என்று தடையில்லாச் சான்றும் பெற்றுள்ளனர். முழுத் தவணைத் தொகையைச் செலுத்தியவர்களுக்குக்கூட இதுவரை அரசு விற்பனைப் பத்திரம் வழங்கவில்லை. ஆகவே, பணம் முழுமையாகச் செலுத்தியவர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கிட அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ள இந்தக் கேள்விக்கு உள்ள நிலையை உள்ளபடியே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். காஞ்சிபுரம் மாவட்டம்,



2018 ஜனவரி 12]

செங்கல்பட்டு வட்டம், கிளாம்பாக்கம் கிராமம், புல எண்கள் 165, 169 மற்றும் 171–ல் 3.08.0 ஹெக்டேர் நிலப் பரப்பில் செல்லியம்மன் நகர் திட்டப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்பட்டன. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மொத்தம் 15 திட்டப் பகுதிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் செல்லியம்மன் நகர் திட்டப் பகுதிக்கான நில மாற்ற பிரேரணைகள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நடவடிக்கையில் உள்ளது. இத்திட்டப் பகுதியில் நில மாற்றம் செய்த பின்னர் இப்பகுதியில் குடியிருக்கும் மனைதாரர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சில கூடுதலான விவரங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், கிளாம்பாக்கம் கிராமம், புல எண்கள் 165, 169 மற்றும் 171 ஆகிய பகுதிகளின் மொத்த பரப்பளவு 3.08.0 ஹெக்டேர். நிலத்தின் வகைப்பாடு ஏரி உள்வாயில், குட்டைப் புறம்போக்கு. திட்டம் செயல்படுத்தப்பட்ட ஆண்டு 1992. இந்திட்டத்தைச் செயல்படுத்தியபோது உரிய மனைகளை நில மாற்றம் செய்யாமல் அந்தப் பகுதிக்கு முன் நுழைவு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகள் 96. சாலை விரிவாக்கத்தில் பாதிக்கும் மனைகள் 40. மீதி ஒதுக்கீடு வழங்க வேண்டியது 51. முழுத் தொகையும் செலுத்தப்பட்ட மனைகள் 17. மேற்கண்ட நிலங்கள் வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்யப்படாததால் கிரயப் பத்திரமும் வழங்கப்படவில்லை. மாவட்ட ஆட்சியருக்கு நில உரிமை மாற்றப் பிரேரணை அனுப்பப்பட்டிருக்கிறது. அவருடைய பரிசீலனையில் இருக்கிறது. நேற்று நேரடியாக அவரையும் நான் தொடர்புகொண்டு பேசியிருக்கிறேன். நில மாற்றப் பிரேரணை அரசுக்கு வந்தவுடன், கூடிய விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, அனைவருக்கும் கிரயப் பத்திரம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

**திருமதி ம. வரலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரப்பாக்கம் முதல் நிலை ஊராட்சி, செல்லியம்மன் நகர் பகுதியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினால் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முழுத் தொகையையும் செலுத்திய ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி, நான் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்ற பிறகு, கடந்த 24–6–2016 ஆம் தேதியன்று தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளேன். 18 மாதங்கள், அதாவது ஒன்றரை வருடங்கள் கடந்த பிறகும், இதுவரை எனக்கு எந்தவித பதிலும் தெரிவிக்கப்படவில்லை. இத்திட்டப் பகுதி நிலம், வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் நடைபெறாமல் விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, ஒதுக்கீடுதாரர்களுக்கு விரைவில் விற்பனைப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை 11 மாவட்டங்களில் 1983 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இருக்கின்றது. இதற்கு முக்கியமாக சில காரணங்கள் அங்கே இருக்கின்றன. அந்நிலங்களெல்லாம் நீர்நிலைப் புறம்போக்குகளாக உள்ளன. நீர் வழித்தடங்களில் உள்ள அந்த மனைகளுக்கு அரசின் மூலமாக அந்தக் காலக்கட்டங்களில் முன்னனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. 238 திட்டப் பகுதிகளில் அமைந்துள்ள கிட்டத்தட்ட 42 ஆயிரம் குடும்பங்களுக்கு இந்தப் பிரச்சினை 11 மாவட்டங்களில் உள்ளது. நில உரிமை மாற்றத்தின்போது, இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் முடிவு கண்டு, நில மாற்றம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். நீர்நிலைப் புறம்போக்குகளில் நில மாற்றம் செய்யக் கூடாது; மனைகள் கட்டக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் இடைப்பட்ட காலத்தில், தடையாணை, இறுதி ஆணை பிறப்பித்திருக்கின்றது. எனவே, இதில் சட்டப் பிரச்சினைகளும் இருக்கின்றன. இந்தச் சட்டப் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு கண்டு, இதனை முழுமையாக முடிக்க வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. இந்தக் கேள்வி வந்தவுடன், நேற்று, இதுபோன்ற பிரச்சினைகள்





மற்ற மாவட்டங்களிலும் உள்ளதா என்பதைக் கேட்டு, நான் விவரங்களையெல்லாம் சேகரித்து வைத்திருக்கிறேன். இப்பிரச்சினை, சென்னை–108 திட்டப் பகுதிகள், காஞ்சிபுரம்–15 திட்டப் பகுதிகள், திருவள்ளூர்–18 திட்டப் பகுதிகள், மதுரை–5 திட்டப் பகுதிகள், திருச்சி–19 திட்டப் பகுதிகள், கோயம்புத்தூர்–20 திட்டப் பகுதிகள், சேலம்–42 திட்டப் பகுதிகள், ஈரோடு–4 திட்டப் பகுதிகள், திருப்பூர்–5 திட்டப் பகுதிகள், திருநெல்வேலி–2 திட்டப் பகுதிகள், வேலூர்–2 திட்டப் பகுதிகள் என 11 மாவட்டங்களில் இருக்கிறது. இதுகுறித்து அரசுச் செயலாளர் அவர்களிடமும் கலந்து பேசியிருக்கிறேன். இனிவருகின்ற காலங்களில் எவ்வித சட்டப் பிரச்சினைகளும் வரக்கூடாது என்பதற்காக, இது பற்றிக் கலந்துபேசி, இவற்றுக்கெல்லாம் ஒட்டுமொத்தமாக ஒரே அரசாணை வெளியிட்டு, சம்பந்தப்பட்டவர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை கூடிய விரைவில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.

**திரு. S. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் விற்பனைப் பத்திரத்தை வழங்காமல் இருப்பதற்கு மிக முக்கியக் காரணமாக இருப்பது, சம்பந்தப்பட்ட துறைகள் குடிசை மாற்று வாரியத்திற்கு நில மாற்றம் செய்வதில் ஏற்படுகின்ற காலதாமதம்தான் என்பது தெரிய வருகிறது. எனவே, சம்பந்தப்பட்ட நிலம் எந்தத் துறையின்கீழ் வருகின்றதோ, அந்தத் துறையிடமிருந்து விரைவாக நில மாற்றம் செய்வதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முக்கியமாக தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய வீடுகளை ஒதுக்கீடு பெறுபவர்கள், பரம ஏழைகளாக இருப்பவர்கள். அவர்கள் சில சூழ்நிலைகள் காரணமாக, சில நிர்ப்பந்தங்கள் காரணமாக, மற்றவர்களுக்கு அந்த வீடுகளைக் கொடுத்து, அவர்களைக் குடிவைத்து விடுகிறார்கள் அல்லது ஒதுக்கப்பட்ட வீடுகளின்மீது கடன் வாங்கிவிடுகிறார்கள். இதனால், என்ன நடக்கிறது என்றால், அப்படி முறைகேடாக அந்த வீடுகளிலே குடியிருப்பவர்கள் அல்லது ஒதுக்கீடுதாரர்களுக்கு பணத்தைக் கடனாகக் கொடுத்தவர்கள், துறையை ஏமாற்றி பல record–களை தயார் செய்து, ஒதுக்கீடுகளை தங்கள் பெயர்களுக்கு மாற்றிக்கொள்கின்ற ஒரு சூழ்நிலைகூட

[2018 ஜனவரி 12

ஏற்படுகிறது. அப்படிச் செய்கிறபோது தகுதியான ஒதுக்கீட்டாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள்; வசதியானவர்கள் அந்த வீடுகளிலே குடியேறிவிடுகிறார்கள். எனவே, இவற்றையெல்லாம் தவிர்ப்பதற்கு இந்தத் துறை ஏற்கெனவே இருக்கின்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். இவற்றையெல்லாம் முழுமையாகத் தடுப்பதற்கு அரசு முன்வருமா, துறை நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு, குடிசைகளற்ற மனைகள் உருவாக்கப்பட வேண்டும். அந்த மனைகளில் உறுதித் தன்மை வாய்ந்த வீடுகள் கட்டப்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அங்கு வாழ்கின்ற ஏழையெளிய மக்களுக்கு தவணை முறையில் நில கிரயங்கள் உறுதி செய்யப்பட்டு தவணை முறையில் அவர்களுக்கு வழங்கப்பட்டன. சிலர் தவணைகளை ஒழுங்காகக் கட்டியிருக்கின்றனர்; சிலர் கட்டவில்லை. குறிப்பாக மனைகள் ஒதுக்கியபோது யார் பெயரில் இருந்ததோ அந்தப் பெயரில் இப்போது இல்லாத நிலை. அவர்களாகவே internal agreement போட்டுக்கொண்டு, கிட்டத்தட்ட 8, 9 முறை கைமாறியிருக்கிறது. இதுபோன்ற பிரச்சினைகள் அவற்றில் பொதிந்து கிடப்பதனால், ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு 44,000 மனைகளுக்கும் தீர்வு காண்பதென்பது இயலாத காரியமாகும். எனவே, ஒட்டுமொத்தமாக ஓர் அரசாணையை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு, அரசு இப்போது அந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் செம்மலை அவர்கள் சொன்னதுபோல, அவர்களுக்குப் பின் தொடர்ச்சியாக, மனைகளை விற்றுச் சென்றவர்களுக்கும், புதிதாகக் குடி வந்திருப்பவர்களுக்கும் பாதிப்பு இருக்கக் கூடாது என்பதற்காக, பல்வேறு விவரங்களையெல்லாம் பெற்று, இதுகுறித்து கலந்து பேசி, நிரந்தர முடிவு வரவேண்டுமென்று இந்தப் பிரச்சினை இப்போது எடுக்கப்பட்டிருக்கிறது. உறுதியாக உள்ளேயிருக்கின்ற பிரச்சினைகளெல்லாம் தீர்க்கப்பட்டு கூடியவிரைவில் அங்கு குடியிருக்கின்ற மனைதாரர்களுக்கு வீட்டு கிரயப் பத்திரம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**32—**

## நூலகக் கட்டடம்

***4348—திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறையிலுள்ள நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தனது கடுமையான சீரிய மக்கள் பணியாலும், தன் இல்லத்தையே நூலகமாக வைத்து, 6 மொழிகளிலே பேசக்கூடிய ஓர் ஆற்றல்மிக்க தலைவியாக, உலகமே வியக்கத்தக்க அளவிற்கு விளங்கிய (மேசையைத் தட்டும் ஒலி) போற்றுதலுக்குரிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறையில் நூலகக் கட்டடம் புதியதாகக் கட்டித் தரப்படுமா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். 2,358 சதுர அடியில் நூலகக் கட்டடம் கட்டுவதற்குத் தோராயமாக 72 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இப்போது நிதி நெருக்கடி இருக்கின்ற காரணத்தின் அடிப்படையில், வருகின்ற ஆண்டிலே இந்த நூலகக் கட்டடம் கட்டுவதற்கு நிதியைப் பெற அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. வி. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வமாய், ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிர்த் துடிப்பாய், உலகத் தமிழர்களின்

[2018 ஜனவரி 12

பாதுகாவலராய், சமூக நீதிக் காத்த வீராங்கனையாய், காவேரியை மீட்டுத் தந்த கற்பக விருட்சமாய், தமிழக மக்களின் தவமாய் தோன்றி, தமிழ், தமிழர்களின் நலன் காக்க தன்னையே அர்ப்பணித்து, கண்ணை இமை காப்பதுபோல வாழும் காலம் வரை தமிழ் மக்களைக் காத்திட்ட மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 144 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் காவேரி புஷ்கர விழாவினைச் சிறப்பாக நடத்திக் காட்டி, மயிலாடுதுறைக்குச் சிறப்பு சேர்த்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், எங்கள் மாவட்ட கழகச் செயலாளரும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எனது சார்பாகவும் எனது மயிலாடுதுறை தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையில் உள்ள நூலகம் 28–1–1961 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மிகப் பழமையான இந்த நூலகத்தில் சுமார் 49,000 நூல்கள் உள்ளன. 86 புரவலர்கள் மற்றும் 11,680 உறுப்பினர்களைக் கொண்டு இந்த நூலகம் மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. தினந்தோறும் 100–க்கும் மேற்பட்டோர் இந்த நூலகத்திற்கு வந்து, படித்து பயன் பெறுகின்றனர். நூலகத்தில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். மேலும், இந்த நூலகத்திலுள்ள நூல்களைப் பாதுகாக்கவும், பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர் அமர்ந்து படிப்பதற்கு ஏதுவாகவும், இந்தப் பழமை வாய்ந்த கட்டடத்திற்குப் பதிலாக சொந்த இடத்தில் புதிய நூலகக் கட்டடம் கட்டித் தந்து மயிலாடுதுறை தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 32 மாவட்ட நூலகங்கள் இயங்கி வருகின்றன. அனைத்து மாவட்ட நூலகங்களிலும் இந்த ஆண்டு I.A.S. Academy கொண்டுவர வேண்டுமென்று அரசு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது. அதற்காக 2 கோடியே 17 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதியினை வைத்துக்கொண்டு வருகின்ற பிப்ரவரி மாதத்திற்குள்ளாகவே பணிகளை தொடங்கயிருக்கிறோம். ஏனென்று சொன்னால், படித்த இளைஞர்கள் I.A.S. Academy–க்கு சென்று படிக்க வேண்டுமென்று சொன்னால் பல இலட்சம் ரூபாய் செலவு செய்து படிக்க வேண்டிய நிலையை மாற்றி அந்தந்த மாவட்டங்களிலே இந்த மையங்களின் மூலமாகக் கல்வியறிவைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. மேலும், முழு நேர நூலகங்களாக இருக்கின்ற 314 நூலகங்களுக்கும் இந்த ஆண்டு ரூ.2 கோடி வீதம் நிதி ஒதுக்கப்பட்டு, அனைத்தும் கணினிமயமாக்கப்பட பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே, வருங்காலத்தில் இந்த நூலகக் கட்டடத்தை ரூ.72 இலட்சம் மதிப்பீட்டிலே கட்டித் தருவதற்கு அரசு பரிசீலித்து, நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. வி. ராதாகிருஷ்ணன்:** நூலகக் கட்டடம் கட்டித் தரப்படும் என்று உறுதியளித்த மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

**திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பரமத்தி–வேலூர் தொகுதிக்குட்பட்ட பரமத்தி ஒன்றியம், கொண்டரசம்பாளையம், எலச்சிபாளையம் ஒன்றியம், வேலகவுண்டன்பட்டி மற்றும் பொம்மம்பட்டி ஆகிய இடங்களில் நூலகங்கள் இருக்கின்றன. நூலகக் கட்டடம் இல்லாததால், அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் கஷ்டப்படுகின்றனர். சென்னையிலே

இரண்டு நாட்களுக்கு முன்பு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் புத்தகக் கண்காட்சியைத் துவங்கி வைத்தார்கள். எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்கூட அந்தப் புத்தகக் கண்காட்சிக்கு ரூ.1 கோடியை நிதியாகத் தந்தார்கள். அந்தளவுக்கு புத்தகங்கள் படிப்பது என்பது தமிழகத்திலே மிகப் பெரிய அளவிலே நடைபெற்று வருகிறது. ஆகவே, இந்த அரசு, சிறப்பு நிதி ஒதுக்கி, நூலகங்களுக்குக் கட்டடம் கட்டித் தருவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையின் மூலமாகப் பெறப்படும் செஸ் (cess) நிதி ஆதாரத்தைக் கொண்டுதான் நூலகங்கள் இயங்கி வருகின்றன. உள்ளாட்சித் துறையின் சார்பாக ஏறத்தாழ ரூ.258 கோடியே 57 இலட்சம் வசூல் செய்ய வேண்டியிருக்கிறது. இப்போது ரூ.97 கோடியே 55 இலட்சம் வரி வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் ரூ.161 கோடி வரி வசூல் செய்யவேண்டியிருக்கிற நிலையில், உங்கள் கோரிக்கையையும் இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.

**திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் உள்ள மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் பொங்கல் நல்வாழ்த்துகளைக் கூறிக்கொள்கிறேன். எனது தொகுதிக்குட்பட்ட இத்தலார் ஊராட்சியிலே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் சுமார் 5,000 பேர் இருக்கின்றனர். எமரால்டு பகுதியிலே உள்ள பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தருகிறோம் என்று முன்பு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், கூடலூர் தொகுதிக்கு மாற்றிவிட்டார்கள். எனவே, இந்த முறை மேல்நிலைப் பள்ளியாக நிச்சயமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். அங்கே நூலகக் கட்டடமும் நிச்சயமாக வேண்டும் என்பதைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே கட்ட வேண்டுமென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நீங்கள் தருவீர்களானால், உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, உடனடியாகக் கட்டித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**33—**

## நியாய விலைக் கடை

***7548—திரு. மா. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சைதாப்பேட்டை தொகுதி, 172–வது வார்டு, பள்ளிப்பட்டு மற்றும் கானகம் ஆகிய பகுதிகளில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய இனிய தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் வாழ்த்துகளை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை தொகுதியில், திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் பள்ளிப்பட்டு, களிக்குன்றம் மற்றும் ஸ்ரீராம் நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 1,117 குடும்ப அட்டைகளுடன் தரமணி–2, முழு நேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இடம் தேர்வு செய்துதரும்பட்சத்தில் தரமணி–2 முழு நேர நியாய விலைக்

[2018 ஜனவரி 12

கடையிலிருந்து பள்ளிப்பட்டு மற்றும் ஸ்ரீராம் நகர் பகுதிகளைச் சேர்த்து, 616 குடும்ப அட்டைகளைப் பிரித்து, பள்ளிப்பட்டு பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சென்னை மாவட்டம், வேளச்சேரி வட்டம், கானகம் பகுதியில் 1,025 குடும்ப அட்டைகளுடன் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுக் கடன் சங்கத்தின் முழு நேர நியாய விலைக் கடை ஒன்று ஏற்கெனவே செயல்பட்டு வரும் நிலையில், அதே பகுதியில் மேலும் ஒரு நியாய விலைக் கடையை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு இடங்களில், குறிப்பாக 80 இடங்களில் நியாய விலைக் கடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் T.U.C.S., காரணீஸ்வரர் கூட்டுறவுச் சங்கம் என்று 80 கடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. என்றாலும்கூட, நான் கேள்வியிலே குறிப்பிட்டிருக்கிற பள்ளிப்பட்டு, ஸ்ரீராம் நகர் ஆகிய இடங்கள் மாநகரத்திலே இருக்கிற கிராமப் பகுதிகள் என்று சொல்கிற அளவிற்குப் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினால்தான் தனியாக நியாய விலைக் கடை வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே இடம் தேர்வு செய்து தரும்பட்சத்தில் கட்டித் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், சென்னையில் எங்கெல்லாம் தனியார் கட்டடங்களில் நியாய விலைக் கடைகள் இயங்கிக் கொண்டிருந்தனவோ, அந்தக் கடைகளுக்கு மாநகராட்சி இடங்களைத் தர வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி இடங்கள் 200–க்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகளுக்குத் தரப்பட்டிருக்கின்றன. மேலும், தொகுதிக்கு ஓர் உதவி ஆணையர் அலுவலகத்திற்கும் இடம் தர வேண்டுமென்று மாண்புமிகு துணை முதலமைச்சராக இருந்த தளபதி அவர்கள் உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில் அனைத்துத் தொகுதிகளிலும் உதவி ஆணையர் அலுவலகங்களுக்கும் தனித் தனியே இடம் தரப்பட்டிருக்கிறது. அந்தவகையில், இன்றைக்கும் பள்ளிப்பட்டில் மாநகராட்சியின் இடம் ஒன்று இருக்கிறது. நாளைக்கே இடத்தைத் தரத் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கு கடை வருவதற்கு உதவிடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஒரு பதிலைச் சொல்லியிருக்கிறார். பொதுவாகவே தமிழகத்திலே நடைபெறுகின்ற பொது விநியோகத் திட்டம் என்பது இந்தியாவிற்கே ஒரு முன்னோடியாக கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகிறது என்பதை இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். சென்னையை எடுத்துக்கொண்டீர்கள் என்றால், நிறைய இடங்களில் கடைகள் நடத்த இடம் தரமாட்டோம் என்கிறார்கள். சென்னை மாநகரத்தைப் பொறுத்த அளவுக்கு, இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய இடங்களில் கடைகள் கேட்கிறீர்கள். தனியார் கட்டடங்களில் ரேஷன் கடைகள் நடத்துவதற்கு, இடம் தருவதற்கு யாரும் முன்வருவதில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் இதைக் கருத்தில்கொண்டுதான் கடந்த 2012–2013 ஆம் ஆண்டில் பூங்கா நகருக்கும், திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கும் நகரும் நியாய விலைக் கடைகள் இரண்டு கொடுத்தார்கள். இதன் மூலமாக 10,637 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுகின்றனர். ஏறத்தாழ 2,000 கார்டுகள், 1,700 கார்டுகள், 1,800 கார்டுகள் கொண்ட ஆறு நியாய விலைக் கடைகளிலிருந்து பொருட்கள் வாங்குவதற்கு மக்கள் சிரமப்படுகிறார்கள் என்பதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் மிகவும் அற்புதமான ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டு, இதுவரை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 10,637 குடும்பங்களுக்கு வாரத்தில் ஆறு நாட்கள் நேரடியாகச் சென்று வழங்கிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, திருவல்லிக்கேணி

[2018 ஜனவரி 12

நகரக் கூட்டுறவுக் கடன் சங்கமானது 6 நியாய விலைக் கடைகளைச் சேர்த்து 5,442 குடும்பங்களுக்கு அவர்களுடைய இல்லத்திற்கே வாரத்தில் 6 நாட்கள் சென்று கொடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நல்ல ஓர் இடத்தைத் தேர்வு செய்து நாளைக்கே கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். உடனடியாக அந்த இடத்தைக் கையகப்படுத்தி, துறை ரீதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவைப் பெற்று உறுதியாகக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் உணவுப் பொருட்கள் வழங்குவது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் ஆகியோருக்கான ஒரு கூட்டுப் பொறுப்பு. இன்றைக்கு ஏழையெளிய மக்களுக்கு நியாய விலைக் கடைகளில் வழங்கப்படுகிற அரிசியின் பயன்பாடு என்பது காலை சிற்றுண்டிக்குத்தான். அந்த அரிசியின் பெரும் பகுதியை அதற்குத்தான் பயன்படுத்துகிறார்கள். எனவே, காலை சிற்றுண்டிக்கு அந்த அரிசி பயன்பட வேண்டுமென்றால் நிச்சயம் அதற்கு ஒரு துணைப் பொருளான உளுத்தம் பருப்பு வேண்டும். உளுத்தம் பருப்பு ரேஷன் கடைகளில் கொடுக்கப்படுவது இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் உளுத்தம் பருப்பு ஒரு கார்டுக்கு ஒரு கிலோ தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தது. அதையே தொடர்ந்திட இந்த அரசு முன்வருமா எனத் தங்களின்மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசியல் பேச வரவில்லை. இது கேள்வி நேரமாக இருப்பதனால், நான் அரசியல் கருத்தைச் சொல்ல விரும்பவில்லை. கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தைவிட இந்த ஆட்சிக் காலத்தில்தான் பொது விநியோகத் திட்டத்தில் மக்களுக்கு அதிகமாகப் பொருட்கள் வழங்கப்பட்டு சிறப்பாகச்



2018 ஜனவரி 12]

செயல்படுத்தப்படுகிறது. உங்கள் காலத்தில் 1 கோடியே 52 இலட்சம் குடும்ப அட்டைகள்தான் இருந்தன. இன்றைக்கு 1 கோடியே 95 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 10–25

குறிப்பாக, உங்கள் ஆட்சிக் காலத்தையும், எங்கள் ஆட்சிக் காலத்தையும் எடுத்துக்கொண்டால் நியாய விலைக் கடைகளில் துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு வாங்குபவர்களுடைய எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. காரணம் என்னவென்றால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒரு கிலோ துவரம் பருப்பு வெளிச் சந்தையில் ரூ.52 முதல் ரூ.56 வரை விற்கப்பட்டபோது, நியாய விலைக் கடைகளில் 40 ரூபாய்க்கு விற்கப்பட்டது. அன்றைக்கு இருந்த சூழ்நிலை இன்றைக்கு இல்லை. விலைவாசி ஏறிக்கொண்டேயிருக்கிறது. விலைவாசி ஏற்றத்தின் காரணமாக இன்றைக்கு வெளிச் சந்தையில் ஒரு கிலோ உளுத்தம் பருப்பு ரூ.170/– முதல் ரூ.180/– வரையிலும், ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.170/–க்கும் விற்கப்படுகிறது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வெளிச் சந்தையில் 53 ரூபாய்க்கு விற்கப்பட்டபோது ரேஷன் கடைகளில் 40 ரூபாய்க்கு விற்கப்பட்டது. அன்றைக்கு மத்திய அரசு ஒரு கிலோ பருப்பிற்கு 10 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை மானியம் கொடுத்தது. 2013 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு மானியத்தை நிறுத்திவிட்டது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் நியாயமான விலைக்குக் கிடைக்க வேண்டும், வெளிச் சந்தையில் விலை ஏற்றத்தை ஏற்படுத்தக் கூடாது என்ற நோக்கத்தில் இன்றைக்கு பொது விநியோகத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்கான முழு நிதியையும் அரசாங்கம் செலவிட்டுக் கொண்டிருக்கிறது.

சிறப்பு பொது விநியோகத் திட்டத்தினை நிறைவேற்றுவதன்மூலம் ஒரு நாளைக்கு மட்டும் ரூ.207.10 கோடி அரசுக்குக் கூடுதலாக செலவாகிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படியானால், ஓராண்டிற்கு எவ்வளவு செலவாகும் என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். இருந்தபோதிலும், இவ்வளவு நிதி நெருக்கடியிலும் மக்களுக்கு அத்தியாவசியப்

*[2018 ஜனவரி 12*

பொருட்கள் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் துவரம் பருப்பு வழங்கப்படுகிறது; பாமாயில் வழங்கப்படுகிறது. ஒரு கிலோ துவரம் பருப்பு வெளிச் சந்தையில் 90 ரூபாய் முதல் 120 ரூபாய்க்கு விற்கப்பட்டாலும்கூட, நியாய விலைக் கடைகளில் 30 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. வெளிச் சந்தையில் ஒரு லிட்டர் பாமாயில் ரூ.70 முதல் ரூ.80 வரை விற்கப்பட்டாலும்கூட, நியாய விலைக் கடைகளில் ரூ.25/–க்கு வழங்கப்படுகிறது. ஆனால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒரு லிட்டர் பாமாயில் ரூ.30/–க்கு வழங்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் கேட்டதால்தான் இந்த விவரங்களைச் சொல்கிறேன். எனவே, எல்லா வகையிலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக, அனைத்துப் பொருட்களையும் வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, சிறப்பு பொது விநியோகத் திட்டத்தில் அரிசி வழங்குவதில் எந்த ஏற்றத்தாழ்வும் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அம்மா அவர்களுடைய அரசில் கடந்த 6 ஆண்டுகளில் பகுதி நேர மற்றும் முழு நேர நியாய விலைக் கடைகளாக 2,226 கடைகள் திறக்கப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்ற தகவலைச் சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.

**திரு. ப. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும், எல்லா இல்லங்களிலும், உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எங்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். எனது பொன்னேரி தொகுதிக்குட்பட்ட பொன்னேரி வட்டம், முஸ்லிம் நகரில் சுமார் 300 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். 2007–2008 ஆம் ஆண்டில் நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது இந்த நியாய விலைக் கடைக்கான கட்டடம் கட்டப்பட்டு, இன்றுவரை அந்தக் கட்டடம் திறக்கப்படாமல் உள்ளது. இதனால் அங்குள்ள மக்கள் 5 கி.மீ. தூரம் பயணித்து பொருட்களை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். மாதவரத்தில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சென்று அத்தியாவசியப் பொருட்களை வாங்கவேண்டியிருக்கின்ற காரணத்தினால் குடும்ப அட்டைதாரர்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. சிறுபான்மை முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற காரணத்தாலும், பகுதி நேர நியாய விலைக் கடை திறக்க அனைத்துத் தகுதிகள் உள்ளதாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பொன்னேரி வட்டம், முஸ்லிம் நகரில் பகுதி நேர நியாய விலைக் கடையை இவ்வாண்டே தொடங்கிட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



*2018 ஜனவரி 12]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர நியாய விலைக் கடை வேண்டுமென்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கட்டடத்தைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு எழுதிக் கொடுத்துவிட வேண்டும். பொதுவாகவே, மாவட்ட நிருவாகத்தின்மூலம், சமூக நலத் துறையின்மூலம் அல்லது ஊராட்சிகளின்மூலம் கட்டடங்கள் கட்டிக் கொடுத்திருப்பார்கள். அவ்வாறு கட்டப்படும் கட்டடங்களைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மாற்றம் செய்து எழுதிக் கொடுத்துவிட வேண்டும். மேலும், அதுபோன்ற கட்டடங்களில் மின்சார இணைப்பு வழங்கப்படாமல் இருக்கும் அல்லது பொது மக்களின் எதிர்ப்பு இருக்கும். இதுபோன்ற எதிர்ப்புகள் எதுவும் இல்லாமல் இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் அங்குள்ள நிலைமையைத் தெரிந்துகொண்டு, எங்களுக்குத் தெரிவிப்பாரேயானால், உறுதியாக அடுத்த வாரத்திலேயே, பொங்கல் பண்டிகை முடிந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அறிவுரையைப் பெற்று அங்குள்ள கடை உடனடியாகத் திறக்கப்படும். இதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

[2018 ஜனவரி 12

**திரு. சபா. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களை வணங்குகிறேன். நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், பெரியகாட்டுப்பாளையம் ஊராட்சி, சின்னகாட்டுப்பாளையம் பகுதிக்கு ஒரு பகுதி நேரக் கடை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காரணம், இந்தப் பகுதியிலே 169 குடும்ப அட்டைகள் உள்ளன. தாய்க் கடையிலிருந்து 2½ கி.மீ. தூரத்தில் உள்ளது. ஆனாலும், அரசு விதிகளின்படி இந்தக் கடையைப் பிரித்த பிறகு தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இல்லை என்ற காரணத்தால் அதை மறுக்கிறார்கள். சிறப்பு நேர்வாகக் கருதி, அரசு விதிகளைத் தளர்த்தி இங்கு நீங்கள் கொடுக்கலாம். காரணம், கடந்த 2015–ல் ஏற்பட்ட வெள்ளத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்டு 10 உயிர் இழப்புகள் ஏற்பட்ட பகுதி. மேலும் அந்தப் பகுதிக்கு ஒரு நிரந்தர பாலமும் இல்லை. பைப் பாலங்களை அமைத்து அவ்வப்போது சரி செய்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரிடம் பாலம் குறித்து கேட்டீர்கள் என்றால் எப்படி? நீங்கள் கடையைக் குறித்து கேளுங்கள்.

**திரு. சபா. ராசேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சிறப்பு நேர்வாக அரசு விதிகளைத் தளர்த்தி, அந்தப் பகுதிக்கு ஒரு பகுதி நேரக் கடையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற முக்கியத்துவத்தைச் சொல்வதற்காகச் சொன்னேன். எனவே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அதைச் செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு பகுதி நேரக் கடை திறக்க வேண்டுமென்றால் கிராமப்புறமாக இருந்தால் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்படுகின்ற பகுதி நேரக் கடைக்கு 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; 1½ கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்பது விதி. மலைப் பிரதேசமாக இருந்தால் 400 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பகுதி நேரக் கடைக்கு 100 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். நகர்ப்



2018 ஜனவரி 12]

பகுதிகளைப் பொறுத்தவரை 800 குடும்ப அட்டைகளிலிருந்து 1,000 குடும்ப அட்டைகள் வரை இருக்கலாம். பிரிக்கப்படுகின்ற பகுதி நேரக் கடைக்கு 150 கார்டுகள் மற்றும் தூரம் 1½ கி.மீ. என்பதில் வித்தியாசம் இல்லை. ஏற்கெனவே இரண்டு நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையைச் சொன்னார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கூறியிருக்கிறார். இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு விருப்புரிமை இருக்கிறது. மலைவாழ் மக்கள், மலைப் பிரதேச மக்கள் இருக்கிறார்கள் அல்லது ஒரு பதட்டமான சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால் அந்த இடத்தில் அவரே விருப்புரிமையில் கடையைத் திறந்துகொள்ளலாம் என்கிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. அவ்வாறு இல்லாதபட்சத்தில்தான் கூட்டுறவு ஆணையர், சென்னை அவர்களுடைய உரிமையைப் பெற்று கடை திறக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமாக இருப்பதால் கூட்டுறவுத் துறையின் மூலமாக முயற்சி எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று நிச்சயமாகக் கடை திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

**முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை நான் கேள்வி கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லியிருந்தார். திருக்கோவிலூர் தொகுதி, முகையூர் ஒன்றியம், ஆயந்தூர் கிராமத்தில் 5 ஆண்டுகளுக்கு முன்பாகவே கட்டடம் புதிதாகக் கட்டப்பட்டு இன்றும் அந்த இடத்திற்கு நியாய விலைக் கடை மாற்றப்படாமல் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரைப் பல முறை சந்தித்து நான் பேசியிருக்கிறேன். ஊரில் பிரச்சினை என்கிறார். மேலும், சென்னகுணம் அருகிலே இருக்கிற மற்றொரு பகுதிக்கும் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை வேண்டுமென்று உங்களிடம் கோரிக்கை வைத்திருந்தேன்; கேள்வியே கேட்டிருந்தேன். இரண்டும் சென்ற வருடம் கேட்டேன். உடனே செய்கிறேன் என்று சொன்னீர்கள். தயவு செய்து மாவட்ட ஆட்சியரோடு தொடர்பு

கொண்டு இந்த இரண்டு பணிகளையும் அங்கே செய்வதற்கான ஏற்பாடுகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு நான் ஏற்கெனவே சொல்லியிருந்தேன். இந்தக் கடைகள் எல்லாம் திறக்காமல் இருப்பதற்கு ஒன்று, அந்த ஊர் மக்களின் எதிர்ப்பு இருக்க வேண்டும், இல்லையென்றால் அந்தக் கடைகளெல்லாம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றப்படாமல் இருக்க வேண்டும். இந்த இரண்டு காரணங்கள்தான் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அதில் ஈடுபட்டு, என்ன தேக்க நிலை இருக்கிறது என்பதைத் தெரிந்து சொல்வீர்களானால் உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நிச்சயமாக, துறைரீதியாக கடை திறப்பதில் எந்தவிதப் பிரச்சினையும் இல்லை. அந்த ஊர் மக்கள் அங்கு போய் வாங்குவதற்கு சிரமப்படுவார்கள் அல்லது திறக்கக் கூடாது என்று அந்த ஊர் மக்கள் எதிர்ப்பு தெரிவிப்பார்கள். இல்லையென்றால் அது நீர்நிலை புறம்போக்கில் இருக்க வேண்டும். அப்படியிருக்கும்பட்சத்தில் அதைத் திறக்கக் கூடாது என்று சட்ட விதிகள் இருக்கும். இந்த மாதிரி விதிகளினாலோ அல்லது மின்சார இணைப்பு இல்லாமலோ இருக்க வேண்டும். இந்த இரண்டும்தான். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள். ஏன் கடை திறக்கப்படவில்லை என்பதை, உடனடியாகக் கேட்டு, சட்டமன்றக் கூட்டம் முடிவதற்குள் இன்றைக்கே நிச்சயமாக உங்களுக்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். நீங்களே அதற்குத் தீர்வு கண்டீர்களென்றால் நிச்சயமாகத் திறக்கப்பட்டு, மக்களது பயன்பாட்டிற்கு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*





**34—**

## துணை மின் நிலையம்

***4407—திரு. இ. கருணாநிதி:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லாவரம் தொகுதி, பொழிச்சலூர் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பல்லாவரம் தொகுதி, பொழிச்சலூர் பகுதி பெருகிவருகின்ற நகரமாகத்தான் இருக்கின்றது. அங்கு துணை மின் நிலையம் அவசியம் தேவைதான். ஆனால், சென்னை மாநகரைப் பொறுத்தவரை இடம் கிடைப்பதுதான் மிக அரிதாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இரண்டு கோரிக்கைகள் வைத்து, இரண்டு இடங்களைச் சொன்னார்கள். நாங்கள் இடத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் OSR land இருக்கிறது. நான் வாங்கிக் கொடுக்கிறேன் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கின்றீர்கள். அப்படி இருக்கும்பட்சத்தில் அதை உடனடியாக ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

**திரு. இ. கருணாநிதி**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் தலைவர், எங்கள் தளபதி அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2018 ஜனவரி 12

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொழிச்சலூர் ஊராட்சி, தமிழகத்தில் இருக்கின்ற ஊராட்சிகளிலே மிகப் பெரிய ஊராட்சி. சென்னை விமான நிலையத்திற்குப் பின்புறமாக சுமார் 50 ஆயிரம் மக்கள் வசிக்கின்ற பகுதி. இந்தப் பகுதியிலே இருக்கின்ற பொதுமக்களெல்லாம் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வருகின்றனர். ஆகவே, அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதிக்கு ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அறிய விரும்புகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கு முன்னால் அதைத்தான் நான் சொன்னேன். வளர்ந்து வருகின்ற ஊராட்சியாக இருக்கின்றது. பெரிய ஊராட்சி. நகரமாக உருவாகிக் கொண்டிருக்கின்றது. சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான இடம் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குரிய இடத்தைத் தேர்வு செய்து கொடுப்பார் என்று சொன்னால்—நாங்களும் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அங்கு துணை மின் நிலையம் அவசியம் தேவை என்பதை அரசு உணர்ந்திருக்கின்றது. ஏதாவது இடம் கிடைத்தால் நிச்சயமாக உடனடியாக துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்கப்படும். இப்போது பம்மல் பகுதியிலிருந்து 33/11 K.V. துணை மின் நிலையத்திலிருந்து உங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. அங்கு மின் பளு அதிகமாகத்தான் இருக்கின்றது. நிச்சயமாக இடம் கிடைத்ததற்குப் பின்னால், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தமிழகத்திலே மிகப் பெரிய சட்டமன்றத் தொகுதி. 8 இலட்சம் மக்கள் இங்கு



2018 ஜனவரி 12]

வசிக்கின்றனர். ஏற்கெனவே கடந்த 2016–2017 ஆம் ஆண்டு இந்த அவையிலே பேசுகின்றபோது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இடம் தேர்வு செய்வதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. அந்த இடத்தைத் தேர்வு செய்தால் நிச்சயமாக அங்கு துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று உறுதியளித்தார்கள். ஏற்கெனவே இதுகுறித்து நான் பேசியிருக்கின்றேன். அதனடிப்படையிலே பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி, பல்லாவரம் நகராட்சிக்குட்பட்ட அஸ்தினாபுரம் கிராமம், சர்வே எண் 54/9–ல், 64 சென்ட் இடத்தை பார்வையிட்டு அது தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. அதேபோன்று அனகாபுத்தூர் கிராமம், சர்வே எண் 257–ல் ஓர் ஏக்கர் இடம் தேர்வு செய்து, அங்கே கண்காணிப்புப் பொறியாளர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களுக்கு இரண்டு கேள்விகள், இது இரண்டாவது கேள்வி. நிறைய உறுப்பினர்கள் எனக்கு நெருக்கடி கொடுக்கின்றார்கள். நீங்கள் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டீர்களென்றால் மற்றவர்களுக்கு வாய்ப்புத் தரலாம். இல்லையென்றால் நான் அடுத்த கேள்விக்கு போக வேண்டியிருக்கும்.

**திரு. இ. கருணாநிதி:** இதோ முடித்துவிடுகிறேன். அதை கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் கோட்டப் பொறியாளர் ஆகியோர் பார்வையிட்டுச் சென்றிருக்கின்றனர். நிச்சயமாக அந்தப் பகுதிக்கு துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அஸ்தினாபுரம் பகுதியில் நில உரிமை மாற்றம் செய்வதற்காக மாவட்ட ஆட்சியரிடத்தில் கோப்புகள் சென்றிருக்கின்றன. அது வந்தவுடன் உடனடியாக வேலை ஆரம்பிக்கப்படும். அனகாபுத்தூரைப் பொறுத்தவரையில் இப்போதுதான் இடம் கண்டறியப்பட்டு, மாவட்ட ஆட்சியருக்கு அனுப்புகின்ற நிலைமை. அதாவது Municipality–யிலிருந்து தீர்மானம் போட்டு அனுப்புகின்ற

[2018 ஜனவரி 12

நிலைமை இருக்கின்றது. அந்த இரண்டு இடங்களிலும் நிச்சயமாகத் துணை மின் நிலையம் அமைக்கப்படும். ஏற்கெனவே நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். உங்களுடைய தேவை அதிகம் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும் உணர்ந்திருக்கின்றது. அந்த இரண்டு இடங்களையும் தேர்வு செய்து கொடுத்தது, தொகுதி மக்களுக்கு நீங்கள் செய்கின்ற நல்லதாகத் தெரிகின்றது. அதைப்போலவே பொழிச்சலூர் பகுதிக்கும் நீங்கள் ஏதாவது ஓர் இடத்தைத் தேர்வு செய்து கொடுங்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட 125 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு ஏற்கெனவே விதி எண் 110–ன்கீழ் அறிவித்திருக்கின்றார்கள். சென்னை மாநகர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில்தான் இதுபோன்ற இடப் பிரச்சினைகள் இருக்கின்றன. கிராமப் பகுதிகளில் ஓரளவுக்கு இடம் கிடைத்துவிடுகின்றது. இதுபோன்ற பிரச்சினைகள் நகரத்தில்தான் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்தப் பகுதிகளிலே ஏதாவது அரசு நிலம் இருக்குமானால் அல்லது தனியார் யாராவது விருப்பப்பட்டார்கள் என்று சொன்னால், தகவல்கள் ஏதாவது இருந்தால் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். தனியார் இடம் கொடுக்கின்றபோது அதற்குண்டான விலையை அரசு கொடுத்துவிடும். துறை அதிகாரிகளை அனுப்பி, துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

முற்பகல் 10—40

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லையென்றாலும் மாண்புமிகு அமைச்சர் பெருமகனாரிடம் வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் ஒரு குறிப்பிட்ட பகுதியில், விவசாய மின் இணைப்புகளுக்கு மும்முனை மின்சாரம் 24 மணி நேரமும் தடையில்லாமல் வழங்குவதற்கு விதி தடையாக இருப்பதுபற்றி நாம் ஏற்கெனவே அமைச்சரிடத்தில் சொல்லியிருக்கிறோம். நாடு முழுவதுமுள்ள கிராமப் பகுதிகளிலே, குறிப்பாக என்னுடைய தொகுதியில் வெள்ளக்கோவில், காங்கேயம்,



2018 ஜனவரி 12]

சென்னிமலை ஆகிய நகரம் சார்ந்து இருக்கிற பகுதிகளிலே விவசாய மின்னிணைப்புகளுக்கு மும்முனை மின்சாரம் இல்லாததால் விவசாயிகள் என்ன செய்கிறார்களென்றால், மும்முனை மின்சாரம் வராத நேரத்தில், இருமுனையில் இருக்கும்பொழுதே auto starter என்று அவர்கள் அதே மின்சாரத்தைத்தான் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, அப்படி விதி இருந்தால் அந்த விதியைத் தளர்த்தி, திருத்தி 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தடையில்லாமல் வழங்க மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் ஆவன செய்வார்களா எனத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமருகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல, டெல்டா பகுதிகளைத் தவிர்த்து மற்ற பகுதிகளில் 9 மணி நேரம் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் கொடுக்கப்படுகிறது. டெல்டா பகுதிகளுக்கு 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் கொடுக்கப்படுகின்றது. கிராமப்புறப் பகுதிகளில் பகலிலே 3 மணி நேரமும் இரவிலே 6 மணி நேரமும் மும்முனை மின்சாரம் கொடுக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்த 3 மணி நேரத்திற்குப் பின்னர் மும்முனை மின்சாரத்தை நிறுத்துகின்றபோது, இருமுனையிலிருந்து அவர்கள் மின்சாரத்தை எடுத்துக்கொள்வார்கள் என்பதை நாங்கள் அறிந்திருக்கின்றோம். அதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம். அந்தப் பகுதியிலே ஏதாவது தொழிற்சாலைகள் இருந்தால் அங்கு தொடர்ந்து மும்முனை மின்சாரம் கொடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். இதுகுறித்து அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் தெரிவித்துக்கொண்டிருப்பதால், இது ஒரு முக்கியமான பிரச்சினை என்பதால் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, எதிர்காலத்தில் அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன் அவர்கள்.

**திரு. சௌ. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். எங்களுடைய அன்பு தளபதியாரையும் வணங்குகிறேன். ராஜபாளையம் மிகப் பெரிய நகரமாகும். அங்கு சுமார் ஒரு இலட்சத்து 77 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றனர். பஞ்சாலைகள் மற்றும் நூற்பாலைகள் உள்ளன. குறைந்த மின்னழுத்தம் உள்ளதால் ராஜபாளையத்தின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, அங்கு ஒரு 110 K.V. துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய ராஜபாளையம் பகுதி வளர்ந்த பகுதி. தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி. அங்கு குறைந்த மின் அழுத்தம் இருக்கிறதென்று இதுகாறும் எங்களுக்குப் புகார்கள் வரவில்லை. ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த 765 துணை மின் நிலையங்களில் ஒன்று விருதுநகரிலே அமையவிருக்கின்றது. அப்போது இதற்குண்டான இடத்தைத் தேர்வு செய்து, அதிகாரிகளோடு ஆய்வு செய்து, தேவையிருப்பின் அங்கு 110 K.V. துணை மின் நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**35—**

### சார்பு நீதிமன்றம்

***3017—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





அந்தியூர் தொகுதியில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், அந்தியூரிலே ஒரு சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு உயர் நீதிமன்றத்திலிருந்து எந்தப் பரிந்துரையும் பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் எங்களோடு வாழ்ந்துகொண்டிருக்கின்ற, எங்களை வாழ வைத்த தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை வழிநடத்தி, அம்மா அவர்களின் கனவை நனவாக்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்துகொண்டிருக்கின்ற துணை முதல்வர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாய்ப்பு வழங்கிய தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாமன்றத்தில் உள்ள அனைவருக்கும், தமிழக மக்களுக்கும், எனது தொகுதி மக்களுக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியானது விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மற்றும் மலைவாழ் மக்களைக் கொண்ட கிராமப்புறப் பகுதியாகும். இவர்கள் வழக்குகளுக்காக பவானிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. குறிப்பாக பர்கூர் மலை கடைக்கோடி பகுதியிலிருந்து சுமார் 70 கிலோ மீட்டருக்கும்மேல் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. தாலுகா செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஒவ்வொரு இடத்திலும் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்ற உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்பேரில் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று பவானி வழக்கறிஞர் சங்கமும் உயர் நீதிமன்றத்தில்

கோரிக்கை வைத்துள்ளது. எனவே, மக்களுக்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அம்மா அவர்களின் அரசு மக்களின் நலன் கருதியும், அந்தியூரைத் தலைமையிடமாகக் கொண்டு அந்தியூர் வருவாய் வட்டமாகச் செயல்பட்டு வருவதாலும், அந்தியூரில் ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமாவது அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியிலே சார்பு நீதிமன்றம் அமையப் பெற வேண்டுமென்றால் அந்தப் பகுதியில் ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமோ அல்லது குற்றவியல் நீதிமன்றமோ அமைந்திருக்க வேண்டுமென்பது விதி. அந்தியூர் பகுதியில் எந்த நீதிமன்றமும் தற்போது இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைய வேண்டுமென்று கோரிக்கையை வைத்திருக்கின்றார். அவர்களுடைய கோரிக்கையை தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே நிறைவேற்றியிருக்கின்றார்கள் என்பதை நான் இங்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 5–4–2017 அன்றே பவானியில் இருக்கின்ற கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தை அந்தியூருக்கு மாற்றி அந்தியூரிலே ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல, உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையை ஏற்று மொத்தம் 48 புதிய நீதிமன்றங்களைப் பல்வேறு பகுதிகளில் அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே அந்தியூரும் ஒன்று. ஆகவே, உயர் நீதிமன்றம் அதற்கான பணியிலே ஈடுபட்டிருக்கின்றது. விரைவிலே இதுகுறித்து உயர் நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தி, அந்தியூருக்காக ஆணையிடப்பட்டிருக்கின்ற புதிய மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.





**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல அந்தியூரிலே குற்றவியல் நீதிமன்றம் மாதத்திற்கு இரண்டு முறை தற்காலிக Camp Court ஆகச் செயல்பட்டு வருகின்றது. இந்தக் குற்றவியல் நீதிமன்றத்தை நிரந்தரமாக அந்தியூரில் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தியூரிலே ஒரு குற்றவியல் நீதிமன்றம் நிரந்தரமாக அமைய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார். முதலில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அங்கே அமையப் பெற்ற பிறகு அங்கிருக்கின்ற வழக்குகளின் தன்மைக்கேற்ப உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையைப் பெற்று—ஒன்று, புதிதாகக் குற்றவியல் நீதிமன்றம் அமையப் பெறலாம் அல்லது புதிதாக அமையவிருக்கின்ற உரிமையியல் நீதிமன்றமே குற்றவியல் வழக்குகளையும் விசாரிப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படலாம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உயர் நீதிமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட மடத்துக்குளம் தாலுகாவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்காக அரசாணை வெளியிடப்பட்டு இதுநாள் வரையிலும் பணிகள் துவங்கப்படாமல் உள்ளதாகத் தெரிய வருகிறது. அது எப்போது துவங்கப்படும் என்பதையும், அதற்கான கட்டடங்கள் கட்டப்படுமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மடத்துக்குளம் தொகுதியில் நீதிமன்றம் அமைப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையைப் பெற்றுதான் அங்கு புதிய நீதிமன்றம் உடனடியாக அமைப்பதற்கு அரசு ஆணைகளைப் பிறப்பித்திருக்கின்றது. அதற்கான மேல் நடவடிக்கைகளை, அதாவது அதற்கான தகுந்த இடத்தைத் தேர்வு செய்து மாவட்ட நிருவாகம் அளித்த பிறகு உயர் நீதிமன்றம், அங்கு நீதிமன்றம் அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் விரைவிலே மேற்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உயர் நீதிமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று விரைவிலே அந்த நீதிமன்றம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**36—**

## பின்னலாடைப் பூங்கா

***6391—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வடக்கு தொகுதியில் பின்னலாடைப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.





(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வடக்கு தொகுதியில் பின்னலாடைப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

**திரு. க.நா. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே நல்லாட்சி நடத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு தொகுதி, திருப்பூர் மாநகரம், பின்னலாடைத் தொழிலுக்குப் பெயர் பெற்ற நகரம் ஆகும். திருப்பூர் நகரம், அங்கு செயல்பட்டு வரும் பனியன் மற்றும் பின்னலாடைத் தொழில்கள்மூலம் ஆண்டொன்றுக்கு அந்நிய செலாவணியாக ரூ.25,000 கோடியையும் மற்றும் அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் பனியன் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற தொழிலாளர்கள்மூலம், உள்நாட்டு பனியன் விற்பனைமூலம் ரூ.10,000 கோடியையும் வருவாயாக ஈட்டித் தருகின்றது.

முற்பகல் 10–50

அந்த வகையிலே, திருப்பூர் நகரத்திற்கு வெளியூரைச் சேர்ந்தவர்களும், வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் அதிகம்பேர் வேலைக்கு வருகின்றனர். திருப்பூர் நகரத்தில் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளதால், இட நெருக்கடியும், போக்குவரத்து நெருக்கடியும் அதிகமாக உள்ளது. திருப்பூர் நகரத்திலே சிட்கோ தொழிற்பேட்டை ஒன்று வணிகத்திற்காகவும் ஏற்றுமதி வணிகத்திற்காக Nethaji Apparel Park ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. தொழில் வளர்ச்சிபெறும் நிலையில், இட நெருக்கடியும், போக்குவரத்து நெரிசலும் அதிகமாக உள்ள காரணத்தினால் தொழில் வளர்ச்சியடைவது தடைபடுகிறது. மேலும், பின்னலாடைக்கென்று தனியாக ஒரு

[2018 ஜனவரி 12

தொழிற்பேட்டை இல்லை. பின்னலாடைக்கென்று தனியாக ஒரு தொழிற்பேட்டையைத் துவங்கினால் ஆயிரக்கணக்கான குறு, சிறு தொழிலதிபர்களும், பணிபுரியும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களும் பயன்பெறுவார்கள். அந்த வகையிலே, அம்மா அவர்களுடைய அரசு திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியிலே புதிதாகப் பின்னலாடைப் பூங்கா ஒன்றை ஏற்படுத்தித் தருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் ஜவுளித் தொழிலில் ஒரு முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. குறிப்பாக, திருப்பூர் மாநகரம் ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைத் தொழிலுக்குப் புகழ்பெற்றுள்ளதுடன், சுமார் 36 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதியும், உள்ளூர் வர்த்தகமும் செய்து இந்தியாவிலேயே முதன்மையாக விளங்குகிறது.

அதுமட்டுமல்ல, திருப்பூர் மாவட்டத்தில் நிலவிய சாயக் கழிவுநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் மைய அரசோடு கலந்துபேசி, 703 கோடி ரூபாய் அளவிற்கு நிதியுதவி அளித்து, கடன் சுமையைக் குறைத்து 18 பொது சாயக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்துக் கொடுத்து, இந்தத் தொழிலைப் பாதுகாத்துள்ளது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு.

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு தொகுதியில் உள்ள நியூ திருப்பூர், ஈட்டிவீரம்பாளையத்தில் ரூபாய் 17.62 கோடி மதிப்பீட்டில் நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா ஒன்றும், பல்லடத்தில் ரூபாய் 55.42 கோடி மதிப்பீட்டில் ஓர் உயர் தொழில்நுட்பப் பூங்காவும், அவிநாசி தொகுதி, செங்கம்பள்ளியில் ரூபாய் 149.45 கோடி மதிப்பீட்டில் ஓர் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காவும், உடுமலைப்பேட்டையில் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டமும் என 4 பூங்காக்கள் திருப்பூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. எனினும், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மேலும் ஒரு பின்னலாடைப் பூங்கா அமைத்துத் தர



2018 ஜனவரி 12]

கோரிக்கை அளித்துள்ளதன் அடிப்படையில், அவரும் முயற்சி செய்து, அப்பகுதியிலுள்ள தொழில்முனைவோர்கள் பூங்கா அமைக்க முன்வருவார்களாயின், அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும். நடைமுறையில் உள்ள ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா விதிமுறைகளின்படி, அதாவது, குறைந்தது 50 ஏக்கர் நிலமும், 25 தொழிற்கூடங்களும், குறைந்தது ரூ.60 கோடி முதல் ரூ.65 கோடி வரை மூலதனமும் தேவைப்படுகிறது. இதில், மைய அரசு 40 சதவிகித மானியமும், மாநில அரசு 9 சதவிகித மானியமும் வழங்குகிறது. மீதம் இருக்கிற 51 சதவிகித தொகையை முதலீட்டாளர்கள் தாங்களாகவோ அல்லது வங்கிகள் மூலமாகவோ கடன்பெற்று தொழில் தொடங்க முன்வருவார்கள் என்று நீங்கள் குறிப்பிட்டுச் சொல்வீர்களென்றால் அல்லது மாவட்ட ஆட்சியர் மூலமாகத் தெரிவிப்பீர்கள் என்று சொன்னால், உடனடியாக உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

**திரு. க.நா. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**37—**

## வீட்டுமனைப் பட்டா

***932—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2018 ஜனவரி 12

*(அ) எழும்பூர் தொகுதி, 61–வது வார்டு, சுந்தர்ராவ் நாயுடு தெரு, டாக்டர் நடேசன் தெரு, திவான் பகதூர் ரங்கசாமி தெரு மற்றும் பூபதி நகர் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர் வீரத்தின் அடையாளம், தமிழர்களின் பண்பாட்டை, பாரம்பரியத்தை உலகத்திற்குப் பறைசாற்றுகின்ற வீர விளையாட்டாம் ஜல்லிக்கட்டு உரிமையை மீட்டுத் தந்து, இந்த ஆண்டு உலகப் பிரச்சித்திபெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை தன் பொற்கரங்களால் கொடியசைத்து தொடங்கி வைக்க வருகைத் தரவிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அரசைத் தலைமைதாங்கி வழிநடத்தி வருகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அண்ணன் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள் உள்ளிட்ட தென் மாவட்ட அமைச்சர்களுக்கும் ஒட்டுமொத்த ஜல்லிக்கட்டு வீரர்கள், தீவிர ரசிகர்கள், மதுரை மாவட்ட மக்கள் மற்றும் மதுரை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பிலே கோடானுகோடி மகிழ்வான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலே அம்மா அவர்களின் அரசுக்கு நிகர் அம்மா அரசுதான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) எப்போதும்போல் இப்போதும் நிரூபித்துக் காட்டியிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்கி, தமிழர் திருநாளாம் தை திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–55*

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி 61–வது வார்டு, சுந்தர்ராவ் நாயுடு தெரு, டாக்டர் நடேசன் தெரு, திவான் பகதூர் ரங்கசாமி தெரு ஆகிய புலங்கள் சென்னை மாநகராட்சிக்கு உரிமையானது என்பதால் சென்னை மாநகராட்சியிலிருந்து உரிய கருத்துரு பெற்றபின் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2018 ஜனவரி 12]

மேலும், பூபதி நகர் என்ற புலம் எழும்பூர் வட்ட நிரந்தர நிலப் பதிவேட்டில் அரசு வருவாய்த் துறை எனவும், அரசு பொதுப் பணித் துறை எனவும் உள்ளதால் நில உரிமை மாற்றம் செய்ய உரிய பிரேரணைகள் பெற்ற பின்பு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடமிருந்து தடையின்மைச் சான்று பெற்ற பின்பும் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், கழகத்தின் செயல் தலைவருமான அண்ணன் தளபதி அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும்" என்று பைந்தமிழ் புலவன் பாரதி பாடியதை நாம் உணர்ந்திருக்கின்றோம், அறிந்திருக்கின்றோம். இன்று வாழ நிலம் கேட்டு தமிழகத்தின் தலைநகரிலேயே முகவரி இல்லாமல் மனிதர்கள் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உலக நாடுகளுக்கு தமிழன் சென்று அந்த நாட்டை வளப்படுத்தி, பின்னர் அங்கிருந்து அகதிகளாக அனுப்பி வைக்கப்பட்டதெல்லாம் நாம் அறிந்த ஒன்றே. ஆனால் இன்று தலைநகரிலேயே சென்னையின் மையப் பகுதியிலேயே 40 ஆண்டுகள், 50 ஆண்டுகள் வாழ்ந்துவிட்டு வாழ்ந்த இடத்தின் வரலாறு தெரியாமல் தனக்கு இது சொந்தமா, இல்லையா என்று தெரியாமல் ஒரு தலைமுறை முடிவுக்கு வரப்போகிறது. வாழ்க்கையே கிட்டாமல் போய்விட்ட அந்த மக்களுக்கு அவர்கள் வாழ்ந்த இடத்தில் பட்டாவாவது கிடைக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 58–வது வார்டு, நேவல் மருத்துவமனை சாலையில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக 50 வீடுகளுக்கு பட்டா இதுவரை கிடைக்கவில்லை. 77–வது வார்டு, டிமுலஸ் ரோடு, குமாரசாமி ராஜாபுரத்தில் இருக்கும் 63 வீடுகளுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. 77–வது வார்டு, போகிப்பாளையம், Corporation land இங்கு வாழக்கூடிய மக்கள் ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு மேலாக

வாழ்ந்துவிட்டு அந்த இடத்தில் பட்டா கிடைக்காமல் 338 வீடுகள் இன்றளவும் பட்டாவிற்காக அரசாங்கத்திடமும் மற்றும் சட்டமன்ற உறுப்பினராகிய என்னிடமும் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கின்றனர். அதேபோல் 104–வது வார்டு, சாஸ்திரி நகர் பகுதியில் கடந்த 30 ஆண்டுகளாக 585 வீடுகளுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. மேலும், 104–வது வார்டிலுள்ள சாலைமாநகரில் வசிக்கும் மக்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. அதேபோல் 107–வது வார்டு, ஜெகந்நாதபுரம், 6–வது தெருவிலுள்ள ஆதி ஆந்திரா மக்கள் அந்தப் பகுதியில் 50 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்தும் அந்த இடங்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. 107–வது வார்டு, எம்.எஸ். நகர் பகுதியில் 50 ஆண்டுகளுக்கு மேலாக வசிக்கக்கூடிய 118 வீடுகளுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்குறிப்பிட்ட இந்த இடங்களுக்கெல்லாம் உடனடியாக பட்டாக்களை வழங்கி அந்த மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் நலன் சார்ந்திருக்கிற இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். சமுதாயத்திலே நலிந்த பிரிவினர்களுடைய முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையாக இருப்பது அவர்கள் வசிப்பதற்கு இடம் வழங்குவது. அதனை முதன்மைக் கொள்கையாக வைத்திருக்கும் அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் இந்த 6½ ஆண்டுகளிலே 14 இலட்சம் இலக்காக நிர்ணயித்து அந்த இலக்கையும் மிஞ்சி 16½ இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 1971 ஆம் ஆண்டுச் சட்டத்தின் அடிப்படையிலே ஒரு தடையாணை இருக்கிறது. அது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். ஆகவேதான் அந்தக் குடியிருப்புகளை வரையறை செய்து பட்டா வழங்குகிற திட்டத்தின் அடிப்படையிலும், regularisation என்று சொல்லக்கூடிய திட்டத்தின் அடிப்படையிலும் குடிசை மாற்று





வாரியத்தின் அடிப்படையிலும் பட்டா வழங்குகிற திட்டத்தை நாம் சென்னையை பொறுத்த அளவில் நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வகையிலேதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளிலெல்லாம் இன்றைக்கு இரண்டு பகுதிகளாக, மாநகராட்சிக்குச் சொந்தமாக இருக்கின்ற பகுதிகளிலே அதன் மூலமாகவும், குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான பகுதிகளிலே அதன் ஒப்புதல் பெற்றும்தான் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாதிரி 'முகவரியே இல்லாமல் சொந்த தாய் நாட்டில் இடம் இல்லாமல் இருக்கிறார்கள்' என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசிலேதான், இந்தத் தாய் மண்ணிலே, தமிழ் மண்ணிலே, சொந்த மண்ணிலே எனக்கும் சொந்தமாக இடம் இருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டுகின்றவகையிலே, நான் மீண்டும் சொல்கிறேன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் 16½ இலட்சம் ஏழையெளிவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றி வைத்திருக்கிற அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதிகளில், உடனடியாகப் பரிசீலனை செய்து மாநகராட்சியின் சார்பிலும், குடிசை மாற்று வாரியத்தின் சார்பிலும், பட்டா வழங்கக்கூடிய நடவடிக்கை எடுக்கப்படும். நாம் regularisation scheme அடிப்படையில் அரசாணை நிலை எண் 21–ன் வரையறைக்குட்பட்டு அவர்களுக்குப் பட்டா வழங்க இயலாது. ஆகவே, 21 (6)–ன்கீழ் அவர்களுக்குப் பட்டா வழங்கக்கூடிய வாய்ப்பையும் பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கு, சட்டமன்றத்திற்கு புதிதாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், என்னுடைய எழும்பூர் சட்டமன்றத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள தொகுதி என்பதால், எங்களுடைய செயல் தலைவர் அவர்கள் எனக்கு சட்டமன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்தார் என்று கருதுகிறேன். அப்படி நான் பேசும்போது என்னுடைய எழும்பூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள மக்களின் குறைகளையெல்லாம் பட்டியலிட்டு இந்த அவையிலே பேசி அது பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் நான் பேசி முடித்தவுடன், அவருடைய பதிலுரையிலும், என்னுடைய வினாக்களுக்கு பதில் அளிக்கின்ற சூழ்நிலையிலும், 'ஆயிரக்கணக்கான வீடுகளுக்குப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன' என்று அவர் தெரிவித்துள்ளார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் ஆயிரக்கணக்கான வீடுகளுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, உங்களுக்கும் வெகு விரைவில் பட்டாக்கள் கிடைத்துவிடும் என்று என்னுடைய தொகுதி மக்களிடம் கூறியிருந்தேன். ஆனால், என்னுடைய எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் நான் குறிப்பிட்ட கோரிக்கைகள் எதுவுமே இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.

மேலும், இந்தப் பட்டாக்கள் வழங்குவது சம்பந்தமாக பலமுறை அதிகாரிகளைச் சந்தித்தும், மனுக்கள் கொடுத்தும் இதுவரை அவர்களின் வீடுகளுக்குப் பட்டாக்கள் வழங்கப்படவில்லை. ஒரு தலைமுறை முடியக்கூடிய இந்தச் சூழ்நிலையில், அடுத்து வரக்கூடிய தலைமுறைக்கு நாம் எவ்வாறு சென்று பட்டா வாங்க வேண்டும்; எப்படிப் பட்டா வாங்க வேண்டும் என்றெல்லாம் தெரியப்போவதில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நான் குறிப்பிட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் போர்க்கால அடிப்படையிலே பட்டாக்களைப் பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போகிபாளையத்தில் உள்ள 338 வீடுகளுக்கும் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று கோரியிருக்கின்றேன். இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு, இரண்டு குடும்பங்களைச் சார்ந்த நபர்கள்





என்னை சந்திக்க வந்தார்கள். இதை நான் மிகைப்படுத்திக் கூறுவதாக நினைக்கக் கூடாது. அந்த இடத்தில் மாப்பிள்ளை வீட்டைப்பார்க்கவந்தவர்கள், 'சென்னையின்மையப்பகுதியிலேயே, தமிழகத்தின் தலைநகரான சென்னையிலேயே, குடிநீர் இணைப்பு இல்லாத வீட்டிற்கு என் பெண்ணைக் கொடுக்கமாட்டேன் என்று சென்றுவிட்டார்கள்' என்று சொன்னார்கள். போகிபாளையத்தில் உள்ள 338 வீடுகளுக்கும், இதுவரை வரி, தரை வரி, அடிமனை வரிகூட போடப்படவில்லை. ஏறக்குறைய 50 ஆண்டுக் காலமாக மக்கள் அந்த 338 வீடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் வாழும் ஆண்களுக்குத் திருமணம் நடைபெறுவதற்கு, அந்த வீட்டில் திருமணம் நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக வரியினைப் போட்டு, அங்கு குடிநீர் இணைப்பு வழங்கும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது உண்மைதான். மாண்புமிகு உறுப்பினருக்கு அவர் சார்ந்த கட்சியின் சார்பாக பேச அளிக்கப்பட்ட அவகாசத்தை அவர் சரியாகப் பயன்படுத்தி, அந்தத் தொகுதி மக்களின் தேவையை இந்த அவையிலே எடுத்துவைத்தார்கள். அதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. அதேபோல நான் சொன்ன அந்த விவரங்களையும் அவர் ஏற்றுக்கொண்டு, அதில் ஒரு புள்ளி வைக்கிறார். இத்தனை இலட்சம் பட்டாக்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே உங்களுக்கும் பட்டாக்கள் கிடைத்துவிடும் என்று நம்பிக்கையோடு சொன்னேன் என்று அதிலே ஒரு புள்ளி வைத்திருக்கிறார். மாவட்ட வாரியாக பட்டாக்கள் கொடுத்த புள்ளிவிவரங்களை நான் கையில் வைத்திருக்கிறேன். இந்த அவையில் வாசித்தும் இருக்கிறேன். ஒவ்வோர் ஆண்டும் பட்டாக்கள் கொடுக்க இலக்கு வைத்து, அந்த இலக்கிலே எந்தெந்தத் திட்டத்தின் அடிப்படையில் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் புள்ளிவிவரங்களுடன் கொடுத்திருக்கிறேன். அந்த வகையிலேதான்,

*கடந்த ஆறரை ஆண்டுகளில் 14 இலட்சம் என்ற இலக்கு வைத்து 16.50 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கி இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–05*

ஏற்கெனவே நான் அவருக்கு தெளிவாகச் சொன்னேன். அவர் அதைப் புரிந்துகொண்டு கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. சென்னையை பொறுத்த அளவில், அரசாணை எண் 1427, வருவாய்த் துறை, நாள் 11–5–1971–ன்படி சென்னை மாவட்டத்தில் நில ஒப்படை செய்வதற்குத் தடையாணை பிறப்பிக்கப்பட்டிருப்பதால், நில ஒப்படைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது. அப்படியானால் அந்த மக்களுடைய வாழ்வாதாரத்திற்கு அரசு என்ன செய்கிறது என்ற அடிப்படையிலேதான் வீடுகள் மூலமாக குடியிருப்புகளை ஏற்படுத்திக்கொண்டு அங்கே இருப்பவர்களுக்கு அது நத்தம் நிலமாக இருப்பின் பட்டாக்கள் வழங்கப்படுகிறது. ஏழை மக்கள் வீடு இல்லாமல் இருக்கக் கூடாது என்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்கிற அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் அடிப்படையில்தான், வருவாய்த் துறை (நிலை) ஆணை எண் 21–ன் விதிமுறைகளுக்குட்பட்டு கிராம நத்தமாக ஒதுக்கப்பட்ட நிலங்களிலிருந்து தகுதியுடைய வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன. அம்மக்களின் தேவைக்கு கிராம நத்த நிலங்கள் போதுமானதாக இல்லாதபோது அரசு அதைக் கைவிடுவது இல்லை. ஆட்சேபகரமற்ற அரசு புறம்போக்கு நிலங்களை கிராம நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்ய வருவாய்த் துறை (நிலை) ஆணை எண் 21(6)–ன் கீழ் வருவாய்க் கோட்ட அலுவலர், மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி தகுதியுள்ள, வீடில்லாத ஏழைகளுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன. நீர்நிலை புறம்போக்கு போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு இனங்களைத் தவிர்த்து பிற ஒப்படை செய்யக்கூடிய நிலங்கள் தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைகளாக ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இந்தத் தகுதியின் அடிப்படையில் வருகின்றபோது, 21(6)–ன்கீழே வரையறுக்கப்பட்ட விதிமுறைகளுக்குட்பட்டு,





regularisation செய்து அவர்களுக்குக் கொடுப்பதற்கும், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அவர்களுக்கு வழங்குவதற்கும் வழிவகைகள் இருக்கின்றன என்பதையும், அந்த அடிப்படையில் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பெருமை வாய்ந்த மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல ஊராட்சிகளில் நீண்ட நெடுங்காலமாக வசித்துவரும் கிராம பொதுமக்கள் தங்களுக்கு நில உரிமைப் பட்டா வழங்கப்படாத காரணத்தினால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இதில் குறிப்பாக எனது சொந்த ஒன்றியமான நீடாமங்கலம் ஒன்றியம், முக்குலம் சாத்தூர், தளிக்கோட்டை காலனி மற்றும் கருவாக்குறிச்சி காலனியில் ஏறத்தாழ 70 ஆண்டுக்காலமாக வசித்துவரும் 240–க்கும் மேற்பட்ட குடும்பங்கள், எடக்களியூர் ஊராட்சி, வடக்குடையார் தெரு, மூவர்கோட்டை, சீனிகுடிகாடு பகுதிகளில் 150–க்கும் மேற்பட்ட குடும்பங்கள், மன்னார்குடி ஒன்றியத்தில் நெடுவாக்கோட்டை கிராமத்தில் கீழநாகைப் பகுதி, மூவாநல்லூர் ஊராட்சியில் உப்புகுளம் காலனி போன்ற பகுதிகளில் ஏறத்தாழ 100–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீட்டுமனைப் பட்டாக்கள் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த கால தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் அன்றைய துணை முதல்வர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் சீரிய முயற்சியால் கருவாக்குறிச்சி காலனியில் ஒரு பகுதி மக்களுக்கு நில உரிமைப் பட்டா வழங்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு ஏறத்தாழ ஆறு ஆண்டுக்காலமாக அந்தக் கோப்புகளெல்லாம் அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளன. ஆகவே, அந்தக் கோப்புகளை தூசி தட்டி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் அந்தப் பகுதி மக்களுக்கு நில உரிமைப் பட்டா வழங்க ஆவன செய்வார்களா என்பதனை அறிய விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், எங்கள் பகுதி பல காரணங்களால் புறக்கணிக்கப்படுகின்றதோ என்ற ஓர் எண்ணம் எங்கள் பகுதி மக்களிடம் உள்ளது. அந்த ஐயத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போக்குவார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–10

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு யாரையுமே புறக்கணிக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையிலே இந்தச் பிரச்சினையை எடுத்து வைக்கின்றபோது, 10, 20, 30 ஆண்டுக்காலமாக மக்கள் குடியிருந்து வருகின்றார்கள், ஆனால் அவர்களுக்குப் பட்டா வழங்கவில்லை என்று சொல்கின்றார்கள். எந்த அரசாக இருந்தாலும் விதிமுறைகளை, நடைமுறைகளைப் பின்பற்றித்தான் பட்டா வழங்க முடியும். Regular scheme, Regularisation scheme, Town settlement ஆகிய இந்த மூன்று வகைகளிலேதான் நிலப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. பொதுவாக ஏழ்மையில் இருக்கக்கூடிய மக்கள் அவர்களாகவே ஓர் இடத்தைத் தேர்வு செய்து, வீடுகள் மூலமாக ஆக்கிரமிப்புகளை அரசினுடைய எந்த அனுமதியையும் பெறாமல் ஏற்படுத்திக்கொண்டு, அந்த இடத்தை அவர்கள் குடியிருப்புகளாக மாற்றிக்கொள்கிறார்கள். அது அரசினுடைய நிலமாக இருக்கும். அதற்கு எந்தவிதமான பட்டாவோ, சிட்டாவோ நில உரிமையோ இருப்பதில்லை. ஆனால், அவர்கள் அதை ஓர் உரிமையாக எடுத்துக்கொண்டு அங்கு குடியிருப்புகளை உருவாக்கிக்கொள்கிறார்கள். அது ஆட்சேபகரமான புறம்போக்கு நிலமா அல்லது ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலமா என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. அவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு வசிப்பதற்கு ஓர் இடம் வேண்டும் என்கிற அடிப்படையில் அவர்கள் வீடுகளை அமைத்துக்கொள்கிறார்கள். அதுபோன்ற வீடுகளின்மூலமாக ஆக்கிரமிப்புகளை ஏற்படுத்திக்கொள்பவர்களுக்கு regularisation scheme என்னும் one time special scheme மூலம், நீங்கள் ஆட்சியில் இருந்தபோதும், நாங்கள் இருக்கும்போதும் இந்த முறைமூலம், அவர்களுக்குப் பட்டா வழங்கிக்கொண்டிருக்கிறோம். குறிப்பிட்ட கால வரையறைக்குள்தான் அந்தப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்கள்கூட இந்தத் திட்டத்தை மிகக் கவனமாகக் கையாண்டு, நீர்நிலைகள் இல்லாத இடங்களுக்குத்தான் வழங்கினார்கள். ஏனென்றால், one time special scheme என்று வருகிறபோது எல்லா தடையாணைகளுமே தளர்வு செய்யப்படுகின்றன. உங்கள் ஆட்சியிலும் நீங்கள் இவ்வாறு 10 முறை செய்திருக்கிறீர்கள். நாங்களும் அதை மக்களின் நலன் கருதி செய்திருக்கிறோம். ஆகவே, அனைத்து condition–களும் தளர்வு செய்கிறபோது அவற்றில் "நீர்நிலைகள் தவிர்த்து" என்கிற ஒரு வாசகத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சேர்த்து வழங்கினார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களது அரசினுடைய நோக்கம், அனைவருக்கும் வசிப்பதற்கு ஓர் இடம் வழங்க வேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையில்தான் தற்போது ஒவ்வோராண்டும் அதற்கான இலக்கை நிர்ணயித்து வழங்கிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்களது கோரிக்கையினை பரிசீலனை செய்து, அரசாணை எண் 21–ன் வரையறைக்குட்பட்டு வருமேயானால், அதற்குப் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும், அது தகுதியற்ற நிலமாக இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு மாற்று இடம் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**38—**

## ஆவின் பாலகம்

***13567—திரு. சு. ராஜேந்திரன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் மாவட்டம், அரியலூர், கீழப்பழுவூர், ரெட்டிப்பாளையம், தளவாய் ஜெயம்கொண்டான், ஆண்டிமடம் மற்றும் செந்துறை ஆகிய பகுதிகளில் ஆவின் பாலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொய் மணக்கப் பேசுகின்ற அரசியல்வாதிகளுக்கு மத்தியில், ஆவின் நெய் போல் மெய் மணக்க பேசி, தமிழக மக்கள் நலம் காண கை மணக்க உதவிகளைப் பெருகத் தந்து, தமிழகம் செழிக்கச் செய்த தத்துவத் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொன்னடிகளை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சித் தேரைத் திறம்பட செலுத்தி, தமிழகத்தின் நலன் காத்துவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர், அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அரியலூர் சட்டமன்ற உறுப்பினரும், அரசுக் கொறடாவுமான அண்ணன் திரு. ராஜேந்திரன் அவர்கள் விடுத்துள்ள வினாக்களுக்கு தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டத்தில், அரியலூரில் மூன்று இடங்களிலும் செந்துறை மற்றும் இடைக்கட்டு ஆகிய இடங்களில் தலா ஓர் இடத்திலும் என மொத்தம் ஐந்து பாலகங்கள் இயங்கிவருகின்றன. அரியலூர் அரசு மருத்துவமனை மற்றும் செட்டு ஏரிப் பூங்கா ஆகிய பகுதிகளில் பாலகங்கள் அமைப்பதற்கான விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. மேலும் கீழப்பழுவூர், ரெட்டிப்பாளையம், தளவாய் ஜெயம்கொண்டான், ஆண்டிமடம் ஆகிய இடங்களில் பாலகம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அரசு ஏவுநர் அவர்கள்.

**திரு. சு. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் நம்மையெல்லாம் வாழவைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோரை வணங்குகிறேன். அரசியலில் வழிகாட்டியாய் என்னை ஆளாக்கிய



2018 ஜனவரி 12]

அருமை அண்ணன், மாநிலங்களவை உறுப்பினர், கழகத்தின் துணை ஒருங்கிணைப்பாளர், அமைப்புச் செயலாளர் அருமை அண்ணன் திரு. வைத்திலிங்கம் அவர்களை வணங்குகிறேன்.

அரியலூர் மாவட்டத்தில் ஏழை நடுத்தர மற்றும் பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்திடும்வகையில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட சீரிய மக்கள் நலத் திட்டங்களில் ஒன்றான கறவை மாடுகள் வழங்கும் திட்டம் காரணமாக தற்போது இப்பகுதியில் பால் உற்பத்திப் பெருகி வருகின்ற காரணத்தினால் கறந்த பாலினை ஆவின் பால் நிலையங்களுக்குக் கொண்டுவர மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற பால் அரியலூரிலிருந்து திருச்சிக்கும், பெரம்பலூருக்கும் எடுத்துச் செல்லுகின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதியில் இன்னும் இரண்டு குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க வேண்டும். ஜெயம்கொண்டான் போன்ற பகுதிகளில் குளிரூட்டும் நிலையங்களை அமைத்து, அந்தப் பகுதிவாழ் எளியோர்கள் பால் கொண்டு செல்வதற்கும், மக்களின் நீண்டநாள் கோரிக்கையான குளிரூட்டும் நிலையங்களை அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் அரசு உறுதுணையாக இருக்குமா என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன். இத்தொகுதிக்குட்பட்ட கீழப்பழுவூர், ரெட்டிப்பாளையம், ஜெயம்கொண்டான், ஆண்டிமடம் மற்றும் செந்துறை போன்ற பகுதிகளில் ஆவின் பால் விற்பனை நிலையங்களை அமைத்திட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம் வளர்ந்து வருகின்ற மாவட்டமாகும். ஆவின் பால் உற்பத்தி மற்றும் கொள்முதல் அதிகமாகி இன்றைக்கு நல்ல முன்னேற்றம் அடைந்த மாவட்டமாக அரியலூர் மாவட்டம் திகழ்கின்றது. இம்மாவட்டத்தில்

[2018 ஜனவரி 12

அரியலூர் பேருந்து நிலையம், செந்துறை ரோடு மற்றும் கருத்தான் ரோடு ஆகிய மூன்று இடங்களிலும், ஜெயம்கொண்டான் பகுதியில் சிதம்பரம் ரோடு, சிவன் சன்னதி தெரு ஆகிய இரு இடங்களிலும், ஆண்டிமடம் பகுதியில் புதிய தேவனூர் மற்றும் விளந்தை ஆண்டிமடம் ஆகிய இரண்டு இடங்களிலும் ஆவின் பால் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆவின் பால் விற்பனை நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். பால் குளிர்விப்பான்கள் (BMC) வேண்டுமென்று கேட்டிருக்கிறார். நம்முடைய கொறடா அவர்களுடைய உத்தரவை நாங்கள் மீற முடியாது. எங்கள் அனைவருக்கும் உத்தரவுப் போடக்கூடியவர், அருமை அண்ணன் கொறடா அவர்கள். அவருடைய உத்தரவை ஏற்று கீழப்பழுவூர், ரெட்டிப்பாளையம் மற்றும் செந்துறை ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களில் எவரேனும் ஆவின் முகவராகச் செயல்பட விரும்பும்பட்சத்தில் ஆவின் பால் விற்பனை நிலையங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 10 குளிர்விப்பான்கள் அங்கே இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் 2 குளிர்விப்பான்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். 2 பால் குளிர்விப்பான்கள் (BMC) அமைப்பதற்குத் தேவையான இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர்வு செய்து கொடுக்கும்பட்சத்தில், அங்கே 5,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட பால் குளிர்விப்பான்கள் அமைப்பதற்கு அருமை அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன் அவர்கள்.

**திரு. சு. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.



2018 ஜனவரி 12]

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தினுடைய தலைவர், எங்கள் இயக்கத்தின் அன்புத் தலைவர் கலைஞர் அவர்களையும், எங்களை இயக்குகிற செயல் தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் தளபதியார் அவர்களையும் வணங்குகிறேன். திருவிடைமருதூர் தொகுதி, தஞ்சை மாவட்டத்தின் கடைகோடி பகுதி. பல்லாயிரக்கணக்கான கால்நடைகள் நிரம்பியிருக்கிற தொகுதி. பால் உற்பத்தியும் அதிகமுள்ள தொகுதி. 5 பேரூராட்சிகள் மற்றும் 104 ஊராட்சிகளை உள்ளடக்கிய இந்தத் தொகுதியில், ஆவின் பால் விற்பனை நிலையம் இல்லை. எனவே, தாலுகா தலைநகராக, தொகுதியின் தலைநகராக இருக்கிற திருவிடைமருதூரில் ஆவின் பாலகம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் திருவிடைமருதூரில் ஆவின் பால் விற்பனை நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார். அவர் இடத்தைத் தேர்வு செய்து கொடுக்கின்றபட்சத்தில், பால் விற்பனை செய்ய முகவர்கள் சம்மதம் தெரிவிக்கின்றபட்சத்தில், அந்த இடத்திலே பால் விற்பனை நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் பேரூராட்சியில் ஆவின் பாலகம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

*[2018 ஜனவரி 12*

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது திருவிடைமருதூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட அதே கேள்வியைத்தான் இவரும் கேட்டிருக்கின்றார். இடம், நகராட்சி இடமாக இருந்தால் அவர்களிடம் அனுமதி பெற்றுக் கொடுங்கள். தனியார் இடமாக இருந்தால் தனியாரிடத்திலே வாடகைக் குத்தகை ஒப்பந்தப் பத்திரம் அல்லது வாடகை ஒப்பந்தப் பத்திரம் வாங்கி, அங்கேயுள்ள பொது மேலாளர் இடத்திலோ அல்லது என்னிடத்திலோ அல்லது மாண்புமிகு முதல்வர் இடத்திலோ அந்த* petition *வருகின்றபட்சத்தில், நீங்கள் சொல்கின்ற இடத்தில் ஆவின் பாலகம் கட்டாயம் அமைக்கப்படும். ஏனென்று சொன்னால், ஆவின் கொள்முதல் இன்றைக்கு தமிழகத்திலே கூடியிருக்கிறது. 32½ இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் கொண்ட மிகப் பெரிய நிறுவனமாக இன்றைக்கு ஆவின் நிறுவனம் வளர்ந்திருக்கிறது. ஒரு நாளைக்கு 22.5 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யக்கூடிய அளவிற்கு மிகப் பெரிய நிறுவனமாக ஆவின் நிறுவனம் வளர்ந்திருக்கிறது. ஆக, விவசாயிகள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கொடுக்கின்ற பால் அனைத்தையும் நாம் வாங்குகிறோம். மீதியிருக்கிற பாலை பால் பவுடராகவும், பாலிலிருந்து 100 விதமான பொருட்கள் மற்றும் 75 விதமான ஐஸ் கிரீம்களை தயார் செய்கிறோம். எவ்வளவு பால் வந்தாலும் கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்குத் தயாராக இருக்கிறோம். அந்நிய மண் சிங்கப்பூரிலே கால் பதித்த பால் இந்தியாவின் ஆவின் பால் மட்டும்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களின் உத்தரவிற்கிணங்க, சிங்கப்பூரில் 60 இடங்களில் ஆவின் பால் விற்பனை மிக நல்ல முறையில் நடைபெற்று வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) 150 இடங்களில் விற்கக்கூடிய அளவிற்கு ஆவின் பாலைக் கொண்டுசெல்லும் பணிகளை நாங்கள் செய்கிறோம். சிங்கப்பூர் நாட்டிற்கே ஆவின் போகின்ற நேரத்திலே இங்கே இருக்கின்ற தமிழகத்தில் நீங்கள் கேட்கின்ற இடத்தில் கொடுக்காமலா இருப்போம்?*

*எங்கெங்கே ஆவின் பால் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்கிறீர்களோ, எங்கெல்லாம் பால் குளிர்விப்பான்கள் (*BMC*) அமைக்கப்பட வேண்டுமென்று கேட்கிறீர்களோ, எங்கெல்லாம்* Hi–tech Parlour *அமைக்கப்பட*



*2018 ஜனவரி 12]*

*வேண்டுமென்று கேட்கிறீர்களோ, அங்கெல்லாம் இடம் இருந்தால், இடத்தைத் தேர்வு செய்து கொடுத்தால், கட்சி பேதமின்றி எல்லோருக்கும் அமைத்துக் கொடுப்பதற்கு அருமை அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் பரிந்துரையின்படி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

**திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆவின் பாலகம் இன்றைக்குப் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலேயே அதிக பாலை உற்பத்தி செய்யக்கூடிய இரண்டாவது மாவட்டமாக வேலூர் மாவட்டத்தின்கீழ் செயல்படும் திருவண்ணாமலை மாவட்டம் விளங்குகிறது. இன்றைக்கு தருமபுரி மாவட்டத்தில் ஒவ்வொரு வீட்டிலும் 15 லிட்டர் அளவுக்கு கறக்கக்கூடிய மாடுகள் வளர்க்கப்பட்டு, அதிகளவு பால் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், எங்கள் பகுதியிலே இன்றைக்கும் 2 லிட்டர், 3 லிட்டர் கறக்கக்கூடிய மாடுகள்தான்* loan *மூலம் வழங்கப்படுகின்றன. ஆகவே, பால் உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய நோக்கத்தோடு மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள், எங்கள் பகுதியிலும் அப்படிப்பட்ட மாடுகளுக்கு* loan *வழங்கி, ஏழையெளிய மக்கள் அதிகளவில் வருமானம் பெறுவதற்கு வழிவகை செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஆவின் பால் விற்பனை நிலையம் வேலூர் மாவட்டத்தோடு இணைந்துள்ளது. வேலூர் மாவட்டத்தோடு இணைந்திருந்தாலும் திருவண்ணாமலை மாவட்டத்தில்தான் அதிகமான அளவுக்கு பால் உற்பத்தி இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபடி, திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள கறவை மாடுகள் குறைவான அளவுக்கு*

*[2018 ஜனவரி 12*

பாலைக் கறக்கவில்லை. அதிகமான அளவுக்கு பாலைக் கறக்கின்றன. அதிகமான பால் உற்பத்தி திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து வருகிறது. வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இரண்டு மாவட்டங்களும் பெரிய மாவட்டங்களாக இருப்பதால் திருவண்ணாமலை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர், மாடுகள் வாங்குவதற்கு loan வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். எங்களிடம் வரும் மனுக்களுக்கு, துறை மூலமாக loan கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். கால்நடைத் தீவனமும் வழங்கிக் கொண்டுதான் இருக்கிறோம். இன்றைக்கு ஆவின் பால் எல்லா இடங்களிலும் மிக அதிகளவில் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதிகளவுக்கு பாலும் கொள்முதல் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகளவு பால் கறக்கக்கூடிய கறவை மாடுகள் குறைவாக இருப்பதால் அதிகமாக loan வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**39—**

## ஓய்வு அறை

***12092—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடையநல்லூர் தொகுதி, திருமலைக்கோயில் அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய ஓய்வு அறை கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



*2018 ஜனவரி 12]*

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், தமிழகத்தில் தலைசிறந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், பண்பொழி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் என்கிற திருமலை குமாரசாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு ரூ.60,00,000/– மதிப்பீட்டில் திருக்கோயில் நிதிமூலம் அனைத்து வசதிகளுடன்கூடிய ஓய்வு அறைகள் கட்டும் பணி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசிபெற்ற அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு, அங்கீகரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

*முற்பகல் 11–25*

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடையநல்லூர் தொகுதி, சிவராமபேட்டை அருகில் அருள்மிகு சிவன் கோயில் உள்ளது. அதேபோன்று கிருஷ்ணாபுரத்திலும் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயில் இருக்கின்றது. இந்தத் திருக்கோயில்களுக்கு அதிகளவில் பக்தர்கள் வருகின்றனர். எனவே, இந்தக் கோயில்களுக்கு அடிப்படை வசதிகளை இந்த அரசு செய்து தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய திருக்கோயில்கள் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. அந்தத் திருக்கோயில்களை துறை ரீதியாக ஆய்வுசெய்து, நிதியாதாரங்களைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று பக்தர்களின் வசதிக்காக ஓய்வு அறை கட்டுவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. கடையநல்லூர் தொகுதி, சொக்கம்பட்டி வைரவன் குளம், கருப்பாநதி கரையோரத்திலே பெரிய சுவாமி ஐயனார் கோயில் உள்ளது. இந்தக் கோயிலுக்கு மதுரை, தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களிலிருந்தும் மற்றும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த பக்தர்கள் அதிகமாக வருகை தருகின்றனர். குறிப்பாக, மாதந்தோறும் பௌர்ணமி, சிவராத்திரி, கடைசி வெள்ளிக்கிழமை, மகா சிவராத்திரி போன்ற நாட்களில் பக்தர்கள் அதிகளவில் வருகின்றனர். இந்தக் கோயிலை ஒட்டி பாலம் அமைக்கப்பட வேண்டுமென்று வெகு நாட்களாக அங்குள்ள மக்கள் கோரிக்கை வைத்திருக்கின்றனர். எனவே, இதனையும் நமது அரசாங்கம், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாகச் செய்து தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட துணைக் கேள்வி மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வியாகும். பொதுமக்கள் பிரச்சினை என்கிற காரணத்தினால், அந்த இடத்தினைத் துறை ரீதியாக ஆய்வுசெய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று, பாலம் அமைக்க



2018 ஜனவரி 12]

ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

**திரு. சு. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஒன்றியம், மலைவையாவூரில் பிரசித்திப்பெற்ற பெருமாள் கோயில் இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் தேசிய நெடுஞ்சாலையில் மாமண்டூரிலிருந்து மதுராந்தகம் செல்லக்கூடிய வழியில் மேற்கு திசை நோக்கிப் பார்த்தால், மலையில் இருக்கக்கூடிய இந்தக் கோயில் அனைவருக்கும் தெரியும். தென் திருப்பதி என்று சொல்லக்கூடிய அளவிற்கு புகழ் பெற்ற ஒரு திருத்தலமாகும். அங்கு செல்வதற்கு மலை பாதை இருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட மிகப் பெரிய வெள்ளத்தினால் மலைப் பகுதியில் இருக்கக்கூடிய இக்கோயிலின் முன்பிருக்கும் முன் மண்டபமும், சுற்றுச்சுவரும் இடிந்து, ஒரு தொங்கு பாலம்போல் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. எந்த நேரத்தில் அந்தச் சுவர் இடிந்து விழுமோ தெரியாது. எனவே, பக்தர்களின் பாதுகாப்பினைக் கருதி, உடனடியாக அதனை நிவர்த்தி செய்து தரும்படி தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்தக் கோயில் நூறாண்டுக்காலம் பழமை வாய்ந்த கோயிலாகும். அந்தக் கோயிலை ஆய்வு செய்து, தொல்பொருள் துறையின் வல்லுநர் குழு பரிந்துரையை ஏற்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக் கூறி அந்தப் பணியை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2018 ஜனவரி 12

**40—**

## மாணவர் விடுதி

***14656—திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கம்பம் தொகுதி, உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள மேலசிந்தலைச்சேரியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி கட்ட அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி செய்து கொண்டிருக்கிற தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதி, உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள மேலசிந்தலைச்சேரியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.

**திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று வாழ்ந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். கொடுத்து, கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரராக வாழ்ந்த பொன்மனச் செம்மல் இதய தெய்வம் எம்.ஜி.ஆர். அவர்களையும் வணங்குகிறேன். இன்றையதினம் வாய்ப்பு வழங்கிய தங்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2018 ஜனவரி 12]

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி அம்மா அவர்கள் வழியில் நல்லாட்சி நடத்தி கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இங்கே வந்திருக்கிற அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும், உலகமெல்லாம் இருக்கிற தமிழ் மக்களுக்கும், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–30*

கம்பம் தொகுதி, மேலசிந்தலைச்சேரி கிராமத்திலே பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்றை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டிருந்தேன். அங்கே மேல்நிலைப் பள்ளி இருக்கின்றது. அந்தக் கிராமத்தைச் சுற்றி பல கிராமங்கள் இருக்கின்றன. குறிப்பாக, தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏழை மாணவர்கள் பயனடைகின்ற வகையிலே அங்கே பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் 30 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவ–மாணவியர்களின் எண்ணிக்கை 1,980 ஆகும். தேனி மாவட்டம், கம்பம் தொகுதியில் 5 பள்ளி விடுதிகள் இயங்கி வருகின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள மேலசிந்தலைச்சேரியில் செயல்பட்டு வரும் அரசு உயர்நிலைப் பள்ளியில் மொத்தம் 165 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மாநிலம் முழுவதும் பெருவாரியான கிராமங்கள் மற்றும் நகரங்களில் மாணவ–மாணவியர்கள் கல்வி கற்கத் தேவையான உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளின்மூலம் தடையின்றி கல்வி பயில கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை, விலையில்லா மிதிவண்டி போன்ற வசதிகள் மாணவ–மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

[2018 ஜனவரி 12

மேலும், இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் 1,338 விடுதிகளில் 1,112 விடுதிகள் பள்ளி விடுதிகளாகும். இந்தச் சூழ்நிலையில் கம்பம் தொகுதி, உத்தமபாளையம் ஒன்றியம், மேலசிந்தலைச்சேரியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்றைப் புதிதாக அமைக்க அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. ரா. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்ட வேப்பந்தட்டையில் அமைந்திருக்கிற அரசு கலை அறிவியல் கல்லூரியில் 1,145 ஏழை மாணவர்கள் உயர் கல்வி பயின்று வருகின்றனர். தொலைதூரத்திலிருந்து கல்லூரியில் கல்வி பயிலும் அந்த ஏழை பிற்படுத்தப்பட்ட மாணவர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு கல்லூரி விடுதியில் தங்கி கல்வி பயிலுவதற்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் கல்லூரி விடுதி ஒன்றினை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று தேவையின் அடிப்படையிலும், நிதிநிலைக்கேற்பவும் புதிய விடுதி திறக்க ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2018 ஜனவரி 12]

## 2. தகவல் கோரல்

### (அ) தூத்துக்குடி தொகுதி, விசைப் படகு மீனவத் தொழிலாளர்கள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

**திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி தொகுதியில் விசைப் படகுகள் கடந்த நான்கு மாதக்காலமாக கடலுக்குச் செல்லாமல் இருப்பதால் விசைப் படகுகளில் பணிபுரிந்து வந்த சுமார் 3,000–க்கும் மேற்பட்ட மீனவத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பின்றி அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். அதில் சில மீனவர்கள் வேலை தேடி பிற மாவட்டங்களுக்குச் சென்றுள்ளனர். அப்படி கன்னியாகுமரிக்குச் சென்றவர்களில்தான் 5 மீனவர்கள் ஒகி புயலில் சிக்கி உயிரிழந்துள்ளனர். மீன்பிடித் தொழிலை சார்ந்திருக்கக்கூடிய ஏற்றுமதி உள்ளிட்ட அனைத்துத் தொழில்களும் மாநகரத்தில் முடங்கியுள்ளன. மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இணை இயக்குநர் பேச்சுவார்த்தை நடத்தியும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி, இதற்குத் தீர்வு காண வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–35

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் ஒழுங்குமுறைச் சட்டம், 1983–ன்படி தற்போது நம்முடைய கடற்கரையில் விசைப் படகுகள், கட்டுமரங்கள், வல்லங்கள் உட்பொருத்திய, வெளிபொருத்திய இயந்திரங்கள் பொருத்தப்பட்ட மீன்பிடிக் கலன்களெல்லாம் தொழிலை அமைதியான முறையில் செய்து கொண்டிருக்கின்றன.

[திரு. டி. ஜெயக்குமார்] [2018 ஜனவரி 12

இதில் அரசுக்கு மாறுபட்ட கருத்து எதுவும் கிடையாது. தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 4 ஆயிரம் நாட்டுப் படகுகள், 400 விசைப் படகுகள் உள்ளன. அந்த 400 விசைப் படகுகளில் 150 படகுகள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்கின்ற tuna படகுகள் ஆகும். 4 ஆயிரம் நாட்டுப் படகுகள் மீன் பிடிப்புக்குச் சென்று கொண்டிருக்கின்றன; 250 விசைப் படகுகள் மீன்பிடிக்கச் சென்று கொண்டிருக்கின்றன. தற்போது 150 படகுகள் மட்டும்தான் இந்தப் பிரச்சினையில் உள்ளன. இதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து எதுவுமில்லை. மீனவர்கள் அண்ணன், தம்பி போன்றவர்கள். விசைப் படகு மீனவர் அண்ணன் என்றால், நாட்டுப் படகு மீனவர் தம்பி. இந்த இருவரும் ஒருமித்த கருத்து எடுத்து, ஒற்றுமையோடு நாங்கள் தொழில் செய்கிறோம் என்று சொன்னால், அவர்கள் தொழில் செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல் ஏற்கெனவே இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த கருத்துருவின் அடிப்படையில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அதனடிப்படையில் 4 நாட்கள் மீன் பிடிக்கச் சென்றார்கள். ஆனால், மீண்டும் 4 ஆயிரம் நாட்டுப் படகு மீனவர்கள் மற்றும் வல்லங்கள் இயக்குபவர்கள் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக தற்போது அவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கின்ற 150 tuna விசைப் படகு மீனவர்கள் தற்போது மதுரை உயர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நீதிமன்றத்திலிருந்து என்ன ஆணை வருகிறதோ, அதையும் நாங்கள் observe செய்துவிட்டு, அதற்கேற்றபடி நடவடிக்கை எடுக்கத் தயாராகயிருக்கின்றோம். இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்று, நீதிமன்ற உத்தரவு எந்த அடிப்படையில் வருகிறது என்பதைப் பார்த்து, அதன் பிறகு மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலம் இருதரப்பையும் அழைத்துப் பேசி, ஒரு சுமுக முடிவு எட்டலாம் என்கின்ற ஒரு எண்ணம்கூட இருக்கின்றது. இதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. அனைவரும் ஒருமித்த கருத்தோடு மீன்பிடித் தொழில் செய்தால் மிகவும் நல்லது. ஒருமித்த கருத்து வரும்போது நிச்சயமாக அதை நடைமுறைப்படுத்துவதற்குத் தயாராகயிருக்கின்றோம்.



2018 ஜனவரி 12] [திரு. டி. ஜெயக்குமார்]

ஆழ்கடல் மீன்பிடிப்பு வளர்ந்து வருகின்ற தற்போதைய சூழ்நிலையில், பொதுவாகவே அண்மைக் கடல் மீன்பிடிப்பு (offshore fishing) என்பது குறைந்துகொண்டே வருகின்ற ஒரு நிலை இருக்கின்றது. எனவே, ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கின்ற சூழ்நிலைக்கு நம்முடைய மீனவர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதாகும். எனவே, 240 horsepower–க்கு மேலாக இருக்கின்ற என்ஜின்கள், 24 மீட்டருக்குமேல் உள்ள விசைப் படகுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ய வேண்டுமெனில், 1983 ஆம் ஆண்டைய Marine Fishing Regulation Act–ஐத் திருத்தம் செய்வதன் மூலமாகத்தான் அதை நாம் அமல்படுத்த முடியும். அதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. எனவே, மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதற்கு வசதியாக அந்தச் சட்டம் திருத்தப்படும்போது இதுபோன்ற பிரச்சினைகளெல்லாம் எதிர்காலத்தில் இருக்காது என்ற ஒரு நம்பிக்கை இருக்கின்றது.

## (ஆ) சென்னை, யானைக்கவுனி பாலப் பணிகள் விரைந்து முடித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, என்ன, சொல்லுங்கள்.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மேம்பால நாயகன் எங்கள் ஆருயிர்த் தளபதி அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) வரன் பார்க்காமலேயே நிச்சயதார்த்தத்தை முடிவு செய்வதுபோல், அரிசி இல்லாமலேயே உலை வைப்பதுபோல், அஸ்திவாரம் தோண்டாமலேயே கிரகப்பிரவேசத்திற்கு நாள் குறிப்பதுபோல், நயினார் பாலம் என்று சொல்லப்படுகின்ற யானைக்கவுனி பாலத்தில் 2016 ஆம் ஆண்டே இரயில்வே துறை போக்குவரத்தைத் தடை செய்துவிட்டது. 2016 ஆம் ஆண்டு முடிந்து 2017 கடந்து, தற்போது 2018–ஐ நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. திரும்பவும் 2019–ஐ நோக்கிச் செல்லாமல், இந்த 2018 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாவது இந்தப் பாலப் பணியை விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்குத்தான் இந்தக் கவன ஈர்ப்பு.

இந்த யானைக்கவுனி மேம்பாலம் வால்டாக்ஸ் ரோடு, இராஜா முத்தையா சாலையை இணைக்கின்ற பாலம். கிட்டத்தட்ட பூந்தமல்லி நெடுஞ்சாலைத் தொடங்கி இந்தப்புறம்

[திரு. பி.கே. சேகர்பாபு] [2018 ஜனவரி 12

வண்ணாரப்பேட்டை, வியாசர்பாடி, அயன்புரம் போன்ற அனைத்துப் பகுதிகளையும் ஒருங்கிணைக்கின்ற பாலம். இந்தப் பாலத்தை மூடுவதற்குமுன்பு வீட்டிலிருந்து புறப்பட்டால் 10 நிமிடங்களில் சட்டமன்றத்திற்குக்கூட வந்து சேர்ந்துவிடுவோம். இப்பொழுது ஒரு மணி நேரம் ஆகிறது. இதனால், பணிக்குச் செல்பவர்கள், பள்ளிக்குச் செல்பவர்கள், சுமை தூக்குவோர் என அனைத்துத் தரப்பு மக்களும் பாதிப்புக்குள்ளாகி, சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகியிருக்கின்றனர். ஆகவே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இதிலே கவனம் செலுத்தி, இந்தப் பாலப் பணியை விரைந்து முடிக்க இரயில்வே துறையை வற்புறுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதுதான் இப்பாலத்தை இடிக்கின்ற பணிக்கு tender கோரப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவாவது, அந்தப் பாலத்தை இடிக்கும் பணியை முடித்து, 50:50 சதவிகித பணத்தில், மாநில அரசின் 50 சதவிகித பணத்தை ஒதுக்கீடு செய்து, பாலப் பணியைத் தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருநகர சென்னை மாநகராட்சியில், வால்டாக்ஸ் சாலை மற்றும் இராஜா முத்தையா சாலையை இணைக்கும் யானைக்கவுனி பாலச் சாலையில் அமைந்துள்ள யானைக்கவுனி பாலம் இரயில்வே துறையைச் சார்ந்ததாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட அதைக் குறிப்பிட்டார்கள். இந்தப் பாலத்தின் இருபுறமும் உள்ள அணுகு சாலைப் பகுதி மட்டுமே பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பாலம் தற்போது மிகவும் பழுதடைந்துள்ள காரணத்தினால் கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் செல்வதற்கு இரயில்வே துறை மற்றும் போக்குவரத்துக் காவல் துறையால் தடை செய்யப்பட்டுள்ளது.



2018 ஜனவரி 12] [திரு. எஸ்.பி. வேலுமணி]

இப்பாலத்தில் இருசக்கர வாகனங்கள் மட்டுமே செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பாலத்தின் கீழுள்ள இருப்புப் பாதையில் கூடுதலாக இருப்புப் பாதை அமைக்க ஏதுவாக பாலத்தின் இரயில்வே பகுதி நீளத்தை 47 மீட்டரிலிருந்து 150 மீட்டருக்கு அகலப்படுத்த இரயில்வே துறை உத்தேசித்துள்ளது. இப்பாலத்தை இடித்துவிட்டு புதியதாக மேம்பாலம் அமைக்கும் பணியை இரயில்வே துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியும் இணைந்து 50:50 நிதிப் பங்கீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரயில்வே பகுதி பணியை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை மற்றும் வடிவமைப்பு பணிகள் தயார் செய்யப்பட்டு, இரயில்வே துறை பொது சீரமைப்பு வரைபடத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சமர்ப்பித்துள்ளது. இரயில்வே துறையிடமிருந்து விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்ட பின்னர் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அணுகு சாலை பகுதிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பழுதடைந்துள்ள பாலத்திற்குக்கீழ் இரும்பு தூண்கள் நிறுத்தி பலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதால் யானைக்கவுனி பாலத்தில் இலகுரக மற்றும் கனரக வாகனப் போக்குவரத்து ஏற்கெனவே தடை செய்யப்பட்டுள்ளது. தற்போது பேசின் சாலை மற்றும் இராஜா முத்தையா சாலை, ஈ.வே.ரா. பெரியார் சாலை வழியாகப் போக்குவரத்து திருப்பிவிடப்பட்டுள்ளது. மேலும், தற்போது இரு சக்கர வாகனங்கள் செல்வதையும் தடைசெய்ய இரயில்வே நிருவாகம் காவல் துறையை அணுகியுள்ளது. இரயில்வே துறையால் இப்பாலத்தை விரிவுபடுத்துவதற்காக மாதந்தோறும் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதற்கு முன்னர்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினையை இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். அதற்குப் பின்னர் அவர்களுடைய கவனத்திற்கு உடனடியாக கொண்டுபோய் மாதாந்திரக் கூட்டம் நடத்தியிருக்கிறோம். 21–12–2017 அன்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்திலும் பாலப் பணிகளை விரைவுபடுத்துமாறு இரயில்வே துறையிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அணுகு சாலைப் பகுதிக்கு வடிவமைப்பு மற்றும் வரைபடம் தயாரிக்க ஏதுவாக ஆலோசகர்களைச் தேர்ந்தெடுக்க 25–1–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2018 ஜனவரி 12

கோரப்படவுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, ஒரு மாத காலத்திற்குள் வடிவமைப்பு பணிகள் முடிக்கப்பட்டு, இரயில்வே துறைமூலம் மேம்பாலப் பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக அணுகு சாலைப் பணிகளும் விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (இ) குட்கா பிரச்சினை வழக்கு குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் குட்கா பிரச்சினைக் குறித்து நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய வழக்கில், வருமான வரித் துறை ஒரு பதில் மனு தாக்கல் செய்திருக்கிறது. அப்படித் தாக்கல் செய்திருக்கக்கூடிய அந்தப் பதில் மனுவிலே மிகத் தெளிவாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீதிமன்றத்தில் இருப்பதை நாம் எப்படிப் பேச முடியும்? எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாதது இல்லை. (குறுக்கீடுகள்) நீதிமன்றத்தில் வருகின்ற மனு குறித்தெல்லாம் எப்படிச் சட்டமன்றத்தில் நான் எடுத்துக்கொண்டு பதில் சொல்ல முடியும்? (குறுக்கீடுகள்) அதை என்னவென்று நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்களும் வக்கீல் வைத்து வாதம் செய்வீர்கள். அதை நீங்கள் நீதிமன்றத்தில்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) நீதிமன்றத்தினுடைய உத்தரவு ஏதாவது வந்தால் நாம் பார்க்கலாம். நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ள பிரச்சினையில் நான் ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) அதை நீங்கள் நீதிமன்றத்தில்தான் பேச வேண்டும். நீதிமன்றத்தில் இருப்பது குறித்து நான் என்ன பேச முடியும்? (குறுக்கீடுகள்) நீதிமன்றத்தில் இருப்பது குறித்து நீதிமன்றத்தில்தான் பேச வேண்டும்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*



2018 ஜனவரி 12]

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2018 ஜனவரி 12

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11–45

## 4. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2017–2018, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017–2018 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உயிரில் உயிராய் கலந்து, எங்களது உணர்வினில் நீக்கமற நிறைந்து, வைகறை விடிவெள்ளி என வழிகாட்டி, வானத்து முழு நிலவாய் ஒளிகாட்டி, அனையாது ஒளிவிடும் ஜோதியின் சுடராக, அரவணைத்துக் காக்கின்ற அன்னையின் வடிவாக எங்களை வழிநடத்திக்கொண்டிருக்கும், இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2018 ஜனவரி 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017–2018 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை @ இம்மாமன்றத்தின் முன்வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகள், மொத்தம் 6,522.03 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன.

2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாளன்று 2017–2018 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு 'புதுப் பணிகள்' மற்றும் 'புது துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள தொகையினை அந்நிதிக்கு ஈடுசெய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.

அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான ஓய்வுக்கானப் பலன்கள், தற்போது பணியில் உள்ள பணியாளர்கள் தொடர்பான நிலுவைகள், வாகன விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு ஆகியவற்றை வழங்க வழிவகை செய்ய, அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழிவகை முன்பணமாக 2,519.25 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் இதற்கென 2,519.25 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

'அனைவருக்கும் வீட்டு வசதி' திட்டத்தின்கீழ் 8,272 குடியிருப்புகளையும் 1.57 இலட்சம் தனி வீடுகளையும் கட்டுவதற்காக, 588.12 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கூடுதலாக அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் இதற்கென 307.46 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

---

@ 396 முதல் 401 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

மத்திய அரசின் 'பிரதம மந்திரி கிரிஷி சின்சாய் யோஜனா' திட்டத்தின்கீழ் நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தைச் செயல்படுத்த 268.07 கோடி ரூபாயை கூடுதலாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை" என்பதன்கீழ் அடையாள நிதியொதுக்கமாக ஒவ்வொரு இனத்தின்கீழும் ரூபாய் 1,000/– சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

பாக் வளைகுடாப் பகுதியில் ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்க, சாதாரணப் படகுகளை ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளாக மாற்றும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு 286 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. எதிர்பாராச் செலவு நிதியத்திலிருந்து முன்பணமாக வழங்கப்பட்டதை ஈடுசெய்ய இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)" என்பதன்கீழ் இதற்கென 19.80 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

தேசிய வேளாண் காப்புறுதித் திட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை வழங்க மாநில அரசின் பங்கான 177.86 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை" என்பதன்கீழ் அடையாள நிதியொதுக்கமாக ஒவ்வொரு இனத்தின்கீழும் ரூபாய் 1,000/– சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

*முற்பகல் 11–50*

*2017–2018* ஆம் ஆண்டில் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் வறட்சி நிவாரண நடவடிக்கையாக, சீரான முறையில் குடிநீர் வழங்குவதற்கான பணிகளை மேற்கொள்ள 120 கோடி ரூபாயை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அனுமதித்துள்ளது. மேலும், மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்திற்கு மாற்றம் செய்வதற்கு 1,799.75 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இவற்றிற்கென இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை





எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் 1,919.75 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியத்திலிருந்து 608 கோடி ரூபாய் செலவில், 1,435.96 கிலோ மீட்டர் நீளமுள்ள 460 ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் ஊராட்சி சாலைகளை இதர மாவட்டச் சாலைகளின் தரத்திற்கு மேம்படுத்துதல் மற்றும் நிலை உயர்த்தும் பணிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நிருவாக அனுமதி அளித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை" என்பதன்கீழ் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/– சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் மாநகராட்சிகளுக்கு வட்டியில்லா வழிவகை முன்பணமாக 793.81 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனுமதித்துள்ளது. இதற்கென இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் 793.81 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

மாநில நெடுஞ்சாலை, முக்கிய மாவட்டச் சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளின் குறித்தகால பராமரிப்புச் செலவினங்களுக்காக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கூடுதலாக 300 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை" என்பதன்கீழ் அடையாள நிதியொதுக்கமாக ஒவ்வொரு இனத்தின்கீழும் ரூபாய் 1,000/– சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

புறவழிச் சாலை, வட்டச் சாலை மற்றும் ஆறு வழிப்பாதைகள் அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு 594.58 கோடி ரூபாய்க்கு திருத்திய நிருவாக அனுமதி அளித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ் சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை" என்பதன்கீழ் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/– சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 ஜனவரி 12

அரியலூர் சிமெண்ட் அலகின் விரிவாக்கத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக, டான்செம் (TANCEM) நிறுவனத்திற்கு வழிவகை முன்பணமாக 300 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை" என்பதன்கீழ் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/– சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017–2018 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

## 2017–2018 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 மாநிலச் சட்டமன்றம் | 3 | .. | .. |
| 2 ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 2 | .. | .. |
| 3 நீதி நிருவாகம் | 25,54 | .. | .. |
| 4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 75,11 | .. | .. |
| 5 வேளாண்மைத் துறை | 131,94,00 | 7 | .. |
| 6 கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 26 | 1 | .. |
| 7 மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 98,32,92 | 2 | .. |



2018 ஜனவரி 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 8 பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 4 | .. | .. |
| 9 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 7 | 2 | .. |
| 10 வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 80,67 | .. | .. |
| 11 முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 6 | .. | .. |
| 12 கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 3 | 5,00,00 | 4,67,07 |
| 13 உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 11 | 5 | .. |
| 14 எரிசக்தித் துறை | .. | .. | 1 |

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 ஜனவரி 12

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 16 நிதித் துறை | 96,30 | .. | .. |
| 17 கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 33,04 | 5,78,85 | 2 |
| 18 கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 1,88,33 | .. | .. |
| 19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 49,35,43 | 2,31,51 | .. |
| 20 உயர் கல்வித் துறை | 57 | 5 | 154,40,00 |
| 21 நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை | 3 | 22 | .. |
| 22 காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1,10,68 | 3 | .. |
| 23 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 11 | 1 | .. |



2018 ஜனவரி 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 24 சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1,00,36 | 2 | .. |
| 25 இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்– நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 34,69 | .. | .. |
| 26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 310,04,73 | 2 | 210,00,00 |
| 27 தொழில் துறை | 5 | .. | 32,88,19 |
| 28 செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 25,97,70 | .. | .. |
| 29 சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 1,27,05 | 3 | .. |
| 30 எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 8,16 | .. | .. |

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 ஜனவரி 12

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 31 தகவல் தொழில்நுட்பவியல் துறை | 1,54,25 | .. | .. |
| 32 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 33 | 3 | .. |
| 33 சட்டத் துறை | 2,59,14 | .. | .. |
| 34 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 6 | .. | 793,81,01 |
| 35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 25,08 | .. | .. |
| 36 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 15,32 | .. | .. |
| 38 பொதுத் துறை | 86,14 | .. | .. |
| 39 கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 2 | 21 | .. |
| 40 பாசனம் (பொதுப் பணித் துறை) | 12 | 50 | .. |
| 41 வருவாய்த் துறை | 23 | .. | .. |
| 42 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 8 | 2 | .. |
| 43 பள்ளிக் கல்வித் துறை | 19,03,03 | 3 | .. |



2018 ஜனவரி 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 44 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 90,06 | .. | .. |
| 45 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 9,63,45 | 1 | .. |
| 46 தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 10,00,05 | .. | .. |
| 47 இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 2 | .. | .. |
| 48 போக்குவரத்துத் துறை | 2 | 29,91 | 2,519,24,60 |
| 49 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 40,07 | .. | .. |
| 51 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 2,086,70,78 | .. | .. |
| 52 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 15 | 2 | .. |
| 54 வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 1,42,30 | 21 | .. |
| பெருமொத்தம் | 2,757,96,79 | 13,41,85 | 3,715,00,90 |

## 5. அரசினர் தீர்மானங்கள்

### (அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் முன்மொழியப்பெற்று வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதி 13 (2)-ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளி வைத்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 13, உட்பிரிவு 2-ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, 2017–2018 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் இன்று முன்மொழியப்பெற்று வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*
*(மேசையைத் தட்டும் ஒலி)*





*முற்பகல் 11–55*

## 6. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2017–2018, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017–2018 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, the Demands for Further Grants for the year 2017–2018."

## 7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2017–2018, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2017–2018 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017–2018 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 12–1–2018 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப் பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2017–2018 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

**நிறைவேற்றப்பெற்ற 2017–2018 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 3 | .. | .. |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 2 | .. | .. |
| 3 | நீதி நிருவாகம் | 25,54 | .. | .. |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 75,11 | .. | .. |
| 5 | வேளாண்மைத் துறை | 131,94,00 | 7 | .. |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 26 | 1 | .. |



| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 98,32,92 | 2 | .. |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 4 | .. | .. |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 7 | 2 | .. |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 80,67 | .. | .. |
| 11 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 6 | .. | .. |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 3 | 5,00,00 | 4,67,07 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 11 | 5 | .. |

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 14 | எரிசக்தித் துறை | .. | .. | 1 |
| 16 | நிதித் துறை | 96,30 | .. | .. |
| 17 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 33,04 | 5,78,85 | 2 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 1,88,33 | .. | .. |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 49,35,43 | 2,31,51 | .. |
| 20 | உயர் கல்வித் துறை | 57 | 5 | 154,40,00 |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை | 3 | 22 | .. |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1,10,68 | 3 | .. |





| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 11 | 1 | .. |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1,00,36 | 2 | .. |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்– நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 34,69 | .. | .. |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 310,04,73 | 2 | 210,00,00 |
| 27 | தொழில் துறை | 5 | .. | 32,88,19 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 25,97,70 | .. | .. |
| 29 | சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 1,27,05 | 3 | .. |

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 8,16 | .. | .. |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 1,54,25 | .. | .. |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 33 | 3 | .. |
| 33 | சட்டத் துறை | 2,59,14 | .. | .. |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 6 | .. | 793,81,01 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 25,08 | .. | .. |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 15,32 | .. | .. |
| 38 | பொதுத் துறை | 86,14 | .. | .. |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 2 | 21 | .. |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 12 | 50 | .. |
| 41 | வருவாய்த் துறை | 23 | .. | .. |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 8 | 2 | .. |



| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 19,03,03 | 3 | .. |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 90,06 | .. | .. |
| 45 | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 9,63,45 | 1 | .. |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 10,00,05 | .. | .. |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 2 | .. | .. |
| 48 | போக்குவரத்துத் துறை | 2 | 29,91 | 2,519,24,60 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 40,07 | .. | .. |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 2,086,70,78 | .. | .. |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 15 | 2 | .. |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 1,42,30 | 21 | .. |
| | பெருமொத்தம் | 2,757,96,79 | 13,41,85 | 3,715,00,90 |

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2018 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## 8. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்— விவாதத்திற்கான பதிலுரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். 71 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய திருத்தங்களைக் கொடுத்திருக்கின்றனர். ஒவ்வோர் உறுப்பினரும் பேசினால் அவையினுடைய நேரம் விரயமாகும் என்கிற காரணத்தினாலே, நான் திருத்தங்களை முன்மொழிகின்ற உறுப்பினர்களின் பெயரைப் படிக்கிறேன். நீங்கள் உட்கார்ந்த இடத்திலிருந்தே கையை உயர்த்தினால் போதும். நான் உங்களுடைய திருத்தத்தைப் பதிவு செய்துகொள்கிறேன். அதேபோல, வழிமொழிகின்றவர்களும், இருக்கையில் அமர்ந்துகொண்டே கையை உயர்த்தினால், வழிமொழிவதையும் நான் பதிவு செய்துகொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட K.R. அணை மதகுகளைப் புதுப்பிக்க வேண்டியது குறித்தும்;

2. கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே வாணி ஒட்டில் தடுப்பணைக் கட்ட வேண்டியது குறித்தும்;

3. கிருஷ்ணகிரி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்துவது குறித்தும்;

4. கிருஷ்ணகிரி சின்னேரியை அழகுப்படுத்தி படகு இல்லமாக மாற்றுவது குறித்தும்;

5. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாம்பழக்கூழ் ஏற்றுமதிக்கான திட்டங்கள் குறித்தும்;

[திரு. டி. செங்குட்டுவன்] [*2018 ஜனவரி 12*

6. கிருஷ்ணகிரியில் விவசாய தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் அமைப்பது குறித்தும்;

7. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை முழுமையாக செயல்படுத்துவது குறித்தும்;

8. கிருஷ்ணகிரி தொகுதியில் கிராமங்களிலுள்ள நியாய விலைக் கடைகளை பிரித்துத் தர வேண்டியது குறித்தும்;

9. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மாநில நெடுஞ் சாலைகள், மாவட்டச் சாலைகள், இதர சாலைகள் அனைத்தையும் புதுப்பிக்க வேண்டியது குறித்தும்;

10. காவேரிப்பட்டினம் பகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டியது குறித்தும்;

11. கிருஷ்ணகிரி தொகுதி, போலுப்பள்ளியிலுள்ள SIDCO வளாகத்தைத் திறந்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவது குறித்தும்;

12. காவேரிப்பட்டினம் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே, சந்தாபுரம்–பள்ளிப்பட்டி குறுக்கே தரைப்பாலம் அமைப்பது குறித்தும்;

13. கிருஷ்ணகிரி தொகுதி முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளைத் தரம் உயர்த்துவது குறித்தும்;

14. அத்திப்பள்ளி–சென்னை (வழி கிருஷ்ணகிரி) ஆறு வழிச்சாலையின் இரு புறமும் "Industrial Corridor of Excellence" அமைப்பது குறித்தும்;

15. கிருஷ்ணகிரி தொகுதி, போலுப்பள்ளியில் அரசு மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

16. கிருஷ்ணகிரி நகராட்சியின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும்;

17. காவேரிப்பட்டினம் அருகில் தென்பெண்ணை ஆற்றின் கரை ஓரம் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;



*2018 ஜனவரி 12*] [திரு. டி. செங்குட்டுவன்]

18. கிருஷ்ணகிரி மாவட்டம், கொடியாளம் அருகில் தென்பெண்ணை ஆற்று நீரைச் சுத்தப்படுத்த சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

19. கிருஷ்ணகிரியில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள் வழங்குவது குறித்தும்;

20. ஊராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படை பணிகளை நிறைவேற்ற கூடுதல் நிதி ஒதுக்குவது குறித்தும்;

21. கிருஷ்ணகிரி விவசாயிகளின் விளைப் பொருட்களை விற்க சந்தையை உருவாக்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

**திரு. பெ. சுப்ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாளையம்புதூர் ஊராட்சி, ஜெகநாதன் அணைக்கட்டு திட்டம் குறித்தும்;

2. தருமபுரி தொகுதி, பஞ்சப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டத்திலிருந்து கால்வாய்மூலம் ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்வது குறித்தும்;

3. தருமபுரி பேருந்து நிலையத்தில் பூ மார்க்கெட் அமைப்பது குறித்தும்;

[திரு. பெ. சுப்ரமணி] [2018 ஜனவரி 12

4. தருமபுரி நகராட்சிக்குட்பட்ட 14 வார்டுகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைந்து செயல்படுத்துவது குறித்தும்;

5. தருமபுரி தொகுதியில் கிராமப்புறச் சாலைகளைப் புதுப்பிப்பது குறித்தும்;

6. தருமபுரி தொகுதியில் பள்ளிகள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

7. தருமபுரி தொகுதியின் பல்வேறு கிராமங்களில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

8. தருமபுரி தொகுதியிலுள்ள கிராமங்களில் பொது சுகாதார கழிப்பிடங்கள் அமைப்பது குறித்தும்;

9. தருமபுரி நகராட்சிக்குட்பட்ட மகப்பேறு மருத்துவமனையில் மருத்துவர்களை நியமனம் செய்வது குறித்தும்;

10. தருமபுரி நகராட்சிக்குட்பட்ட நல்லம்பள்ளி வட்டம், நல்லம்பள்ளி சந்தை திடலில் பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

11. தருமபுரி தொகுதி, மானியதஅள்ளி ஊராட்சி, பரிகம் கிராமத்திலிருந்து புக்கம்பட்டியின் காட்டு வளவு செல்வதற்கு வனப் பகுதியில் சாலை அமைப்பது குறித்தும்;

12. தருமபுரி தொகுதியிலுள்ள குக்கிராமங்களில் நகர பேருந்துகளை மீண்டும் இயக்குவது குறித்தும்;

13. தருமபுரி தொகுதி, தடங்கம் கிராமத்தில் உள்ள குப்பைக் கிடங்கில் மக்கிய குப்பை, மக்காத குப்பையாகப் பிரித்து உரம் தயாரிப்பது குறித்தும்;

14. தருமபுரி தொகுதி, தொப்பூர் மலைப் பகுதி நான்கு வழிச் சாலையை ஆறு வழிச் சாலையாக மாற்றி அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. பெ. சுப்ரமணி]

15. தருமபுரி மாவட்டம், தருமபுரி, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, காரிமங்கலம் பகுதிகளில் பருத்தி விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவது குறித்தும்;

16. தருமபுரி தொகுதியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ்குமார், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. துறைமுகம் தொகுதி, கல்யாணபுரம், பி.ஆர். கார்டன், கிளைவ் பேட்டரி ஆகிய பகுதிகளிலுள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கு மாற்றாக புதிய குடியிருப்புகள் கட்டுவது குறித்தும்;

2. துறைமுகம் தொகுதி, யானைக்கவுனி நயினார் மேம்பால விரிவாக்கப் பணியை விரைவுபடுத்துவது குறித்தும்;

[திரு. பி.கே. சேகர்பாபு] [2018 ஜனவரி 12

3. துறைமுகம் தொகுதி, 54–வது வட்டம் திருப்பள்ளித் தெரு–வ.உ.சி. சாலை சந்திப்பில் உள்ள மகப்பேறு மருத்துவமனையின் பழமையான கட்டடத்தைப் புதுப்பிப்பது குறித்தும்;

4. துறைமுகம் தொகுதி, 57–வது வட்டம், ஜட்காபுரத்திலுள்ள கழிவு நீரேற்று நிலையத்தின் திறனை அதிகரிப்பது குறித்தும்;

5. துறைமுகம் தொகுதி, பிராட்வே பகுதியில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

6. துறைமுகம் தொகுதியில் திருவள்ளுவர் பேருந்து நிலையம் இருந்த இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

7. துறைமுகம் தொகுதி, பிராட்வே பகுதியிலுள்ள மாநகரப் போக்குவரத்து பேருந்து நிலையத்தை நவீனப்படுத்துவது குறித்தும்;

8. துறைமுகம் தொகுதி, 56, 57, 59 மற்றும் 60 ஆகிய வட்டங்களில் புதிய கழிவு நீரேற்று நிலையம் அமைப்பது குறித்தும்;

9. துறைமுகம் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, பி.ஆர். கார்டன், கிளைவ் பேட்டரி ஆகிய பகுதிகளில் உள்ள மாநகராட்சி சுகாதார மையங்களை நவீனப்படுத்துவது குறித்தும்;

10. துறைமுகம் தொகுதியிலுள்ள மாநகராட்சி பொதுக் கழிப்பறைகளை நவீனப்படுத்துதல் மற்றும் சிதிலமடைந்த பொதுக் கழிப்பறைகளுக்கு மாற்றாக புதிய கழிப்பறைக் கட்டுமானப் பணிகள் துவங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.



2018 ஜனவரி 12]

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. ஒரத்தநாடு தொகுதி, கல்லணைக் கால்வாயில் வெட்டிக்காடு உபரிநீர் செல்லும் கால்வாயில் தடுப்பணைக் கட்டுவது குறித்தும்;

2. ஒரத்தநாடு தொகுதி, கல்லணைக் கால்வாய் மற்றும் கிளை ஆறுகளைத் தூர் வாருவது குறித்தும்;

3. ஒரத்தநாடு தொகுதி, வெட்டிக்காடு அருகில் மகாராஜா சமுத்திரம் காட்டாற்றில் தடுப்பணைக் கட்டுவது குறித்தும்;

4. ஒரத்தநாட்டில் உள்ள பாரதிதாசன் மகளிர் கலைக் கல்லூரியை தன்னாட்சி கல்லூரியாக மாற்றுவது குறித்தும்;

5. ஒரத்தநாட்டில் உள்ள பாரதிதாசன் மகளிர் கலைக் கல்லூரியில் நிரந்தர ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

6. ஒரத்தநாடு வட்டம், குலமங்கலம் முதல் சமயன் குடிகாடு வரை செல்லும் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

7. ஒரத்தநாடு தொகுதியில் பழுதான நெடுஞ்சாலைத் துறை சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

8. ஒரத்தநாடு தொகுதியில் கல்லணைக் கால்வாயில் கண்டிதம்பட்டு சைபன் பாலத்தில் நேராக சாலை அமைப்பது குறித்தும்;

9. ஒரத்தநாடு தொகுதிக்குட்பட்ட மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

[திரு. எம். இராமச்சந்திரன்] [*2018 ஜனவரி 12*

*10.* ஒரத்தநாடு தொகுதி, பாச்சூர் மேல்நிலைப் பள்ளி, பூவத்தூர் மேல்நிலைப் பள்ளி மற்றும் நெடுவாக்கோட்டை நடுநிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

*11.* ஒரத்தநாடு தொகுதி, ஈச்சங்கோட்டை, ஊனிபுரம், ஒரத்தநாடு, திருக்கானுபட்டு, வல்லம், பாப்பநாடு ஆகிய ஊர்களில் உள்ள துணை மின் நிலையங்களில் போதுமான பணியாளர்கள் நியமனம் செய்வது குறித்தும்;

*12.* ஒரத்தநாடு தொகுதியில் பழுதாகியுள்ள மின் கம்பங்கள் மற்றும் மின்மாற்றிகளை (Transformer) மாற்றுவது குறித்தும்;

*13.* ஒரத்தநாடு அரசு மருத்துவமனையில் உள்ள சித்தா மருத்துவப் பிரிவில் வெளி நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்குக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

*14.* ஒரத்தநாடு அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் வசதிகள் செய்வது குறித்தும்;

*15.* தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை செய்வது குறித்தும்;

*16.* தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டயாலிசிஸ் கருவிகள் கூடுதலாக வழங்குவது குறித்தும்;

*17.* ஒரத்தநாடு தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பழுதடைந்த மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகளைச் சீரமைப்பது குறித்தும்;

*18.* ஒரத்தநாடு தொகுதியில் அனைத்து ஊராட்சிகளிலும் பழுதடைந்த ஒன்றியச் சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

*19.* ஒரத்தநாடு தொகுதியில் அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சீரமைப்பது குறித்தும்;

*20.* ஒரத்தநாடு தொகுதிக்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் ஆதி திராவிட இனத்தவருக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தருவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."



*2018 ஜனவரி 12*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

**திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"*1.* சிங்காநல்லூர் திருச்சி சாலை காவல் நிலைய நான்குமுனை சந்திப்பிலும், கோவை பாப்பநாயக்கன்பாளையம் அவினாசி சாலை லட்சுமி ஆலை சந்திப்பிலும் உயர்மட்ட மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

*2.* கோவை நஞ்சப்பாரோடு, காந்திபுரம் பார்க் கேட் முதல் கணபதி வரை கட்டப்பட்டுள்ள உயர்மட்ட மேம்பாலத்திலிருந்து காந்திபுரம் கிராஸ்கட் ரோடு, பாரதியார் ரோடு மற்றும் நூறடி ரோடு செல்வதற்கு ஏதுவாக ரவுண்டானா அமைப்பது குறித்தும்;

*3.* கோவை மாநகராட்சி, பீளமேடு ராதாகிருஷ்ணா மில் சந்திப்பிலிருந்து சவுரிபாளையம் பேருந்து நிலையம் செல்லக்கூடிய பீளமேடு முதன்மைச் சாலையை விரிவாக்கம் செய்வது குறித்தும்;

*4.* கோவை மாநகராட்சி, காந்தி மாநகர் 41–வது வட்டத்திலிருந்து இந்திய உணவுக் கழகத்தின் வழியாக 40–வது வட்டம் இந்திரா நகர் குடிசைப் பகுதி, வி.ஜி.ராவ் நகர் வழியாக கணபதி வரை செல்லக்கூடிய திட்டச்சாலை அமைப்பது குறித்தும்;

*5.* கோவை மாநகராட்சி, பாப்பநாயக்கன்பாளையம் அரசு மகளிர் பன்னோக்கு தொழில்நுட்பக் கல்லூரி முதல் காந்திபுரம் செல்லக்கூடிய பாரதியார் சாலையை அகலப்படுத்துவது குறித்தும்;

[திரு. நா. கார்த்திக்] [*2018 ஜனவரி 12*

6. கோவை மாநகராட்சி, புலியகுளம் முதல் மீனா எஸ்டேட், சவுரிபாளையம், வரதராஜபுரம் வரை செல்லக்கூடிய சாலையை அகலப்படுத்துவது குறித்தும்;

7. கோவை மாநகராட்சிக்குச் சொந்தமான வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் தேங்கியுள்ள குப்பைகளை அப்புறப்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.

**திரு. ப. கார்த்திகேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. வேடசந்தூர் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்துவது குறித்தும்;

2. நத்தம் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்துவது குறித்தும்;

3. ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு தனி காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பது குறித்தும்;

4. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பாலாறு–பொருந்தலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது குறித்தும்;

5. ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சியில் பரப்பலாறு அணை அருகே சமுதாயக் கிணறு அமைத்து குடிநீர் வழங்குவது குறித்தும்;



*2018 ஜனவரி 12*] [திரு. அர. சக்கரபாணி]

6. ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட 3 இடங்களில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

7. ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டி, பழனி ஊராட்சி ஒன்றியங்களுக்கு திருமூர்த்தி அணையிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

8. ஒட்டன்சத்திரம் தொகுதியில் சண்முகநதி, அமராவதி ஆறுகளில் கலக்கும் ஆலைக் கழிவுகளைத் தடுத்து மாசற்ற குடிநீர் வழங்குவது குறித்தும்;

9. கூட்டுறவுச் சங்கம் மற்றும் தேசிய வங்கிகளில் அனைத்து விவசாயிகளும் பெற்ற விவசாயக் கடன்களை இரத்து செய்வது குறித்தும்;

10. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றியத்தில் வில்வாதம்பட்டி, மானூர், கோரிக்கடவு, தும்பலப்பட்டி, அக்கரைப்பட்டி ஆகிய பகுதிகளில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

11. ஒட்டன்சத்திரம் தொகுதியில் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் புதிய சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

12. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள சத்யாநகர் நியாய விலைக் கடையிலிருந்து லட்சுமிபுரத்திற்கு பகுதி நேர நியாய விலைக் கடையைப் பிரிப்பது குறித்தும்;

13. நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் சர்க்கரை விலையை மீண்டும் ஒரு கிலோ ரூ.13.50–க்கு விற்பனை செய்வது குறித்தும்;

14. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஜவ்வாதுபட்டி ஊராட்சி, ஜவ்வாதுபட்டி புதூரில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

15. நியாய விலைக் கடைகளில் அரிசி, பருப்பு, மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய் உள்ளிட்ட அனைத்து பொருட்களும் விநியோகம் செய்வது குறித்தும்;

[திரு. அர. சக்கரபாணி] [2018 ஜனவரி 12

16. மின் இணைப்பு வேண்டி பதிவு செய்துள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

17. ஒட்டன்சத்திரம் தொகுதியில் கொத்தயம், கேதையுறம்பு ஆகிய இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பது குறித்தும்;

18. விவசாயிகளின் நலன் கருதி வணிக (Commercial) மின் இணைப்பு பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சார இணைப்பு வழங்குவது மற்றும் 2009 ஆம் ஆண்டு சுயநிதித் திட்டத்தில் ரூ.25,000/–, ரூ.50,000/– என பணம் செலுத்திய அனைவருக்கும் உடனடியாக இலவச மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

19. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் மாவட்ட உரிமையியல், குற்றவியல் நீதிமன்றம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இந்த நீதிமன்றங்களுடன் சேர்த்து சார்பு நீதிமன்றம் கொண்டு வந்து ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பது குறித்தும்;

20. தமிழகம் முழுவதும் பூரண மதுவிலக்கு நடைமுறைப்படுத்துவது குறித்தும்;

21. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பழனி, நரிக்கல்பட்டி வழியாக பெரிய மொட்டனூத்து, போதுபட்டி, தாளையூத்து, மடத்துக்குளம் வரை இயங்கி வந்த அரசு பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்தும்;

22. ஒட்டன்சத்திரம் தொகுதியில் திண்டுக்கல் முதல் கள்ளிமந்தையம், தொப்பம்பட்டி, தாளையூத்து வழியாக பொள்ளாச்சி வரை இயங்கி வந்த அரசு பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்தும்;

23. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பள்ளி, கல்லூரி நேரங்களில் பேருந்துகளை மீண்டும் இயக்குவது குறித்தும்;

24. ஒட்டன்சத்திரம் நகரில் அரசு பேருந்து பணிமனைக்கு நிலம் தேர்வு செய்து அரசு பணிமனை அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. அர. சக்கரபாணி]

25. 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்குவது குறித்தும்;

26. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

27. வடமதுரை—ஒட்டன்சத்திரம் மாநில நெடுஞ்சாலையில் 42/8—ல் உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

28. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பொருளூர்—ஆயக்குடி 11/2—ல் உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

29. ஒட்டன்சத்திரம் தொகுதியில் மாநில நெடுஞ்சாலை, மாவட்ட முக்கியச் சாலை, மாவட்ட இதரச் சாலை ஆகிய சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

30. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள குறுவட்டங்களில் பணிபுரியும் வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியது குறித்தும்;

31. பழனியில் பாலாறு—பொருந்தலாறு இடது பிரதான கால்வாயைச் சீரமைத்து, சிலாப் லயனிங், மடைகள் அனைத்தும் செப்பனிட்டு பாசன வசதி செய்வது குறித்தும்;

32. ஒட்டன்சத்திரம் தொகுதியில் மானூர், வில்வாதம்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கிடையே சண்முகநதி ஆற்றில் பாலம் கட்டுவது குறித்தும்;

33. ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சியில் உள்ள பரப்பலாறு அணையைத் தூர்வாருவது குறித்தும்;

34. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பொருளூர் கரிசல் குளம், பாலப்பன்பட்டிபுதூர் கருங்குளம், மஞ்சநாயக்கன்பட்டி காளிபட்டி குளம் ஆகிய குளங்களின் வாய்க்காலில் சிமென்ட் சிலாப் அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

[திரு. அர. சக்கரபாணி] [2018 ஜனவரி 12

35. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பரப்பலாறு அணையிலிருந்து முத்துபூபால சமுத்திரம், பெருமாள்குளம், முத்து சமுத்திரம், காவேரியம்மாபட்டி குளம், ஒட்டடை குளம், பாப்பாகுளம், சடையன்குளம், செங்குளம், கருங்குளம், ஜவ்வாதுபட்டி குளம் ஆகிய குளங்களுக்கு செல்கின்ற நீர் வீணாகாமல் இருக்க லைனிங்–ல் சிமென்ட் கற்கள் அமைப்பது குறித்தும்;

36. ஒட்டன்சத்திரம் நகரத்தில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கலையரங்கம் மற்றும் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

37. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முத்துநாயக்கன்பட்டி, சத்திரப்பட்டி, இடையகோட்டை, மார்க்கம்பட்டி, பெரியகோட்டை, ஓடைப்பட்டி ஆகிய அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம், கழிப்பறைக் கட்டடம் மற்றும் அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டுவது குறித்தும்;

38. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், பரப்பலாறு அரசு உயர்நிலைப் பள்ளியை வண்டிப் பாதையில் உள்ள கல்வித் துறைக்குச் சொந்தமான இடத்தில் கட்டுவது குறித்தும்;

39. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், சின்னகரட்டுப்பட்டி, புளியமரத்துக்கோட்டை, காவேரியம்மாபட்டி ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம், கழிப்பறை, அறிவியல் ஆய்வுக்கூடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;

40. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மானூர், பூலாம்பட்டி, பெரிச்சிபாளையம், சாமிநாதபுரம், கூத்தம்பூண்டி ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம், கழிப்பறை, அறிவியல் ஆய்வுக்கூடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. அர. சக்கரபாணி]

41. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தொப்பம்பட்டி, கீரனூர், தாளையூத்து, மஞ்சநாயக்கன்பட்டி ஆகிய அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம், கழிப்பறை, அறிவியல் ஆய்வுக்கூடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;

42. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கொக்கரக்கல்வலசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

43. ஒட்டன்சத்திரம் தொகுதி, பழனி ஊராட்சி ஒன்றியம், கணக்கன்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி கூடுதல் வகுப்பறைக் கட்டடம், அறிவியல் ஆய்வுக்கூடம் மற்றும் கழிப்பறைக் கட்டுவது குறித்தும்;

44. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய பகுதிகளில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

45. மாணவ, மாணவியர் தேசிய வங்கியில் பெற்ற கல்விக் கடனை இரத்து செய்வது குறித்தும்;

46. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு பணியாளர் தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துவது குறித்தும்;

47. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை மக்கள்தொகை அடிப்படையில் பிரித்து, புதிதாக கள்ளிமந்தையத்தை தனி வட்டமாகப் பிரிப்பது குறித்தும்;

48. ஒட்டன்சத்திரம் தொகுதியில் தகுதியுள்ள அனைத்து நபர்களுக்கும் முதியோர் உதவித் தொகையை வழங்குவது குறித்தும்;

49. ஒட்டன்சத்திரம் தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினர் மக்களுக்கு நிலம் கையகப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

[திரு. அர. சக்கரபாணி] [2018 ஜனவரி 12

50. ஒட்டன்சத்திரம் தொகுதியில் இடையகோட்டை, வலையபட்டி ஆகிய கிராமங்களில் நங்காஞ்சியாறு நீர்தேக்கத்தின் இடது மற்றும் வலதுபுற வாய்க்கால் அமைப்பதற்கு நிதி ஒதுக்குவது குறித்தும்;

51. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் விதமாக தொழிற்பேட்டைகள் அமைப்பது குறித்தும்;

52. ஒட்டன்சத்திரம் தொகுதியில் முருங்கை பொடி தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

53. ஒட்டன்சத்திரம் தொகுதி, இடையகோட்டை ஊராட்சிப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான 150 ஏக்கர் நிலத்தில் தொழிற்பேட்டை துவங்குவது குறித்தும்;

54. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும்;

55. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள காய்கனி மார்க்கெட் கழிவுகளைக் கொட்டுவதற்கு அரசு இடம் ஒதுக்கி, குப்பைக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

56. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள சின்னக்குளத்தை தூர்வாரி கம்பிவேலி அமைத்து சிறந்த பொழுதுபோக்கு பூங்கா அமைப்பது குறித்தும்;

57. ஒட்டன்சத்திரம் நகராட்சி 5, 6, 7 ஆகிய வார்டுகளில் உள்ள இரயில்வே தரைப் பாலங்களில் இணைப்புச் சாலை ஏற்படுத்தி மழைக் காலத்தில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

58. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள காய்கனி மார்க்கெட் கழிவுகளைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. அர. சக்கரபாணி]

59. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்து கள்ளிமந்தையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைப்பது குறித்தும்;

60. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்றுவது குறித்தும்;

61. ஒட்டன்சத்திரம் தொகுதியில் கிராமப்புற சாலைகளின் இருபுறமும் மரக்கன்றுகள் நடுவது குறித்தும்;

62. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, பழனி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமப்புறச் சாலைகளைப் பராமரிப்பது குறித்தும்;

63. தமிழகத்தில் பல்வேறு ஊராட்சிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை அரசின் செலவிலே பராமரிப்பது குறித்தும்;

64. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் வட்டம், வடகாடு ஊராட்சி, மாட்டுப்பட்டிக்காடு கிராமத்தில் வசிப்பிடமின்றி உள்ள மக்களுக்கு அரசின்மூலம் இடம் ஒதுக்கி வீடுகள் கட்டித் தருவது குறித்தும்;

65. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள பாறைப்பட்டி, சிந்தலவாடம்பட்டி, சாமியார்புதூர், மஞ்சநாயக்கன்பட்டி, போடுவார்பட்டி, தேவத்தூர், காளிபட்டி, புளியம்பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி, எவிக்சன் நகர் போன்ற பகுதிகளில் சுகாதார வளாகம் கட்டுவது குறித்தும்;

66. ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு பகுதியில் உள்ள மலைக் கிராமங்களில் விளை நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளுக்குள் வன விலங்குகள் வராமல் தடுக்கும் விதமாக அகழிகள் அமைப்பது குறித்தும்;

[திரு. அர. சக்கரபாணி] [2018 ஜனவரி 12

67. ஒட்டன்சத்திரம் தொகுதியில் மேற்கு தொடர்ச்சி மலையில் வன விலங்குகளிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க சோலார் மின்வேலி அமைப்பது குறித்தும்;

68. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வடகாடு ஊராட்சியில் வனத் துறை மூலமாக ஏற்கெனவே அமைக்கப்பட்ட பெத்தேல்புரம்–சிறுவாட்டுக்கோம்பை சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

69. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள குறுவட்டங்கள்தோறும் (Revenue Firka) விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

70. தேசிய, மாநில, மாவட்ட, பல்கலைக்கழக அளவில் விளையாட்டுத் துறையில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு அரசு பொது நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளிப்பது குறித்தும்;

71. இருகால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் ஸ்கூட்டர் வழங்குவது குறித்தும்;

72. மாற்றுத் திறனாளிகளில் 40% குறைபாடு உள்ள அனைத்து நபர்களுக்கும் அரசு உதவித்தொகை வழங்குவது குறித்தும்;

73. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அதிகளவு பயிரிடப்படும் கன்வல்லி கிழங்கு (Gloriosa superba) விதைகளை அரசே கொள்முதல் செய்ய கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

74. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பருத்தி ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்தும்;

75. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அதிகமாக பயிரிடப்படும் பருத்தி, மக்காச்சோளம், சூரியகாந்தி, நிலக்கடலை ஆகிய பொருட்களை விற்பனை செய்வதற்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பது குறித்தும்;

76. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் வேளாண்மைத் துறை அலுவலகம் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் பணம் செலுத்திய விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் தொகை வழங்குவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. அர. சக்கரபாணி]

77. ஐந்து ஏக்கருக்குக்கீழ் உள்ள விவசாயிகளுக்கு மட்டுமே வறட்சி நிவாரணம் என அறிவித்து, அதனை முழுமையாக வழங்குவது குறித்தும்;

78. வடகிழக்கு பருவ மழையால் சேதமடைந்த மக்காச்சோளம், உளுந்து, தக்காளி போன்ற பயிர்களை பயிரிட்ட நிலங்களை ஆய்வு செய்து இழப்பீடு வழங்குவது குறித்தும்;

79. வறட்சியால் காய்ந்து போன தென்னை, மா போன்ற மரங்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்தும்;

80. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

81. ஒட்டன்சத்திரம் தொகுதியில் விவசாயிகளின் விளைபொருட்களைச் சேமித்து வைப்பதற்கு 100 டன் கொள்ளளவுக் கொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

82. ஒட்டன்சத்திரம் தொகுதியிலுள்ள, கள்ளிமந்தையம், இடையகோட்டை, நரிக்கல்பட்டி, மிடாப்பாடி ஆகிய இடங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

83. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு மருத்துவக் கல்லூரியுடன்கூடிய மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

84. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கீரனூர் பேரூராட்சி மற்றும் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், கொ.கீரனூர் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் செவிலியர் ஓய்வெடுக்கும் அறை அமைப்பது, எக்ஸ்–ரே கருவி, போதுமான அவசர ஊர்தி வழங்குவது குறித்தும்;

85. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நரிக்கல்பட்டி, தேவத்தூர், மிடாப்பாடி, வாகரை மற்றும் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கொ.கீரனூர், சத்திரப்பட்டி, கேதையுறம்பு ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

[திரு. அர. சக்கரபாணி] [2018 ஜனவரி 12

86. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தேவத்தூர், மிடாப்பாடி, வாகரை, கீரனூர் பேரூராட்சி ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா மருத்துவப் பிரிவு அமைப்பது குறித்தும்;

87. ஒட்டன்சத்திரம் தொகுதி, கீரனூர் பேரூராட்சி, தேவத்தூர், கள்ளிமந்தையம் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆய்வக நுட்புணர் (Lab Technician) பணியிடம் நிரப்புவது குறித்தும்;

88. ஒட்டன்சத்திரம் தொகுதி, இடையகோட்டையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகப்பேறு பிரிவுக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

89. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சி, நாகணம்பட்டியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அரசு துணை சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

90. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அரசப்பிள்ளைபட்டி, சிறுநாயக்கன்பட்டி ஆகிய அரசு துணை சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

91. ஒட்டன்சத்திரம் தொகுதியில் மிடாப்பாடி ஊராட்சி, வன்னியர்வலசு கிராமத்தில், தேசபிதா மகாத்மா காந்தி அவர்கள் தங்கிய புனித இடத்தை காந்தி நினைவு மண்டபமாக அமைப்பது குறித்தும்;

92. ஒட்டன்சத்திரம் தொகுதி, விருப்பாட்சி ஊராட்சியில் தளையூற்று மற்றும் சின்ன தளையூற்று என்ற இரண்டு நீர்வீழ்ச்சிகள் உள்ள இடத்தை சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்தும்;

93. ஒட்டன்சத்திரம் தொகுதியில் கொழுமங்கொண்டான், சந்தன்செட்டிவலசு, நரிக்கல்பட்டி, அமரப்பூண்டி ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பட்டுச் சேலைகளை அரசே கொள்முதல் செய்து அதை விற்பனை செய்வதற்கு விற்பனை நிலையம் அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. அர. சக்கரபாணி]

94. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உற்பத்தி செய்யும் மல்பரியை (பட்டுப்புழு வளர்ப்பு) திண்டுக்கல் மாவட்டத்திலே விற்பனை செய்வதற்காக அரசு கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

95. சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி கோபால்சாமி நாயக்கர் உருவம் பொறித்த தபால்தலை வெளியிட்டு, அவரது வீரவாழ்க்கை வரலாற்றை பள்ளி பாடப் புத்தகத்தில் இடம்பெற செய்வது குறித்தும்;

96. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பால் கொள்முதல் விலையை உயர்த்துவது குறித்தும்;

97. ஒட்டன்சத்திரம் தொகுதியில் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பாலை ஆவின் நிறுவனம் முழுமையாகக் கொள்முதல் செய்வது குறித்தும்;

98. கால்நடைகளுக்கான உலர் தீவனம், கலப்பு தீவனத்தை ஆவின் மூலமாக விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவது குறித்தும்;

99. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் ஊராட்சி, கீரனூர் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் வீடில்லாத ஏழை, எளிய மக்களுக்கு குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

**திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

[திரு. அ. சௌந்தரபாண்டியன்] [2018 ஜனவரி 12

"1. தாளக்குடி, அன்பில், நத்தம், ஆலம்பாடி ஆகிய இடங்களில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவது குறித்தும்;

2. இலால்குடி, புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியங்களில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் விடுபட்டுள்ள ஊராட்சிகளுக்குப் புதிய கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும்;

3. இலால்குடியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

4. இலால்குடியில் உள்ள அரசு மருத்துவமனைக்குப் புதிய நவீன கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

5. இலால்குடி ஊராட்சி ஒன்றியம், இடையாற்றுமங்கலம் தண்ணீர்பந்தலுக்கும், ஸ்ரீரங்கம் தொகுதி கிளிகூட்டுக்கும் இடையில் கொள்ளிடம் ஆற்றில் உயர்மட்டப் பாலம் கட்டுவது குறித்தும்;

6. மானாவாரி விவசாயிகளின் பி.டி. பருத்தி, வீரிய மக்காசோளம் விவசாயத்திற்கு மாற்றாக சிறுதானிய விவசாயத்தை ஊக்கப்படுத்துவது குறித்தும்;

7. இலால்குடியில் உள்ள நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

8. புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

9. புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் நந்தை ஆற்றின் தலைப்பு முதல் கொள்ளிடம் ஆறுவரை முட்புதர்களை அகற்றுவது குறித்தும்;

10. இலால்குடியில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

11. புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், நக்கம்பாடி ஏரியைத் தூர்வாருவது குறித்தும்;

12. ஆண்டி ஓடையை தூர்வாருவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. அ. சௌந்தரபாண்டியன்]

13. கீழஅரசூர் ஊராட்சி, பெரிய ஏரியைத் (பொன்ஏரி) தூர்வாருவது குறித்தும்;

14. கண்ணாக்குடி ஊராட்சி புது ஏரியைத் தூர்வாருவது குறித்தும்;

15. அனைத்து விவசாயிகளுக்கும் விவசாய தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கம்மூலம் வழங்கப்பட்ட அனைத்து கடனைத் தள்ளுபடி செய்வது குறித்தும்;

16. ஆர். வளவனூர் ஊராட்சி, ரெத்தினங்குடி ஆர். வளவனூர் சாலையில் உள்ள உப்பாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவது குறித்தும்;

17. கீழன்பில் ஊராட்சி கடுவாய் வாய்க்கால் கொள்ளிடம் ஆற்றில் இணையும் இடத்தில் சேதமடைந்த பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டுவது குறித்தும்;

18. இலால்குடி ஊராட்சி ஒன்றியம், மேட்டுபட்டி ஊராட்சி, குறிச்சி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி தொடங்குவது குறித்தும்;

19. மேலவாளாடி, கண்ணாக்குடி (கொளக்குடி), எம். கண்ணனூர், காணக்கிளியநல்லூர், கீழரசூர், கருடமங்கலம் (அழுந்தலைப்பூர்) மருதூர் ஆகிய இடங்களில் சமுதாயக்கூட கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

20. இலால்குடி ஊராட்சி ஒன்றியம், T. கல்விகுடியில் நெல் கொள்முதல் நிலையத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

21. மணக்கால் இரயில்வே கேட்டிற்கு மேம்பாலம் கட்டுவது குறித்தும்;

22. கொன்னைக்குடி நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து அன்பில் படுகை அல்லது கோவிந்தபுரத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

[திரு. அ. சௌந்தரபாண்டியன்] [*2018 ஜனவரி 12*

*23.* அப்பாத்துறை ஊராட்சி, மேலவாளாடியில் உள்ள நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து அகிலாண்டபுரத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

*24.* அகலங்கநல்லூர் நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து கீழ்மாரிமங்கலத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

*25.* ஆர். வளவனூர் ஊராட்சி, ரெத்தினங்குடியில் உள்ள நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து ஆர். வளவனூரில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

*26.* புள்ளம்பாடி இரயில்வே கேட்டிற்கு மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

*27.* இலால்குடி ஊராட்சி ஒன்றியம், கோமாகுடி ஏரியை பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து தூர்வாரி ஆழப்படுத்துவது குறித்தும்;

*28.* பெருவளப்பூர் ஊராட்சியில் உள்ள நந்தை ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பது குறித்தும்;

*29.* இலால்குடி பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

*30.* இலால்குடி ஊராட்சி ஒன்றியம், புதூர்உத்தமனூர், பல்லபுரம், பெருவளநல்லூர், இ.வெள்ளனூர், புஞ்சைசங்கேந்தி ஆகிய ஊர்களில் உள்ள ஏரிகளைத் தூர்வாரி ஆழப்படுத்தி நீர் ஆதாரத்தை அதிகரிப்பது குறித்தும்;

*31.* ஆலங்குடி மஹாஜனம் ஏரியைத் தூர்வாருவது குறித்தும்;

*32.* திருச்சி–சிதம்பரம் சாலையை நான்கு வழிச் சாலையாகத் தரம் உயர்த்தி சாலை அமைப்பது குறித்தும்;



*2018 ஜனவரி 12*] [திரு. அ. சௌந்தரபாண்டியன்]

*33.* கருடமங்கலம் முதல் காரை வரை, மேலரசூர் முதல் அழுந்தலைப்பூர் வரை, மால்வாய் முதல் சிலுவைப்பட்டி வரை, காட்டூர் முதல் இராமநாதபுரம் வரை உள்ள மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றுவது குறித்தும்;

*34.* கண்ணனூர் முதல் திம்மூர் வரை, அழுந்தலைப்பூர் முதல் நல்லூர் வரை, கண்ணனூர் முதல் அனைப்பாடிசாலை, வெங்கடாஜலபுரம், ஆனந்தபுரம் சாலை, கருடமங்கலம்–தெரணிபாளையம் சாலை ஆகிய மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றுவது குறித்தும்;

*35.* கல்லக்குடி–முதுவத்தூர்–நத்தம்–மாங்குடி சாலையை புள்ளம்பாடி சாலையோடு இணையும் சாலை, பெருவளப்பூர்–நம்புகுறிச்சி சாலை, புள்ளம்பாடி–ஆனந்தபுரம் ஆகிய சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

*36.* பெருவளப்பூர்–பெரியகுறுக்கை சாலை, விரகாலூர்–திண்ணக்குளம் சாலை, டி.கல்விகுடி–கே.வி.பேட்டை சாலை, வாளாடி–மேபெருங்காவூர் சாலை, இடையாற்றுமங்கலம்–கூகூர் சாலை ஆகிய சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

*37.* கல்லக்குடி – தாப்பாய் – சிறுவயலூர் சாலை, வந்தலைகூடலூர்–சிறுவயலூர்–காணக்கிளியநல்லூர் சாலை, பெரியகுறுக்கை–ரெட்டிமாங்குடி–தச்சன்குறிச்சி சாலை, செம்பரை–கோமாகுடி சாலை ஆகிய சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

*38.* கோமாகுடி–செம்பரை (கரும்புசாலை), இ.வெள்ளனூர்–பெருவளநல்லூர்–பல்லபுரம்–புதூர் உத்தமனூர் சாலை, புள்ளம்பாடி–புஞ்சை சங்கேந்தி–குமுளூர் சாலை ஆகிய சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

*39.* சிறுகளப்பூர் – நல்லூர் – தெரணிபாளையம் சாலை, அழுந்தலைப்பூர்–கருடமங்கலம் சாலை, மாந்துறைநகர்–தர்மநாதபுரம் சாலை, புதூர் உத்தமனூர்–நெய்குப்பை–மகிழம்பாடி சாலை ஆகிய சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.

**திரு. அ. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. வேலூர் மாவட்டத்தினை இரண்டாகப் பிரித்து திருப்பத்தூர் நகரைத் தலைமையகமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்குவது குறித்தும்;

2. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகருக்கு புறவழிச் சாலை ரிங் ரோடு (Ring Road) அமைக்கும் பணியைத் தொடங்குவது குறித்தும்;

3. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஜவ்வாதுமலைத் தொடரில் உள்ள பழங்குடியின மலைவாழ் மக்களின் கிராமங்களை இணைக்கும் புதூர்நாடு முதல் மலையாண்டிப்பட்டி வழியாக நெல்லிவாசல் வரை செல்லும் வனத் துறை கட்டுப்பாட்டிலுள்ள சுமார் 15 கி.மீ. சாலையினைச் சீரமைப்பது குறித்தும்;

4. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சியுடன் புதிதாக சேர்க்கப்பட்ட வார்டுகளுக்கு மேட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவாக்கம் செய்வது குறித்தும்;

5. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரை மையமாகக் கொண்டு கூட்டுறவுத் துறைமூலம் மாடப்பள்ளி கிராமத்தில் பருத்தி நூல் நூற்பாலை அமைப்பது குறித்தும்;

6. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் தகுதி வாய்ந்தவர்களுக்கு முதியோர், ஊனமுற்றோர், விதவை உதவித் தொகை வழங்குவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. அ. நல்லதம்பி]

7. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை அரங்கத்துடன்கூடிய தனி வார்டு அமைப்பது குறித்தும்;

8. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட காவல் நிலையங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பி, கூடுதலான போக்குவரத்துக் காவலர்களை நியமிப்பது குறித்தும்;

9. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் தேவையான பணியிடங்களை உருவாக்குவது குறித்தும்;

10. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள கந்திலி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் அமைப்பது குறித்தும்;

11. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட புதூர்நாடு ஏகலைவா பள்ளிக்குத் தேர்வு செய்யப்பட்ட நிலத்தினை ஒப்படைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்மூலம் கட்டடம் கட்டுவது குறித்தும்;

12. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்மூலம் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும்;

13. கொரட்டி மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் நலன் கருதி பிற்பட்டோர் நல மாணவர், மாணவியர் விடுதி அமைப்பது குறித்தும்;

14. சுந்தரம்பள்ளி, பேரனாம்பட்டு, குரும்பேரி பகுதிகளில் புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

15. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பணிமனையில் பழைய பேருந்துகளுக்கு மாற்றாக புதிய பேருந்துகளை இயக்குவது குறித்தும்;

[திரு. அ. நல்லதம்பி] [2018 ஜனவரி 12

16. கிருஷ்ணகிரி அணை பாசன நீரை கந்திலி ஒன்றியம், காக்கங்கரை ஏரியில் சேமித்து வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்த கால்வாய் அமைப்பது குறித்தும்;

17. வாணியம்பாடி முதல் திருப்பத்தூர் வழியாக சேலம் வரை உள்ள SH–18 நெடுஞ்சாலையினை புதுப்பிப்பது குறித்தும்;

18. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கோட்டைதெரு ஆரிப்நகர் பகுதியில் பீடித் தொழிலாளர்களுக்காக தனியாக ஆரம்ப சுகாதார நிலையம் (ESI மருத்துவமனை) அமைப்பது குறித்தும்;

19. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கரும்பிற்கான நிலுவைத் தொகையினை வழங்குவது குறித்தும்;

20. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மடவாளம் கிராமத்தில் உள்ள அங்கநாதீஸ்வரர் ஆலயத்திற்கு அறநிலையத் துறை மூலமாக திருப்பணி முடித்து குடமுழுக்கு செய்வது குறித்தும்;

21. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகத்திற்கு (RTO Office) சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

22. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் அரசு கல்லூரி மாணவர்கள் நல விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

23. ஜவ்வாதுமலை புதூர்நாடு போளூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கும் பணியை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்தும்;

24. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகர் முதல் ஆதிசக்தி நகர் வரை சேலம் நெடுஞ்சாலையில் மின்விளக்குகள் அமைப்பது குறித்தும்;

25. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கோட்டைதெரு, ஆரிப்நகர், காயிதேமில்லத் நகர் பகுதியில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. அ. நல்லதம்பி]

26. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரம் கோட்டைதெரு, ஆரிப்நகர், பிஸ்மில்லாநகர் ஆகிய பகுதிகளுக்கு கான்கிரீட் சாலை அமைப்பது குறித்தும்;

27. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினால் சேதமடைந்த அனைத்து சாலைகளையும் சீரமைப்பது குறித்தும்;

28. கந்திலி ஒன்றியம், செவ்வாத்தூர் புதூர் நடுநிலைப் பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

29. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் தொழிற்பேட்டை (சிப்காட்) அமைக்க வேண்டுவது குறித்தும்;

30. கந்திலி ஒன்றியம், குனிச்சி கூட்டுறவு நியாய விலைக் கடையினைப் பிரித்து செல்வனூர் ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

31. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரம் முதல் ஹவுசிங்போர்டு, ஆதியூர், நந்தனம் கல்லூரி செல்லரப்பட்டி, மைக்காமேடு வழியாக காரப்பட்டினை வரை பேருந்து வழித்தடம் இயக்குவது குறித்தும்;

32. கந்திலி ஒன்றியம், தோரணம்பதி ஊராட்சி, குமாரம்பட்டி கிராமத்தில் அங்கன்வாடி கட்டடம் கட்டுவது குறித்தும்;

33. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ராச்சமங்கலம் ஏரியினைத் தூர்வாரி ஆழப்படுத்துவது குறித்தும்;

34. ஜவ்வாது மலைப் பகுதிகளில் வனத் துறைமூலம் சந்தனமர செடிகளை வளர்ப்பது குறித்தும்;

35. கந்திலி ஒன்றியம், பேரனாம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

36. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மாடப்பள்ளி ஏரியை ஆழப்படுத்தி பாசனக் கால்வாய் அமைப்பது குறித்தும்;

[திரு. அ. நல்லதம்பி] *[2018 ஜனவரி 12*

37. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், மாடப்பள்ளி காமராஜர் சிலை, மாடப்பள்ளி காலனி, மடவாளம் ஆகிய மூன்று பகுதிகளில் உயர்கோபுர மின்விளக்குகள் அமைப்பது குறித்தும்;

38. வேலூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், குரும்பேரி பானக்காரன் வட்டம் முதல் பெரிய ஏரிக்கரை வரை சாலையை அகலப்படுத்தி தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

39. கந்திலி ஒன்றியம், கொரட்டி கிராமத்தில் உள்ள ஸ்ரீவெங்கடரமண பெருமாள் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு செய்வது குறித்தும்;

40. கந்திலி ஒன்றியம், கொரட்டி காளதீஸ்வர ஆலயம் நான்குமாட வீதிகளின் சாலைகளை கான்கிரீட் சாலையாக அமைப்பது குறித்தும்;

41. கந்திலி ஒன்றியம் ப. முத்தம்பட்டி வெங்கட்ராமன் ஏரியைத் தூர்வாரி பாசன கால்வாய்களைக் கட்டி முடிப்பது குறித்தும்;

42. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், மாடப்பள்ளி ஊராட்சியில் மாட்டுத்தீவன விற்பனை நிலையம் அமைப்பது குறித்தும்;

43. திருப்பத்தூர் நகராட்சி, 14-வது வார்டு, தர்மராஜா கோயில் தெருவில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த் தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

44. திருப்பத்தூர் தொகுதி, விவசாயிகளின் விளைபொருட்களைப் பாதுகாத்து வைத்திட திருப்பத்தூரில் குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

45. திருப்பத்தூர் நகராட்சி, TM சுலைமான் தெருவில் உள்ள கூட்டுறவு கடை எண் TCMS–6FC007–ஐ பிரித்து ஆரிப்நகரில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;



*2018 ஜனவரி 12]* [திரு. அ. நல்லதம்பி]

46. திருப்பத்தூர் வட்டம், மட்றப்பள்ளி கிராமம், ஆள்இல்லா துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்தி கட்டுப்பாட்டு அறையுடன்கூடிய துணை மின் நிலையம் அமைத்திட வேண்டுவது குறித்தும்;

47. திருப்பத்தூர் நகராட்சி, ஆரிப்நகர், காயிதேமில்லத்நகர், அண்ணாநகர் ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலமாக வீடுகள் கட்டித்தர வேண்டுவது குறித்தும்;

48. ஜவ்வாது மலைத்தொடரில் வசிக்கும் பழங்குடியின மக்களின் வீடுகளுக்கு வருவாய்த் துறைமூலம் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுவது குறித்தும்;

49. திருப்பத்தூர் வட்டம், திம்மணாமுத்தூர் நியாய விலைக் கடையினைப் பிரித்து பம்பாகுட்டை பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்திட வேண்டுவது குறித்தும்;

50. ஜவ்வாதுமலை, புங்கம்பட்டுநாடு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

[திரு. இ. கருணாநிதி] [2018 ஜனவரி 12

"1. பல்லாவரம் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்குவது குறித்தும்;

2. பல்லாவரம் தொகுதிக்குட்பட்ட பம்மல் நகராட்சி, அனகாபுத்தூர் நகராட்சி, திருநீர்மலை பேரூராட்சி மற்றும் பொழிச்சலூர் ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

3. பல்லாவரம் முதல் பம்மல் வழியாக அனகாபுத்தூர் வரை செல்லும் சாலையை அகலப்படுத்தும் திட்டம் குறித்தும்;

4. பல்லாவரம் தொகுதி, அனகாபுத்தூர் நகராட்சியில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்குவது குறித்தும்;

5. மெட்ரோ இரயில் திட்டத்தை பல்லாவரம், குரோம்பேட்டை வழியாக தாம்பரம் வரை நீட்டித்தமைக்கும் திட்டம் குறித்தும்;

6. பல்லாவரம் தொகுதி, பொழிச்சலூர் ஊராட்சிப் பகுதியில் அடையாறு ஆற்றின் குறுக்கே கெருகம்பாக்கம் வழியாகப் போரூர், பூந்தமல்லி செல்வதற்கு பாலம் அமைக்கும் திட்டம் குறித்தும்;

7. பல்லாவரம் தொகுதிக்குட்பட்ட ஒரகடம் முதல் முடிச்சூர் வரை குடிநீர் வழங்க பெரிய பகிர்மானக் குழாய் மாற்றம் செய்வது குறித்தும்;

8. பல்லாவரம் சார்–பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் அமைப்பது குறித்தும்;

9. அனகாபுத்தூர் ஆரம்ப சுகாதார மையத்திற்குப் புதிய கட்டடம் அமைப்பது குறித்தும்;

10. பல்லாவரம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள வைத்தியலிங்கம் சாலை, ராதா நகர் மெயின் ரோடு ஆகிய சாலைகளை மாநில நெடுஞ்சாலைத் துறைமூலம் பராமரிப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி வருவாய் மாவட்டம் அமைப்பது குறித்தும்;

2. கும்பகோணம் புறவழிச் சாலை பணியில் சாக்கோட்டை–மருதாநல்லூர்–தாராசுரம் பகுதிகளை அகலப்படுத்துவது குறித்தும்;

3. விக்கிரவாண்டி–கும்பகோணம்–தஞ்சாவூர் NH45C சாலையை அகலப்படுத்துவது குறித்தும்;

4. விக்கிரவாண்டி–கும்பகோணம்–தஞ்சாவூர் NH45C சாலையில் அணைக்கரையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டுவது குறித்தும்;

5. கும்பகோணம்–மன்னார்குடி–பட்டுக்கோட்டை SH 66 சாலையில் கி.மீ 7/4–ல் திப்பிராஜபுரம் கிராமத்தில் திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டுவது குறித்தும்;

6. கும்பகோணம்–நீலத்தநல்லூர் சாலையை அகலப்படுத்துவது குறித்தும்;

7. கும்பகோணம் மாதுளம்பேட்டை இரயில்வே LC கேட் No. 269-க்கு கீழே இரயில்வே கீழ்பாலம் அமைப்பது குறித்தும்;

8. கும்பகோணம் அண்ணலக்ரஹாரம் சாலையில் இரயில்வே LC கேட் No. 270-க்குமேலே இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

[திரு. க. அன்பழகன்] [2018 ஜனவரி 12

9. திப்பிராஜபுரம் கிராமத்தில் திருமலைராஜன் ஆற்றில் மைல் 59/4—ல் படுக்கை அணை கட்டுவது குறித்தும்;

10. கும்பகோணம் பொது மருத்துவமனை பகுதியில் காவேரி ஆற்றில் மைல் 57/7—ல் நீர் ஒழுங்கி அமைப்பது குறித்தும்;

11. கும்பகோணம் தொகுதி, குடிதாங்கியில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே படுக்கை அணை கட்டுவது குறித்தும்;

12. நாகை மாவட்டம், குமாரமங்கலம் கிராமம், கடலூர் மாவட்டம், ஆதனூர் கிராமம் இடையே கொள்ளிடம் ஆற்றில் மைல் 74/4—ல் நீர் ஒழுங்கி அமைப்பது குறித்தும்;

13. கும்பகோணம் தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

14. கும்பகோணம் அரசு பொது மருத்துவமனையில் MRI ஸ்கேன் அமைப்பது குறித்தும்;

15. கும்பகோணம் தொகுதி, திருநாகேஸ்வரம் மற்றும் சோழபுரம் பேரூராட்சிகளில் காவல் நிலையங்கள் அமைப்பது குறித்தும்;

16. கும்பகோணம் அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பணிமனைக்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

17. கும்பகோணம் தொகுதி, கொட்டையூரில் புதிய துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

18. கும்பகோணம் தொகுதி கல்லூர்—மட்டியூரில் புதிய துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

19. கும்பகோணம் தொகுதி சாக்கோட்டையில் உள்ள 110/11 KV துணை மின் நிலையத்தை 230 KV துணை மின் நிலையமாக நிலை உயர்த்துவது குறித்தும்;

20. கும்பகோணம் நகரில் 33/11 KV உள்கட்டமைப்பு மனையக துணை மின் நிலையம் (Indoor Substation) அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. தாம்பரம் தொகுதியில் உள்ள தாம்பரம் பெரிய ஏரி, புத்தாங்கல் ஏரி, கடப்பேரி ஏரி, வண்ணாந்தாங்கல் ஏரி, சிட்லபாக்கம் ஏரி, மாடம்பாக்கம் ஏரி, செம்பாக்கம் ஏரி, இராஜகீழ்ப்பாக்கம் ஏரி, முடிச்சூர் சீக்கனா ஏரி, பெருங்களத்தூர் ஏரி, பீர்க்கண்கரணை ஏரி ஆகிய ஏரிகளைத் தூர் வாருவது குறித்தும்;

2. தாம்பரம் பெருநகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

3. தாம்பரம் தொகுதிக்குட்பட்ட பெருங்களத்தூர், முடிச்சூர், மேற்கு தாம்பரம்-கிருஷ்ணா நகர், கிழக்கு தாம்பரம்-சேலையூர், திருவஞ்சேரி மற்றும் பீர்க்கண்கரணை ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய்களை அகலப்படுத்துவது குறித்தும்;

4. தாம்பரம் தொகுதியில், பூமிக்கடியில் மின் கேபிள்கள் அமைத்து சாலை ஓரம் உள்ள மரங்கள் வெட்டப்படுவதை தடுப்பது குறித்தும்;

5. தாம்பரம் பகுதியில் புதியதாக பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

[திரு. எஸ்.ஆர். இராஜா] *[2018 ஜனவரி 12*

6. கிழக்கு தாம்பரத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலையை குறிப்பாக வேளச்சேரி பகுதியை அகலப்படுத்துவது குறித்தும்;

7. சிட்லபாக்கம் பேரூராட்சியில் போதியளவு குடிநீர் வசதி செய்வது குறித்தும்;

8. தாம்பரம் தொகுதிக்குட்பட்ட திருவஞ்சேரி, மாடம்பாக்கம், பீர்க்கண்கரணை ஆகிய பகுதிகளில் விளையாட்டு மைதானங்கள் அமைப்பது குறித்தும்;

9. தாம்பரம் பெருநகராட்சி மேற்கு பகுதியில் விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

10. தாம்பரம் பெருநகராட்சி, கிழக்கு தாம்பரத்தில் அமைந்துள்ள மகப்பேறு மருத்துவமனையைத் தரம் உயர்த்துவது குறித்தும்;

11. தாம்பரம் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதியில் தனியாக நோய் கண்டறியும் மருத்துவமனை (Diagnostic Centre) ஒன்று அமைப்பது குறித்தும்;

12. தாம்பரம் பெருநகராட்சியில் சுகாதார முறையில் ஆடு அடிக்கும் தொட்டி (Slaughter House) அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

**திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:



*2018 ஜனவரி 12]* [திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்]

"1. ஆற்காடு–ஆரணி சாலையில் இருந்து NH–41 ஆற்காடு–வேலூர் சாலைக்கு புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

2. ஆற்காடு நகரத்தில் உள்ள மூன்று பெரிய கால்வாய்களைத் தூர்வாரி சிமென்ட் சிலாப் அமைப்பது குறித்தும்;

3. வேலூர் முதல் சென்னை வரை செல்லும் பேருந்துகள், இரவு 10.00 மணிக்கு மேல் ஆற்காடு நகரத்தினுள் வந்து செல்வது குறித்தும்;

4. ஆற்காடு நகரத்தில் ஆதி திராவிடர் மற்றும் இஸ்லாமியர்கள் வாழும் இடங்களில் நகராட்சியின்மூலம் சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்வது குறித்தும்;

5. ஆற்காடு நகரத்திற்கு மின்சார எரிவாயு தகனமேடை அமைப்பது குறித்தும்;

6. NH–47 (Chennai – Bangalore) தேசிய நெடுஞ்சாலையில் SSS கல்லூரி அருகில் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

7. ஆற்காடு நகர கழிவுநீர் பாலாற்றில் கலப்பதைத் தடுப்பது குறித்தும்;

8. ஆற்காடு நகராட்சியின் குப்பைகளை பாலாற்றில் கொட்டப்படுவதைத் தடுப்பது குறித்தும்;

9. ஆற்காடு அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

10. திமிரி பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

11. திமிரி பேரூராட்சியில் புதிய சார்–பதிவாளர் அலுவலகம் அமைப்பது குறித்தும்;

12. திமிரி அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

13. கலவை பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் கிணற்றினைத் தூர்வாருவது குறித்தும்;

14. கலவை பேரூராட்சியில் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

15. ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியத்தில் போதிய அளவு கிராம நிர்வாக அலுவலர்கள் நியமிப்பது குறித்தும்;

16. ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியத்தில் ஆயர்பாடி–மேலபந்தல் ஊராட்சி, வாழைப்பந்தல், பாலி, இருங்கூர் ஆகிய ஊராட்சிகளில் கூடுதலாகக் குடிநீர் வசதி செய்வது குறித்தும்;

17. ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியத்தில் கணியனூர், வளையாத்தூர், வரகூர், அல்லாலச்சேரி பகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

18. ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியத்தில் புங்கனூர், கணியனூர், வளைபாத்தூர் ஊராட்சிகளில் சமுதாயக் கூடம் அமைப்பது குறித்தும்;

19. ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியத்தில் புங்கனூர், வரகூர், வெங்கடாபுரம், குப்பம் ஊராட்சிகளில் தடுப்பணைகள் அமைப்பது குறித்தும்;

20. ஆற்காடு தொகுதியிலுள்ள அனைத்து ஊராட்சி, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் Reverse Osmosis அமைத்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவது குறித்தும்;

21. ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், வளவனூர் முதல் திருப்பாற்கடல் வரை தரைப்பாலம் அமைப்பது குறித்தும்;

22. ஆற்காடு தொகுதியில் பொறியியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

23. ஆற்காடு தொகுதியில் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது குறித்தும்;





24. ஆற்காடு தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

25. ஆற்காடு தொகுதியில் விளையாட்டரங்கம் அமைப்பது குறித்தும்;

26. ஆற்காடு தொகுதி, வேலூர் ஒன்றியம், செங்கநத்தம் முதல் பாலமதி ஊராட்சி வரை சாலை வசதி அமைப்பது குறித்தும்;

27. ஆற்காடு தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், நாகநதியின் ஆற்றில், ஆற்றுப்பாலம் அமைப்பது குறித்தும்;

28. ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், பொன்னாமங்கலம் இணைக்கும் ஆற்றில் ஆற்றுப்பாலம் அமைப்பது குறித்தும்;

29. ஆற்காடு தொகுதி, விளாப்பாக்கம் பேரூராட்சியில் உள்ள மகப்பேறு மருத்துவமனைக்கு அதனை சுற்றியுள்ள கிராமப்புற மக்கள் வந்து செல்வதற்கு புதிய பேருந்து தடங்கள் ஏற்படுத்துவது குறித்தும்;

30. ஆற்காடு தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், மூஞ்சுர்பட்டு ஊராட்சியில் உள்ள நாயக்கநேர் கிராமத்திற்குப் புதிய பேருந்து தடம் ஏற்படுத்துவது குறித்தும்;

31. ஆற்காடு தொகுதியிலுள்ள, அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர்கள் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

[2018 ஜனவரி 12

**டாக்டர் இரா. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. மைலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூட்டேரிப்பட்டு கூட்டுப்பாதையில் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

2. மைலம் ஒன்றியம், கூட்டேரிப்பட்டில் ஆம்புலன்ஸ் வசதியுடன் அவசர சிகிச்சை மையமும், தீயணைப்பு நிலையமும் அமைப்பது குறித்தும்;

3. மைலம் ஒன்றியம், மைலம் ஊராட்சியில் உள்ள தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

4. மைலம் ஒன்றியம், வீடூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையமும், நெடிமொழியனூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனையும் அமைப்பது குறித்தும்;

5. வல்லம் ஒன்றியம், கீழையூர் மணியப்பட்டியில் சங்காரபரணியிலிருந்து கொங்கரப்பட்டு செல்லும் சாலையில் உள்ள ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுவது குறித்தும்;

6. வல்லம் ஒன்றியம், சேர்விளாகம் பஞ்சாயத்துக்குட்பட்ட காந்திநகர் பகுதியில் திறந்தவெளி கிணறு அமைத்து மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவது குறித்தும்;

7. வல்லம் ஒன்றியம், கடுகுப்பட்டு, மேல்சித்தாமூர் செல்லும் சாலையில் உள்ள தொண்டி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுவது குறித்தும்;

8. ஓலக்கூர் ஒன்றியம், கொடியம் ஊராட்சியில் உள்ள பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டுவது குறித்தும்;

9. ஓலக்கூர் ஒன்றியம், தாதாபுரம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டுவது குறித்தும்;

10. மைலம் ஒன்றியம், நெடி, மோழியனூர் கிராமங்களையும், வல்லம் ஒன்றியம், நெகனூர், புதூர் கிராமங்களையும் தனித்தனி ஊராட்சிகளாகப் பிரிப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

**திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 11 வார்டுகளில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் துணைத் திட்டமான நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுமைத் திட்டத்தின்கீழ் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும்;

2. மதுரை கிழக்கு தொகுதியில் மதுரை மாநகராட்சியின் விரிவாக்கப் பகுதிகளில் உள்ள 11 வார்டுகளிலும் தார்ச் சாலை வசதி அமைப்பது குறித்தும்;

3. ஆனையூர் பகுதி வார்டு எண் 2, 3 மற்றும் 4—ல் வைகை இரண்டாம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும்;

4. மதுரை கிழக்கு தொகுதி, களிமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

5. வண்டியூர் பெரிய கண்மாயினை தூர்வாரி, ஆழப்படுத்தி, படகு குழாம் அமைத்து சுற்றுலாத் தலமாக்குவது குறித்தும்;

6. மதுரை மேற்கு ஒன்றியத்தில் உள்ள காஞ்சரம்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவது குறித்தும்;

[திரு. பி. மூர்த்தி] [2018 ஜனவரி 12

7. மாட்டுத்தாவணி முதல் மூன்றுமாவடி, மகாலெட்சுமி நகர், கண்ணனேந்தல் – அய்யர்பங்களா, உச்சப்பரம்புமேடு – பார்க் டவுன் – குலமங்கலம் விலக்குச்சாலை–ஆனையூர்–கூடல்நகர் – பாத்திமா கல்லூரி வரை சாலையை அகலப்படுத்தி புதிய தார்ச் சாலை அமைப்பது குறித்தும்;

8. மதுரை கிழக்கு தொகுதி, மதுரை கிழக்கு வட்டத்திற்கு ஒத்தக்கடையில் புதிய நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

9. தேசிய நெடுஞ்சாலை NH 45B–ஐ உத்தங்குடியிலிருந்து, சமயநல்லூர் NH 7–ல் இணைக்க சுற்றுச்சாலை அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டிடிவி தினகரன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட மருத்துவமனையைப் பல்நோக்கு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

2. சைதாப்பேட்டை தொகுதியில் அரசு மகளிர் கல்லூரி அமைப்பது குறித்தும்;

3. சைதாப்பேட்டை தொகுதி, 142–வது வட்டம், கோதாமேடு, திடீர் நகரில் உள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கு மாற்றாக புதிதாகக் கட்டடம் கட்டுவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. மா. சுப்பிரமணியன்]

4. சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட கிண்டி மேதகு ஆளுநர் மாளிகை முன்பு ஹால்டா சாலை சந்திப்பில் மேல்நிலை நடை மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

5. சைதாப்பேட்டை தொகுதி, 139–வது வட்டம், ஜாபர்கான்பேட்டையில் உள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்கு மாற்றாக புதிதாகக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

6. சைதாப்பேட்டை தொகுதி, 170–வது வட்டம், ஆடுதொட்டி மேம்பாலம் அருகில் உள்ள குப்பை கொட்டும் வளாகத்தை மாற்றுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

**திரு. பெ. சுப்ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் முன்மொழிந்த நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. சோழிங்கநல்லூர் தொகுதி, மத்திய கைலாஷ் முதல் மாமல்லபுரம் வரை உயர்மட்ட மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

2. சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 15–வது மண்டலத்திற்குட்பட்ட அனைத்து வட்டங்களிலும், பாதாளச் சாக்கடை, மழைநீர் கால்வாய் மற்றும் குடிநீர் குழாய் அமைப்பது குறித்தும்;

3. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ல் உள்ளடங்கிய அனைத்து வட்டங்களிலும் பாதாளச் சாக்கடை, மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் குழாய் அமைப்பது குறித்தும்;

[திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்] [2018 ஜனவரி 12

4. சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் பாதாளச் சாக்கடை, மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் குழாய் அமைப்பது குறித்தும்;

5. சோழிங்கநல்லூர் தொகுதியில் இயங்கி வரும் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடங்கள் அமைப்பது குறித்தும்;

6. சோழிங்கநல்லூர் தொகுதியில் சோழிங்கநல்லூர் முதல் மேடவாக்கம் சாலையில் எல்காட் அருகில் உயர்மட்ட மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

7. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளுக்கு சிற்றுந்து மற்றும் பேருந்து வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

8. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மீனவர்கள் குப்பம் பகுதியில் வலைகளை உலர வைக்கும் கட்டடங்கள் அமைப்பது குறித்தும்;

9. சோழிங்கநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

10. சோழிங்கநல்லூர் தொகுதியில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களையும் தரம் உயர்த்துவது குறித்தும்;

11. சோழிங்கநல்லூரில் உள்ள நுகர்வோர் உணவுப் பொருள் வழங்கல் உதவி ஆணையாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

12. சோழிங்கநல்லூரில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

13. சோழிங்கநல்லூர் தொகுதியில் தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

14. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பாதுகாப்பு கருதி சிசிடிவி கேமரா பொருத்துவது குறித்தும்;

15. சோழிங்கநல்லூர் தொகுதி, கீழ்க்கட்டளை முதல் நங்கநல்லூர் செல்லும் சாலையை அகலப்படுத்துவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்]

16. சோழிங்கநல்லூர் தொகுதியிலுள்ள அனைத்து தெருக்களிலும் புதைவட மின்கம்பி அமைப்பது குறித்தும்;

17. எஸ்.ஆர்.பி. முதல் கோவளம் வரை உள்ள பக்கிங்ஹாம் கால்வாய் வழியாக படகு குழாம் அமைப்பது குறித்தும்;

18. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் குளிர்சாதன பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

19. சோழிங்கநல்லூரில் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை (ESI) அமைப்பது குறித்தும்;

20. சோழிங்க நல்லூரில் உரிமையியல் நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

21. சோழிங்கநல்லூர் தொகுதியில் உள்ள அனைத்து காவல் நிலையத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

22. சோழிங்கநல்லூரில் அரசு பொது மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

23. சோழிங்கநல்லூர் தொகுதி, நீலாங்கரையில் உள்ள பத்திரப்பதிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

24. சோழிங்கநல்லூர் தொகுதியில் உள்ள கண்ணகி நகர், எழில் நகர், பெரும்பாக்கம் சுனாமி நகர் போன்ற பகுதியில் மறு குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்வது குறித்தும்;

25. சோழிங்கநல்லூர் தொகுதி, செம்மஞ்சேரி சுனாமி நகர் பகுதியில் சிறுபான்மையினர், கிறித்துவர் மற்றும் இஸ்லாமியர்களுக்குத் தனித்தனியே மயானம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

**டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. திருவள்ளூர் நகராட்சியின் ஒருங்கிணைந்த மாவட்ட பேருந்து நிலைய திட்டப் பணிகள் குறித்தும்;

2. திருவள்ளூர் தொகுதி, வெங்கத்தூர் ஊராட்சி, மணவாள நகர்–திருவள்ளூர் இரயில் நிலையத்தை இணைக்கும் தரைப்பாலத்தை மேம்பாலமாக அமைப்பது குறித்தும்;

3. திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், சத்தரை, ஏகாட்டூர் ஆகிய பகுதிகளில் கூவம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் அமைப்பது குறித்தும்;

4. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருவாலங்காடு இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

5. திருவள்ளூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் முடிவுற்ற பகுதிகளில் சிமென்ட் சாலைகள் அமைப்பது குறித்தும்;

6. திருவாலங்காடு ஒன்றியம், அருங்குளத்தில் தாய்–சேய் நல விடுதிக் கட்டடம் அமைப்பது குறித்தும்;

7. திருவள்ளூர் நகராட்சியில் பெரியகுப்பம் பேருந்து நிலையத்தில் சிமென்ட் சாலை அமைப்பது குறித்தும்;

8. பூண்டி ஒன்றியம், சத்தியமூர்த்தி நீர்தேக்கத்தைத் தூர்வாரி நீரின் கொள்ளளவை அதிகப்படுத்துவது குறித்தும்;

9. திருவள்ளூர் நகரில் வைத்திய ஸ்ரீ வீரராகவர் சுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு இலவச தங்கும் விடுதி கட்டித் தருவது குறித்தும்;

10. திருவள்ளூர் இரயில் நிலையத்தில் சுரங்கப் பாதை அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. வி.ஜி. ராஜேந்திரன்]

11. திருவாலங்காடு ஒன்றியம், அருள்மிகு வடாரண்யேஸ்வரர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு இலவச தங்கும் விடுதி மற்றும் குளியலறைக் கட்டுவது குறித்தும்;

12. திருவள்ளூர் முதல் திருத்தணி வரை திருவாலங்காடு வழியாக போக்குவரத்து வழித்தடம் ஏற்படுத்துவது குறித்தும்;

13. திருவள்ளூர் முதல் திருப்பதி வரை குளிர்சாதன வசதியுடன்கூடிய பேருந்து மற்றும் புதிய வழித்தடம் அமைப்பது குறித்தும்;

14. கனகம்மா சத்திரம் முதல் திருவள்ளூர் வரை திருவாலங்காடு வழியாக புதிய பேருந்து வழித்தடம் அமைப்பது குறித்தும்;

15. திருவள்ளூர் நகராட்சியில் அனைத்து பூங்காக்களையும் சிறப்பு திட்டம்மூலம் அமைப்பது குறித்தும்;

16. திருவள்ளூர் நகரில் புறவழிச் சாலை அமைக்கும் பணியினை விரைந்து செயல்படுத்துவது குறித்தும்;

17. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், லட்சுமி விலாசபுரத்தில் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே புதிய தடுப்பணைக் கட்டுவது குறித்தும்;

18. திருவள்ளூர் நகரில் பெரும்பாக்கம் புங்கத்தூர், வள்ளுவர்புரம், எம்.ஜி.ஆர். நகர் மற்றும் வரதராஜ நகர் பகுதிகளில் வசிப்போருக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவது குறித்தும்;

19. திருவள்ளூர் NH–204 திருத்தணி–திருப்பதி தேசிய நெடுஞ் சாலை பட்டரை பெரும்புதூர் அருகே புதிய மேம்பாலம் கட்டுவது குறித்தும்;

20. திருவாலங்காடு ஒன்றியம், திருத்தணி–திருவள்ளூர் இடையே அமைந்துள்ள கனகம்மா சத்திரத்தில் தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

21. திருவள்ளூர் அரசு பொது மருத்துவமனைக்குக் கூடுதலாக புதிய அவசர ஊர்திகள் வழங்குவது குறித்தும்;

[திரு. வி.ஜி. ராஜேந்திரன்] [2018 ஜனவரி 12

22. கடம்பத்தூர் ஒன்றியம், வெங்கத்தூர் ஊராட்சியில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

23. திருவள்ளூர் நகரில் 22–வது வார்டு NGO காலனியில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

24. பூண்டி ஒன்றியம், பூண்டியில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

25. தேசிய நெடுஞ்சாலை NH–204 திருவள்ளூர் முதல் திருத்தணி வரை கிராமங்கள் வழியாக செல்லும் சாலைகளில் வேகத்தடை அமைப்பது குறித்தும்;

26. திருவள்ளூர் நகராட்சியில் உயர் கோபுர மின்விளக்குகள் அமைப்பது குறித்தும்;

27. திருவள்ளூர் நகராட்சி, வெள்ளியூரிலிருந்து திருவள்ளூர் வரை குடிநீர் வழங்கும் புதிய பைப் லைன் அமைப்பது குறித்தும்;

28. பாண்டூர் ஊராட்சி கனகவல்லிபுரத்தில் 110 KVA துணை மின் நிலைய பணியை விரைவுபடுத்துவது குறித்தும்;

29. திருவள்ளூர் முதல் காக்களூர் வரை நடைபெறும் புறவழிச் சாலை பணியினை விரைந்து முடிப்பது குறித்தும்;

30. திருவள்ளூர் முதல் தாம்பரம் வரை மாநகரப் போக்குவரத்து வழித்தடம் இயக்குவது குறித்தும்;

31. திருவள்ளூரிலிருந்து அரண்வாயல் குப்பம், கொப்பூர், பாப்பரம்பாக்கம், மேவளூர் குப்பம் வழியாக பூந்தமல்லி வரை மாநகரப் பேருந்து இயக்குவது குறித்தும்;

32. திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், நெமிலி அகரம் செல்லும் ஒன்றியச் சாலையை அமைப்பது குறித்தும்;

33. கடம்பத்தூர் முதல் செஞ்சிபனப்பாக்கம் வரை உள்ள ஒன்றியச் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

34. திருவள்ளூர் நகரிலிருந்து குக்கிராமங்களுக்கு சிற்றுந்து வழித்தடத்தினை அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. வி.ஜி. ராஜேந்திரன்]

35. திருவாலங்காடு ஒன்றியம், கொசஸ்தலை ஆற்றின் அருகே அமைந்துள்ள ஆற்காடு குப்பம் மேல்நிலைப் பள்ளிக்குத் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

36. NH–204–திருவாலங்காடு செல்லும் நாராயணபுரம் கூட்டு சாலையில் உயர் கோபுர மின் விளக்கு அமைப்பது குறித்தும்;

37. NH–204–கனகம்மா சத்திரத்தில் உயர் கோபுர மின் விளக்கு அமைப்பது குறித்தும்;

38. NH–204–திருப்பாச்சூரில் உயர் கோபுர மின் விளக்கு அமைப்பது குறித்தும்;

39. திருவாலங்காடு ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் தூர்வாருவது குறித்தும்;

40. பூண்டி ஒன்றியம், வரதாபுரம் முதல் திருவாலங்காடு ஒன்றியம், அத்திப்பட்டு வரை உள்ள சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

41. திருவாலங்காடு ஒன்றியம், சின்னம்மாபேட்டை அருகே ஓடையின் குறுக்கே பாலம் அமைக்கும் பணியினை விரைந்து முடிப்பது குறித்தும்;

42. கடம்பத்தூர் ஒன்றியம், கூவம் கிராமத்தில் உள்ள ஸ்ரீதிரியுரந்தக சுவாமி திருக்கோயில் குளம் சீரமைப்பது குறித்தும்;

43. கடம்பத்தூர் ஒன்றியம், பாப்பரம்பாக்கத்தில் 250 KVA துணை மின் நிலைப் பணிகளை விரைந்து முடிப்பது குறித்தும்;

44. கூனிப்பாளையம் ஊராட்சியில் உள்ள கோட்டை குப்பம் இயற்கை மருத்துவம் சார்ந்த பயிற்சியகத்தை மீண்டும் செயல்படுத்துவது குறித்தும்;

45. பூண்டி ஒன்றியம், பூண்டியில் உள்ள நீரியல் மற்றும் நீர் நிலையியல் ஆராய்ச்சி மையத்தை மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்தும்;

46. திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், திம்மபூபாலபுரம் ஊராட்சியில் கூடியம் அருகில் உள்ள பிளேஸ்பாளையம், அடிசன்புரம் பகுதிகளைச் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்தும்;

[திரு. வி.ஜி. ராஜேந்திரன்] [*2018 ஜனவரி 12*

*47.* திருவள்ளூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தை மீண்டும் செயல்படுத்துவது குறித்தும்;

*48.* திருவள்ளூர் தொகுதியில் உள்ள கிராமங்கள் முழுவதும் கால்நடை பராமரிப்புக்காக நடமாடும் அவசர ஊர்தி ஏற்படுத்துவது குறித்தும்;

*49.* திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், சத்தியமூர்த்தி நீர்தேக்கம் அமைந்துள்ள பகுதியை சுற்றுலாத் துறைமூலம் மேம்படுத்துவது குறித்தும்;

*50.* திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், சத்தியமூர்த்தி நீர்தேக்கத்தில் படகு குழாம் அமைத்து சுற்றுலாத் துறைமூலம் மேம்படுத்துவது குறித்தும்;

*51.* திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்ந்த திருப்பாச்சூரில் அமைந்துள்ள வாசீஸ்வர திருக்கோயில் திருக்குளத்தைச் சீரமைப்பது குறித்தும்;

*52.* திருவள்ளூரில் மாற்றுத் திறனாளிகளுக்கென தனியாக தொழிற்பயிற்சி நிலையம் திருவள்ளூர் நகரிலேயே அமைப்பது குறித்தும்;

*53.* திருவள்ளூர் நகரின் அருகே உள்ள காக்களூர் ஏரியைத் தூர்வாரி படகு குழாம் அமைத்து சுற்றுலாத் துறைமூலம் மேம்படுத்துவது குறித்தும்;

*54.* திருவள்ளூர் தொகுதியில் குக்கிராமங்களில் உள்ள வழித்தடங்களில் பேருந்து மீண்டும் இயக்குவது குறித்தும்;

*55.* திருவள்ளூர் தொகுதி, திருத்தணி முதல் திருவள்ளூர் வரை ராமஞ்சேரி, பூண்டி வழியாக பேருந்து வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

*56.* திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் நகராட்சியைச் சிறப்பு நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

*57.* திருவள்ளூர் நகராட்சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தை மேம்படுத்தி குடிநீர் விநியோகம் செய்வது குறித்தும்;



*2018 ஜனவரி 12*] [திரு. வி.ஜி. ராஜேந்திரன்]

*58.* திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கத்தில் சார் கருவூலம் அமைப்பது குறித்தும்;

*59.* திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், அருங்குளம் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு பொதுப் பணித் துறை மூலமாக கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்தும்;

*60.* திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், வெங்கத்தூர் ஊராட்சி, மணவாள நகரில் புதிய பேருந்து நிலையக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

*61.* திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், கடம்பத்தூரில் புதிய பேருந்து நிலையம் கட்டுவது குறித்தும்;

*62.* திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், மணவூர் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

*63.* திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியத்தில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

*64.* திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும்;

*65.* திருவள்ளூர் தொகுதி, NH–*204* தேசிய நெடுஞ்சாலையில், திருப்பாச்சூர் முதல் காக்களூர் வரை விடுபட்டுள்ள சாலைப் பணிகளை விரைந்து முடிப்பது குறித்தும்;

*66.* திருவள்ளூர் மாவட்டத்திற்கு நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய கருவிகள் மற்றும் கூடுதல் வாகனங்கள் ஏற்படுத்துவது குறித்தும்;

*67.* திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருத்தணி வட்டத்தைப் பிரித்து புதிய வட்டம் அமைப்பது குறித்தும்;

*68.* திருவள்ளூர் தொகுதிக்குட்பட்ட பூண்டி, கடம்பத்தூர், திருவாலங்காடு ஒன்றியங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் தரமான உணவு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவது குறித்தும்;

[திரு. வி.ஜி. ராஜேந்திரன்] [2018 ஜனவரி 12

69. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், சின்னம்மாபேட்டை கிராமத்தில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

70. திருவள்ளூர் தொகுதி, பட்டரைபெரும்புதூர், கனகம்மா சத்திரம், திருவாலங்காடு, பேரம்பாக்கம், கடம்பத்தூர் ஆகிய பகுதிகளில் கால்நடை தீவன பண்ணை அமைப்பது குறித்தும்;

71. திருவள்ளூரில் மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

72. திருவள்ளூரில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

73. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், பனப்பாக்கம் ஏரியைத் தூர்வாரி வரத்துக் கால்வாய்களைச் சீரமைப்பது குறித்தும்;

74. கடம்பத்தூர் ஒன்றியம், மப்பேடு ஏரியைத் தூர்வாரி சீரமைப்பது குறித்தும்;

75. கடம்பத்தூர் ஒன்றியம், கூவம் ஏரியைத் தூர்வாரி வரத்துக் கால்வாய்களைச் சீரமைப்பது குறித்தும்;

76. திருவள்ளூர் நகரம் முதல் பிளேஸ்பாளையம் வரை பூண்டி, நம்பாக்கம் வழியாக பேருந்து வழித்தடம் ஏற்படுத்துவது குறித்தும்;

77. திருவள்ளூர் நகரில் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் கால்நடைகள் நடமாடுவதைத் தடுப்பது குறித்தும்;

78. திருவள்ளூர் நகரில் இரயில்வே மேம்பாலம் முதல் டோல்கேட் வரை LED விளக்குகள் பொருத்துவது குறித்தும்;

79. கடம்பத்தூர் ஒன்றியம், வெங்கத்தூர் ஊராட்சியில் மற்றும் கடம்பத்தூர் ஊராட்சியில் சாலைகள் மற்றும் மின் விளக்குகள் அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. வி.ஜி. ராஜேந்திரன்]

80. திருவாலங்காடு ஒன்றியம், திருவாலங்காடு பழையனூர் மாவூர், வெரியபளக்காட்டு ஆகிய ஏரிகளைத் தூர்வாரி சீரமைப்பது குறித்தும்;

81. திருவள்ளூர் தொகுதியில் அரசு நலத் திட்டங்களை முறையாக செயல்படுத்த குழு அமைப்பது குறித்தும்;

82. திருவள்ளூர் தொகுதியில் நலத் திட்ட உதவிகள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் நடைபெறும்போது தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு முறையாகத் தகவல் தெரிவிப்பது குறித்தும்;

83. திருவள்ளூர் நகரில் உள்ள உழவர் சந்தையை நடைமுறைப்படுத்துவது குறித்தும்;

84. திருவள்ளூர் நகரில் நகரப் பேருந்து நிலையமும், மாநகரப் பேருந்து நிலையமும் ஏற்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. கீழ்வேளூர் தொகுதி, கிழையூர் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்குக் குடிநீர் வசதி செய்வது குறித்தும்;

2. கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினம் ஒன்றியம், ஒரத்தூர், அகரஒரத்தூர், செம்பியன் மகாதேவி, வடுகச்சேரி, குறிச்சி, வடவூர் ஆகிய ஊராட்சிகளுக்குக் குடிநீர் வழங்குவது குறித்தும்;

[திரு. உ. மதிவாணன்] [2018 ஜனவரி 12

3. கீழ்வேளூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளுக்குக் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் கூடுதலாகக் குடிநீர் வழங்குவது குறித்தும்;

4. கீழ்வேளூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளுக்குக் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

5. கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், செருதூர் மீனவர் கிராமத்திற்கும் வேளாங்கன்னி பேரூராட்சிக்கும் இடையே வெள்ளையாற்றின் மணல் திட்டுகளை தூர்வாரி அகற்றுவது குறித்தும்;

6. கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் பேரூராட்சியில் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

7. கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் பேரூராட்சியில் வேளாண் கல்லூரி அமைப்பது குறித்தும்;

8. கீழ்வேளூர் தொகுதியில் கீழையூர், தலைஞாயிறு, நாகை கீழ்வேளூர் ஒன்றியத்திற்குட்பட்ட ஏழை, எளியோருக்கு அரசு புறம்போக்கில் வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

9. கீழ்வேளூர் தொகுதிக்குட்பட்ட கடல் பகுதிகளில் தூண்டில் வளைவு அமைப்பது குறித்தும்;

10. கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், செருதூர் காமேஸ்வரம், விழுந்தமாவடி, புதுப்பள்ளி, வேட்டைகாரன் இருப்பு ஆகிய கடல் பகுதிகளுக்கு திசைக்காட்டும் விளக்கு அமைப்பது குறித்தும்;

11. கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், செருதூர் மீனவக் கிராமத்தில் மீன்பிடி இறங்குதளம் அமைப்பது குறித்தும்;

12. கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், செருதூர் கிராம மயானத்தில் ஈமைகாரிய மண்டபம் ஒன்று அமைப்பது குறித்தும்;

13. கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினம் ஒன்றியம், வடுகைச்சேரி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. உ. மதிவாணன்]

14. கீழ்வேளூர் தொகுதி, வேளாங்கன்னி மற்றும் கீழ்வேளூர் பேரூராட்சிகளில் பேருந்து நிலையங்கள் அமைப்பது குறித்தும்;

15. கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் ஒன்றியம், சாட்டியக்குடி மற்றும் வலிலம் ஊராட்சிகளில் அரசு உயர்நிலைப் பள்ளி அருகில் உள்ள அரசு மதுபானக் கடைகளை அகற்றுவது குறித்தும்;

16. கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் ஒன்றியம் குருமணாங்குடியிலிருந்து நீலப்பாடி ஊராட்சி வரை தார்ச் சாலை அமைப்பது குறித்தும்;

17. கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் ஒன்றியம், குருமணாங்குடி ஆதி திராவிடர் பகுதிகளுக்கு தார்ச் சாலை அமைப்பது குறித்தும்;

18. கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் ஒன்றியத்துக்குட்பட்ட குருமணாங்குடி ஊராட்சியிலிருந்து பூலாங்குடி மற்றும் ஓர்குடி கிராமம் வரை தார்ச் சாலை அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

**திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

**திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

[திரு. ஐ.பி. செந்தில்குமார்] [*2018 ஜனவரி 12*

"1. கொடைக்கானல் நகருக்கு கீழ்குண்டாறு குடிநீர்த் திட்டத்தைத் துரிதப்படுத்துவது குறித்தும்;

2. கொடைக்கானலிலிருந்து பூண்டி வழியாக கிளாவரை வரை மற்றும் கடவரை வரை இணைப்புச் சாலை அமைப்பது குறித்தும்;

3. கொடைக்கானல் ஏரியைத் தூர்வாரும் பணியைச் செயல்படுத்துவது குறித்தும்;

4. கொடைக்கானலில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

5. கொடைக்கானலில் மின் மயானம் அமைப்பது குறித்தும்;

6. கொடைக்கானல் மேல் மற்றும் கீழ் மலைப் பகுதிகளில் Moulded Wire மற்றும் மேல்மலை, பூம்பாறை மற்றும் கீழ்மலை தாண்டிக்குடி ஆகிய பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைப்பது குறித்தும்;

7. பூண்டி—புலவச்சி ஆறு, மன்னவனூர்—பரப்பலாறு, கவுஞ்சி—அரம்பலப்பாறை போன்ற ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் அமைப்பது குறித்தும்;

8. மேல்மலை பகுதியில் விளையும் காய்கறிகளை இருப்பு வைப்பதற்கு குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

9. பழனி, சிறுநாயக்கர் குளம் மற்றும் வையாபுரி குளத்தில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்து, வையாபுரி குளத்தில் ஆகாயத் தாமரையை அகற்றி, குளக்கரையில் நடைபாதைகள் அமைப்பது குறித்தும்;

10. கோடைக்கால நீர்த் தேக்கத்தை ஆழ மற்றும் அகலப்படுத்தி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஏற்படுத்துவது குறித்தும்;

11. பழனிக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு இலவச தங்கும் விடுதிகள் அமைப்பது குறித்தும்;

12. பழனியில் வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

13. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் நடந்து செல்லும் பாதையில் சிமென்ட் மேற்கூரை அமைப்பது குறித்தும்;



*2018 ஜனவரி 12*] [திரு. ஐ.பி. செந்தில்குமார்]

14. பழனி திருக்கோயிலுக்கு சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து, நகராட்சி நிருவாகத்தினையும், பழனி தேவஸ்தானத்தையும் ஒன்றாக இணைத்து ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமித்து நிருவாகம் செய்வது குறித்தும்;

15. நெய்காரப்பட்டியில் வெல்லம் பாதுகாப்பு குளிரூட்டு நிலையம் ஏற்படுத்துவது குறித்தும்;

16. பச்சையாற்றின் குறுக்கே அணையினைக் கட்டி பாசன வசதி பெருக்குவது குறித்தும்;

17. வரதமாநதியின் மேற்பகுதியில் அணையினைக் கட்டி நீரை விவசாயத்திற்கும், குடிநீருக்கும் பயன்படுத்துவது குறித்தும்;

18. வரதமாநதியின் அணையினைத் தூர்வார நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

19. ஆயக்குடி பேரூராட்சியில் பழங்கள் பாதுகாக்கும், பதப்படுத்தும் நிலையம் ஏற்படுத்துவது குறித்தும்;

20. பழனியில் புது தாராபுரம் ரோட்டில் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

21. யானை இறங்கும் பாதைகளை கண்டறிந்து அகலமான, உயரமான கான்கிரீட் அகழிகள் மற்றும் சோலார் வேலி அமைக்க விவசாயிகளுக்கு மானியத்துடன் கடனுதவிகள் வழங்குவது குறித்தும்;

22. பழனி பகுதி குடிநீர் தேவைக்காக திருமூர்த்தி அணையிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை ஏற்படுத்துவது குறித்தும்;

23. பழனி ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பட்டி முதல் குதிரையாறு அணை வரையுள்ள சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

24. பழனி ஊராட்சி ஒன்றியம், பெருமாள்புதூரில் உள்ள பச்சையாறு தரைப்பாலத்தை அகற்றி உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கி. சரவணன் அவர்கள்.

**திரு. துரை கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. புவனகிரி பேரூர், ஆதிவராகநல்லூர் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டியது குறித்தும்;

2. என்.எல்.சி. இந்தியா லிமிடெட் நிறுவனத்தில் சுரங்க பணிகளுக்காக வீடு, நிலம் கொடுத்த விவசாயக் குடும்பங்களுக்கு உரிய இழப்பீடு மற்றும் பணி வழங்குவது குறித்தும்;

3. புவனகிரி நகரில் தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

4. சிதம்பரம், புவனகிரி, காட்டுமன்னார்குடி வட்டங்களில் விவசாயிகளுக்குப் பயிர் இழப்பீட்டுத் தொகையை வழங்குவது குறித்தும்;

5. புவனகிரி தொகுதி, கீரப்பாளையம் ஒன்றியம், வீராணம் ஏரியிலிருந்து வரும் பாசன வாய்க்கால்களைத் தூர்வாருவது குறித்தும்;

6. புவனகிரி பேரூரில் உள்ள வட்ட தலைமை மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, கூடுதல் வசதிகள் செய்வது குறித்தும்;

7. புவனகிரி வட்டப் பகுதியில் அரும்பு வாசனை திரவிய தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;





8. தமிழகத்தில் மணல் தட்டுப்பாட்டினை நீக்கி கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் காப்பது குறித்தும்;

9. சரக்கு மற்றும் சேவை வரியினால் பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் வியாபாரிகள் நிலை குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கி. சரவணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

**திரு. சபா. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. நெய்வேலி தொகுதியில் நிலத்தடி நீர்மட்டத்தை மேம்படுத்த சிறப்பு திட்டங்கள் நிறைவேற்றுவது குறித்தும்;

2. நகரப் பேருந்துகளை அனைத்து வழித்தடங்களிலும் இயக்குவது குறித்தும்;

3. நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

4. நெய்வேலி நகரத்தில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

5. நெய்வேலி தொகுதி, கெடிலம் ஆற்றிலும், விசூர் மற்றும் கீழிருப்பு ஓடைகளிலும் காடாம்புலியூரிலிருந்து கீழ்மாம்பட்டு ஓடைகளிலும் தடுப்பணைக் கட்டுவது குறித்தும்;

6. சிறு விவசாயக் குழுக்களுக்கு முந்திரி பதப்படுத்தும் உபகரணங்களை மானிய விலையில் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன் அவர்கள்.

**திரு. எம்.கே. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

**திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. பரமத்தி–வேலூர் அரசு மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

2. பரமத்தி–வேலூரிலிருந்து வீரணம்பாளையம் வழியாக இருக்கூர் வரை உள்ள நெடுஞ்சாலையை அகலப்படுத்துவது குறித்தும்;

3. பரமத்தி–வேலூர் தொகுதி, மோகனூர் ஒன்றியம் செங்கப்பள்ளியில் காவேரி ஆற்றில் குடலைக்கிணறு அமைத்து செங்கப்பள்ளி ஊராட்சிக்கு காவேரி குடிநீர் வழங்குவது குறித்தும்;

4. பரமத்தி–வேலூர், பரமத்தி ஒன்றியம், இருட்டனையில் புதிய பள்ளி கட்டடம் கட்டுவது குறித்தும், துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

5. மணல் தட்டுப்பாட்டை நீக்குவது மற்றும் பட்டா நிலங்களில் மணல் எடுப்பது குறித்தும்;

6. பரமத்தி–வேலூர் தொகுதியில் தேங்காய் நார் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

7. பரமத்தி–வேலூரில் தென்னை கொப்பறை அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. கே.எஸ். மூர்த்தி]

8. பரமத்தி–வேலூர் தொகுதிக்குட்பட்ட பிள்ளைகளத்தூர், அரசம்பாளையம், அருந்ததியர் தெரு, குன்னிபாளையம் ஆகிய இடங்களில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைப்பது குறித்தும்;

9. பரமத்தி–வேலூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

10. பரமத்தி–வேலூர் பேரூராட்சிக்குப் புதியதாக கூட்டுக் குடிநீர்த் திட்டம் காவேரி ஆற்றிலிருந்து ஏற்படுத்துவது குறித்தும்;

11. பரமத்தி–வேலூர் தொகுதி, மாணிக்க நத்தம், நடந்தையில் புதியதாக துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

12. பரமத்தி–வேலூர் தொகுதிக்குட்பட்ட பொத்தனூர் வெங்கமேடு, பரமத்தி பேரூராட்சி மாதேசம்பாளையம், சோளசிராமணி அண்ணா நகர், கொத்தமங்கலம், அடுக்குநகர் ஆகிய இடங்களில் வசிக்கும் ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

13. பரமத்தி–வேலூர் தொகுதியை மையமாகக் கொண்டு வேலூர் அல்லது பரமத்தியில் புதியதாக அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அமைப்பது குறித்தும்;

14. ராஜவாய்க்காலின் குறுக்கே ஆணங்கூர், கொந்தளம் கருக்கம்பாளையம், பொத்தனூர் ஆகிய இடங்களில் பாலங்கள் அமைப்பது குறித்தும்;

15. மோகனூர் வாய்க்காலின் குறுக்கே குமாரபாளையம், எல்லைக்காட்டுப்புதூர் ஆகிய இடங்களில் பாலங்கள் அமைப்பது குறித்தும்;

16. பரமத்தி–வேலூர் தொகுதிக்குட்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் வேலூர் அரசு மருத்துவமனை ஆகியவற்றில் உள்ள மருத்துவர் மற்றும் செவிலியர் காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

17. வேலூர், ஜேடர்பாளையம் பயணியர் விடுதியை புதுப்பிப்பது குறித்தும்;

[திரு. கே.எஸ். மூர்த்தி] [*2018 ஜனவரி 12*

*18.* திருச்செங்கோடு வட்டம், புத்தூர் மருக்கலாம்பட்டி ஆகிய இரண்டு கிராமத்திற்கும் தனித்தனி கிராம நிருவாக அலுவலர்கள் நியமிப்பது குறித்தும்;

*19.* பரமத்தி–வேலூர் வட்டம், வடகரையாத்தூர் ஊராட்சியைப் பிரித்து, ஜேடர்பாளையத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி ஊராட்சி அமைப்பது குறித்தும்;

*20.* பரமத்தி–வேலூர் வட்டம், பெரியசோளிபாளையம் ஊராட்சியைப் பிரித்து, சிறுகிணத்துப்பாளையத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி ஊராட்சி அமைப்பது குறித்தும்;

*21.* வேலூரில் வேளாண்மை விற்பனை மையம் மற்றும் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்தும்;

*22.* வேலூரில் வெற்றிலை குளிர்பதன சேமிப்புக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

*23.* மரவள்ளிக் கிழங்கு, மஞ்சள் ஆகியவற்றிற்கு அரசு விலை நிர்ணயம் செய்வது குறித்தும்;

*24.* சிறுநல்லிக்கோயில் ஏரி, பள்ளம்பாளையம் ஏரி, இடும்பன்குளம் ஏரி மற்றும் வாழவந்தி ஏரி ஆகிய ஏரிகளைத் தூர்வாருவது குறித்தும்;

*25.* கபிலர் மலை ஒன்றியம் அருணகிரிமலையை சுற்றுலாத் தலமாக்குவது குறித்தும்;

*26.* வேலூர் அரசு மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் மற்றும் இரத்த வங்கி போன்ற வசதிகள் செய்வது குறித்தும்;

*27.* திருமணிமுத்தாறில் உள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றி, தூர்வாரி கரைகளை அகலப்படுத்துவது குறித்தும்;

*28.* மோகனூர், கபிலர்மலை, பரமத்தி ஆகிய இடங்களில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;



*2018 ஜனவரி 12*] [திரு. கே.எஸ். மூர்த்தி]

*29.* பரமத்தி–வேலூர் வட்டம், மணப்பள்ளி ஊராட்சியைப் பிரித்து தீத்தாம்பாளையத்தை தலைமையிடமாகக் கொண்டு ஊராட்சி அமைப்பது குறித்தும்;

*30.* மணப்பள்ளியில் காவேரியின் குறுக்கே தடுப்பணை அமைப்பது குறித்தும்;

*31.* மணப்பள்ளி, பாலப்பட்டி, பாண்டமங்கலம், பிலிகல்பாளையம், ஜேடர்பாளையம், சோளசிராமணி, மணியனூர் கந்தம்பாளையம், நடந்தை, வேலூர் காவேரிபாலம், மாணிக்கப்பாளையம் இளநகர், எளச்சிப்பாளையம் மற்றும் பொம்மம்பட்டி ஆகிய இடங்களில் உயர் கோபுர மின் விளக்குகள் அமைப்பது குறித்தும்;

*32.* பரமத்தி, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

*33.* பரமத்தி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

*34.* விவசாயிகளுக்கு விண்ணப்பித்த மூன்று மாத காலத்திற்குள் மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

*35.* பரமத்தி பேரூராட்சி பகுதிக்குட்பட்ட இடும்பன்குளத்தைத் தூர்வாரி கரைகளைப் பலப்படுத்துவது குறித்தும்;

*36.* கபிலர்மலை ஒன்றியம், ஜேடர்பாளையத்தில் தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

*37.* காவேரி ஆற்றின் குறுக்கே நஞ்சை இடையாருக்கு அருகிலும் களிமேடு அருகிலும் கதவணைத் தடுப்பணைகள் கட்டுவது குறித்தும்;

*38.* மேட்டூர் உபரிநீரை திருமணிமுத்தாறில் திருப்பி விடுவது குறித்தும்;

*39.* ராஜவாய்க்கால், பொய்யேரி வாய்க்கால், மோகனூர் வாய்க்கால் மற்றும் கொமராபாளையம் வாய்க்கால்களைச் சீரமைப்பது குறித்தும்;

[திரு. கே.எஸ். மூர்த்தி] *[2018 ஜனவரி 12*

*40.* மோகனூர் ஒன்றியம், குட்லாம்பாறை புதுப்பாளையத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

*41.* எளச்சிபாளையம் ஒன்றியம், மாவுருட்டிப்பட்டி மற்றும் பரமத்தி ஒன்றியம், கொண்டரசம்பாளையத்தில் புதிய கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைப்பது குறித்தும்;

*42.* கபிலர்மலை ஒன்றியம், பெருங்குறிச்சி, சுள்ளிப்பாளையம் குப்பிரிகாபாளையம் பகுதிகளுக்குக் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

*43.* கபிலர்மலை ஒன்றியம், சோளசிராமணி கதவணை மின் திட்டம் அருகில் பூங்கா அமைப்பது குறித்தும்;

*44.* பரமத்தி ஒன்றியம், கொண்டரசம்பாளையம் மற்றும் எளச்சிபாளையம் ஒன்றியம், பொம்மம்பட்டி கிளை நூலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

*45.* பரமத்தி ஒன்றியம் நல்லூர், குன்னமலை, ராமதேவம், மணியனூர், கோலாபுரம் ஆகிய கிராமங்களுக்குக் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:



*2018 ஜனவரி 12]* [திரு. எஸ். ஆஸ்டின்]

"*1.* கன்னியாகுமரி மாவட்டம், அழகிய பாண்டியபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவது குறித்தும்;

*2.* கோவளம் மீனவர் கிராமத்தில் சேதமடைந்த தூண்டில் வளைவை சீரமைப்பது குறித்தும்;

*3.* கன்னியாகுமரி பெரிய நாயகி தெருவில் புதிய தூண்டில் வளைவு அமைப்பது குறித்தும்;

*4.* பொழிக்கரை–பெரியகாடு கிராமங்கள் இணைப்புச் சாலை அமைப்பது குறித்தும்;

*5.* மணக்குடி சொத்தவிளை சாலை சீரமைப்பது குறித்தும்;

*6.* மேலகிருஷ்ணன் புதூர் சந்திப்பு முதல் கீழகிருஷ்ணன் புதூர் வரை செல்லும் ஆற்றங்கரை சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

*7.* தடிக்காரன் கோணம் ஊராட்சி புதுநகர்–பரணியாறு சாலையில் இருபுறமும் பக்க சுவர் அமைத்து சாலையை 4 அடி உயர்த்துவது குறித்தும்;

*8.* கீரிப்பாறை தொழிற்சாலை மற்றும் கீரிப்பாறை லேபர் காலனி செல்லும் பழுதடைந்த இரண்டு பாலங்களுக்கு பதிலாக இரண்டு தொங்கு பாலம் அமைப்பது குறித்தும்;

*9.* கடுக்கரை இரவிபுதூர் இடையே புதிய பாலம் அமைப்பது குறித்தும்;

*10.* சேதமடைந்துள்ள தெள்ளாந்தி பாலம் சீரமைப்பது குறித்தும்;

*11.* ஞாலம் ஊராட்சி, கொல்லன்விளாகம் பகுதியில் பழையாற்றில் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

*12.* மண்ணடி–காட்டுப்புதூர் இணைப்பு பாலத்தின் வடக்கு பாகத்தில் ஆற்றின் கரையோரம் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

[திரு. எஸ். ஆஸ்டின்] [2018 ஜனவரி 12

13. வீரநாராயண மங்கலம் முதல் தேரேகால்புதூர் சந்திப்பு ஓட்டாபீஸ் வரை தேராகால் கால்வாயில் இருபுறமும் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

14. இறைச்சக்குளம்–தாழக்குடி சாலையில் பழுதடைந்த தடுப்புச் சுவருக்குப் பதிலாக புதிய தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

15. வெள்ளமடம்–தாழக்குடி சாலையில் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

16. திருப்பதிசாரம் ஊராட்சி சண்முகாநகர் பகுதியில் மெயின் ரோடில் உள்ள கால்வாயில் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

17. தடிக்காரன்கோணம்–அருமநல்லூர் சாலையில் பழையாற்றின் குறுக்கே புதிய பாலம் அமைப்பது குறித்து;

18. ஆரல்வாய்மொழி பேரூராட்சி, குருசடி பகுதியில் வடக்கு பகுதி சாலைகளை உயர்த்தி புதிய சாலை அமைப்பது குறித்தும்;

19. மருங்கூர்–அமராவதி இணைப்புச் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

20. கோவளம் ஊராட்சி, சுனாமி காலனியில் இருந்து கடற்கரை வரை கழிவுநீர் ஓடை அமைப்பது குறித்தும்;

21. லீபுரம் ஊராட்சி, ஆரோக்கியபுரம் கடற்கரை பகுதியில் மணல் அரித்த இடங்களைச் சீரமைப்பது குறித்தும்;

22. தேரூர் பேரூராட்சி, உதிரப்பட்டியிலிருந்து சோழன் திட்டை அணை வரை புதிய சாலை அமைப்பது குறித்தும்;

23. சுசீந்திரம் பேரூராட்சி, அக்கரை–குத்துக்கல் சாலையில் உள்ள கால்வாய்க்கு 4 அடி உயரத்திற்கு தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

24. அஞ்சுகிராமம் பேரூராட்சி, புதுக்குளத்திலிருந்து ஊருக்குனி செல்லும் கால்வாயைச் சீரமைப்பது குறித்தும்.



2018 ஜனவரி 12] [திரு. எஸ். ஆஸ்டின்]

25. சுசீந்திரம் பேரூராட்சி, அக்கரை–குத்துக்கல் சாலையில் உள்ள கால்வாயில் உள்ள மணல் மேடுகளை அகற்றி கால்வாயைத் தூர்வாருவது குறித்தும்;

26. புத்தளம் பேரூராட்சி, அரிய பெருமாள் விளை காலனியில் கடலுக்கு தண்ணீர் செல்லும் கால்வாயைச் சீரமைத்து தடுப்புச் சுவர் கட்டுவது குறித்தும்;

27. தெங்கம்புதூர் பேரூராட்சி, குளத்துவிளை பகுதியில் உள்ள சாலையை உயர்த்தி ஓடை அமைப்பது குறித்தும்;

28. பள்ளம் ஊராட்சி, கே.எஸ்.எஸ். காலனியில் தேங்கும் கழிவுநீரை மாற்றும் வகையில் கடற்கரை வரை ஓடை அமைப்பது குறித்தும்;

29. பள்ளம் ஊராட்சி, லூர்து காலனியில் இருந்து கடலுக்கு கழிவுநீர் செல்லும் கால்வாயை சீரமைப்பது குறித்தும்;

30. மருங்கூர்–இரவிபுதூர் இணைப்புப் பாலம் அமைப்பது குறித்தும்;

31. குலசேகரபுரம் ஊராட்சி, துலுக்கண்குளம் வடக்குப் பகுதியில் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

32. கோவளம் ஊராட்சி, ஏழுச்சாட்டு பத்து கிராமத்தில் சமுதாய நலக்கூடம் அமைப்பது குறித்தும்;

33. இராமபுரம் ஊராட்சி, சமத்துவப்புரம் பகுதிக்கு வெள்ளமடம்–தேரூர் சாலையில் இருந்து இணைப்பு பாலம் அமைப்பது குறித்தும்;

34. தர்மபுரம் ஊராட்சி, கொழக்கால் காலனியில் சமுதாய நலக்கூடம் அமைப்பது குறித்தும்;

35. அஞ்சுகிராமம் பேரூராட்சி, மேட்டு குடியிருப்பு–இரத்தினபுரம் கடற்கரை பகுதியை சுற்றுலாத் தலமாக மாற்றுவது குறித்தும்;

36. அஞ்சுகிராமம் பேரூராட்சி, காணிமடம் பகுதியில் கபடி மைதானத்துடன்கூடிய உள்விளையாட்டு அரங்கம் அமைப்பது குறித்தும்;

[திரு. எஸ். ஆஸ்டின்] [2018 ஜனவரி 12

37. அஞ்சுகிராமம் பேரூராட்சி, வாரியூர் – மேட்டு குடியிருப்பு சாலையில் இருந்து ஸ்லிம் ஓடை முதல் நான்கு வழிச் சாலை வரை இணைப்புச் சாலை அமைப்பது குறித்தும்;

38. அழகியபாண்டிபுரம் பேரூராட்சி, பிளவக்கல் மற்றும் மயிலாடி பேரூராட்சி, பெருமாள்புரத்தில் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைப்பது குறித்தும்;

39. சுசீந்திரம் பேரூராட்சி மற்றும் கோவளம் ஊராட்சி நடுத்தெருவில், ஆஞ்சநேயர் நகரில், 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைப்பது குறித்தும்;

40. தேரூர் பேரூராட்சி, உதிரப்பட்டி, பாலகிருஷ்ணன் புதூர், இந்திரா காலனி ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

41. கரும்பாட்டூர் ஊராட்சி, மேல்நிலைத் தொட்டியில் இருந்து 1000 மீட்டர் 2 1/2” பைப் லைன் அமைத்து குடிநீர் வழங்குவது குறித்தும்;

42. நல்லூர் ஊராட்சி, நல்லூர் பகுதி மற்றும் தர்மபுரம் ஊராட்சி, வெள்ளாளர் விளையில் 60000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைப்பது குறித்தும்;

43. இராமபுரம் ஊராட்சி, ஆதலவிளை வடக்கு தெருவில் 60000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து 200 மீட்டர் பைப் லைன் அமைப்பது குறித்தும்;

44. தடிக்காரன்கோணம் ஊராட்சி, கீரிப்பாறை சப்பாத்தில் திறந்த வெளி கிணறு அமைத்து தடிக்காரன்கோணம் மேல்நிலைத் தொட்டிக்கு குடிநீர் கொண்டு செல்வது குறித்தும்;

45. தெரிசனங்கோப்பில் உறை கிணறு அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. எஸ். ஆஸ்டின்]

46. தெள்ளாந்தி ஊராட்சி, முடங்கண்விளை பாலம் அருகில் சிறு தடுப்பணை அமைப்பது குறித்தும்;

47. நாகர்கோவில் நகராட்சி, 12–வது வார்டில், சபையர் குளம் பகுதியில் மற்றும் 21–வது வார்டு வண்டல் தெருவில் புதிய மேல்நிலை தொட்டிகள் அமைப்பது குறித்தும்;

48. தர்மபுரம் ஊராட்சி, ஸ்ரீபுதுமால் சுவாமி கோவில் அருகில் அத்திக் கடை கால்வாயில் தென்புறம் மங்காவிளை வரை உள்ள இணைப்புச் சாலையை விரிவுப்படுத்தி சீரமைப்பது குறித்தும்;

49. ஆரல்வாய்மொழி பேரூராட்சி, குமாரபுரம் கிராமத்தில் மற்றும் தர்மபுரம் ஊராட்சி, கல்லவீரியன் விளை கிராமத்தில் சமுதாய நலக்கூடங்கள் அமைப்பது குறித்தும்;

50. தர்மபுரம் ஊராட்சி, பிலாவிளை கிராமத்தில் புதிதாகக் குளம் அமைப்பது குறித்தும்;

51. பள்ளம் ஊராட்சி, பள்ளம் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

[திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்] [*2018 ஜனவரி 12*

"1. எழும்பூர் தொகுதியில் உள்ள பழமையான குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டுவது குறித்தும்;

2. எழும்பூர் தொகுதி, 104–வது வார்டில் உள்ள திடீர் நகர் குடிசைப் பகுதியில் வசிக்கும் மக்களுக்குப் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவது குறித்தும்;

3. எழும்பூர் தொகுதியில் 77–வது வார்டில் கே.பி. பார்க்கில் புதிய குடியிருப்புகள் கட்டுவது குறித்தும்;

4. எழும்பூர் தொகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் குடிநீர் மற்றும் கழிவுநீர்க் குழாய்களை மாற்றுவது குறித்தும்;

5. எழும்பூர் தொகுதியில் வர்தா புயலால் சேதமடைந்த பூங்காங்களைச் சீரமைப்பது குறித்தும்;

6. எழும்பூர் தொகுதியில் 61–வது வார்டில் பழைய கண் மருத்துவமனையிலிருந்து புதிய கண் மருத்துவமனைக்குச் செல்வதற்கு சாய்தளத்துடன்கூடிய நடை மேம்பாலம் கட்டுவது குறித்தும்;

7. எழும்பூர் இரயில் நிலையத்திலிருந்து எதிர்புறம் செல்ல சாய்தளத்துடன்கூடிய நடை மேம்பாலம் கட்டுவது குறித்தும்;

8. எழும்பூர் தொகுதியில் அனைத்து வார்டுகளிலும் மாநகராட்சிக்கு புதிய பணியாளர்கள் நியமித்து, குப்பை அள்ளும் வாகனம் வழங்குவது குறித்தும்;

9. எழும்பூர் தொகுதியில் காவலர்கள் குடியிருப்புகளைப் பராமரித்து, புதிய தார்ச் சாலை, தெரு மின் விளக்குகள் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் அமைப்பது குறித்தும்;

10. எழும்பூர் தொகுதியில் நேவல் மருத்துவமனை, பூபதி நகர், குமாரசாமி ராஜாபுரம் மற்றும் கார்ப்பரேசன் லைன், சாஸ்திரி எம்.எஸ். நகர் மற்றும் ஜெகநாதபுரம் ஆகிய பகுதிகளில் வசிப்போருக்குப் பட்டா வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."



*2018 ஜனவரி 12*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

**திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. திரு.வி.க. நகர் தொகுதி, 70–வது வட்டம், குமாரசாமி–பெரம்பூர் நெடுஞ்சாலையில் புதிய பம்பிங் ஸ்டேஷன் அமைப்பது குறித்தும்;

2. திரு.வி.க. நகர் தொகுதி, காந்தி பூங்கா பின்புறம் உள்ள விளையாட்டுத் திடலை மேம்படுத்துவது குறித்தும்;

3. திரு.வி.க. நகர் தொகுதியில் அருந்ததியின மக்களுக்கு மேட்டுப்பாளையம் பகுதியில் புதிய குடியிருப்புகள் கட்டுவது குறித்தும்;

4. திரு.வி.க. நகர் தொகுதியில் தோல் கழிவுகளை அகற்றி, கழிப்பிடம் மற்றும் மழை நீர் வடிகால்வாய் அமைப்பது குறித்தும்;

5. பெரம்பூர் பாலம் அருகில் புதிய இறகுப்பந்து விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

6. திரு.வி.க. நகர் தொகுதி, 71–வது வட்டம், ஏகாங்கிபுரம் கால்வாயினைத் தூர்வாரி, மதில் சுவர் கட்டுவது குறித்தும்;

7. திரு.வி.க. நகர் தொகுதி, சந்திரயோகி சமாதி தெருவில் நவீன உடற்பயிற்சிக் கூடம் கட்டுவது குறித்தும்;

[திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி] [2018 ஜனவரி 12

8. திரு.வி.க. நகர் தொகுதியில் அனைத்து வட்டங்களிலும் உள்ள நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

9. நாச்சாரம்மன் கோயில் தெருவில் புதிய சமூக நலக்கூடம் மற்றும் மழை நீர் வடிகால்வாய் அமைப்பது குறித்தும்;

10. திரு.வி.க. நகர் தொகுதி, 74–வது வட்டம், சத்தியவாணி முத்து நகர் பகுதியில் உள்ள அனைத்து தெருக்களுக்கும் புதிய தார்ச் சாலைகள் அமைப்பது குறித்தும்;

11. திரு.வி.க. நகர் தொகுதி, வெங்கடம்மாள் சமாதி தெருவில் புதிய உடற்பயிற்சிக் கூடம் அமைப்பது குறித்தும்;

12. திரு.வி.க. நகர் தொகுதி, செல்லப்பா தெரு, வள்ளுவன் தெரு, பிரிக்ளின் ரோடு மற்றும் தேவிபவானியம்மன் தெருவிற்கு புதிய குடிநீர் இணைப்பு மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைப்பது குறித்தும்;

13. திரு.வி.க. நகர் தொகுதியில் புதிய அரசு கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.

**திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.

**திரு. ப. கார்த்திகேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:



2018 ஜனவரி 12] [திரு. ப. கார்த்திகேயன்]

"1. வேலூர் தொகுதியிலுள்ள புதிய பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்வது குறித்தும்;

2. வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை அருகில் சுரங்க நடைபாதை அமைப்பது குறித்தும்;

3. வேலூர் தொகுதியில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு விளையாட்டு அரங்கம் அமைப்பது குறித்தும்;

4. வேலூர் மாநகரின் அரசு பொது மருத்துவமனையை முழுமையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

5. வேலூர் மாநகரின் சின்ன அல்லாபுரத்திலுள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

6. வேலூர் மாநகரத்தில் நேஷனல் திரையரங்கம் (பச்சையப்பாஸ் சில்க் ஹவுஸ்) முதல் மண்டபத்தெரு வரை மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

7. வேலூர் மாநகரத்திலுள்ள அரசு அண்ணா கலையரங்கத்தைப் புதுப்பிப்பது குறித்தும்;

8. வேலூர் மாநகரத்தில் முதியோர் உதவித் தொகை தொடர்ந்து வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

[திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி] [2018 ஜனவரி 12

"1. திருவெறும்பூரில் திருச்சி பால் பண்ணை முதல் துவாக்குடி வரை அணுகு சாலை (Service Road) அமைப்பது குறித்தும்;

2. திருவெறும்பூரில் அரசு மகளிர் பொறியியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

3. திருவெறும்பூர் தொகுதியில் உள்ள ஒன்றியப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் சீரமைப்பது குறித்தும்;

4. திருவெறும்பூர் வட்டத்தில் நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

5. திருவெறும்பூரில் உள்ள வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகத்தை வட்டார போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

6. திருவெறும்பூர் தொகுதியில் விடுபட்ட பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

7. திருவெறும்பூர் உட்பட திருச்சி மாநகராட்சியோடு புதியதாக இணைக்கப்பட்டுள்ள 5—வது வார்டு பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு திட்ட அனுமதி வழங்கப்பட வேண்டியது குறித்தும்;

8. திருவெறும்பூர் தொகுதியில் சுகாதார மேம்பாடு செய்வது குறித்தும்;

9. திருவெறும்பூர் தொகுதியின் புறநகர் பகுதிகளில் பேருந்து வசதி அல்லது சிற்றுந்து வசதி (Mini Bus) செய்வது குறித்தும்;

10. திருவெறும்பூர் தொகுதியில் குடிநீர் வசதிகளை அதிகரிப்பது குறித்தும்;

11. திருவெறும்பூர் தொகுதி, அரியமங்கலம் குப்பைக் கிடங்கை வேறு இடத்திற்கு மாற்றுவது குறித்தும்;

12 திருவெறும்பூர் தொகுதி, நவல்பட்டு ஊராட்சி, கும்பக்குடி ஊராட்சி, அண்ணாநகர், பேஸ் 1, பேஸ் 2 பகுதியில் உள்ள பாதாளச் சாக்கடையைச் சீரமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி]

13 திருவெறும்பூர் தொகுதி BHEL கணேசா ரவுண்டானாவில் தொடர்ந்து விபத்துகள் ஏற்படுவதால் அதனை அகற்றுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. போளூர் தொகுதி, பெரணமல்லூர் ஒன்றியம், விநாயகபுரம்—பெரிய கொழப்பலூர் சாலையில் செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

2. போளூரில் நெடுஞ்சாலைத் துறைக்கு புதியதாக சுற்றுலா விடுதி கட்டித் தருவது குறித்தும்;

3. மாநிலம் முழுவதும் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்தும்;

4. தமிழகத்தில் பெரும்பாலான விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டம் வழங்குவது குறித்தும்;

5. போளூர் தொகுதிக்குட்பட்ட நீர் நிலைகளில் வரத்துக் கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வாருவது குறித்தும்;

6. போளூர் நகரில் உள்ள இரண்டு அரசு மருத்துவமனைகளையும் ஒரே இடத்திற்கு மாற்றுவது குறித்தும்;

7. போளூர் நகரில் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

8. போளூர் தொகுதி, சேத்துப்பட்டு நகரில் புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

9. போளூர் நகரம் மற்றும் போளூர் ஒன்றியத்திற்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும்;

10. போளூர் தொகுதி, போளூர் ஒன்றியம், சந்தவாசல் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

11. போளூர் தொகுதி, பெரணமல்லூர் ஒன்றியம், பெரிய கொழப்பலூர் ஊராட்சியில் உள்ள பழுதடைந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

12. போளூர் தொகுதி, நெடுங்குளம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீராமச்சந்திரப் பெருமாள் கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு செய்வது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன் அவர்கள்.

**திரு. சௌ. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.

**திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:





“1. திருநெல்வேலி தொகுதியில் தாமிரபரணி ஆற்றை தூய்மைப்படுத்துவது குறித்தும்;

2. திருநெல்வேலி தொகுதி, மானூர் ஒன்றியத்தில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

3. திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலி நகரில் புறநகர் பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

4. திருநெல்வேலி தொகுதி, கண்டியப்பேரி அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்துவது குறித்தும்;

5. திருநெல்வேலி தொகுதி, மானூர் ஒன்றியத்தில் வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பது குறித்தும்;

6. திருநெல்வேலி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தோர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்தும்;

7. திருநெல்வேலி மாநகராட்சி வார்டு விரிவாக்கம் செய்வது குறித்தும்;

8. திருநெல்வேலி–தென்காசி செல்லும் நெடுஞ்சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.

**திரு. எ. ராமர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள்.

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

[திரு. பி.என்.பி. இன்பசேகரன்] [*2018 ஜனவரி 12*

"1. காவேரியாற்றின் குறுக்கே பண்ணைவாடி–கோட்டையூரில் மேம்பாலம் கட்டுவது குறித்தும்;

2. ஏரியூரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்தும்;

3. பெண்ணாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் போதிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி உயர் சிகிச்சைக்கான மருத்துவக் கருவிகளை நிறுவி தேவையான மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் நியமிப்பது குறித்தும்;

4. பெண்ணாகரம் ஒன்றியம், கலப்பம்பாடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

5. வட்டுவனஅள்ளி ஊராட்சியில் பவளத்தூர், பேகாரஅள்ளி ஊராட்சியில் பேகாரஅள்ளி, மஞ்சநாயக்கன்அள்ளி ஊராட்சியில் சின்னகடமடை ஆகிய இடங்களில் புதிய கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

6. சின்னாறு உபரி நீரை ஜெர்த்தலாவ் ஏரியில் இருந்து வாய்க்கால்மூலம் புலிக்கரை ஏரி மற்றும் சுற்றியுள்ள ஏரிகளில் நிரப்பி பாசன வசதிகள் செய்வது குறித்தும்;

7. சின்னாற்றின் குறுக்கே புதிய தடுப்பணைக் கட்டி செங்கன்பசுவந்தலாவ் கால்வாய் வழியாக இணைத்து பாலக்கோடு, பெண்ணாகரம் வட்டங்களில் உள்ள ஏரிகளில் நிரப்பி பாசன வசதி செய்வது குறித்தும்;

8. பெண்ணாகரம் வட்டத்தில் சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும்;

9. ஒகேனக்கல் நீர்மின் திட்டம் துவங்குவது குறித்தும்;

10. பாப்பாரப்பட்டி பகுதியில் குளிர்பதன புளி கிடங்கு துவங்குவது குறித்தும்;

11. பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் உழவர் சந்தை அமைப்பது குறித்தும்;



*2018 ஜனவரி 12*] [திரு. பி.என்.பி. இன்பசேகரன்]

12. பாப்பாரப்பட்டியில் 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

13. பில்லப்பநாய்க்கனஅள்ளி முதல் போயர் காலனி வரை உள்ள சாலையைத் தார்ச் சாலையாக அமைப்பது குறித்தும்;

14. பெண்ணாகரம் முதல் கர்நாடக மாநிலம் கனகபுராவுக்கு போடூர், அஞ்செட்டி வழியாக வனத் துறை மூலமாக சாலை அமைத்து போக்குவரத்து ஏற்படுத்துவது குறித்தும்;

15. பெண்ணாகரம் மற்றும் பாப்பாரப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் பழுதடைந்த சாலைகளை மீண்டும் புதிய சாலைகளாக அமைப்பது குறித்தும்;

16. அஜ்ஜனஹள்ளி ஊராட்சி, மூங்கில் மடுவு முதல் தொண்ணகுட்டஅள்ளி ஊராட்சி சாம்பள்ளி வரை தார்ச் சாலை அமைப்பது குறித்தும்;

17. தொண்ணகுட்டஅள்ளி முதல் சாமத்தாள் வரை வனத் துறை மூலமாக தார்ச் சாலை அமைப்பது குறித்தும்;

18. பிக்கிலி ஊராட்சி, மலையூர் முதல் புதுக்கரம்பு வரை வனத் துறை மூலமாக சாலை அமைப்பது குறித்தும்;

19. ஒகேனக்கல் சுற்றுலா தலத்தில் Rope Car வசதி அமைப்பது குறித்தும்;

20. பாப்பாரப்பட்டி மற்றும் பெண்ணாகரம் பேரூராட்சிகளில் புதியதாக 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

21. குறும்பர், குறிச்சான் இன மக்களுக்கு S.T. சாதிச் சான்று வழங்குவது குறித்தும்;

22. கோட்டூர் மலை, ஏரிமலை பகுதிகளுக்கு சாலை அமைப்பது குறித்தும்;

23. சின்னப்பநல்லூர் மற்றும் நாகனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

[திரு. பி.என்.பி. இன்பசேகரன்] [*2018 ஜனவரி 12*

24. பெண்ணாகரம் தொகுதியில் புதியதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் இணைப்பு வழங்குவது குறித்தும்;

25. பெண்ணாகரம் ஏரியூர் மாநில நெடுஞ்சாலைப் பிரிவிலிருந்து ஒரப்பாச்சியூர் வழியாக சிகரலஅள்ளி செல்லும் கப்பிச் சாலையை தார்ச் சாலைகளாக அமைப்பது குறித்தும்;

26. சுஞ்சல்நத்தம் ஊராட்சி, கூர்க்காம்பட்டி அணைக்கு செல்லும் கப்பிச் சாலையை தார்ச் சாலையாக அமைப்பது குறித்தும்;

27. கிருஷ்ணகிரி முதல் ஒகேனக்கல் வரை காரிமங்கலம், பேகாரஅள்ளி, பட்டகப்பட்டி, காட்டம்பட்டி, பாப்பாரப்பட்டி வழியாக இயக்குவது குறித்தும்;

28. கெண்டையனஹள்ளி ஊராட்சி, வெள்ளம்மண்காடுக்கு பேருந்து இயக்குவது குறித்தும்;

29. ஒகேனக்கல் சுற்றுலா தலத்தில் ஈமச்சடங்கு செய்யும் இடத்தில் பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;

30. ஏரியூரில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

31. ஏரியூரில் புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்தும்;

32. மூங்கில்மடுவு முதல் தொண்ணகுட்டஅள்ளி ஊராட்சி, சாம்பள்ளி காலனி வரை உள்ள சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுவது குறித்தும்;

33. ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்தில் சமையலர்களுக்கு சமையல் கூடம் கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”



*2018 ஜனவரி 12*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

**திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

**திருமதி ம. வரலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. செங்கல்பட்டு நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

2. செங்கல்பட்டு நகராட்சியில் தினந்தோறும் பாலாற்று குடிநீர் மக்களுக்கு வழங்குவது குறித்தும்;

3. செங்கல்பட்டு நகருக்குள் இருக்கும் பேருந்து பணிமனையை நகருக்கு வெளியே அமைப்பது குறித்தும்;

4. சென்னையிலிருந்து செங்கல்பட்டு வழியாக நான்கு வழிச்சாலையில் செல்லும் பாலத்திற்குக்கீழ் பேருந்து நிறுத்தம் அமைப்பது குறித்தும்;

5. செங்கல்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு ஒரு வார காலத்திற்குள் தீர்வு காண்பது குறித்தும்;

6. செங்கல்பட்டு தொகுதியில் உள்ள பொதுமக்களுக்கு ஸ்மார்ட் கார்டு குடும்ப அட்டைகள் விரைந்து வழங்குவது குறித்தும்;

7. செங்கல்பட்டு தொகுதியில் உள்ள முதியோர்கள் அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை வழங்குவது குறித்தும்;

8. செங்கல்பட்டு தொகுதி, குண்ணவாக்கம், அஞ்சூர், கீரப்பாக்கம் ஊராட்சிகளில் உள்ள மேய்க்கால், கல்லாங்குத்து பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்கு புதிய மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

9. செங்கல்பட்டு தொகுதியில் உள்ள கொளவாய் ஏரியைத் தூர்வாருவது குறித்தும்;

10. செங்கல்பட்டு தொகுதி, தென்மேல்பாக்கம், அஞ்சூர், குண்ணவாக்கம், வீராபுரம் ஊராட்சிகளில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், கொளவாய் ஏரியில் கலப்பதைத் தடுப்பது குறித்தும்;

11. மறைமலைநகர் இரயில் நிலையம் எதிரில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து சிக்னல் அமைப்பது குறித்தும்;

12. கூடுவாஞ்சேரி–மறைமலைநகர் தேசிய நெடுஞ்சாலையில் நடைமேம்பாலம் அமைப்பது குறித்தும்;

13. செங்கல்பட்டு தொகுதியில் ரோந்து காவலர்களைக் கூடுதலாக நியமிப்பது குறித்தும்;

14. செங்கல்பட்டு பழவேலி–மாமண்டூர் இடையே உள்ள பாலாற்றில் தடுப்பணைக் கட்டி குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்துவது குறித்தும்;

15. செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்திலிருந்து இரயில் நிலையம் செல்ல நடைமேம்பாலம் அமைப்பது குறித்தும்;

16. மறைமலைநகர் நகராட்சி பகுதியிலுள்ள தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவுநீர் நின்னகரை ஏரியில் கலப்பதைத் தடுப்பது குறித்தும்;

17. கல்வாய், குமிழி, நல்லம்பாக்கம், வேங்கடமங்கலம், ஒத்திவாக்கம், கீரப்பாக்கம், வீராபுரம் ஆகிய பகுதிகளில் புதியதாக தார்ச் சாலை அமைக்க வனத் துறை தடையில்லா சான்று வழங்குவது குறித்தும்;



18. கூடுவாஞ்சேரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை நவீன வசதிகளுடன்கூடிய அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

19. கூடுவாஞ்சேரி முதல் வண்டலூர் வரை தேசிய நெடுஞ் சாலையில் பறக்கும் பாலம் அமைப்பது குறித்தும்;

20. சிங்கபெருமாள்கோவில்–ஒரகடம் நெடுஞ்சாலை விரிவாக்கத் திட்டத்தில் சிங்கபெருமாள்கோவில் நான்கு வழிச்சாலையில் பாலம் அமைப்பது குறித்தும்;

21. நெடுஞ்சாலைகள் விரிவாக்கம் மற்றும் பாலங்கள் கட்டும்போது பாதிக்கப்படும் மக்களுக்கு மாற்று நிலம் வழங்குவது குறித்தும்;

22. செங்கல்பட்டு தொகுதி, ஊரப்பாக்கத்தில் குடிசை மாற்று வாரியத்தால் வழங்கப்பட்ட வீடுகளுக்கு விற்பனை பத்திரம் வழங்குவது குறித்தும்;

23. செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்கள், மருந்தாளுநர்கள், செவிலியர்கள், துப்புரவு பணியாளர்களை நியமிப்பது குறித்தும்;

24. செங்கல்பட்டு மருத்துவமனையை சூப்பர் ஸ்பெசாலிட்டி மருத்துவமனையாக மாற்றுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

**டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

**திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

[திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்] [2018 ஜனவரி 12

"1. நத்தம் தொகுதியில் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும்;

2. லிங்கவாடி மலையூர் கிராமத்திற்கு வனத் துறையின்மூலம் சாலை வசதி அமைப்பது குறித்தும்;

3. சேத்தூர் மற்றும் குட்டுபட்டி ஆகிய ஊராட்சிகளுக்குட்பட்ட சின்னமலையூர், வலசு, பெரியமலையூர் ஆகிய கிராமங்களுக்கு வனத் துறைமூலம் சாலை அமைப்பது குறித்தும்;

4. அழகர் மலையில் உள்ள பழமுதிர்சோலை முருகன் கோயிலுக்கு செல்லப்பநாயக்கன்பட்டி ஊராட்சி, பட்டணம்பட்டியிலிருந்து சாலை வசதி அமைப்பது குறித்தும்;

5. நத்தம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

6. காட்டுப் பெரியகுளம் வரத்து வாய்க்காலைத் தூர்வாரி தடுப்பணைக் கட்டுவது குறித்தும்;

7. பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து அலங்காநல்லூர் பாலமேடு, வெள்ளாளப்பட்டி, வளையப்பட்டி வழியாக பெரியமுளையூர் வரை நகரப் பேருந்து இயக்குவது குறித்தும்;

8. திண்டுக்கல்லிலிருந்து சாணார்பட்டி, கோபால்பட்டி, ஒத்தக்கடை வழியாக சின்னமுளையூர் வரை நகரப் பேருந்து இயக்குவது குறித்தும்;

9. நத்தத்திலிருந்து செந்துறை வழியாக கோட்டைப்பட்டி வரை செல்லும் நகரப் பேருந்தை பிள்ளையார் நத்தம் வரை இயக்குவது குறித்தும்;

10. திண்டுக்கல்லிலிருந்து மலைக்கேணி வழியாக வல்லம்பட்டி வரை செல்லும் நகரப் பேருந்தை வலசு வரை இயக்குவது குறித்தும்;

11. மதுரை மாட்டுத் தாவணியிலிருந்து கடச்சனேந்தல் வழியாக ஊமச்சி குளம், சத்திரப்பட்டி, பரளி, நத்தம் வரை நகரப் பேருந்து இயக்குவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்]

12. வெள்ளோடு ஊராட்சியில் அய்யனார் நீர்த் தேக்கத்தைத் தூர்வாருவது குறித்தும்;

13. நத்தம் தொகுதியில் விவசாயிகளின் விளைப்பொருட்களைச் சேமிப்பதற்கு குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

14. நத்தம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும்;

15. நத்தம் தொகுதி, நத்தம் பேரூராட்சிக்குட்பட்ட நல்லாகுளம் கரை மற்றும் செட்டியார்குளம் கம்மாகரை ஆகிய பகுதிகளில் வசிப்போருக்குக் குடிசைமாற்று வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டுவது குறித்தும்;

16. ஊராளிபட்டி ஊராட்சி, பூலான்குளம் கம்மாயிலிருந்து வரத்து வாய்க்கால் கல்கட்டி புதுக்குளம் சென்று சமுத்திராபட்டி திருமணிமுத்தாறு பிரியும் வரத்து வாய்க்கால் ராஜநேரி வரை தூர்வாருவது குறித்தும்;

17. பண்ணுவார்பட்டி ஊராட்சி, பெரியகுளம் கண்மாயை ஆழப்படுத்தி வரத்து வாய்க்கால் தூர்வாருவது குறித்தும்;

18. சாத்தாம்பட்டி ஊராட்சி, சையதுமீரான் ராவுத்தர் கண்மாயை ஆழப்படுத்தி தூர்வாருவது குறித்தும்;

19. நத்தம் தொகுதி, அழகர்மலையில் சின்னருவி மற்றும் ஈலுவன் கொடை ஆகிய பகுதிகளில் அணைகள் கட்டுவது குறித்தும்;

20. நத்தம் தொகுதி, நத்தம் அரசு பொது மருத்துவமனையில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு பொதுக் கழிப்பறை அமைத்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவது குறித்தும்;

21. ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகளில் நீராவி கொதிகலன், சூரிய சக்தி மின்சாரம் மற்றும் துணிதுவைக்கும் இயந்திரம் பொருத்துவது குறித்தும்;

22. நத்தம் தொகுதி, நத்தத்தில் அரசு பொது மருத்துவமனையை 200 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

[திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்] [*2018 ஜனவரி 12*

23. சாணார்பட்டி ஊராட்சி, கோணப்பட்டியிலிருந்து சிறுமலைக்கு வனத் துறைமூலம் சாலை அமைப்பது குறித்தும்;

24. நத்தம் தொகுதி, சாத்தம்பாடி ஊராட்சி, விளாம்பட்டியிலிருந்து செல்லப்ப நாயக்கன்பட்டி ஊராட்சி, மூங்கில்பட்டி, பட்டிணம்பட்டி வரை மற்றும் விளாம்பட்டியிலிருந்து பள்ளிவாசல் வரை இணைப்புச் சாலை அமைப்பது குறித்தும்;

25. நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், திம்மணநல்லூர் ஊராட்சி, ஜோத்தாம்பட்டி வழி வனச் சாலை வரை புதிய சாலை அமைப்பது குறித்தும்;

26. நத்தம் தொகுதி, செங்குறிச்சி ஊராட்சி, ஆழம்பட்டியிலிருந்து எல்லைக்காட்டுப்பட்டி வழியாக புதுப்பட்டிவரை மற்றும் மாமரத்துப்பட்டி முதல் வலசுபட்டி வரை புதிய சாலை அமைப்பது குறித்தும்;

27. நத்தம் தொகுதி, இராகலாபுரம் ஊராட்சி, மஞ்சநாயக்கன்பட்டி முதல் காமார்பட்டி வரை மற்றும் தோட்டனூத்து ஊராட்சி RMTC நகர் முதல் வினாயகர் கோயில் வரை சாலை அமைப்பது குறித்தும்;

28. நத்தம் தொகுதி, கம்பிளியம்பட்டி ஊராட்சி, கம்பிளியம்பட்டியிலிருந்து ஊத்தம்பட்டி வழியாக வி.எஸ். கோட்டை வரை மற்றும் திருமலைக்கேணி விரிவு முதல் கருப்புக்கோவில்பட்டி வரை புதிய சாலை அமைப்பது குறித்தும்;

29. நத்தம் தொகுதி, வெள்ளோடு ஊராட்சி, கல்லுப்பபடி முதல் மூர்த்தி நாயக்கன்பட்டி மற்றும் வெள்ளோடு ஊர் முதல் சிறுநாயக்கன்பட்டி கண்மாய்கரை வரை சாலை அமைப்பது குறித்தும்;

30. நத்தம் தொகுதி, வீரசின்னபட்டி முதல் கோட்டைப்பட்டி வழியாக மருனூத்து சாலை வரை புதிய சாலை அமைப்பது குறித்தும்;



*2018 ஜனவரி 12*] [திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்]

31. நத்தம் தொகுதி, வத்திபட்டியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி, சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

32. நத்தம் தொகுதி, சமுத்திராப்பட்டி ஊராட்சி, சமுத்திராப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

33. நத்தம் தொகுதி, செந்துரை ஊராட்சி, களத்துப்பட்டி முடிமலை ஆற்றின் குறுக்கே அணை அமைப்பது குறித்தும்;

34. நத்தம் தொகுதி, சிறுமலை, கரந்தமலை, அழகர்மலை ஆகிய பகுதிகளில் மூலிகைப் பூங்கா அமைப்பது குறித்தும்;

35. கரந்தமலை, லிங்கவாடி மற்றும் மலையூர் கிராமங்களில் உள்ள விவசாயக் கிணறுகளுக்கு சோலார் விளக்கு மானியத்தில் வழங்குவது குறித்தும்;

36. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மதுரை தேசிய நெடுஞ் சாலையை தாமரைபாடியிலிருந்து தோட்டநூத்து நத்தம் சாலை குறுக்கிட்டு காந்தி கிராமம்–மதுரை சாலை வரை புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

37. மதுரையிலிருந்து நத்தம் குட்டுப்பட்டி வழியாக ராணிமங்கம்மாள் சாலையில் துவரங்குறிச்சி வழியாக சென்னைக்கு அரசு பேருந்துகள் மற்றும் வாகனங்கள் இயக்க சாலைகளை விரிவுபடுத்துவது குறித்தும்;

38. ரெட்டியபட்டி ஊராட்சி, காசம்பட்டி அழகர்மலை ஓடையில் தடுப்பணை அமைப்பது குறித்தும்;

39. ஊராளிபட்டி ஊராட்சி, ஊராளிபட்டி சம்பையாற்றில் ரெங்கநாதபிள்ளை குளத்திற்கு கீழ்புறம் தடுப்பணை அமைப்பது குறித்தும்;

40. முளையூர் ஊராட்சி, முளையூர் திருமணிமுத்தாற்றில் தடுப்பணை அமைப்பது குறித்தும்;

41. புன்னப்பட்டி ஊராட்சி, புன்னப்பட்டி திருமணிமுத்தாற்றில் காட்டு பெரியகுளத்திற்கு தண்ணீர் வருவதற்கு ஏதுவாக திருமணி முத்தாற்றில் தடுப்பணை அமைப்பது குறித்தும்;

[திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்] [2018 ஜனவரி 12

42. சிரங்காட்டுப்பட்டி ஊராட்சி, சிரங்காட்டுப்பட்டி பாலாற்றில் தடுப்பணை அமைப்பது குறித்தும்;

43. சிரங்காட்டுப்பட்டி ஊராட்சி, சிரங்காட்டுப்பட்டி காட்டாற்றில் தடுப்பணை அமைப்பது குறித்தும்;

44. திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தொகுதியில் வட்டாட்சியர் அலுவலக வளாகத்திற்குள் தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

45. நத்தம் தொகுதியில் சுற்றுச் சுவர் இல்லாத ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

46. நத்தம் தொகுதி, சேத்தூர் ஊராட்சி, கணவாய்ப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் பழமையான கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

47. நத்தம் தொகுதி, நத்தம் செல்லப்பநாயக்கன்பட்டி ஊராட்சி, மேலமேட்டுப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் அருகில் கழிவுநீர் வாய்க்காலைச் சீரமைப்பது குறித்தும்;

48. நத்தம் தொகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகளில் மேற்கூரை, கதவுகள், ஜன்னல்கள், சுற்றுச் சுவர், தரைத்தளம், கழிப்பறைகள் உள்ளிட்ட பழுதடைந்த நிலையிலுள்ள கட்டடங்கள் சீரமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.

**திரு. ப. ஆடலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.



2018 ஜனவரி 12]

**திரு. ப. ஆடலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. திருத்துறைப்பூண்டி நகரத்தில் புறவழிச் சாலை திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவது குறித்தும்;

2. திருத்துறைப்பூண்டி தொகுதியில் காகித தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

3. திருத்துறைப்பூண்டி தொகுதியிலுள்ள முத்துப்பேட்டையை தனி வட்டமாகச் செயல்படுத்துவது குறித்தும்;

4. திருத்துறைப்பூண்டி–மன்னார்குடி செல்லும் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக (NH) தரம் உயர்த்துவது குறித்தும்;

5. திருத்துறைப்பூண்டி தொகுதி, இடையூர் ஊராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

6. நெல் விலையை குவிண்டால் ஒன்றிற்கு ரூபாய் 3,000/– ஆக உயர்த்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

**திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

[திரு. செ. ஸ்டாலின் குமார்] [2018 ஜனவரி 12

"1. துறையூர் வட்ட அரசு மருத்துவமனையை நவீன மருத்துவ வசதியுடன் புதிய கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகளுடன் தரம் உயர்த்துவது குறித்தும்;

2. உப்பிலியாபுரம் ஒன்றியம், பச்சபெருமாள்பட்டியில் உள்ள அரசு மருந்தகத்தை மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்தும்;

3. துறையூர் ஒன்றியம், பச்சமலையில் மலைவாழ் பழங்குடியின மக்கள் வாழும் கோம்பை, வண்ணாடு ஆகிய ஊராட்சிகளில் 24 மணி நேரம் இயங்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

4. உப்பிலியாபுரம் ஒன்றியம், எரகுடியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் மற்றும் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

5. துறையூரில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்தும்;

6. தமிழகத்தில் உள்ள தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தி போதிய கட்டமைப்புகளை (Infrastructure) ஏற்படுத்துவது குறித்தும்;

7. அரசு பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர்களுக்கு உளவியல் பயிற்சி வகுப்பு நடத்துவது குறித்தும்;

8. துறையூர் நகரில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர்களுக்கு விடுதி அமைப்பது குறித்தும்;

9. துறையூரில் உள்ள அரசு ஆதி திராவிடர் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

10. சுற்றுலாத் தலமாக உள்ள புளியஞ்சோலையில் அடிப்படை வசதிகள் மற்றும் தங்கும் விடுதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;

11. புளியஞ்சோலையில் புதிய அணை அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. செ. ஸ்டாலின் குமார்]

12. புளியஞ்சோலையிலிருந்து நீர் செல்லும் அனைத்து ஏரிகள், வாய்க்கால்களைத் தூர்வாருவது குறித்தும்;

13. துறையூர், உப்பிலியாபுரம் ஆகிய பகுதிகளில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

14. உப்பிலியாபுரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

15. துறையூர், உப்பிலியாபுரம் பகுதிகளில் உள்ள பழைய காவலர் குடியிருப்புகளுக்கு மாற்றாக புதிய அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டுவது குறித்தும்;

16. துறையூரில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

17. உப்பிலியாபுரத்தில் உள்ள அரசு போக்குவரத்துப் பணிமனைக்குச் சுற்றுச் சுவர், ஓடுதளம் அமைப்பது குறித்தும்;

18. துறையூர் நகராட்சிக்குத் தனியாக காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

19. துறையூர் மற்றும் உப்பிலியாபுரம் ஒன்றிய கிராமங்களில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக C.W.S. 293 திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும்;

20. துறையூர் தொகுதியில் துறையூர் நகராட்சி, உப்பிலியாபுரம் மற்றும் பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சிகள், உப்பிலியாபுரம் மற்றும் துறையூர் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய பகுதிகளில் விளையாட்டரங்கம், ஜிம் (Gym) அமைத்து விளையாட்டு உபகரணங்களை இலவசமாக வழங்குவது குறித்தும்;

21. உப்பிலியாபுரம் பேரூராட்சியில் பழுதடைந்த காவேரி குடிநீர் செல்லும் குழாய்களை மாற்றி புதிய குழாய்கள் அமைப்பது குறித்தும்;

[திரு. செ. ஸ்டாலின் குமார்] [*2018 ஜனவரி 12*

*22.* துறையூர் நகராட்சியில் விரிவாக்கப்பட்ட வார்டுகளில் சாலை வசதி, தெரு விளக்கு மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

*23.* துறையூர் ஒன்றியம், மதுராபுரி, சிங்களாந்தபுரம் ஊராட்சிகளில் விரிவாக்கம் செய்யப்பட்ட (Extension) பகுதிகளில் தெரு விளக்கு, சாலை வசதி மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

*24.* துறையூர் நகரின் மையப் பகுதியிலுள்ள சின்ன ஏரியைப் புனரமைக்க NLLP, NPLA திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.

**திரு. எ. ராமர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"*1.* தோகைமலையில் ஆண்கள் மற்றும் மகளிர் மேல்நிலைப் பள்ளிகள் தனித்தனியாக அமைப்பது குறித்தும்;

*2.* தோகைமலை அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்திற்குச் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

*3.* பில்லூரில் அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர், போர்வெல் மற்றும் மோட்டார் இரு சக்கர வாகனம் நிறுத்த கூடம் அமைப்பது குறித்தும்;



*2018 ஜனவரி 12*] [திரு. எ. ராமர்]

*4.* வடசேரி ஊராட்சி, காவல்காரன்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர், குடிநீர் வசதி மற்றும் விளையாட்டு மைதானத்தை அமைப்பது குறித்தும்;

*5.* கல்லடை ஊராட்சி, மேலவெளியூரில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

*6.* தளிஞ்சி ஊராட்சி, தளிஞ்சியில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

*7.* ஆர்.டி. மலை ஊராட்சி, மேலவாளியம்பட்டியில் சமுதாயக்கூடம் அமைப்பது குறித்தும்;

*8.* சேப்ளாப்பட்டி ஊராட்சி மற்றும் கல்லடை ஊராட்சிகளில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

*9.* தோகைமலை ஊராட்சியில் நூலகக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

*10.* பாதிரிப்பட்டி ஊராட்சியில் தோகைமலை முதல் பாதிரிப்பட்டி வரை சாலை மேம்பாடு செய்தல் குறித்தும்;

*11.* கல்லடை ஊராட்சியில், ரெங்கநாதபுரம் அருகில் ஆற்றுப்பாலம் கட்டுவது குறித்தும்;

*12.* பொருந்தலூர் ஊராட்சி, பொன்னம்பட்டியில் மேடை அமைப்பது குறித்தும்;

*13.* ஆர்.டி. மலை ஊராட்சி, ஆர்.டி. மலை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

*14.* தோகைமலை ஊராட்சி, நாடக்காப்பட்டிக்கு பேருந்து வசதி செய்வது குறித்தும்;

*15.* நெய்தலூர் ஊராட்சி, கோவிந்தன் வயல் முதல் மேட்டுகாடு வரை தார்ச் சாலை அமைப்பது குறித்தும்;

[திரு. எ. ராமர்] [2018 ஜனவரி 12

16. நெய்தலூர் ஊராட்சி, குருணிக்காரத் தெரு முதல் சாமந்த முடக்கு வரை தார்ச் சாலை அமைப்பது குறித்தும்;

17. தோகைமலையில் பத்திரப் பதிவுத் துறை அலுவலகம் அமைப்பது குறித்தும்;

18. தோகைமலையில் சந்தை நடைபெறும் இடத்தை மேம்படுத்துவது குறித்தும்;

19. தோகைமலை பேருந்து நிலையத்திற்குக் கட்டடம் கட்டுவது குறித்தும்.

20. கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றியம், பஞ்சப்பட்டி ஏரிக்கு காவேரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவது குறித்தும்;

21 வேங்காம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு தங்கும் விடுதி அமைப்பது குறித்தும்;

22 வயலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் மற்றும் சத்துணவுக் கூடம் அமைப்பது குறித்தும்;

23 போத்துராவுத்தன்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

24 பஞ்சப்பட்டி அரசு வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டுவது குறித்தும்;

25 வீரியபாளையம் ஊராட்சி, கொமட்டேரியில் கால்நடைக் கிளை மருந்தகம் அமைப்பது குறித்தும்;

26 கொமட்டேரியில் துணை ஆரம்ப சுகாதார நிலையம், தாய்–சேய் நல விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

27 கொமட்டேரியில் சமுதாயக்கூடம் அமைப்பது குறித்தும்;

28 கள்ளப்பள்ளியில் (தெற்கு) வடிகால்வாய் மற்றும் நாடக மேடை அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. எ. ராமர்]

29. போத்துராவுத்தன்பட்டி பேருந்து நிலையம் அருகில் சீரணி அரங்கம் அமைப்பது குறித்தும்;

30. கள்ளப்பள்ளி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிக்கு பெரிய நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் நாடக மேடை அமைப்பது குறித்தும்;

31. கருப்பத்தூர் ஊராட்சி, வேங்காம்பட்டியில் மயானச் சாலை அமைப்பது குறித்தும்;

32. பஞ்சப்பட்டி ஏரியை நீர்ப்பாசன ஏரியாக மாற்றுவது குறித்தும்;

33. சிந்தலவாடி ஊராட்சி, மகிளிப்பட்டி பாலம் கட்டளைமேட்டு வாய்க்காலைச் சீரமைப்பது குறித்தும்;

34. மத்தகிரி ஊராட்சி, தெற்கு கல்லுப்பட்டி முதல் வெள்ளாளப்பட்டி எல்லை வரை சாலை அமைப்பது குறித்தும்;

35. சிவாயம் ஊராட்சி, வேப்பங்குடி–கிழாரிப்பட்டி–அக்கரைப்பட்டி–ஈச்சம்பட்டி சாலையைச் சீரமைத்து குளித்தலையிலிருந்து பேருந்து வசதி செய்வது குறித்தும்;

36. சத்தியமங்கலம் ஊராட்சி, அய்யர்மலை அரசு கலைக் கல்லூரிக்குக் கூடுதல் கட்டடம், ஆய்வகம், நூலகம், கலையரங்கம், கழிப்பறைகள் மற்றும் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

37. தண்ணீர் பள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு தலைமையாசிரியர் அறை, கணினி வகுப்பறை மற்றும் விழா மேடை அமைப்பது குறித்தும்;

38. வதியம் ஊராட்சி, மாயனூர் தென்கரை வாய்க்கால் மற்றும் வதியம் ஊராட்சி பாசன மதகு தடுப்பணை அமைப்பது குறித்தும்;

39. நாங்கவரம் ஊராட்சி, பேட்டைவயல், கல்லிடிச்சி மற்றும் வண்ணாஞ்சி ஜகா பாசனத்திற்காக நாங்கவரம் ஏரியைத் தூர்வாரி பாசன வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

40. புதியக்கட்டளை மேட்டுக்கால்வாயைத் தூர்வாருவது குறித்தும்;

41. வைகை நல்லூர் ஊராட்சி, கோட்டமேடு ஆதி திராவிடர் காலனியில் நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

42. பொய்யாமணி ஊராட்சியில் உள்ள நடை பாலங்களை அகற்றி புதிய பாலம் கட்டுவது குறித்தும்;

43. ரி.பேட்டை ஊராட்சி, சீகம்பட்டியில் உள்ள நடைபாலங்களை அகற்றி புதிய பாலம் கட்டுவது குறித்தும்;

44. குளித்தலை–மணப்பாறை M.D.R. சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

45. கோப்பு முதல் கவுண்டம்பட்டி வரை உள்ள சாலையை M.D.R. சாலையாகத் தரம் உயர்த்தி சிறு பாலங்கள் கட்டுவது குறித்தும்;

46. நல்லூர் ஊராட்சியில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரியைத் தூர்வாருவது குறித்தும்;

47. வதியம் ஊராட்சி–மேல வதியம்–மருதாண்டான் மேட்டு பாசன வாய்க்கால் தூர்வாருவது குறித்தும்;

48. வைகை நல்லூர் கிராமத்தில் மேலகுட்டப்பட்டி முதல் அய்யனேரி வரை உள்ள பாசன கிளை வாய்க்காலின் இருபுறமும் தடுப்புச்சுவர் அமைப்பது குறித்தும்;

49. அய்யர்மலை அரசு கலைக் கல்லூரிக்கு குளித்தலையிலிருந்து பேருந்து இயக்குவது குறித்தும்;

50. இனுங்கூர் ஆதி திராவிடப் பள்ளி மாணவர்களுக்கு விடுதி அமைப்பது குறித்தும்;

51. குளித்தலை தொகுதி, கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்குவது குறித்தும்;





52. மேலகுப்புரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

53. குளித்தலை பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவது குறித்தும்;

54. குளித்தலை பகுதியில் வாழைக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

55. குளித்தலை அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் வட்டத்தில் விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

2. கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூரில் அரசு சட்டக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

3. கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் ஊராட்சிகளில் உள்ள சிறிய கிராமங்களில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

[திரு. கு. பிச்சாண்டி] [2018 ஜனவரி 12

4. கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் வட்டத்திற்குப் புதிய தானிய சேமிப்புக் கிடங்குகள் அமைப்பது குறித்தும்;

5. கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆராஞ்சி கிராமத்தில் உள்ள மின் நிலையத்தை 110 K.V. மின் நிலையமாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

6. தமிழ்நாட்டில் முழு மதுவிலக்குத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும்;

7. தென்பெண்ணையாறு, சாத்தனூர் அணையிலிருந்து செய்யார் இணைப்பது குறித்தும்;

8. கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் புதிய தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

9. நந்தன் கால்வாய்த் திட்டத்தை, கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி வரை நீட்டிப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

**திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:



2018 ஜனவரி 12] [திரு. கே.எஸ். மஸ்தான்]

“1. செஞ்சி தொகுதிக்குட்பட்ட நந்தன் கால்வாய் வாய்க்கால் முழுவதையும் கான்கிரீட் வாய்க்கால்களாக மாற்றுவது குறித்தும்;

2. பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 70 ஏரிகளில் கான்கிரீட் மதகுகள் அமைப்பது குறித்தும்;

3. செஞ்சி தொகுதியில் உள்ள அனைத்து கால்நடை மருத்துவமனைகளுக்கும் தேவையான அளவு மருந்துகளை வழங்குவது குறித்தும்;

4. செஞ்சியில் சார் ஆட்சியர் அலுவலகம் அமைப்பது குறித்தும்;

5. நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் பொருட்களை முறையாக வரிந்துகட்டி (Packing) செய்து கொடுப்பது குறித்தும்;

6. செஞ்சி தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் உள்ள முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் பகுதி நேர நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

7. செஞ்சி தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

8. அனந்தபுரம் பெண்கள் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

9. செஞ்சி பேரூராட்சியில் பழுதடைந்துள்ள நூலகக் கட்டடங்களுக்கு மாற்றாக புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

10. செஞ்சி மற்றும் மேல்மலையனூர் ஒன்றியங்களில் பழுதடைந்த சத்துணவு மையக் கட்டடங்களைச் சீரமைப்பது குறித்தும்;

11. மேல்மலையனூர் ஒன்றியத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

12. செஞ்சி தொகுதி, மேல்மலையனூரில் உள்ள சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அமைப்பது குறித்தும்;

13. செஞ்சி ஒன்றியத்தில் சென்னாலூர்–பாடிபள்ளம், சேரானூர்–சென்னாலூர், அத்தியூர்–அனந்தபுரம், சோமசமுத்திரம்–வடகால் ஆகிய வனத் துறைக்குச் சொந்தமான சாலைகளைத் தார்ச் சாலையாக விரிவாக்கம் செய்வது குறித்தும்;

14. செஞ்சி–மேல்களவாய் சாலை இடையில் சங்கராபரணி ஆற்று தரைப்பாலத்தை உயர்மட்ட மேம்பாலமாக மாற்றியமைப்பது குறித்தும்;

15. செஞ்சி அரசு போக்குவரத்துக் கழக பணிமனையில் பழுதடைந்துள்ள பேருந்துகளுக்கு மாற்றாக புதிய பேருந்துகளை இயக்குவது குறித்தும்;

16. செஞ்சி கோட்டையில் மாவீரர் ராஜாதேசிங்கிற்கு முழு உருவச் சிலை அமைப்பது குறித்தும்;

17. செஞ்சி கோட்டையை சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்தும்;

18. செஞ்சி நகரத்தின் குடிநீர்த் தேவைக்காக B ஏரியில் திறந்தவெளி கிணறு அமைப்பது குறித்தும்;

19. செஞ்சி நகர கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் திருக்கோவிலூர்–செஞ்சி பகுதியில் சேதமடைந்துள்ள குடிநீர் குழாயைச் சீரமைப்பது குறித்தும்;

20. மேல்மலையனூர் ஒன்றியம், அவலூர்பேட்டை ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

21. அவலூர்பேட்டை ஊராட்சியில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

22. மேல்மலையனூர் ஊராட்சியில் தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;





23. செஞ்சி பேரூராட்சி, பேருந்து நிலைய வணிக வளாகத்தில் மேல்தளம் மற்றும் தரைதளம் அமைப்பது குறித்தும்;

24. செஞ்சி நகரின் பெயரை செஞ்சிக் கோட்டை என்று மாற்றம் செய்வது குறித்தும்;

25. மேல்மலையனூர் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்து நவீன வசதி கொண்ட பேருந்து நிலையமாக மாற்றுவது குறித்தும்;

26. மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்தும்;

27. செஞ்சி, சிறப்பு நிலை பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

28. செஞ்சி. கொத்தமங்கலம் வழியாக பெருங்காப்பூர் செல்லும் சாலையில் உள்ள பச்சையம்மன் ஆலயத்திற்கு பக்தர்கள் செல்ல வனத் துறை அனுமதி வழங்குவது குறித்தும்;

29. சிங்கவரம் ஸ்ரீ ரங்கநாதர் கோயிலுக்கு ரோப் கார் வசதி செய்வது குறித்தும்;

30. செஞ்சி பேரூராட்சியில் ஆதி திராவிடர் மகளிர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

31. செஞ்சி பேரூராட்சியில் பால் குளிரூட்டும் மையம் அமைப்பது குறித்தும்;

32. செஞ்சி தொகுதியில் மீன் பதப்படுத்தும் மையம் அமைப்பது குறித்தும்;

33. செஞ்சி தொகுதியில் காட்டுப்பன்றிகளால் விவசாய நிலங்கள் சேதப்படுவதைத் தடுப்பது குறித்தும்;

34. அனந்தபுரம் பேரூராட்சியில் புதிதாகத் தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

35. பொன்னங்குப்பம் ஊராட்சியில் வனத் துறையுடன் ஒட்டியுள்ள ஏரியின் மதகுகளைச் சீரமைப்பது குறித்தும்;

[திரு. கே.எஸ். மஸ்தான்] [2018 ஜனவரி 12

36. போத்துவாய் ஊராட்சியில் உள்ள மொனப்பா ஏரியைச் சீரமைத்து அணை கட்டுவது குறித்தும்;

37. மாதவப்பூண்டி ஊராட்சியில் நந்தன் வாய்க்காலின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

38. செஞ்சி சிறப்பு நிலை பேரூராட்சியில் உள்ள 18 வார்டுகளை 21 வார்டுகளாகப் பிரித்து அமைப்பது குறித்தும்;

39. செஞ்சி நீதிமன்ற வளாகத்தில் வாகன நிறுத்துமிடம் அமைப்பது குறித்தும்;

40. நீதிமன்ற வளாகத்தில் பொது மக்களுக்கு ஓய்வு அறை அமைப்பது குறித்தும்;

41. செஞ்சி பி ஏரிக்கரை மேல் பகுதியில் புதிய பூங்கா மற்றும் காலியிடத்தில் விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

42. செஞ்சியில் அரசு சார்பில் முதியோர் இல்லம் அமைப்பது குறித்தும்;

43. மேல்மலையனூர் வட்டத்திலுள்ள பழங்குடியின மாணவர்களுக்கு விடுதி அமைப்பது குறித்தும்;

44. அரசு பிற்படுத்தப்பட்டோர் விடுதியிலுள்ள மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவது குறித்தும்;

45. செஞ்சி சங்கராபரணி ஆற்றின் மேல் களவாய் பகுதியில் தடுப்பணை கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

**டாக்டர் இரா. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

**திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. மாதவரம் தொகுதி, மோரை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

2. மாதவரம் தொகுதி, எருமை வெட்டிபாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

3. மாதவரம் பால் பண்ணையில் உள்ள தாலுகா மருத்துவமனைக்குப் போதிய உபகரணங்கள் வழங்குவது குறித்தும்;

4. மாதவரம் மண்டலம்–III, வட்டம்–24, சூரப்பட்டு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

5. மாதவரம் தொகுதியில் உள்ள அனைத்து அரசு பள்ளிகள் மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்களை நியமிப்பது குறித்தும்;

6. மாதவரம் தொகுதியில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் உணவுப் பொருட்கள் சீராக விநியோகிப்பது குறித்தும்;

7. விவசாய பயிர்களுடன் மா, பலா போன்ற மரங்களுக்கும் காப்பீடு வழங்குவது குறித்தும்;

[திரு. எஸ். சுதர்சனம்] [2018 ஜனவரி 12

8. நாரவாரிகுப்பம் பேரூராட்சியினை புழல் மற்றும் சோழவரம் ஒன்றியங்களுடனும் பாடியநல்லூர் மற்றும் நல்லூர் ஆகிய ஊராட்சிகளுடனும் இணைத்து நகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

9. மாதவரம் தொகுதியில் உள்ள தரம் உயர்த்தப்பட வேண்டிய பள்ளிகளைத் தரம் உயர்த்துவது குறித்தும்;

10. நாரவாரிகுப்பம் பேரூராட்சியில் வளர்ச்சிப் பணிகளைச் சீர்படுத்துவது குறித்தும்;

11. மாதவரம் தொகுதியில் உள்ள கால்நடை மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவது, சோழவரம் ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, மேட்டு சூரப்பட்டு கிராமம், வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளானூர் ஊராட்சியிலும் கால்நடை மருத்துவ வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

12. மாதவரம் எம்.எம்.டி.ஏ—வில் பேருந்து நிலையம் கட்டும் பணியை விரைந்து செயல்படுத்துவது குறித்தும்;

13. மாதவரம் பேருந்து நிலையத்திலிருந்து அதிக அளவில் பேருந்துகளை இயக்குவது குறித்தும்;

14. மாதவரம் மண்டலம்—III, 26—வது வட்டத்தில் இயங்கி வரும் திருவள்ளூர் மாவட்ட நூலகத்தைச் சீரமைப்பது குறித்தும்;

15. மாதவரம் தொகுதி, ரெட்டேரியில் உள்ள ஆகாயத் தாமரைகள் மற்றும் கழிவுகளை அகற்றுவது குறித்தும்;

16. மாதவரம் மண்டலம்—III, 33—வது வட்டத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பூங்கா அமைப்பது குறித்தும்;

17. மாதவரம் தொகுதியில் உரிமையியல் நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

18. மாதவரம் பேருந்து நிலையத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு அரசு விரைவு பேருந்துகளை இயக்குவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. எஸ். சுதர்சனம்]

19. மாதவரம் தொகுதியில் உள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றுவது குறித்தும்;

20. விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளிகளுக்கு ஊதியம் நிர்ணயம் செய்ய தனிக் குழு அமைப்பது குறித்தும்;

21. இயற்கை வேளாண்மைக் கொள்கை அறிவிப்பது குறித்தும்;

22. மாதவரம் மண்டலம் III—ல் நடைபெற்றுவரும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுமானப் பணிகளை விரைந்து முடிப்பது குறித்தும்;

23. மாதவரம் மண்டலம் III—ல் உள்ள அங்கன்வாடி மையங்களைச் சீரமைப்பது குறித்தும்;

24. மாதவரம் பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் கால்வாய் அமைப்பது குறித்தும்;

25. மாதவரம் தொகுதி, ஜி.என்.டி. சாலையில் கணக்கன்சத்திரம் பகுதியில் போக்குவரத்து சிக்னல் அமைப்பது குறித்தும்;

26. மாதவரம் சார்—பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

27. அனைத்து விவசாயிகளுக்கும் வேளாண் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்கள்மூலம் வழங்கப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்வது குறித்தும்;

28. மாதவரம் பால் பண்ணையில் தொழிலாளர் குடியிருப்புகளைச் சீரமைப்பது குறித்தும்;

29. மாதவரம் தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் குடியிருப்பு வசதிகள் செய்வது குறித்தும்;

30. மாதவரம் தொகுதியில் பொது இடங்களில் நவீன சுகாதார கழிப்பறைகள் உருவாக்குவது குறித்தும்;

[திரு. எஸ். சுதர்சனம்] [2018 ஜனவரி 12

31. கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையினை வழங்குவது குறித்தும்;

32. மின் கட்டணத்தை மாதந்தோறும் செலுத்தும் முறையினை நடைமுறைப்படுத்துவது குறித்தும்;

33. மாதவரம் தொகுதி, செங்குன்றம் அருகில் தரமான அனைத்து வசதிகளுடன் அரசு மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

34. மாதவரம் தொகுதியில் தொழிற்சாலைகளால் வெளியேற்றப்படும் இரசாயன கழிவுகளைத் தடுப்பது குறித்தும்;

35. விண்ணப்பம் செய்துள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் இலவச மோட்டார் சைக்கிள் வழங்குவது குறித்தும்;

36. பாலின் கொள்முதல் விலையினை உயர்த்துவது குறித்தும்;

37. மாதவரம் தொகுதியிலுள்ள பழைய மின்மாற்றிகளை மாற்றி நவீன மின்மாற்றிகளை அமைப்பது குறித்தும்;

38. மாதவரம் தொகுதியில் உள்ள அங்கன்வாடி மையங்களில் காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

39. மாதவரம் தொகுதியில் பழுதடைந்துள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளை சீரமைப்பது குறித்தும்;

40. ஆழ்கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்குவது குறித்தும்;

41. போராட்டத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்களின் பணியிடை நீக்கத்தை இரத்து செய்வது குறித்தும்;

42. போக்குவரத்து தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வு குறித்தும்;

43. தமிழகத்தில் கிராம ஊராட்சிகளில் வை–பை, ஹாட்ஸ்பாட் வசதி செய்து தருவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. எஸ். சுதர்சனம்]

44. தமிழகத்தில் அரசே எம்.சாண்ட் விற்பனையைச் செயல்படுத்துவது குறித்தும்;

45. நியாய விலைக் கடைகளில் பிரபல நிறுவனங்களின் பொருட்களை குறைந்த விலையில் வழங்குவது குறித்தும்;

46. 149 ரூபாய்க்கு கேபிள், தொலைபேசி, இண்டர்நெட் இணைப்பு வழங்குவது குறித்தும்;

47. 10 ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு மத்திய அரசு நுழைவுத் தேர்வுகளை எழுத பயிற்சி வகுப்புகளைத் தனியாக நடத்துவது குறித்தும்;

48. தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் 8 ஆம் வகுப்பு முதல் மின்னணு வகுப்புகளாக மாற்றம் செய்வது குறித்தும்;

49. தீயணைப்புத் துறையில் பெண்களை பணியமர்த்துவது குறித்தும்;

50. போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்குவது குறித்தும்;

51. போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு பிடித்தம் செய்த தொகையை வழங்குவது குறித்தும்;

52. போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 2.57 என்னும் ஊதிய உயர்வு காரணி வழங்குவது குறித்தும்;

53. அரசு பள்ளிகளில் பணிபுரியும் தொகுப்பூதியம் பெறும் ஆசிரியர்களைப் பணி நிரந்தரம் செய்வது குறித்தும்;

54. ஒகி புயலில் காணாமல் போன அனைத்து மீனவர்களுக்கும் நிவாரணத் தொகை வழங்குவது குறித்தும்;

55. தமிழகத்தில் நீட் தேர்விற்கான பயிற்சி மையங்களை அரசே நடத்துவது குறித்தும்;

56. மாதவரம் தொகுதி, மணலி புதுநகர் சடையங்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவது குறித்தும்;

[திரு. எஸ். சுதர்சனம்] [2018 ஜனவரி 12

57. மாதவரம் தொகுதி, மண்டலம் 2–ல் ஆமுல்லைவாயில் தரைப் பாலத்தினை அகற்றி புதிய மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

58. மாதவரம் தொகுதி, 16–வது வட்டத்தில் சடையங்குப்பம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தருவது குறித்தும்;

59. மாதவரம் தொகுதி, 17–வது வார்டு, வடபெரும்பாக்கம் பகுதியில் கட்டப்பட்ட சமுதாயக்கூடத்தைத் திறப்பது குறித்தும்;

60. மாதவரம் தொகுதி, மண்டலம் 2, வார்டு 17–ல் உள்ள தியாகி விஸ்வநாததாஸ் நகரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் தரப்பட்ட வீடுகளைச் சீரமைப்பது குறித்தும்;

61. மாதவரம் தொகுதி, வார்டு 19, மாத்தூர் எம்.எம்.டி.ஏ. பகுதியில் உள்ள சமுதாயக்கூடத்தினைப் புதுப்பிப்பது குறித்தும்;

62. மாதவரம் தொகுதியில் நிலத்தடி நீர் குறைவதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

63. மாதவரம் தொகுதி, வார்டு 19, மாத்தூர் எம்.எம்.டி.ஏ. பகுதியில் உள்ள தீயணைப்பு நிலையத்தை பயன்பாட்டிற்குக் கொண்டுவருவது குறித்தும்;

64. மாதவரம் தொகுதி, சின்னமாத்தூரில் அனைத்து சாலைகளின் ஓரங்களிலும் கழிவுநீர்க் கால்வாய்கள் மூடியுடன் அமைப்பது குறித்தும்;

65. மாதவரம் தொகுதியில் கூடுதலாக சின்டெக்ஸ் குடிநீர்த் தொட்டிகள் அமைப்பது குறித்தும்;

66. மாதவரம் தொகுதியில் தாழ்வான நிலையில் செல்லும் மின்கம்பிகளை மாற்றியமைப்பது குறித்தும்;

67. மாதவரம் தொகுதியில் உள்ள கோயில் குளங்களைத் தூர்வாருவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. எஸ். சுதர்சனம்]

68. மாதவரம் தொகுதி, புழல் திருமூலநாத சுவாமி திருக்கோயில் குளத்தினை ஒட்டி காரியமண்டபம் அமைப்பது குறித்தும்;

69. மாதவரம் தொகுதி, புழல் கண்ணப்பசாமி நகர் பகுதியில் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பது குறித்தும்;

70. மாதவரம் தொகுதி, புழல் ஜீவா தெருவில் உள்ள மயானத்தில் மின்சார தகனமேடை அமைப்பது குறித்தும்;

71. மாதவரம் தொகுதி, புழல் காவாங்கரை கிராமத்தில் புல எண் 537–ல் குடியிருக்கும் மக்களுக்குப் பட்டா வழங்குவது குறித்தும்;

72. மாதவரம் தொகுதி, புழல் செம்பியம் சாலையில் குடிசையில் வசிப்போருக்குக் குடிசை மாற்று வாரியம்மூலம் வீடு கட்டித் தருவது குறித்தும்;

73. மாதவரம் தொகுதி, புழல் அண்ணா நினைவு நகரில் பிரதான சாலையிலுள்ள நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் அரசு மருத்துவமனை கட்டுவது குறித்தும்;

74. மாதவரம் தொகுதி, வட்டம் 24, பிருந்தாவன் நகர் அண்ணா விளையாட்டு மைதானம் பகுதியில் பகுதி நேர நூலகம் அமைப்பது குறித்தும்;

75. மாதவரம் தொகுதி, வட்டம் 24, பிருந்தாவன் நகரில் சமுதாயக்கூடம் அமைப்பது குறித்தும்;

76. மாதவரம் தொகுதி, வட்டம் 24, பிருந்தாவன் நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

77. மாதவரம் தொகுதி, 24–வது வார்டில் உள்ள சண்முகபுரத்தில் அமைந்துள்ள GF 005 நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து சூரப்பட்டு பகுதியில் பகுதி நேரக் கடையாகச் செயல்படுத்துவது குறித்தும்;

78. மாதவரம் தொகுதி, 24–வது வார்டு, முருகம்பேடு பகுதிக்கு சிற்றுந்து இயக்குவது குறித்தும்;

[திரு. எஸ். சுதர்சனம்] [2018 ஜனவரி 12

79. மாதவரம் தொகுதி, 24—வது வார்டு, ஆசிரியர் காலனி பகுதியில் சர்வே எண் 1485, 1485/1 நிலங்களுக்கு நில உச்சவரம்பு நீக்குவது குறித்தும்;

80. மாதவரம் தொகுதி, வார்டு 27, கம்பன் நகர், ரமணா நகர் பகுதிகளில் மழைநீர் வடிகால் கால்வாய் அமைப்பது குறித்தும்;

81. மாதவரம் பகுதியில் கிராம நத்தம் மனைகளுக்குப் பட்டா வழங்குவது குறித்தும்;

82. மாதவரம் தொகுதி, 28—வது வார்டில் மூலசத்திரம் பகுதியில் காரிய கூடம் அமைப்பது குறித்தும்;

83. மாதவரம் தொகுதியில் மணலியிலிருந்து மூலக்கடை வழியாக பெரம்பூர் வரை சிற்றுந்து இயக்குவது குறித்தும்;

84. மாதவரம் தொகுதி, 27—வது வட்டத்தில் உள்ள அலங்கார செயல்விளக்க பூங்காவினை பராமரித்து செயல்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்தும்;

85. மாதவரம் தொகுதி, 27—வது வட்டத்தில் உள்ள அலங்கார செயல்விளக்க பூங்காவின் கிழக்கு பகுதியில் ஒரு சிறிய வாயில் அமைப்பது குறித்தும்;

86. மாதவரம் தொகுதியில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் அனைத்து பொருட்களும் எல்லா வேலை நாட்களிலும் வழங்குவது குறித்தும்;

87. மாதவரம் தொகுதி, மண்டலம் III—க்கு கழிவுநீர் அடைப்பு எடுக்கும் இயந்திரம் வாங்குவது குறித்தும்;

88. மாதவரம் பேருந்து நிலையத்திலிருந்து சென்னை எழும்பூர் வரை பேருந்து இயக்குவது குறித்தும்;

89. மாதவரம் தொகுதி, 28—வது வட்டம், கே.கே. தாழை பகுதியில் விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

90. மாதவரம் தொகுதி, பொன்னியம்மன்மேடு, தணிகாசலம் நகர், ஈ பிளாக் மற்றும் எப் பிளாக் வழியாக சிற்றுந்துகள் இயக்குவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. எஸ். சுதர்சனம்]

91. மாதவரம் தொகுதி, மண்டலம் III—ல் உள்ள வி.எஸ். மணி நகரில் உள்ள பூங்காவினைச் சீரமைப்பது குறித்தும்;

92. மாதவரம் தொகுதி, மண்டலம் III—ல் உள்ள வி.எஸ். மணி நகரில் பெயர் பலகை வைப்பது குறித்தும்;

93. மாதவரம் தொகுதி, மண்டலம் III—ல் நடைபெற்று வரும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணிகளை விரைந்து முடிப்பது குறித்தும்;

94. மாதவரம் தொகுதி, 31—வது வட்டத்தில் உள்ள கண்ணபிரான் தோட்டம் பகுதியில் மழைநீர் வடிகால் கால்வாய் அமைப்பது குறித்தும்;

95. மாதவரம் தொகுதி, ரெட்டேரி வழியாக அம்பத்தூர் வழித்தடத்தில் பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

96. மாதவரம் தொகுதி, பிரகாஷ் நகரில் உள்ள குளப்பன் குளத்தினைத் தூர்வாரி பூங்காவுடன்கூடிய நடைபாதையினை ஏற்படுத்துவது குறித்தும்;

97. மாதவரம் தொகுதியில் உள்ள ரெட்டேரியினை தூய்மைப்படுத்தி சுற்றுலாத் தலமாக மாற்றுவது குறித்தும்;

98. மாதவரம் தொகுதி, 33—வது வட்டம், தணிகாசலம் நகர் பகுதியில் வெள்ள நீர் வடிகால் கால்வாயில் திடக்கழிவுகள் கலப்பதைத் தடுப்பது குறித்தும்;

99. மாதவரம் தொகுதி, செங்குன்றம்—திருவள்ளூர் சாலையில் உயர்மட்ட மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

100. மாதவரம் தொகுதி, நாரவாரிகுப்பம் பேரூராட்சிக்குத் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் குப்பைகள் கொட்ட இடம் வழங்குவது குறித்தும்;

101. புழல் ஏரி நீர் மாசுபடாமல் தடுக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

102. செங்குன்றம்—அண்ணா சதுக்கம் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்தும்;

[திரு. எஸ். சுதர்சனம்] [2018 ஜனவரி 12

103. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், நல்லூர் ஊராட்சி, கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள மக்களுக்குப் பட்டா வழங்குவது குறித்தும்;

104. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், நல்லூர் ஊராட்சியில் உள்ள அங்கன்வாடி மையத்தினை மேம்படுத்துவது குறித்தும்;

105. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், நல்லூர் ஊராட்சியில் சந்தன மாரியம்மன் குளத்தினைத் தூர்வாருவது குறித்தும்;

106. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், நல்லூர் ஊராட்சி–ஆட்டந்தாங்கல் சாலையினைச் சீரமைப்பது குறித்தும்;

107. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூரில் சமுதாயக்கூடம் அமைப்பது குறித்தும்;

108. மாதவரம் தொகுதி, சோழவரம் கோட்டைமேடு பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நின்று செல்ல வேண்டியது குறித்தும்;

109. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், பூதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவர், செவிலியர், பணியாளர்கள் குடியிருப்பினைச் சீரமைப்பது குறித்தும்;

110. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், பூதூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

111. மாதவரம் தொகுதியில் ஆத்தூர் பகுதியில் கொசஸ்தலை ஆற்றில் மணல் அள்ளுவதைத் தடுப்பது குறித்தும்;

112. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஆத்தூர் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடையினைப் பிரித்து பெரியார் நகரில் பகுதி நேரக் கடையினை செயல்படுத்துவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. எஸ். சுதர்சனம்]

113. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், காரனோடை அங்கன்வாடி மையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

114. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், கும்மனூரில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

115. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், ஸ்ரீவாரி நகரில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

116. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், பெருங்காவூர் ஊராட்சியில் செல்லும் பெருங்காவூர் பெரிய காலனி சாலையினைச் சீரமைப்பது குறித்தும்;

117. மாதவரம் தொகுதி, பெருங்காவூர் கிராமத்திலிருந்து வடகரை, அழிஞ்சவாக்கம், தர்காஸ் வழியாக செங்குன்றம் வரை சிற்றுந்து இயக்குவது குறித்தும்;

118. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், பெருங்காவூர் கடை எண் BP 104–ஐ பிரித்து காந்தி நகரில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

119. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், மேட்டு சூரப்பட்டு கிராமத்தில் பழுதடைந்துள்ள ஏரி மதகினைச் சீரமைப்பது குறித்தும்;

120. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், நெற்குன்றம் செக்கஞ்சேரி ஏரியின் உபரி நீர் ஓடை வழியாக அருகில் உள்ள ஆதி திராவிடர் காலனியில் புகுவதைத் தடுப்பது குறித்தும்;

[திரு. எஸ். சுதர்சனம்] [2018 ஜனவரி 12

121. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், அலமாதி–எடப்பாளையம் சர்வே எண் 86/1, 87, 88–ல் உள்ள ஸ்ரீகிருஷ்ணா நகர் பகுதியில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்குவது குறித்தும்;

122. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், அலமாதி சர்வே எண் 222, 223–ல் உள்ள விக்னேஷ்வர் நகர் பகுதியில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்குவது குறித்தும்;

123. மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியம், வடகரையில் செயல்படும் கடை எண் 02/F வரைபடை 2 உணவு பொருள் அங்காடி பகுதி நேரமாக செயல்படுவதை முழு நேர நியாய விலைக் கடையாக மாற்றி அமைப்பது குறித்தும்;

124. மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியம், கிரான்ட்லைன் கிராமத்தில் மின்வாரிய அலுவலகக் கட்டடத்தினை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவது குறித்தும்;

125. மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியம், கிரான்ட்லைன் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகத்தில் உள்ள விளையாட்டு பூங்காவினைச் சீரமைப்பது குறித்தும்;

126. மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியம், விளாங்காடுபாக்கம் கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

127. மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியம், விளாங்காடுபாக்கம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

128. மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியம், கிரான்ட்லைன் கிராமத்தில் புகழ் பெற்ற மாரியம்மன் கோயில் திருக்குளத்தினைத் தூர்வாருவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. எஸ். சுதர்சனம்]

129. மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியம், தீர்த்தங்கரைப்பட்டு கிராமத்தில் 9–வது வார்டு பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

130. மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியம், தீர்த்தங்கரைப்பட்டு கிராமப் பகுதிக்கு சிற்றுந்து இயக்குவது குறித்தும்;

131. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், மோரை ஊராட்சி, கன்னியம்மன் நகரில் உள்ள தொடக்கப் பள்ளியினைத் தரம் உயர்த்துவது குறித்தும்;

132. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், மோரை பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

133. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், மோரை பகுதியில் புதிய கன்னியம்மன் நகரில் மின் கட்டணம் செலுத்துவதற்கு தனி கவுன்டர் அமைப்பது குறித்தும்;

134. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், மோரை புதிய கன்னியம்மன் நகர் பகுதி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

135. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், மோரை ஊராட்சி, மேட்டுப்பாளையம் கிராம மயானத்திற்குச் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

136. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், கதவூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

137. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், கதவூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 108 ஆம்புலன்ஸ் வாகனம் வழங்குவது குறித்தும்;

138. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளச்சேரி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளுக்கு சிற்றுந்து இயக்குவது குறித்தும்;

139. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளச்சேரி கிராமத்திற்கு தனி மயானம் அமைப்பது குறித்தும்;

140. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளானூர் ஊராட்சியில் முதன்மை சுகாதார மையத்திற்கு ஜெனரேட்டர் வசதி ஏற்படுத்தித் தருவது குறித்தும்;

141. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளானூர், கன்னடபாளையத்தில் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடை எண் EF 032-ஐ பிரித்து வேல் டெக் அருகில் பாரதி நகர் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை செயல்படுத்துவது குறித்தும்;

142. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளானூர் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

143. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், பம்மதுகுளம் ஈஸ்வரன் நகர், கணபதி நகருக்குக் கூடுதலாக குடிநீர் வசதி செய்வது குறித்தும்;

144. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், பம்மதுகுளம் பகுதியில் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

145. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், பொத்தூர் ஆர்.கே.ஜெ. வள்ளிவேலன் நகர் முதல் பொத்தூர் பிரதான சாலை வரை புதிய இணைப்புச் சாலை அமைப்பது குறித்தும்;

146. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், அரக்கம்பாக்கம் அண்ணா சமுதாயக்கூடத்திற்கு உணவுக் கூடம் அமைப்பது குறித்தும்;

147. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், அரக்கம்பாக்கத்தில் பழுதடைந்துள்ள தரைப்பாலத்தைத் தரம் உயர்த்தி கண்பாலம் அமைப்பது குறித்தும்;





148. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், அரக்கம்பாக்கம் ஊராட்சி மன்ற கட்டடத்திற்குச் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

149. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், பாண்டேஸ்வர அன்னை சத்தியா நகர் கிராம சர்வே எண் 311–ல் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்குவது குறித்தும்;

150. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், ஆலத்தூர் கிராமத்தில் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

151. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், ஆலத்தூர் கிராமத்தில் சமுதாயக்கூடம் அமைப்பது குறித்தும்;

152. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், ஆலத்தூர் ஊராட்சி, எடப்பாளையம் கிராமத்தில் தார்ச் சாலை அமைப்பது குறித்தும்;

153. மாதவரம் தொகுதி, 33–வது வட்டம், தணிகாசலம் நகரில் பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

154. தமிழக விவசாயிகளுக்கு 24 மணி நேரமும் இலவச மின்சாரம் வழங்கிடும் திட்டம் குறித்தும்;

155. ஏழை எளிய மக்கள் இலவச சிகிச்சை பெறுவதற்கு கிராமந்தோறும் சிறப்பு மையங்கள் அமைப்பது குறித்தும்;

156. கட்டுமானப் பணிகளுக்கு மணல் தட்டுப்பாடு நீக்குவது குறித்தும்;

157. கலப்பட மணலை தடுப்பது குறித்தும்;

158. தொழிற்சாலைகளில் தமிழகத்தை சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் 80 சதவிகிதம் முன்னுரிமை அளிப்பது குறித்தும்;

[திரு. எஸ். சுதர்சனம்] [2018 ஜனவரி 12

159. தமிழகத்தில் கேரளாவின் மருத்துவக் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுப்பது குறித்தும்;

160. மாதவரம் தொகுதி, மூலக்கடையில் இருசக்கர வாகன பாதுகாப்பகம் அமைப்பது குறித்தும்;

161. மாதவரம் தொகுதி, நாரவாரிகுப்பம் பேரூராட்சி, பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகன பாதுகாப்பகம் அமைப்பது குறித்தும்;

162. மாதவரம் தொகுதி, 24–வது வார்டு, சூரப்பட்டு பகுதியில் கூடுதல் சின்டெக்ஸ் தொட்டி வைப்பது குறித்தும்;

163. மாதவரம் தொகுதி, மண்டலம்–III, இலட்சுமிபுரம் நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் அமைப்பது குறித்தும்;

164. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், ஆரிக்கம்பேடு அங்கன்வாடி மையத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவது குறித்தும்;

165. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், கொள்ளுமேட்டில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

166. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், ஆரிக்கம்பேடு ஊராட்சி நூலகத்திற்கு நூலகர் நியமித்து நூலகத்தைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவது குறித்தும்;

167. மாதவரம் தொகுதி, புழல் ஏரி உபரி நீர் பாபா நகர் பகுதியில் புகாமல் தடுப்பது குறித்தும்;

168. மாதவரம் தொகுதி, கிரான்ட்லைன் ஊராட்சி, மகாராஜா நகரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

169. தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களின் புதிய பட்டியலினை உருவாக்குவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. எஸ். சுதர்சனம்]

170. மாதவரம் தொகுதி, 22–வது வட்டத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவருவது குறித்தும்;

171. மாதவரம் தொகுதி, மணலி புது நகர் 100–வது பிளாக்கில் பழுதடைந்துள்ள மின்மாற்றியை மாற்றியமைப்பது குறித்தும்;

172. மாதவரம் தொகுதி, மண்டலம்–II, III–ல் வசிப்பவர்களுக்கு குடிசை மாற்று வாரியம்மூலம் இலவச வீடு வழங்குவது குறித்தும்;

173. மாதவரம் தொகுதி, மண்டலம்–III, பால் பண்ணை–III யூனிட், அன்னை வேளாங்கண்ணி நகர், கடப்பா ரோடு, மூலசத்திரம் பகுதிகளில் அங்கன்வாடி மையங்கள் அமைப்பது குறித்தும்;

174. மாதவரம் தொகுதி, மண்டலம்–III–ல் பொன்னியம்மன்மேடு, கல்பாளையம், லட்சுமிபுரம் பகுதிகளில் அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

175. மாதவரம் தொகுதி, மண்டலம்–III–ல் லட்சுமிபுரம் அங்கன்வாடி மையத்திற்குக் கழிப்பறை, குடிநீர் வசதி செய்வது குறித்தும்;

176. மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், கரலப்பாக்கம் ஊராட்சியில் கீழ்கொண்டையார் ரோடு இணைப்பு இடத்தில் பேருந்து நிறுத்தம் அமைப்பது குறித்தும்;

177. மாதவரம் தொகுதி, சோழவரம் பகுதிக்கு முறையாக மாநகரப் பேருந்துகளை இயக்குவது குறித்தும்;

178. மாதவரம் பேருந்து நிலையத்திலிருந்து பெரியபாளையம் வரை குளிர்சாதன பேருந்து இயக்குவது குறித்தும்;

179. மாதவரம் பேருந்து நிலையத்திலிருந்து திருவான்மியூர் வரை குளிர்சாதன பேருந்து இயக்குவது குறித்தும்;

180. சென்னை மாநகர் பகுதியில் குளிர்சாதன சிற்றுந்து இயக்குவது குறித்தும்;

181. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், கோட்டைமேடு பேருந்து நிறுத்தத்தில் அனைத்து பேருந்துகளும் நின்று செல்வது குறித்தும்;

182. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், பெருங்காவூர் காலனியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

183. மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஆங்காடு ஊராட்சியில் உலர்களம் அமைப்பது குறித்தும்;

184. தமிழக அரசு கடந்த ஆண்டு வெளியிட்ட வரைபடத்தில் கொசஸ்தலை ஆறு இடம் பெற வேண்டியது குறித்தும்;

185. மாதவரம் தொகுதி, மண்டலம்–II, III–ல் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைந்து செயல்படுத்துவது குறித்தும்;

186. தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை மதுரையில் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

''1. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;





2. ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் பேரூராட்சியை ஊராட்சி ஒன்றியமாக அறிவிப்பது குறித்தும்;

3. ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலம் ஊராட்சியைப் பேரூராட்சியாக அறிவிப்பது குறித்தும்;

4. ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலகத்திலிருந்து கீரமங்கலம் வழியாக பேராவூரணி வரை அரசு பேருந்து இயக்குவது குறித்தும்;

5. ஆலங்குடி தொகுதி, திருநாளூர் ஊராட்சி, திருநாளூர் தெற்கு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

6. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

7. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் 1, 2 மற்றும் 3 வார்டுகளுக்கு தனியாக நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

8. ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலம் அரசு சீர்மரபினர் மாணவியர் விடுதிக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

9. ஆலங்குடி தொகுதி, கீரமங்கலத்தில் மலர் சந்தை அமைப்பது குறித்தும்;

10. ஆலங்குடி தொகுதி, அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சி, அரசர்குளம் கீழ்பாதி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

11. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

12. ஆலங்குடி தொகுதி, திருவரங்குளம் ஊராட்சி, வம்பன் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

13. L.N. புரம் ஊராட்சி, அணைவயலில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

14. கொத்தமங்கலம் ஊராட்சி, கொத்தமங்கலம் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

15. வல்லத்திராக்கோட்டை ஊராட்சி, வல்லத்திராக்கோட்டையில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

16. குழந்தை விநாயகர் கோட்டை ஊராட்சி, குழந்தை விநாயகர் கோட்டையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

17. கொத்தக்கோட்டை ஊராட்சி, திருவரங்குளம், வம்பன் தேசிய பயறு வகை ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண் கல்லூரி அமைப்பது குறித்தும்;

18. மறமடக்கி ஊராட்சி, மறமடக்கி அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்தும்;

19. ஆலங்குடி பேரூராட்சி, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் அமைப்பது குறித்தும்;

20. வெண்ணவால்குடி ஊராட்சி, வெண்ணவால்குடி அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் அமைப்பது குறித்தும்;

21. திருவரங்குளம் ஊராட்சி, திருவரங்குளம் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் அமைப்பது குறித்தும்;

22. கீரமங்கலம் பேரூராட்சி, கீரமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் அமைப்பது குறித்தும்;

23. குலமங்கலம் வடக்கு ஊராட்சி, குலமங்கலம் வடக்கு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

24. செரியலூர்இனாம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;





25. கொடிவயல் ஊராட்சி, மணிவிளான்வயலில் மின்மாற்றி அமைப்பது குறித்தும்;

26. கீழாத்தூர் ஊராட்சி, வெள்ளாக்குளம் கிழக்கு, மாற்று ஆழ்குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

27. L.N. புரம் ஊராட்சி, வதங்கன் தெருவில் 30,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

28. கீரமங்கலம் பேரூராட்சி, கீரமங்கலம் பெரியார் நகரில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

29. நெடுவாசல் மேற்கு ஊராட்சி, வேளார் தெருவில் மாற்று ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

30. ஆலங்குடி பேரூராட்சி, பழுதடைந்த சாலைகளை நபார்டு திட்டத்தில் சீரமைப்பது குறித்தும்;

31. கீரமங்கலம் பேரூராட்சி, பழுதடைந்த சாலைகளை நபார்டு திட்டத்தில் சீரமைப்பது குறித்தும்;

32. ஆலங்குடி பேரூராட்சியில் உள்ள வார சந்தையை மேம்படுத்துவது குறித்தும்;

33. ஆலங்குடி பேரூராட்சி, செட்டிகுளத்திற்கு நான்கு புறமும் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

34. கல்லாங்குடி ஊராட்சி, கலிபுல்லாநகரில் இஸ்லாமிய பகுதிக்கு மயானம் அமைப்பது குறித்தும்;

35. ஆலங்குடி பேரூராட்சி, ஆலங்குடி போக்குவரத்துப் பணிமனைக்கு அடிப்படை வசதிகள் செய்வது குறித்தும்;

36. அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

37. திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

[திரு. சிவ.வீ. மெய்யநாதன்] [2018 ஜனவரி 12

38. K. ராசியமங்கலம் ஊராட்சி, K. ராசியமங்கலம் பகுதிக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

39. புதுக்கோட்டை விடுதி ஊராட்சி, கும்மங்குளம் கிராமத்திற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

40. பூவற்றக்குடி ஊராட்சி, பூவைமாநகர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி அருகில் உள்ள பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அகற்றி புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

41. கீரமங்கலம் பேரூராட்சி, கீரமங்கலத்திலிருந்து கொடிக்கரம்பை வரை சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

42. நெடுவாசல் கிழக்கு ஊராட்சி, நெடுவாசல் கிழக்கிலிருந்து புள்ளான்விடுதி வடகாடு செல்லும் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இணைப்புச் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

43. மறமடக்கி ஊராட்சி, மறமடக்கியில் வௌவால் சரணாலயம் அமைப்பது குறித்தும்;

44. வேப்பங்குடி ஊராட்சி, இம்மனாம்பட்டி வழியாக புதுக்கோட்டைக்கு செல்லும் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

45. கோவிலூர் ஊராட்சி, கோவிலூர் தெற்கிலிருந்து மேலக்கோட்டை வரை செல்லும் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

46. பூவற்றகுடி ஊராட்சி, பூவை மாநகரிலிருந்து கத்தரிக்காடு வரை செல்லும் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

47. சிலட்டூர் ஊராட்சி, சிலட்டூரிலிருந்து சிட்டாங்காடு வழியாக கரிசக்காடு செல்லும் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலையைச் சீரமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

48. தாந்தாணி ஊராட்சி, புதுக்கோட்டை அறந்தாங்கி சாலையிலிருந்து பொன்னம்பலம் செல்லும் பிரிவு சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

49. விஜயபுரம் ஊராட்சி, விஜயபுரம் நடுகுடியிருப்பு செல்லும் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

50. கீழாத்தூர் ஊராட்சி, கீழாத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

51. ஆலங்குடியில் உரிமையியல் நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

52. திருக்கட்டளை ஊராட்சி, இம்மனாம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

53. கொத்தமங்கலம் ஊராட்சி, கொத்தமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

54. சிலட்டூர் ஊராட்சி, சிலட்டூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

55. பூவற்றகுடி ஊராட்சி, பூவைமாநகர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

56. மறமடக்கி ஊராட்சி, மறமடக்கி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

57. திருநாளூர் ஊராட்சி, திருநாளூர் வடக்கு இலுப்பங்கொல்லையில் மாற்று ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

58. K. ராசியமங்கலம் ஊராட்சி, K. ராசியமங்கலத்தில் கால்நடைக் கிளை மருந்தகம் அமைப்பது குறித்தும்;

[திரு. சிவ.வீ. மெய்யநாதன்] [2018 ஜனவரி 12

59. குலமங்கலம் வடக்கு ஊராட்சி, குலமங்கலம் வடக்கில் கால்நடைக் கிளை மருந்தகம் அமைப்பது குறித்தும்;

60. ஆலங்குடி பேரூராட்சியில் அம்புலி ஆற்றைத் தூர்வாருவது குறித்தும்;

61. தாந்தாணி ஊராட்சி, தாந்தாணியில் மாற்று ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

62. அறந்தாங்கியிலிருந்து ஆவணத்தான் கோட்டை பூவற்றகுடி, வல்லவாரி வழியாக பேராவூரணிக்கு அரசு பேருந்து இயக்குவது குறித்தும்;

63. புதுக்கோட்டையிலிருந்து திருக்கட்டளை, இம்மனாம்பட்டி, தேத்தாம்பட்டி, பொற்பனைகோட்டை, வேப்பங்குடி, மாங்கனாபட்டி, வம்பன் நாலுரோடு வழியாக ஆலங்குடிக்கு அரசு பேருந்து இயக்குவது குறித்தும்;

64. ஆலங்குடியிலிருந்து வடகாடு, புள்ளான்விடுதி, நெடுவாசல் வழியாக திருச்சிற்றம்பலத்திற்கு அரசு பேருந்து இயக்குவது குறித்தும்;

65. ஆலங்குடியிலிருந்து மலையூருக்குக் கூடுதல் பேருந்து இயக்குவது குறித்தும்;

66. கீரமங்கலம் பேரூராட்சியை புதிய வட்டமாக அறிவிப்பது குறித்தும்;

67. ஆலங்குடி பகுதியில் விளையும் விளைபொருட்களைச் சேமிப்பதற்கு குளிர்சாதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

68. கீழமாத்தூர் ஊராட்சி, கீழாத்தூர் நாடியம்மன் கோயிலுக்கு இராஜகோபுரம் அமைப்பது குறித்தும்;

69. குலமங்கலம் தெற்கு ஊராட்சி, குலமங்கலம் ஸ்ரீ பெருங்காரையடி மீண்ட அய்யனார் கோயிலுக்கு அறந்தாங்கி மற்றும் கீரமங்கலத்திலிருந்து பேருந்து இயக்குவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

70. குலமங்கலம் தெற்கு ஊராட்சி, குலமங்கலம் ஸ்ரீ பெருங்காரையடி மீண்ட அய்யனார் கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்தும்;

71. கொத்தமங்கலத்திலிருந்து சென்னைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்தும்;

72. புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரியிலிருந்து ஆலங்குடி சாலை மற்றும் அறந்தாங்கி செல்லும் நெடுஞ்சாலைகளை இணைக்கும் புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

73. குரும்பூர் ஊராட்சி, காட்டுத்தட்டாங்வயல் கிராமத்திற்குப் புதிய மாற்று ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

74. கீரமங்கலம் பகுதியில் பயிரிடப்படும் மலர்களைச் சேமிப்பதற்கு குளிர்சாதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

75. வடகாடு ஊராட்சி, வடகாடு முதல் கொத்தமங்கலம் செல்லும் பழுதடைந்த சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

76. ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகளை மராமத்து செய்வது குறித்தும்;

77. கீரமங்கலம் பேரூராட்சி, கீரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

78. கொத்தமங்கலம் ஊராட்சி, கொத்தமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

79. மேற்பனைக்காடு ஊராட்சி, மேற்பனைக்காடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

[திரு. சிவ.வீ. மெய்யநாதன்] [2018 ஜனவரி 12

80. பூவற்றக்குடி ஊராட்சி, பூவைமாநகர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆழ்துளைக் குழாய்க் கிணறு மற்றும் சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

81. திருவரங்குளம் ஊராட்சி, திருவரங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய பழுதடைந்த கட்டடங்களை மராமத்து செய்வது குறித்தும்;

82. மறமடக்கி ஊராட்சி, மறமடக்கி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆழ்துளைக் குழாய்க் கிணறு மற்றும் சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

83. வடகாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

84. குளவாய்பட்டி ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

85. ராஜேந்திரபுரம் ஊராட்சி, எருக்கலகோட்டையில் உள்ள ராஜேந்திரபுரம் S.S.II மின்மாற்றியை இரண்டாகப் பிரித்து புதிய மின்மாற்றி அமைப்பது குறித்தும்;

86. ஆயிங்குடி ஊராட்சி, ஆயிங்குடி வீரங்குண்டான் ஏரி பாசன வாய்க்காலைத் தூர் வாரி தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

87. மாத்தூர் ஊராட்சி, மாத்தூரில் கல்லணை நீட்டிப்பு வாய்க்காலைத் தூர் வாருவது குறித்தும்;

88. அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சி, அரசர்குளம் கீழ்பாதியிலிருந்து பிரிந்து செல்லும் கல்லணை நீட்டிப்பு வாய்க்காலைத் தூர் வாருவது குறித்தும்;

89. ஆயிங்குடி ஊராட்சி, ஆயிங்குடியில் உள்ள அரசு துணை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர்களை நியமனம் செய்வது குறித்தும்;

90. இம்மனாம்பட்டியிலிருந்து வேப்பங்குடி செல்லும் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

91. இம்மனாம்பட்டியிலிருந்து பொற்பனைகோட்டை, மணிப்பள்ளம் வரை செல்லும் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

92. வம்பன் நாலுரோட்டிலிருந்து வேப்பங்குடி வழியாக வேங்கிடாகுளம் செல்லும் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

93. வல்லவாரி ஊராட்சி, வல்லவாரி மேற்கு பிள்ளையார் கோயில் அருகில் புதிய மின்மாற்றி அமைப்பது குறித்தும்;

94. வல்லவாரி ஊராட்சி, வல்லவாரி கிழக்கு தேவர்குடியிருப்பில் புதிய மின்மாற்றி அமைப்பது குறித்தும்;

95. வல்லவாரி ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

96. ஆயிங்குடி ஊராட்சி, ஆயிங்குடி நெய்வத்தளி இணைப்புச் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

97. ஆயிங்குடி ஊராட்சி, ஆயிங்குடி தெற்கு காமாட்சி அம்மன் கோயில் அருகே புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

98. அறந்தாங்கியிலிருந்து கடையாத்துப்பட்டி, நற்பவளக்குடி, செங்கமாரி வழியாக திருமயத்திற்கு அரசு பேருந்து இயக்குவது குறித்தும்;

99. கைக்குறிச்சி ஊராட்சி, புதுக்கோட்டை - அறந்தாங்கி நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து விஜயரெகுநாதபுரம் செல்லும் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

100. ஆலங்குடி - புதுக்கோட்டை சாலையில் பிரிந்து கொத்தக்கோட்டை அம்மையன்புரம் செல்லும் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

101. ஆலங்குடி - புதுக்கோட்டை சாலையிலிருந்து பிரிந்து K.V. கோட்டை செல்லும் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

[திரு. சிவ.வீ. மெய்யநாதன்] [*2018 ஜனவரி 12*

*102.* வேங்கிடாகுளத்திலிருந்து வல்லத்திராக்கோட்டை செல்லும் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

*103.* கத்தக்குறிச்சி ஊராட்சி, அறந்தாங்கி - புதுக்கோட்டை சாலையில் பிரிந்து முடுக்குபுஞ்சை செல்லும் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

*104.* மாங்காடு ஊராட்சி, மாங்காடு சுந்தரக்குடியிருப்பு பகுதியில் மாற்று ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

**திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“*1.* தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் அனைத்து யூனிட்டிலும் தொடர்ந்து மின் உற்பத்தி செய்வது குறித்தும்;

*2.* தூத்துக்குடி மாநகராட்சியோடு புதியதாக இணைக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்வது குறித்தும்;

*3.* தூத்துக்குடி மாநகராட்சியில் தரமான சாலைகள் அமைக்க வேண்டியது குறித்தும்;

*4.* தூத்துக்குடி மாநகராட்சி, தெற்கு மண்டலத்தில் நகர்ப்புற மருத்துவ நிலையம் அமைப்பது குறித்தும்;



*2018 ஜனவரி 12*] [திருமதி பி. கீதா ஜீவன்]

*5.* தூத்துக்குடி மாநகராட்சிக்கு அறிவிக்கப்பட்ட வெள்ளத் தடுப்புப் பணிகளை நிறைவேற்றுவது குறித்தும்;

*6.* தூத்துக்குடி தாலுகாவில் சாதி, வருமானச் சான்றிதழ்கள் வழங்கும் பணிகளை விரைவுபடுத்துவது குறித்தும்;

*7.* தூத்துக்குடி தொகுதியில் ‘ஒகி’ புயலில் உயிரிழந்த *5* மீனவக் குடும்பங்களுக்கு அரசு வேலை வழங்குவது குறித்தும்;

*8.* தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் புதிய மினி பேருந்து இயக்குவது குறித்தும்;

*9.* தூத்துக்குடியில் விசைப் படகுகள்மூலம் மீன் பிடிக்கச் செல்ல நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

*10.* தூத்துக்குடி மாநகராட்சியில் அரசு நத்தம் புறம்போக்கு இடத்தில் வசிப்போருக்குப் பட்டா வழங்குவது குறித்தும்;

*11.* நலிவடைந்த மிகவும் ஏழ்மையான முதியோர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்குவது குறித்தும்;

*12.* தூத்துக்குடி மாநகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றுவது குறித்தும்;

*13.* தூத்துக்குடி மாநகராட்சி *4*—வது பைப் லைன் திட்டத்தின்மூலம் இணைப்பு வழங்குவது குறித்தும்;

*14.* தூத்துக்குடி மாநகராட்சியில் குடிநீர் இணைப்பு பெறாதவர்களுக்கு தெருக்களில் பொது நல்லி வைப்பது குறித்தும்;

*15.* தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் மருத்துவ உயர் கல்வி பிரிவுகள் மற்றும் செவிலியர் பட்டப் படிப்பு பிரிவுகள் துவக்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

[2018 ஜனவரி 12

**திருமதி பெ. சீத்தாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. திட்டக்குடி பேரூராட்சிக்குக் கொள்ளிடம் ஆற்றிலிருந்து குடிநீர் வசதி செய்வது குறித்தும்;

2. இராமநத்தம்–கருவேப்பிலங்குறிச்சி வரை உள்ள நெடுஞ்சாலையை அகலப்படுத்தி மேம்படுத்துவது குறித்தும்;

3. பெண்ணாடம்–விருத்தாசலம் வரை உள்ள நெடுஞ்சாலையை அகலப்படுத்தி மேம்படுத்துவது குறித்தும்;

4. திட்டக்குடி பேரூராட்சியில் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

5. திட்டக்குடி பேரூராட்சியில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

6. திட்டக்குடி–திருப்பதி, பெண்ணாடம்–பெங்களூர், கழுதூர்–சென்னை மற்றும் மங்களூர்–சென்னை ஆகிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

7. திட்டக்குடி வட்டம் சிறுபாக்கத்தில் கால்நடை மருந்தகம் துவங்குவது குறித்தும்;

8. திட்டக்குடி பேரூராட்சியில் மருத்துவக் கல்லூரி துவங்குவது குறித்தும்;

9. திட்டக்குடி பேரூராட்சியில் புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

10. சிறுபாக்கம் கிராமத்தில் அரசு கூட்டுறவு நூற்பாலைத்துவங்குவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. வெ. கணேசன்]

11. பெண்ணாடம்–கோணூர் நெடுஞ்சாலையை அகலப்படுத்தி மேம்படுத்துவது குறித்தும்;

12. திட்டக்குடி தொகுதி, நல்லூர் ஒன்றியத்தில் உள்ள 35 ஊராட்சிகளில் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

13. ஆவட்டி கூட்டுச் சாலையிலிருந்து பாளையம் வரை உள்ள சாலையை நெடுஞ்சாலைத் துறைமூலம் மேம்படுத்துவது குறித்தும்;

14. திட்டக்குடி வட்டம், மங்களூர் ஒன்றியத்தில் ஜா. ஏந்தல், வடபாதி, S. நனாயூர் ஊராட்சிகளுக்குத் திறந்தவெளி கிணறுகள் அமைப்பது குறித்தும்;

15. திட்டக்குடி வட்டம், கணபதிகுறிச்சி பெலாந்துரை, கொல்லத்தன் குறிச்சி ஆகிய கிராமங்களில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

16. திட்டக்குடி–ஆவட்டி கூட்டுச் சாலை வரை சாலை மேம்படுத்துவது குறித்தும்;

17. கழுதூர் கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

18. திட்டக்குடி அருகே உள்ள வெலிங்டன் ஏரியின் சாலையைப் பலப்படுத்துவது குறித்தும்;

19. வெலிங்டன் ஏரியின் பாசன வாய்க்கால்களைத் தூர்வாருவது குறித்தும்;

20. வெலிங்டன் ஏரியின் அருகே சுற்றுலாத்தலம் அமைப்பது குறித்தும்;

21. திட்டக்குடியில் உள்ள அரசு பேருந்து பணிமனைக்கு நிரந்தர கட்டடம் கட்டுவது குறித்தும்;

22. திட்டக்குடி தொகுதியில் உள்ள கீழக்கல் பூண்டி ஊராட்சி அருகே வெள்ளாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. திருவிடைமருதூர் ஒன்றியம், நல்லாடை ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

2. திருவிடைமருதூர் ஒன்றியம், திருமலைராசபுரம் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

3. வேப்பத்தூர் பேரூராட்சி, அம்மன்பேட்டையில் சமுதாய நலக் கூடம் கட்டுவது குறித்தும்;

4. திருபுவனம் பேரூராட்சி, காங்கேயம்பேட்டையில் சமுதாய நலக் கூடம் கட்டுவது குறித்தும்;

5. திருவிடைமருதூர் ஒன்றியம், பவுண்டரீகபுரத்தில் சமுதாய நலக் கூடம் கட்டுவது குறித்தும்;

6. திருவிடைமருதூர் ஒன்றியம், ஆடுதுறை பேரூராட்சியில் கும்பகோணம்–மயிலாடுதுறை செல்லும் சாலையிலும், கும்பகோணம்–காரைக்கால் இணைக்கும் சாலையில் உள்ள இரயில்வே பாதையிலும் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [முனைவர் கோவி. செழியன்]

7. திருவிடைமருதூர் ஒன்றியம், ஆண்டலாம்பேட்டை முதல் முருக்கன்குடி வரை உள்ள சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

8. திருவிடைமருதூர் அரசு மருத்துவமனை பிணவறையில் குளிர்சாதன வசதி செய்வது குறித்தும்;

9. விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் அறிவிப்பது குறித்தும்;

10. திருவிடைமருதூரில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

11. திருவிடைமருதூர் தொகுதியில் புத்தூர், மரத்துறை ஆகிய பகுதிகளில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

12. திருவிடைமருதூர் தொகுதியில் உள்ள நியாய விலைக் கடைகளில் பணியாளர்கள் பற்றாக்குறை குறித்தும்;

13. திருவிடைமருதூர் வட்டம், அணைக்கரையில் உள்ள மீன் அங்காடிகளுக்குக் குளிர்சாதன பெட்டி அமைப்பது குறித்தும்;

14. அனைத்து சத்துணவுக் கூடங்களுக்கும் மேசை, நாற்காலி, பீரோ வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

**திருமதி பெ. சீத்தாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

[திருமதி பெ. சீத்தாபதி] [2018 ஜனவரி 12

"1. திண்டிவனம் நகராட்சி, பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

2. மரக்காணம் பகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

3. திண்டிவனம் நகராட்சியில் உள்ள கடைத்தெருவில் வணிக வளாகம் அமைப்பது குறித்தும்;

4. திண்டிவனம் கிடங்கில் ஏரிவாய்க்கால் தரைப்பாலம் அமைப்பது குறித்தும்;

5. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட ஆவணிப்பூர் மகப்பேறு மருத்துவமனைக்குக் கூடுதல் மருத்துவர் மற்றும் செவிலியர் நியமனம் செய்வது குறித்தும்;

6. திண்டிவனம் தொகுதிக்குப்பட்ட 31 இடங்களுக்கு அங்கன்வாடி மையக் கட்டடம் அமைத்துத் தருவது குறித்தும்;

7. மரக்காணத்தில் மீனவர்கள் நிறைந்த பகுதியில் துறைமுகம் அமைப்பது குறித்தும்;

8. ஆதி திராவிடர் மாணவர்கள் விடுதிக் காப்பாளர்கள் 3 ஆண்டுக்கு ஒருமுறை பணி இடமாற்றம் செய்து விடுதிகளை நன்கு பராமரிப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

**திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.



2018 ஜனவரி 12]

**திரு. ஒய். பிரகாஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. தளி தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

2. தளி தொகுதியில் பொறியியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

3. தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் அதிநவீன மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

4. தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

5. தளி தொகுதி, மதகொண்டப்பள்ளியில் காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

6. தளி தொகுதி, அஞ்செட்டியை தனி ஒன்றியமாக அறிவிப்பது குறித்தும்;

7. தளி தொகுதியில் உள்ள தளி, தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம், அஞ்செட்டி ஆகிய மருத்துவமனைகளுக்கு அதிநவீன கருவிகள் வழங்குவது குறித்தும், காலியாக உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் உதவியாளர்களை நியமிப்பது குறித்தும்;

8. தளி தொகுதியில் அரசு பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

9. தளி தொகுதி, அஞ்செட்டியில் மகளிர் விடுதி அமைப்பது குறித்தும்;

10. தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் 110 KV துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கி. சரவணன் அவர்கள்.

[2018 ஜனவரி 12

**திரு. துரை கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. பாளையங்கோட்டை தொகுதியில் பாளையங்காலில் சாக்கடை கழிவுகள், அமலைச் செடிகள் மற்றும் ஆக்கிரமிப்புகளையும் அகற்றி சிமெண்ட் லைனிங் அமைப்பது குறித்தும்;

2. நெடுஞ்சாலைத் துறையின்மூலம் சாலை அமைக்க ஒப்பந்தம் முடிந்த பணிகளை விரைந்து செயல்படுத்துவது குறித்தும்;

3. திருநெல்வேலி மாநகராட்சியில் சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

4. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் கழிப்பிடங்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது குறித்தும்;

5. பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரிவுப்படுத்துவது குறித்தும்;

6. அண்ணா ஸ்டேடியம், மேலப்பாளையம் மினி ஸ்டேடியம், பாளை பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம், இரண்டு ஜிம்கள் ஆகியவற்றைச் சீரமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.



2018 ஜனவரி 12]

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. டெல்டா பகுதியில் சம்பா பயிர்களை காக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்தும்;

2. மன்னார்குடி–மதுக்கூர்–பட்டுக்கோட்டை நெடுஞ்சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

3. மன்னார்குடி தொகுதியிலுள்ள பழுதடைந்த சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

4. மன்னார்குடியில் விவசாயம் சார்ந்த தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும்;

5. நீடாமங்கலத்தில் இரயில்வே மேம்பாலத்திற்கான பணிகள் துவங்குவது குறித்தும்;

6. மன்னார்குடி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றுவது குறித்தும்;

7. மன்னார்குடி தொகுதி, திருமக்கோட்டை ஊராட்சி, திருமேணி ஏரிக்கரை நரிக்குறவர்களுக்கு வீடுகள் உள்பட அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்துவது குறித்தும்;

8. மன்னார்குடி அரசு போக்குவரத்து பணிமனையில் இயக்கப்பட்டு வரும் பழுதடைந்த பேருந்துகளுக்கு மாற்றாக புதிய பேருந்துகளை இயக்குவது குறித்தும்;

[திரு. டி.ஆர்.பி. ராஜா] [2018 ஜனவரி 12

9. பொதக்குடி, தளிக்கோட்டை, உள்ளிக்கோட்டை, திருமக்கோட்டை மற்றும் தலையாமங்கலம் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தி 24 மணி நேரமும் மருத்துவர்களை நியமிப்பது குறித்தும்;

10. மன்னார்குடி தொகுதியில் பல்வேறு இடங்களில் நிலவி வரும் குடிநீர் பற்றாக்குறைக்கு தீர்வு காண்பது குறித்தும்;

11. இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் அதற்கென தனிப்பிரிவு அமைப்பது குறித்தும்;

12. டெல்டா பகுதியில் நிலத்தடி நீர் வளத்தை பாதுகாப்பது குறித்தும்;

13. மன்னார்குடி தொகுதி, கீழத்திருப்பாலக்குடி ஊராட்சி, ஆலங்கோட்டை வளந்தான் ஏரியை தூர் வாரி சீரமைப்பது குறித்தும்;

14. இரசாயன உரங்களினால் மக்களுக்கு ஏற்படும் உடல் உபாதைகளை தவிர்ப்பது குறித்தும்;

15. மன்னார்குடியில் உள்ள அனைத்து நீர் நிலைகளையும் தூர் வாரி இணைப்பது குறித்தும்;

16. மன்னார்குடியில் விசைத்தறி தொழிலாளர்களுக்கு சிறப்புச் சலுகைகள் அளிப்பது குறித்தும்;

17. சிறுதானிய வகைகளை பயிரிடும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையும் வட்டியில்லா கடனும் வழங்குவது குறித்தும்;

18. காவேரியில் பல்வேறு இடங்களில் தடுப்பணைகள் அமைத்து நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவது குறித்தும்;

19. மன்னார்குடி–பட்டுக்கோட்டை அகல இரயில் பாதை திட்டத்தை விரைந்து முடிப்பது குறித்தும்;

20. மன்னார்குடியில் புதிய டிஜிட்டல் நூலகம் அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. டி.ஆர்.பி. ராஜா]

21. மன்னார்குடியில் லீ குவான் யூ–விற்கு மணி மண்டபம் அமைப்பது குறித்தும்;

22. மன்னார்குடி வேளாண் உபகோட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

23. முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு அரசு வேலையில் முன்னுரிமை அளிப்பது குறித்தும்;

24. மன்னார்குடியில் அரசு பேருந்து நிலையத்தை புதுப்பித்து நவீனமயமாக்குதல் குறித்தும்;

25. மன்னார்குடியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைத்திடுதல் குறித்தும்;

26. மன்னார்குடி நகரில் சட்டுருட்டி வாய்க்காலை தூர் வாரிச் சீரமைப்பது குறித்தும்;

27. மன்னார்குடியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

28. மன்னார்குடியில் வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

29. நீடாமங்கலம் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

30. மன்னார்குடி வேளாண் உபகோட்ட அலுவலகத்திற்கு தேவையான விவசாய உபகரணங்கள் வழங்குவது குறித்தும்;

31. நீடாமங்கலம் ஒன்றியம், வடுவூர் ஏரியை தூர் வாரிக் கரைகளைப் பலப்படுத்தித் தடுப்பணைகள் அமைப்பது குறித்தும்;

32. மன்னார்குடி நகரில் கர்த்தநாதபுரம் பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல் குறித்தும்;

33. மன்னார்குடி நகரில் புதிய உள்விளையாட்டு அரங்கம் அமைப்பது குறித்தும்;

[திரு. டி.ஆர்.பி. ராஜா] [2018 ஜனவரி 12

34. மகாதேவப்பட்டிணம்–கருவாக்குறிச்சி இடையே காட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் குறித்தும்;

35. மன்னார்குடி நகரில் உள்ள அரித்திராநதி தெப்பக்குளத்தைச் சீரமைத்து சுற்றுலாத் தலமாக மாற்றுவது குறித்தும்;

36. பாமணி உரத் தொழிற்சாலையை மேம்படுத்தி அதன்மூலம் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது குறித்தும்;

37. மன்னார்குடி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், தெற்கு தென்பரை–பாலையூர் இடையே புதிய பாலம் கட்டுவது குறித்தும்;

38. மன்னார்குடி தொகுதியில் பல்வேறு இடங்களில் நிலவி வரும் பட்டா பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்தும்;

39. மன்னார்குடியில் அரசு பாலிடெக்னிக் துவங்குவது குறித்தும்;

40. மன்னார்குடி தொகுதியில் எடகீழையூர், தென்பரை, ராயபுரம், நெடுவாக்கோட்டை, கர்ணாவூர் ஆகிய ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

41. மன்னார்குடி தொகுதி, கற்கோவில்–கருவேலங்குளம் மற்றும் இடையர் எம்பேத்தி போன்ற கிராமங்களுக்குப் புதிய அரசு பேருந்து வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.

**திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.



2018 ஜனவரி 12]

**டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. செய்யூர் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

2. செய்யூர் தொகுதியில் மாணவ மாணவிகளுக்கு அனைத்து போட்டித் தேர்வுகளிலும் பங்கு பெறும் வகையில் தேர்வு பயிற்சி மையம் அமைப்பது குறித்தும்;

3. செய்யூர் தொகுதியில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

4. செய்யூர் தொகுதியில் தேங்காய் நாறு தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

5. செய்யூர் அரசு மருத்துவமனைக்கு Scan Digital X–Ray கருவி வழங்கி நவீனப்படுத்துவது குறித்தும்;

6. செய்யூர் அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

7. செய்யூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதலாக மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள், இரவுக் காவலர்கள் மற்றும் கண் மருத்துவர்கள் நியமிப்பது குறித்தும்;

8. செய்யூர் தொகுதியில் உள்ள 3 கிராமங்களுக்கு ஒரு துணை சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

9. செய்யூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், நெரும்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

10. செய்யூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், வல்லிபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

[டாக்டர் ஆர்.டி. அரசு] [2018 ஜனவரி 12

11. செய்யூர் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சி, கடப்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

12. செய்யூர் தொகுதியில் உள்ள சூனாம்பேடு, பொலம்பாக்கம், கடப்பாக்கம், கயப்பாக்கம், கூவத்தூர், பவுஞ்சூர், கே நெல்வாய் மற்றும் நெரும்பூர் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு Scan, X–Ray வசதி செய்வது குறித்தும்;

13. செய்யூர் தொகுதியில் உள்ள கிராமங்களுக்குப் போதிய குடிநீர் மற்றும் சாலை வசதி செய்வது குறித்தும்;

14. செய்யூர் தொகுதியில் வடக்கு செய்யூர், வாயலூர், தண்ணீர்பந்தல்மேடு, செய்யூர் பஜார், சௌபாக்கிய நகர், பேருந்து நிலையம் மற்றும் தேவையான கிராமங்களுக்கு மழை நீர் வடிகால்வாய் அமைப்பது குறித்தும்;

15. செய்யூர் தொகுதியில் உள்ள மேற்கு செய்யூர் கிராமத்திற்குப் புதிய சாலைகள் அமைப்பது குறித்தும்;

16. செய்யூர் தொகுதியில் உள்ள கிராமங்களுக்குப் புதிய பேருந்து வழித்தடம் மற்றும் தற்போதுள்ள வழித்தடத்தை நீட்டித்துத் தருவது குறித்தும்;

17. செய்யூர் தொகுதியில் சேதமடைந்த பள்ளிக் கட்டடங்களை அகற்றி புதிய கட்டடங்கள் அமைப்பது குறித்தும்;

18. செய்யூர் தொகுதியில் உள்ள அரசுப் பள்ளிகள் மற்றும் ஆதி திராவிட நலத் துறை பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பி அப்பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர்கள் அமைப்பது குறித்தும்;

19. செய்யூர் தொகுதியில் குப்பைக்கிடங்கு அமைப்பது குறித்தும்;

20. செய்யூர் தொகுதியில் உள்ள சேதமடைந்த பழைய குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அகற்றி புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [டாக்டர் ஆர்.டி. அரசு]

21. செய்யூர் தொகுதியில் உள்ள செய்யூர்–பவுஞ்சூர் சாலை மற்றும் செய்யூர் பஜார் சால்ட்ரோடு ஆகிய சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

22. செய்யூர் பேருந்து நிலையத்திற்கு பேவர்பிளாக் (Paverblock) கற்கள் கொண்டு தரைதளம் அமைத்து சுகாதாரமான பேருந்து நிலையாக மாற்றுவது குறித்தும்;

23. செய்யூர் தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனையை சுகாதாரமான மருத்துவமனையாக மாற்றுவது குறித்தும்;

24. செய்யூர் தொகுதியில் தொழிற்பயிற்சி மையம் அமைப்பது குறித்தும்;

25. செய்யூர் தொகுதியில் தொழில் பூங்கா அமைப்பது குறித்தும்;

26. செய்யூர் தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு விதைகள், உரங்கள் மற்றும் வேளாண்மைக் கருவிகள் ஆகியவை சீராக வழங்கி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் பயிர்க்கடன் மற்றும் பயிர்க் காப்பீட்டு தொகையினை விரைவாக வழங்குவது குறித்தும்;

27. செய்யூர் தொகுதியில் குடிசை வீடுகளுக்கு வழங்கப்படும் நிதி உதவி ரூ.5000/–லிருந்து ரூ.50,000/–ஆக உயர்த்தி வழங்குவது குறித்தும்;

28. செய்யூர் தொகுதியில் உள்ள ஆலம்பரை கோட்டையைச் சீரமைத்து சுற்றுலாத் தலமாக மேம்படுத்து குறித்தும்;

29. செய்யூர் தொகுதியில் உள்ள ஆலம்பர கோட்டையில் துறைமுகம் அமைத்து மீனவர்களுக்குத் தரமான வாக்கி டாக்கி வழங்கி மீனவர்களின் குழந்தைகள் மீன்வளப் பல்கலைகழகத்தில் B.F.SC. பிரிவில் சேர்ந்து படிக்க முன்னுரிமை வழங்குவது குறித்தும்;

30. செய்யூர் தொகுதியில் உள்ள மீனவ கிராமங்களில் தூண்டில் வளைவுகளும், பலூன் தடுப்புகள் அமைத்தும், மீன்பிடி தடைக்காலத்தில் வழங்கப்படும் உதவி தொகையினை ரூ.25,000/–ஆக உயர்த்துவது குறித்தும்;

[டாக்டர் ஆர்.டி. அரசு] [2018 ஜனவரி 12

31. செய்யூர் தொகுதியில் உள்ள மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசல் மானிய தொகையினை பயனாளிகளின் வங்கி கணக்கில் செலுத்துவது, மீன்பிடிக்கும்போது உயிரிழக்கும் மீனவர் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.5,00,000/– மற்றும் ஒருவருக்கு அரசு வேலை வழங்குவது, மீனவர்களுக்கு தேவையான மீன்பிடி சாதனங்கள் மானிய விலையில் வழங்குவது மற்றும் அனைத்து முகத்துவாரங்களையும் தூர் வாரி படகு நிறுத்துமிடத்தை மேம்படுத்துவது குறித்தும்;

32. செய்யூர் தொகுதியில் உள்ள பழங்குடியின மக்களுக்குப் புதிய தரமான கான்கிரீட் வீடுகளை வீட்டுமனை பட்டாக்களுடன் வழங்குவது மற்றும் மத்திய, மாநில அரசுகளால் வழங்கப்படும் வீடுகளைக் கட்டுவதற்கு தேவையான கட்டுமான பொருட்கள் விரைவாக வழங்குவது குறித்தும்;

33. செய்யூர் தொகுதியில் கிராம நத்தம் மற்றும் இதர புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு வீட்டுமனை பட்டா மற்றும் வீடு இல்லாதவர்களுக்கு மத்திய, மாநில அரசால் வழங்கப்படும் தரமான கான்கிரீட் வீடுகள் மற்றும் இலவச வீட்டு மனை பட்டாக்கள் விரைவாக வழங்குவது குறித்தும்;

34. செய்யூர் தொகுதி. திருக்கழுக்குன்றம் ஒன்றியம், விட்டிலாபுரம் ஊராட்சியில் பேரம்பாக்கம் கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர் நலப் பள்ளியில் பழுதடைந்த கட்டடங்களை அகற்றி புதிய கட்டடங்கள் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

**திரு. எஸ். அம்பேத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.



2018 ஜனவரி 12]

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்திற்கு நீர் ஆதாரமாக விளங்கும் ஆனைமலையாறு திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

2. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திற்கு கூடுதல் நீர் ஆதாரமாக விளங்கும் நல்லார் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

3. மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் வட்ட அரசு மருத்துவமனையை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவது குறித்தும்;

4. மடத்துக்குளம் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

5. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மலை கிராமங்களில் அடிப்படை வசதிகள் செய்வது குறித்தும்;

6. மடத்துக்குளம் தொகுதியில் அமராவதி ஆற்றின் குறுக்கே தேவையான இடங்களில் தடுப்பணைக் கட்டுவது குறித்தும்;

7. அமராவதி அணையின் நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்காக அப்பர் அமராவதி திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும்;

8. மடத்துக்குளம் தொகுதியில் ஆனைமலை–பூலாங்கிணறு சாலை விரிவாக்கம் குறித்தும்;

9. மடத்துக்குளம் தொகுதியில் காரத்தொழுவு–குமரலிங்கம் சாலை விரிவாக்கம் குறித்தும்;

10. மடத்துக்குளம் தொகுதியில் மடத்துக்குளம்–துங்காவி–கோட்டமங்கலம்–பெதப்பம்பட்டி வரையிலான சாலையை விரிவாக்கம் செய்து புறவழிச் சாலையாக அமைப்பது குறித்தும்;

[திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்][2018 ஜனவரி 12

11. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் அனைத்து வசதிகளுடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

12. மடத்துக்குளம் தொகுதியில் தகுதியுள்ள அனைத்து முதியவர்களுக்கும் முதியோர் உதவித் தொகை வழங்குவது குறித்தும்;

13. விவசாயிகளின் அனைத்து விளைப் பொருட்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலையை உறுதிப்படுத்துவது குறித்தும்;

14. படித்த தகுதியுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது குறித்தும்;

15. மடத்துக்குளம் தொகுதியில் அமராவதி பாசனத் திட்டம் மற்றும் பரம்பிக்குளம் ஆழியார் பாசனத் திட்டம்மூலம் சீரான நீர்ப்பங்கீடு மற்றும் நவீன நீர்பாசன முறையை நடைமுறைப்படுத்துவது குறித்தும்;

16. விவசாய மின் இணைப்புகளுக்கு 24 மணி நேரமும் தொடர்ந்து மும்முனை மின்சாரம் வழங்குவது குறித்தும்;

17. விவசாயிகளுக்கு வழங்கப்படும் சாதாரண நடைமுறையை மின் இணைப்பு வழங்கும் திட்டத்தில் பதிவு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் வழங்குவது குறித்தும்;

18. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஆய்வு முடிக்கப்பட்ட புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

19. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் கட்டப்பட்டுள்ள இ–சேவை மையக் கட்டடங்களை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவது குறித்தும்;

20. மடத்துக்குளத்தில் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

21. மடத்துக்குளம் தொகுதி, கணக்கம்பாளையம் எஸ்.வி.புரம் பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

22. மடத்துக்குளம் - பூலாங்கிணறு பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்]

23. மடத்துக்குளம் தொகுதியில் அமராவதி ஆற்றின் குறுக்கே கண்ணாடி புத்தூர் மற்றும் பசுபதி புத்தூர் கிராமத்தை இணைக்கும்வகையில் உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

24. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்புவது குறித்தும்;

25. மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் பேரூராட்சியில் மின் மயானம் அமைப்பது குறித்தும்;

26. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட ஊராட்சிகளில் திருமண மண்டபம் அமைப்பது குறித்தும்;

27. திருப்பூர் மாவட்டம், திருப்பூரில் மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

28. திருப்பூர் மாவட்டம், திருப்பூரில் சட்டக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

29. திருப்பூர் மாவட்டம், திருப்பூரில் தலைமை மருத்துவமனையை அனைத்து வசதிகளுடன் தரம் உயர்த்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

**திரு. எஸ். அம்பேத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

[திரு. எஸ். அம்பேத்குமார்] [*2018 ஜனவரி 12*

"*1.* வந்தவாசி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு உள் விளையாட்டு அரங்கம் அமைப்பது குறித்தும்;

*2.* திண்டிவனம்–மேல்மருவத்தூர் சாலையை புறவழிச் சாலையாக மாற்றுவது குறித்தும்;

*3.* மேல்மருவத்தூர் சாலையிலிருந்து காஞ்சிபுரம் சாலை செல்வதற்கு புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

*4.* காஞ்சிபுரம் சாலையிலிருந்து செய்யாறு சாலை செல்வதற்கு புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

*5.* பெரணமல்லூர் பேரூராட்சிக்குப் புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

*6.* பெரணமல்லூரில் புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

*7.* பெரணமல்லூர் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைப்பது குறித்தும்;

*8.* வந்தவாசி நகராட்சிக்கு பாதாளச் சாக்கடை அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன் அவர்கள்.

**திரு. சௌ. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:



*2018 ஜனவரி 12*] [திரு. சௌ. தங்கப்பாண்டியன்]

"*1.* இராஜபாளையம் நகராட்சிக்கு மத்திய மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டத்தின்கீழ் ரூ.*258.25* கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைத் துரிதப்படுத்துவது குறித்தும்;

*2.* இராஜபாளையம் நகர், சத்திரப்பட்டி ரோட்டில் இரயில்வே கடவு எண் *449*–ல் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

*3.* இராஜபாளையம் PACR அரசு மருத்துவமனைக்கு *201.75* இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய CT ஸ்கேன் கருவி வழங்குவது குறித்தும்;

*4.* இராஜபாளையம் தொகுதியில், தமிழ்நாடு விபத்து மற்றும் அவசரச் சிகிச்சை முன்னெடுப்பு சேவை, தேசிய நலவாழ்வு குழும நிதி மற்றும் சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையம் அமைப்பது குறித்தும்;

*5.* இராஜபாளையம் தொகுதி, வடக்கு தேவதானம் சாஸ்தாகோவில் சாலையில் புதிய தார்ச் சாலை அமைப்பது குறித்தும்;

*6.* இராஜபாளையம் தொகுதி, தெற்கு தேவதானம் கோவிலூர் அருகிலுள்ள அரசு விதைப் பண்ணையில் அமைக்கப்பட்ட போர்வெல்லுக்கு மின் இணைப்பு வழங்குதல் மற்றும் மீதமுள்ள *42* ஏக்கரிலும் விதைகளை உற்பத்தி செய்வது குறித்தும்;

*7.* இராஜபாளையம் தொகுதியில் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் மீண்டும் துவரம் பருப்பு வழங்குவது மற்றும் அனைத்து பொருட்களும் தடையில்லாமல் வழங்குவது குறித்தும்;

8. இராஜபாளையம் தொகுதி, சேத்தூர் பேரூராட்சியில் சாஸ்தா கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மத்திய, மாநில அரசு உதவியுடன் நிறைவேற்றுவது குறித்தும்;

9. இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் Lab Technicians மற்றும் மருத்துவர்கள் நியமிப்பதும், மருத்துவமனையைத் தரம் உயர்த்துவது குறித்தும்;

10. இராஜபாளையம் நகராட்சிக்குட்பட்ட அய்யனார்கோயில் ஆறாம் மயில் இரண்டாம் நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்படும் நீர்க் கசிவை சரிசெய்வது குறித்தும்;

11. இராஜபாளையம் அய்யனார் கோயிலுக்குச் சென்று வர ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவது குறித்தும்;

12. இராஜபாளையம் தொகுதியில், அம்ரூத் திட்டத்தின்கீழ் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரைவில் முடிப்பது குறித்தும்;

13. இராஜபாளையம் தொகுதி, வடக்கு தேவதானம் ஊராட்சிக்குட்பட்ட நச்சாடை தவிர்த்தருளிய தவம் பெற்ற நாயகி என்ற அழைக்கப்படும் பெரியகோயிலின் தெப்பத்தின் சுற்றுச்சுவரைச் சீரமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:





"1. காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட சென்னை–பெங்களூரு நெடுஞ்சாலையில் அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனை வளாகத்தில் தலைகாயம் விபத்து சிகிச்சைப் பிரிவு (INTENSIVE TRAUMA CARE UNIT) அமைப்பது குறித்தும்;

2. பாலாற்றில் செவிலிமேடு வெங்கடாபுரம் அருகில் தடுப்பணைக் கட்டுவது குறித்தும்;

3. காஞ்சிபுரம் வேகவதி ஆற்றின் குறுக்கே கதிர்பூர்–புத்தேரி அருகில் தடுப்பணைக் கட்டுவது குறித்தும்;

4. தாமல் ஏரியை முழுமையாகத் தூர் வாரி ஆழப்படுத்தி கரைகளை அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல் மற்றும் வரத்து கால்வாய் சீரமைப்பது குறித்தும்;

5. தைப்பாக்கம்–கோவிந்தவாடி, ஏரிக்குச் செல்லும் கோவிந்தவாடி வாய்க்காலை அகலப்படுத்தி கரையைப் பலப்படுத்தும் பணி குறித்தும்;

6. வேகவதி ஆற்று கரையின் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்டும் இரண்டாம் கட்ட பணி துவங்குவது குறித்தும்;

7. காஞ்சிபுரம் மாவட்ட அரசு மருத்துவமனையில் நரம்பியல் துறை (NEUROLOGY), சிறுநீரகத் துறை (NEPHROLOGY) ஆகிய துறைகள் புதிதாகத் துவங்குவது குறித்தும்;

8. ஏகாம்பரநாதர் கோயிலுக்குச் சொந்தமான 16 ஏக்கர் பரப்பளவுக் கொண்ட லாலா தோட்டம் பகுதியில் கோயில் நகரமான காஞ்சிக்கு சுற்றுலா விடுதி அமைப்பது குறித்தும்;

9. காஞ்சிபுரம் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடம் அமைப்பது குறித்தும்;

10. காஞ்சிபுரத்தில் சட்டக் கல்லூரி துவங்குவது குறித்தும்;

11. காஞ்சிபுரத்தில் அரசு கலைக் கல்லூரி துவங்குவது குறித்தும்;

12. காஞ்சிபுரம் தொகுதியில் அறிவிக்கப்பட்ட பட்டுப் பூங்கா திட்டத்தை விரைந்து செயல்படுத்துவது குறித்தும்;

13. காஞ்சிபுரம் பொன்னேரிக் கரையில் தேசிய நெடுஞ் சாலைத் திட்டத்தின் மூலமாக மேம்பாலம் கட்டும் பணி குறித்தும்;

14. காஞ்சிபுரம் தொகுதியில் தொழிற்பேட்டை உருவாக்குவது குறித்தும்;

15. விளையாட்டு வீரர்கள் பயன்பெறும் வகையில் பயிற்சிகூடத்துடன்கூடிய தங்கும் விடுதி அமைப்பது குறித்தும்;

16. ஓரிக்கை அரசு சரிகை உற்பத்தி நிலையத்தை அதிக உற்பத்தி திறன்கொண்ட தொழிற்சாலையாக விரிவாக்கம் செய்வது குறித்தும்;

17. காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் அருகில் நரசிம்ம பல்லவர் சிலை அமைப்பது குறித்தும்;

18. இராமானுஜருக்கு கூரம் கிராமத்தில் நினைவு மண்டபம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:





"1. நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியில் உள்ள மக்களுக்குப் பட்டா வழங்குவது குறித்தும்;

2. தமிழ்நாடு தனியார் ஒதுக்குகாடு TNPFP சட்டம் 1949-ன்படி உள்ள 5 ஏக்கர் மேலும், இயற்கையாகவும் தொடர்ச்சியாக உள்ள பூமி மட்டும்தான் நடைமுறைப்படுத்துவது குறித்தும்;

3. வன விலங்குகள் தாக்குதலுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்துவது குறித்தும்;

4. நீலகிரி மாவட்ட கூடலூர், பந்தலூர் வட்டங்களில் வசிப்போருக்கு மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

5. தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தின் நிருவாகத்தை மேம்படுத்துவது குறித்தும்;

6. தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரிகின்ற கள மேற்பார்வையாளர்களுக்கு ஊதியம் உயர்த்துவது குறித்தும்;

7. தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர் குடியிருப்புகளில் அடிப்படை வசதி செய்வது குறித்தும்;

8. தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டங்களை மேம்படுத்துவது குறித்தும்;

9. தோட்டத் தொழிலாளர்களுக்கு விலையில்லா வீடு கட்டி தருவது குறித்தும்;

10. நீலகிரி மாவட்டத்தில் சிறு, குறு, விவசாயிகள் உற்பத்தி செய்யும் பசும் தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.30 நிர்ணயம் செய்வது குறித்தும்;

11. நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயத்தை உயர்த்துவது குறித்தும், கலப்படம் செய்வதைக் கட்டுப்படுத்துவது குறித்தும்;

12. தனியார் தேயிலை தோட்டங்களில் இரசாயன மருந்து பயன்பாட்டைக் குறைப்பது குறித்தும்;

[திரு. மு. திராவிடமணி] [2018 ஜனவரி 12

13. நீலகிரி மாவட்டம், கூடலூர், நெல்லியாளம் நகராட்சியில் ஒப்பந்த முறைப்படி துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் இதர அத்தியாவசியப் பணியாளர்கள் நியமிக்கும் முறையை நீக்குவது மற்றும் தொழிலாளர்களின் ஊதிய நிலுவை வழங்குவது குறித்தும்;

14. நீலகிரி மாவட்டம், கூடலூர் ஊராட்சி ஒன்றியம், சேரங்கோடு, நெல்கோட்டை ஊராட்சிகளைப் பிரிப்பது குறித்தும்;

15. நீலகிரி மாவட்டம், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் உள்ள நெடுஞ்சாலை இணைப்புச் சாலைகளை மாவட்ட இதர சாலையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

16. நீலகிரி மாவட்டம், கூடலூர் நாடுகானியில் உள்ள ஜீன்புல், பொன்னூர் பண்ணையை சுற்றுலாத் தலமாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

17. பாரதியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியான கூடலூர் கல்லூரியை அரசு கல்லூரியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

18. நீலகிரி மாவட்டம், கூடலூர் மற்றும் பந்தலூரில் உள்ள தலைமை மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவர்களையும், சிறப்பு சிகிச்சை பிரிவுகளையும் தொடங்குவது குறித்தும்;

19. கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குடல் அறுவை சிகிச்சை மற்றும் உள் உறுப்பு மாற்று அறுவை மையம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன் அவர்கள்.

**திரு. சௌ. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.



2018 ஜனவரி 12]

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதியில் மேல் அரசம்பட்டு நீர்த்தேக்க அணை அமைப்பது குறித்தும்;

2. அணைக்கட்டு தொகுதியில் வாசனை திரவியத் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

3. அணைக்கட்டில் நவீன பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

4. அணைக்கட்டு தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

5. அணைக்கட்டு தொகுதியில் பீஞ்சமந்தை, பாலாம்பட்டு, ஜார்தான்கொல்லை ஆகிய மலை கிராமங்களுக்கு தார்ச் சாலை மற்றும் புதிய மின்மாற்றி அமைப்பது குறித்தும்;

6. அணைக்கட்டு தொகுதி, வேலூர் ஒன்றியம், சதுப்பேரி பெரிய ஏரியைத் தூர் வாரி கரைகளைப் பலப்படுத்துவது குறித்தும்;

7. அணைக்கட்டு தொகுதி, கந்தனேரி ஊராட்சியில் சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

8. அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட அனைத்து அரசு பள்ளிகளையும் சீரமைப்பது குறித்தும்;

9. அணைக்கட்டு தொகுதியில் விடுபட்ட ஊராட்சிகளுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவாக்கம் செய்வது குறித்தும்;

10. அணைக்கட்டு தொகுதி, வேலூர் ஒன்றியம், மேல்மொணவூரில் ஒருங்கிணைந்த நவதானிய விற்பனை மையம் அமைப்பது குறித்தும்;

[திரு. ஏ.பி. நந்தகுமார்] *[2018 ஜனவரி 12*

11. அணைக்கட்டு தொகுதியில் அரசு பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரி (பாலிடெக்னிக்) அமைப்பது குறித்தும்;

12. அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் வட்டத் தலைமை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

13. அணைக்கட்டு தொகுதி, பள்ளிகொண்டா சுங்கசாவடி அருகில் சுற்றுவட்டச் சாலை அமைப்பது குறித்தும்;

14. அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டை தலைமையிடமாகக் கொண்டு சார்–கருவூலம் அமைப்பது குறித்தும்;

15. அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் (Combined Court) அமைப்பது குறித்தும்;

16. அணைக்கட்டு தொகுதி, அடுக்கம்பாறையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப படுக்கை வசதி கொண்ட கூடுதல் கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

17. அணைக்கட்டு தொகுதியில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை உயர்சிறப்பு பல்நோக்கு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

18. அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் புதியதாக வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பது குறித்தும்;

19. அணைக்கட்டு தொகுதி, அடுக்கம்பாறையில் அமைந்துள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

20. அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

21. அணைக்கட்டு தொகுதியில் அமைந்துள்ள அனைத்து குளம், ஏரி மற்றும் நீர்வரத்து கால்வாய்களைத் தூர்வாரி சீரமைப்பது குறித்தும்;



*2018 ஜனவரி 12]* [திரு. ஏ.பி. நந்தகுமார்]

22. அணைக்கட்டு தொகுதி, பெண்ணாத்தூரில் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

23. அணைக்கட்டு தொகுதியில் அமைந்துள்ள அரியூர் நூற்பாலையில் மீண்டும் உற்பத்தி தொடங்குவது குறித்தும்;

24. அணைக்கட்டு தொகுதி, அரியூரில் அமைந்துள்ள பொற்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு பயணியர் விடுதி கட்டுவது குறித்தும்;

25. அணைக்கட்டு தொகுதியில் உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை புதிய தார்ச் சாலைகளாக மாற்றுவது குறித்தும்;

26. அணைக்கட்டு தொகுதி, மேல்மொணவூர் முதல் திருமணி வரை பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

27. அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் தொழிற்பயிற்சி நிலையம் (ITI) அமைப்பது குறித்தும்;

28. அணைக்கட்டு தொகுதியிலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பழுதடைந்த அனைத்து தொகுப்பு வீடுகளையும் புதியதாகக் கட்டுவது குறித்தும்;

29. அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் தென்னை மர ஆராய்ச்சி நிலையம் மற்றும் தென்னை நார் உற்பத்தி கூடம் அமைப்பது குறித்தும்;

30. அணைக்கட்டு தொகுதி, பொய்கை பெண்கள் மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;

31. அணைக்கட்டு தொகுதி, அப்துல்லாபுரம் ஊராட்சி, திருவள்ளூர் தெரு வழியாகச் செல்லும் சதுப்பேரி ஏரி கால்வாய்மீது சிறுபாலம் அமைப்பது குறித்தும்;

32. அணைக்கட்டு தொகுதி, கந்தனேரி கூட்டு ரோடு அருகில் மேம்பாலம் கட்டுவது குறித்தும்;

[திரு. ஏ.பி. நந்தகுமார்] [2018 ஜனவரி 12

33. அணைக்கட்டு தொகுதி, பீஞ்சமந்தை, பாலாம்பட்டு, ஜார்தான்கொல்லை ஆகிய பகுதிகளில் உயர்மின்னழுத்த பாதை அமைப்பது குறித்தும்;

34. அணைக்கட்டு தொகுதி, பள்ளிக்கொண்டா பேரூர், வெட்டுவானம், அம்பேத்கர் நகர் ஆகிய பகுதிகளில் அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

35. அணைக்கட்டு தொகுதி, பள்ளிகொண்டா பேரூர், வேப்பாங்கால் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

36. அணைக்கட்டு தொகுதி, பள்ளிகொண்டா பேரூர், தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு பக்கவாட்டு அணுகு சாலையை அகலப்படுத்துவது மற்றும் கழிவுநீர்க் கால்வாய் அமைப்பது குறித்தும்;

37. அணைக்கட்டு தொகுதியில் கொய்யா சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

38. அணைக்கட்டு தொகுதி, வேலூர் முதல் அணைக்கட்டு வரை பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்தும்;

39. அணைக்கட்டு தொகுதி, குடியாத்தம் முதல் அணைக்கட்டு வரை பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்தும்;

40. அணைக்கட்டு தொகுதி, ஒடுக்காத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவது குறித்தும்;

41. அணைக்கட்டு தொகுதி, ஏரி, கொள்ளை கிராமத்திலிருந்து அணைக்கட்டிற்கு பள்ளி நேரங்களில் நகரப் பேருந்து இயக்குவது குறித்தும்;

42. அணைக்கட்டு தொகுதி, ஊசூர், செம்பேடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுசுவர் கட்டுவது குறித்தும்;

43. அணைக்கட்டு தொகுதி, வேப்பாங்கால் பகுதியில் மயானத்தை விரிவுபடுத்தி எரிமேடை அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. ஏ.பி. நந்தகுமார்]

44. அணைக்கட்டு தொகுதி, வேலூர் மாநகரம், திருவள்ளுவர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக்கூடம், தெரு மின் விளக்கு, கழிவுநீர்க் கால்வாய், சாலை வசதி, ஆரம்ப பள்ளி, வீட்டுமனைப் பட்டா போன்ற அடிப்படை வசதிகள் செய்வது குறித்தும்;

45. அணைக்கட்டு தொகுதி, வேலூர் மாநகரம், பாகாயம் பேருந்து நிறுத்தத்தில் பயணியர் நிழற்குடை அமைப்பது குறித்தும்;

46. அணைக்கட்டு தொகுதி, வேலூர் மாநகரம், புதுமை நகரில் அடிப்படை வசதிகள் அமைப்பது குறித்தும்;

47. அணைக்கட்டு தொகுதி, பொய்கை மாட்டு சந்தையில் கால்நடைகள் ஏற்றி இறக்கும் வசதி செய்வது குறித்தும்;

48. அணைக்கட்டு தொகுதி, மோட்டூர் முதல் ஈச்சாங்காடு வரை சாலை அமைப்பது குறித்தும்;

49. அணைக்கட்டு தொகுதி, தேவி செட்டிகுப்பம் ஊராட்சி திப்பசமுத்திரம் ஏரிக்கு செல்லும் கால்வாயில் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

50. அணைக்கட்டு தொகுதி, மேலரசம்பட்டு ஊராட்சியில் ஆதி திராவிடர் காலனி முதல் பங்களா மேடு வரை கழிவுநீர்க் கால்வாய் அமைப்பது குறித்தும்;

51. அணைக்கட்டு தொகுதி, திப்பசமுத்திரம் ஊராட்சியில் குச்சிபாளையம் கிராம மாயனத்திற்குத் தார்ச் சாலை மற்றும் தடுப்புச்சுவர் அமைப்பது குறித்தும்;

52. அணைக்கட்டு தொகுதி, திப்பசமுத்திரம் ஊராட்சி, மங்களம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

53. அணைக்கட்டு தொகுதி, திப்பசமுத்திரம் ஊராட்சி, தட்டாக்குட்டை கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

[திரு. ஏ.பி. நந்தகுமார்] [2018 ஜனவரி 12

54. அணைக்கட்டு தொகுதி, பீஞ்சமந்தை, பாலாம்பட்டு, ஜார்தான்கொல்லை ஆகிய ஊராட்சிகளில் புதிய நியாய விலைக் கடைகள் அமைப்பது குறித்தும்;

55. அணைக்கட்டு தொகுதி, மேலரசம்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளியின் கட்டடப் பணிகளை விரைந்து நிறைவேற்றுவது குறித்தும்;

56. அணைக்கட்டு தொகுதியில் நடைபெற்று வரும் கட்டடப் பணிகளை விரைந்து நிறைவேற்றுவது குறித்தும்;

57. அணைக்கட்டு தொகுதி, மேலரசம்பட்டு ஊராட்சியில் அரசு சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

58. அணைக்கட்டு தொகுதி, மேலரசம்பட்டு ஊராட்சியில் வசிக்கும் இருளர் இன மக்களுக்குப் பட்டா வழங்குவது குறித்தும்;

59. அணைக்கட்டு தொகுதி, மடையாபட்டு ஊராட்சி, சேர்ப்பாடி முதல் கெங்கசாணிகுப்பம் வரை செல்லும் கார்டின் குறுக்கே பாலம் கட்டுவது குறித்தும்;

60 அணைக்கட்டு தொகுதி, புத்தூர் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனியில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு மற்றும் பைப்லைன் அமைப்பது குறித்தும்;

61 அணைக்கட்டு தொகுதி, கீழ்கிருஷ்ணாபுரம் ஊராட்சி, மேற்கு காலனிக்கு ஆழ்துளைக் குழாய்க் கிணறு மற்றும் பைப்லைன் அமைப்பது குறித்தும்;

62. அணைக்கட்டு தொகுதி, கிராமமங்கள ஊராட்சியில் ஆதி திராவிடர் காலனிக்குப் பாலாற்றில் கிணறு வெட்டி பைப்லைன் அமைப்பது குறித்தும்;

63. அணைக்கட்டு தொகுதி, பீஞ்சமந்தை ஊராட்சிக்கு பேருந்து வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

64. அணைக்கட்டு தொகுதி, பீஞ்சமந்தை ஊராட்சி முதல் குனுக்குனூர் வரை சாலை வசதி ஏற்படுத்துவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. ஏ.பி. நந்தகுமார்]

65. அணைக்கட்டு தொகுதி, பீஞ்சமந்தை, ஜார்தான்கொல்லை மற்றும் பாலாம்பட்டு ஆகிய ஊராட்சிகளில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்குவது குறித்தும்;

66. அணைக்கட்டு தொகுதி, பீஞ்சமந்தை ஊராட்சி, கட்டிப்பட்டு முதல் குடிக்கம் கிராமம் வரை சாலை அமைப்பது குறித்தும்;

67. அணைக்கட்டு தொகுதி, இலவம்பாடி ஊராட்சிக்கு ஆழ்துளைக் குழாய்க் கிணறு மற்றும் பைப்லைன் அமைப்பது குறித்தும்;

68. அணைக்கட்டு தொகுதி, கீழ்கொத்தூர் ஊராட்சி கும்பல்கொட்டாய் கிராமத்திற்குச் செல்லும் கானாறு குறுக்கே சிறுபாலம் கட்டுவது குறித்தும்;

69. அணைக்கட்டு தொகுதி, ஜார்தான்கொல்லை மற்றும் பாலாம்பட்டு ஊராட்சிகளில் வசிக்கும் மலைவாழ் மக்கள் சுயதொழில் தொடங்க தாட்கோமூலம் வங்கிக் கடன் வழங்குவது குறித்தும்;

70. அணைக்கட்டு தொகுதியில் இலவச மோட்டார் சைக்கிளை பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு உடனடியாக வழங்குவது குறித்தும்;

71. அணைக்கட்டு தொகுதி, வண்ணான்தாங்கல் ஊராட்சி, கொட்டாவூர் கிராமத்திற்கு தானிய சேமிப்புக் கிடங்கு மற்றும் உலர்களம் அமைப்பது குறித்தும்;

72. அணைக்கட்டு தொகுதி, மடையாபட்டு ஊராட்சியில் தானிய சேமிப்புக் கிடங்கு மற்றும் உலர்களம் அமைப்பது குறித்தும்;

73. அணைக்கட்டு தொகுதி, ஊனை, வாணியம்பாடி ஊராட்சியில் தானிய சேமிப்புக் கிடங்கு மற்றும் உலர்களம் அமைப்பது குறித்தும்;

[திரு. ஏ.பி. நந்தகுமார்] [2018 ஜனவரி 12

74. அணைக்கட்டு தொகுதி, கருங்காலி ஊராட்சி, பசுவநாயினிகுப்பம் கிராமத்திற்கு கருங்காலி ஆற்றில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்து பைப்லைன்மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

75. அணைக்கட்டு தொகுதி, ஒதியத்தூர் ஊராட்சிக்கு ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்து பைப்லைன் மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

76. அணைக்கட்டு தொகுதி, ஒங்கப்பாடி ஊராட்சிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

77. அணைக்கட்டு தொகுதி, வல்லண்டராமன் ஊராட்சியில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு மற்றும் பைப்லைன் அமைப்பது குறித்தும்;

78. அணைக்கட்டு தொகுதி, கெங்கநல்லூர் ஊராட்சி, சந்தைப்பேட்டையில் உள்ள ஆதி திராவிடர் காலனிக்கு ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டிமூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

79. அணைக்கட்டு தொகுதி, கெங்கநல்லூர் ஊராட்சி, மலைசந்து கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

80. அணைக்கட்டு தொகுதி, வசந்தநடை ஊராட்சி, ஒக்கனாவரம் காலனிக்கு ஆழ்துளைக் குழாய்க் கிணறு வெட்டி சின்டெக்ஸ் தொட்டிமூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

81. அணைக்கட்டு தொகுதி, விரிஞ்சிபுரம் ஊராட்சி, ஜாப்ராப்பேட்டை முஸ்லிம் காலனிக்கு பாலாற்றில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்து பைப்லைன்மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

82. அணைக்கட்டு தொகுதி, மேலரசம்பட்டு ஊராட்சியில் தானிய சேமிப்புக் கிடங்கு மற்றும் உலர்களம் அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. ஏ.பி. நந்தகுமார்]

83. அணைக்கட்டு தொகுதி, பீஞ்சமந்தை ஊராட்சியில் பண்ணைக் குட்டை அமைப்பது குறித்தும்;

84. அணைக்கட்டு தொகுதி, வேப்பங்குப்பம் கிராமத்தில் உள்ள துணை மின் நிலையத்தை 110 கிலோவாட் உயர்மின்னழுத்த நிலையமாக மாற்றுவது குறித்தும்;

85. அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டு ஊராட்சி, அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;

86. அணைக்கட்டு தொகுதி, செதுவாளைய ஊராட்சியில் வசிக்கும் நரிக்குறவர்களுக்குப் புதிய தொகுப்பு வீடுகள் கட்டுவது குறித்தும்;

87. அணைக்கட்டு தொகுதி, மேலரசம்பட்டு முதல் வேலூர் வரை புதிய பேருந்து வழித்தடம் அமைப்பது குறித்தும்;

88. அணைக்கட்டு தொகுதி, கீழ்கொத்தூர் ஊராட்சி முதல் கும்பல்கொட்டாயிலிருந்து வேலூர் வரை பேருந்து வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

89. அணைக்கட்டு தொகுதி, வேலூர் முதல் அமிர்திவரை செல்லும் சாலையில் நாகநதி ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பது குறித்தும்;

90. அணைக்கட்டு தொகுதி, வேலூர் முதல் ஒடுக்கத்தூர் செல்லும் சாலையில் வரதலம்பட்டு ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பது குறித்தும்;

91. அணைக்கட்டு தொகுதி, பெண்ணாத்தூர் பேரூர் வார்டு எண் 2 மேட்டுப்பாளையம் விநாயகர் கோயில் தெருவிலும், அருந்ததியர் சாலை விநாயகர் கோயில் அருகிலும் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைத்து சின்டெக்ஸ் தொட்டிகள்மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

92. அணைக்கட்டு தொகுதி, பெண்ணாத்தூர் பேரூர் வார்டு 3 மற்றும் 4 சப்தலிபுரம் பகுதியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.

**திரு. அ. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

**டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. பாப்பாக்குடி, கடையம் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும், சங்கரன் கோவில்–ஆலங்குளம் பராமரிப்பு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் விரைவாக நிறைவேற்றுவது குறித்தும்;

2. ஆலங்குளம், கீழப்பாவூர், பாப்பாக்குடி மற்றும் கடையம் ஆகிய ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிராமப்புறச் சாலைகள், கிராமப்புற இணைப்புச் சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

3. முக்கூடல் பேரூராட்சிக்குக் குடிநீர் கொடுக்கும் உறைகிணற்றை பராமரிப்பது குறித்தும்;

4. திருநெல்வேலி–தென்காசி நெடுஞ்சாலையைப் பராமரிப்பது குறித்தும்;

5. இராமநதி அணைக்கட்டிற்குச் செல்லும் சாலையை புதிய சாலையாக அமைப்பது குறித்தும்;

6. ஆலங்குளம் இரட்டைக் கால்வாயைத் தூர் வாரி கல் பதிப்பது குறித்தும்;

7. ஆலங்குளம் பேரூராட்சியில் உள்ள தொட்டியான்குளத்தின் நான்கு பக்க கரைகளையும் பலப்படுத்தி புதிய சுவர் எழுப்புவது குறித்தும்;



2018 ஜனவரி 12] [டாக்டர் (திருமதி) பூங்கோதை]

8. ஆலங்குளம் பேரூராட்சியில் புதிய நூலகம் அமைப்பது குறித்தும்;

9. ஆலங்குளம் தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், உடையாம்புளி ஊராட்சியிலும், ஆலங்குளம் ஒன்றியம், மாராந்தை ஊராட்சியிலும் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பது குறித்தும்;

10. ஆலங்குளம் பேரூராட்சியில் உள்ள தாலுகா மருத்துவமனையில் CT Scan மற்றும் 24 மணி நேர இரத்த பரிசோதனை நிலையம் அமைப்பது குறித்தும்;

11. ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், கடையத்தில் உள்ள 30 படுக்கைக் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் 4 D Ultrasound மக்களின் பயன்பாட்டிற்கு வழங்குவது குறித்தும்;

12. இராமநதி மற்றும் கடனாநதி அணைக்கட்டுகளையும் தூர் வாருவது குறித்தும்;

13. கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, பண்டாரக்குளத்தில் நியாய விலைக் கடையை அமைப்பது குறித்தும்;

14. கீழப்பாவூர் ஒன்றியம், பெத்தநாடார்பட்டி நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து புதிய கடை அமைப்பது குறித்தும்;

15. ஆலங்குளம் ஒன்றியம், நெட்டூர் 1–வது வார்டில் மற்றும் மருதாபுரத்தில் நியாய விலைக் கடைகள் அமைப்பது குறித்தும்;

16. பாப்பாக்குடி ஒன்றியம், ஆனையப்புரத்தில் மற்றும் இடைக்காலில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைப்பது குறித்தும்;

17. கடையம் ஒன்றியம், பண்டாரகுளம், கருத்தலிங்கபுரம் மற்றும் முப்புலியூர் கோதண்டாரபுரம் ஆகிய பகுதிகளில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

18. கீழப்பாவூர் ஒன்றியம், அருணாபேரி பெத்தநாடார் பெட்டி ஊராட்சி நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

19. கடையம் ஒன்றியம், நெல்லையப்புரம், பொட்டல்புதூர் புதுத்தெரு மற்றும் ஆழ்வார்குறிச்சி பேரூர் வாகைகுளம் ஆகிய பகுதிகளில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

20. பாப்பாக்குடி ஒன்றியம், கீழ பாப்பாக்குடியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

21. கடையம் ஒன்றியம், மேல ஆம்பூர் ஊராட்சி, கருத்தபிள்ளையூர், சிவசைலத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

22. கடையம் ஒன்றியம், கீழ ஆம்பூர் ஊராட்சி, தாட்டான்பட்டியில் நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

23. கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர் காவூரில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

24. பாப்பாக்குடி ஒன்றியம், ரெங்கசமுத்திரம் நத்தம் காலனி மற்றும் அரியநாயகிபுரம் பொட்டல்காலனி பகுதிகளில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைப்பது குறித்தும்;

25. பாப்பாக்குடி ஒன்றியம், புதுகிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

26. கடையம் ஒன்றியம், அங்கபுரத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

27. கடையம் ஒன்றியம், சேர்வைகாரபட்டி ஊராட்சி, கேளாபிள்ளையூரில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

28. கீழப்பாவூர் ஒன்றியம், ஆண்டிப்பட்டி ஊராட்சி, சுப்பிரமணியபுரம் மற்றும் பாக்கியலட்சுமிபுரத்தில் நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;





29. ஆலங்குளம் ஒன்றியம், குறிப்பன்குளம் ஊராட்சி, சண்முகாபுரத்தில் புதிய நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

30. ஆலங்குளம் தொட்டியான் குளத்தைத் தூர் வாரி கரைகளைப் பலப்படுத்தி வடக்கு கரையோரம் தடுப்புச் சுவர் மற்றும் நடைமேடை அமைப்பது குறித்தும்;

31. கீழப்பாவூர் ஒன்றியம், பூலாங்குளம் ஊராட்சி, அடைக்கலம்பட்டணம் அருகே 8 கண் மதகில் பிரிந்து ஆலங்குளம் தொட்டியான் குளத்திற்கு வரும் கால்வாயை ஆழப்படுத்தித் தூர் வாருவது குறித்தும்;

32. கடையம் ஒன்றியம், துப்பாக்குடி ஊராட்சி, துப்பாக்குடி பெரியகுளத்தின் கரையைச் சீரமைப்பது குறித்தும்;

33. பாப்பாக்குடி ஒன்றியம், பள்ளகால் பொதுக்குடி ஊராட்சி பகுதிகளின் பெரியகுளம், பெட்டைகுளம், நீலக்கண்டகுளம் ஆகிய குளங்களைச் சீரமைப்பது குறித்தும்;

34. ஆலங்குளம் ஒன்றியம், அய்யனார்குளம் ஊராட்சியில் பெரியகுளத்தைத் தூர் வாரி வடக்குகரையோரம் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

35. ஆலங்குளம் ஒன்றியம், நல்லூர் ஊராட்சியில் உள்ள ஆனைக் குளத்தைத் தூர் வாரி ஆழப்படுத்துவது குறித்தும்;

36. ஆலங்குளம் ஒன்றியம், மாறாந்தை குளத்தைத் தூர்வாருவது குறித்தும்;

37. பாப்பாக்குடி ஒன்றியம், இடைகால் ஊராட்சி, செங்குந்தர் சமுதாய தெருவில் காங்கேயன் பாலத்தை விரிவுபடுத்துவது குறித்தும்;

38. கடையம் ஒன்றியம், வடக்கு மடத்தூர் சமுதாய நலக் கூடம் அருகில் சிறிய பாலம் அமைப்பது குறித்தும்;

39. பாப்பாக்குடி ஒன்றியம், இடைகால் ஊராட்சி, பனையன் குறிச்சி ஓடுபாலத்தை தரைமட்டப் பாலமாக மாற்றுவது குறித்தும்;

40. கடையம் ஒன்றியம், அடைச்சாணி ஊராட்சி, குருவன்குளம் மறுகாலில் சிறிய பாலம் அமைப்பது குறித்தும்;

41. பாப்பாக்குடி ஒன்றியம், குத்தபாஞ்சான் ஊராட்சி, ஆழ்வான்துலுக்கபட்டிக்கு மேல்புறம் ஓடுபாலத்தைத் தரைமட்ட பாலமாக மாற்றுவது குறித்தும்;

42. பாப்பாக்குடி ஒன்றியம், கபாலிபாறை ஊராட்சி, வயல் பாதையில் நடைபாதைப் பாலம் அமைப்பது குறித்தும்;

43. பாப்பாக்குடி ஒன்றியம், ஓடகரைதுலுக்கப்பட்டியில் மேற்கு ஓடையில் பாலம் அமைப்பது குறித்தும்;

44. ஆலங்குளம் ஒன்றியம், சிவனார்குளத்தில் மாறாந்தை கால்வாய் குறுக்கே நடைபாதை பாலம் அமைப்பது குறித்தும்;

45. ஆலங்குளம் ஒன்றியம், கடங்கனேரி கோவில் அருகே பாலம் அமைப்பது குறித்தும்;

46. பாப்பாக்குடி ஒன்றியம், மேலகுத்தபாஞ்சான் வடபுறம் உள்ள பாலத்தை தரைமட்டப் பாலம் மாற்றுவது குறித்தும்;

47. கடையம் ஒன்றியம், பாப்பான்குளம் கல்குறிச்சி குளம் அருகே வாய்க்காலில் தரைமட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

48. மாறாந்தை கால்வாய், மானூர் கால்வாய் மற்றும் பல்லிகோட்டை ஆகிய கால்வாய்களைத் தூர் வாருவது குறித்தும்;

49. ஆலங்குளம் ஒன்றியம், கடங்கனேரி ஊராட்சி, கடங்கனேரி கால்வாயைத் தூர்வாருவது குறித்தும்;

50. ஆலங்குளம் ஒன்றியம், மாயமான்குறிச்சி ஊராட்சி, தெற்கு மாயமான்குறிச்சி ஆதி திராவிட பகுதியில் சமுதாய நலக் கூடம் அமைப்பது குறித்தும்;





51. பாப்பாக்குடி ஒன்றியம், பாப்பாக்குடி ஊராட்சி, ஓதுலுக்கபட்டி அம்நாத் காலனி கிழக்கே சுடலைமாடன் சாமி கோவில் மேற்கே உள்ள ஓடையில் பாலம் அமைப்பது குறித்தும்;

52. பாப்பாக்குடி ஒன்றியம், குத்தபாஞ்சான் ஊராட்சி, வேலாயுதசாமி குடியிருப்பில் சமுதாய நலக் கூடம் அமைப்பது குறித்தும்;

53. கடையம் ஒன்றியம், கீழகடையம் ஊராட்சி, கல்யாணிபுரத்தில் உள்ள சமுதாய நலக் கூடத்திற்கு உணவு பரிமாறும் கூடம் மற்றும் சமையல் அறை கட்டுவது குறித்தும்;

54. பாப்பாக்குடி ஒன்றியம், கபாலிபாறை ஆதி திராவிடர் காலனியில் சமுதாய நலக் கூடம் அமைப்பது குறித்தும்;

55. சேரன்மகாதேவி கல்வி மாவட்டம், பாப்பாக்குடி ஒன்றியம், புதுப்பட்டி ஊராட்சி, காசிநாதபுரம் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

56. சேரன்மகாதேவி கல்வி மாவட்டம், பாப்பாக்குடி ஒன்றியம், குத்தபாஞ்சான் ஊராட்சி, தாழையூத்து அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

57. சேரன்மகாதேவி கல்வி மாவட்டம், கடையம் ஒன்றியம், ஐந்தாங்கட்டளை ஊராட்சி, நாலாங்கட்டளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

58. பாப்பாக்குடி ஒன்றியம், இடைகால் ஊராட்சி அனந்தநாடார்பட்டி அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

59. கீழப்பாவூர் ஒன்றியம், பெத்தநாடார்பட்டி ஊராட்சி, மகிழ்வண்ணநாதபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

60. கீழப்பாவூர் ஒன்றியம், கீழப்பாவூர் பேரூராட்சி, கருமடையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

61. கீழப்பாவூர் ஒன்றியம், கீழப்பாவூர் பேரூராட்சி, முலகரையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

62. கடையம் ஒன்றியம், பாப்பான்குளம் ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

63. கடையம் ஒன்றியம், கடையம் பெருபத்து ஊராட்சி ஆர்.சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

64. கீழப்பாவூர் ஒன்றியம், பெத்தநாடார்பட்டி ஊராட்சி, பூபால சமுத்திரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

**திருமதி ம. வரலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:





“1. செங்கம் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

2. செங்கம் தொகுதி, ஜவ்வாது மலைக்குச் செல்ல மேல்பட்டு வழியாக பேருந்து வசதி செய்வது குறித்தும்;

3. செங்கம் தொகுதி, பெரிய கோனாப்பாடி மற்றும் கட்ட மடுவு ஆகிய பகுதிகளில் சிட்கோ அமைப்பது குறித்தும்;

4. தானிப்பாறை பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

5. செங்கம் அரசு மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்குவது குறித்தும்;

6. செங்கம் தொகுதியில் வேளாண்மை ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்தும்;

7. ஜவ்வாது மலையில் வனத் துறைப் பள்ளிகளை மேம்படுத்துவது குறித்தும்;

8. செங்கம் தொகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைப்பது குறித்தும்;

9. செங்கம் பேரூராட்சியில் புதிய புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

10. செங்கம் பகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

11. திண்டிவனம் முதல் கிருஷ்ணகிரி வரை செங்கம் வழியாக சாலை அமைப்பது குறித்தும்;

12. செங்கம் தொகுதியில் மோத்தக்கல்–ராயண்டபுரம் மேல்நிலைப் பள்ளிக்கு ஆதி திராவிட மாணவர் விடுதி அமைப்பது குறித்தும்;

13. செங்கம், செய்யாற்றங்கரையில் உள்ள அனுபாம்பிகை ரிஷபேஸ்வரர் ஆலயத்திற்குத் திருப்பணி செய்வது குறித்தும்;

[திரு. மு.பெ. கிரி] [2018 ஜனவரி 12

14. செங்கம் தொகுதியில் தண்டராம்பட்டிற்கு நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

15. செங்கம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

16. ஜவ்வாது மலையை தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பது குறித்தும்;

17. செங்கம் தொகுதி, செய்யாற்றில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பது குறித்தும்;

18. செங்கம் தொகுதி, அகரம்பள்ளிப்பட்டு ஊராட்சியில் கல்தாம்பாடி கிராமம் மற்றும் மேல்கரிப்பூர் ஊராட்சியில் அம்பேத்கர் நகர் ஆகிய பகுதிகளில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைப்பது குறித்தும்;

19. செங்கம் தொகுதியில் உள்ள அனைத்து அங்கன்வாடி கட்டடங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

20. செங்கம் தொகுதியில் சாத்தனூர் அணையைச் சீரமைப்பது குறித்தும்;

21. செங்கம் தொகுதியில் செங்கம் மற்றும் தண்டராம்பட்டு பகுதியில் வீட்டு வசதி வாரியம்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவது குறித்தும்;

22. செங்கம் தொகுதியில் செங்கம், தண்டராம்பட்டு மற்றும் தானிப்பாடியில் நெல் கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

23. செங்கம் தொகுதியில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் கழிப்பறைகள் கட்டுவது குறித்தும்;

24. செங்கம் தொகுதி, ரெட்டியார்பாளையம், தண்டராம்பட்டு மற்றும் இனங்குன்னி ஆகிய பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

**திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. பெரம்பலூர்—மானாமதுரை தேசிய நெடுஞ்சாலையில் அம்மன்பேட்டை புறவழிச் சாலையிலிருந்து விளாங்குடி அருகே இணையும் திருவையாறு புறவழிச் சாலைத் திட்டம் குறித்தும்;

2. கல்லணை—காவிரிப்பூம்பட்டினம் சாலை தோகூர்—அய்யம்பேட்டை சாலை, திருக்காட்டுப்பள்ளி—செங்கிப்பட்டி சாலைகளை இணைக்கும் வகையில் திருக்காட்டுப்பள்ளி புறவழிச்சாலைத் திட்டம் குறித்தும்;

3. முன்னையம்பட்டி—குருவாடிப்பட்டி பழுதடைந்த ஒன்றிய சாலையைக் கிராம சாலைத் திட்டத்தில் அமைப்பது குறித்தும்;

4. மனையேரிப்பட்டி—கடம்பன் குடி பழுதடைந்த ஒன்றிய சாலையைக் கிராம சாலைத் திட்டத்தில் அமைப்பது குறித்தும்;

5. திருக்காட்டுப்பள்ளி—செங்கிப்பட்டி சாலையில் வடநாணல் கிராமத்தில் பிரியும் வடநாணல்—மேகளத்தூர் பிள்ளை வாய்க்கால் கரையில் பழுதடைந்துள்ள சாலையைக் கிராம சாலைத் திட்டத்தில் அமைப்பது குறித்தும்;

[திரு. துரை. சந்திரசேகரன்] [2018 ஜனவரி 12

6. பிள்ளையார் நத்தம்–சிவகாமிபுரம் பழுதடைந்த சாலையைக் கிராமச் சாலைத் திட்டத்தில் அமைப்பது குறித்தும்;

7. ஆவரம்பட்டி–முத்தாண்டிப்பட்டி பழுதடைந்துள்ள சாலையைக் கிராமச் சாலைத் திட்டத்தில் அமைப்பது குறித்தும்;

8. சிதம்பரபட்டி–துருசிபட்டி பழுதடைந்துள்ள சாலையைக் கிராமச் சாலைத் திட்டத்தில் அமைப்பது குறித்தும்;

9. அள்ளூர்–அம்மையகரம் பழுதடைந்துள்ள சாலையைக் கிராமச் சாலைத் திட்டத்தில் அமைப்பது குறித்தும்;

10. நாகை–கூடலூர் தேசிய நெடுஞ்சாலையில் பிரிந்து செல்லும் நவலூர் ஒன்றிய சாலையைக் கிராமச் சாலைத் திட்டத்தில் அமைப்பது குறித்தும்;

11. செல்லப்பன்பேட்டை ஒன்றிய சாலை, காமாட்சிபுரம்–காட்டூர் சாலைகளைக் கிராமச் சாலைத் திட்டத்தில் அமைப்பது குறித்தும்;

12. மாரனேரி–சோழகம்பட்டி ஒன்றிய சாலை, தோகூர் ஊராட்சி புதூர் ஒன்றிய சாலை, பவனமங்கலம் கிருத்துவ தெரு ஒன்றிய சாலை, திங்களூர்–சிறுபுலியூர் ஒன்றிய சாலை, சிறுபுலியூர்–பெரமூர் வழி சுயம்பாச்சநல்லூர் ஒன்றிய சாலை ஆகியவற்றை கிராமச் சாலைத் திட்டத்தில் அமைப்பது குறித்தும்;

13. கடம்பன் குடி–பத்தாளப்பேட்டை வழி இந்தலூர் சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

14. நாகத்தி–ராஜேந்திரம் ஆற்காடு கிராமங்களை இணைக்கும் வெட்டாறு பாலத்தில் அணுகுசாலை அமைப்பது குறித்தும்;

15. குணமங்கலம்–சித்தாலி ஒன்றியச் சாலையைக் கிராமச் சாலைத் திட்டத்தில் அமைப்பது குறித்தும்;



2018 ஜனவரி 12] [திரு. துரை. சந்திரசேகரன்]

16. சீராளூர்–வெண்ணலோடை வழி சக்கர சாமந்தம், வடகால் ஒன்றியச் சாலையைக் கிராமச் சாலைத் திட்டத்தில் அமைப்பது குறித்தும்;

17. நாகத்தி–உமையவள் ஆற்காடு, தென்பெரமூர்–பனவெளி, மாத்தூர் மேற்கு சாலை, ராஜேந்திரம்–ஆற்காடு சாலை, மானாங்கோரை–செட்டிபத்து சாலை, மணக்கரம்பை அல்லா கோவில்–ராஜேந்திரம் சாலை போன்ற ஒன்றியச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறைமூலம் அமைப்பது குறித்தும்;

18. கள்ளப்பெரமூர் முடுக்கு சாலை–தென்பெரமூர் VVR தலைப்பு வரை, மருதகுடி–தட்டாங்குளம் சாலை, வண்ணாரப்பேட்டை–ஆலக்குடி சாலை, குருவாடிப்பட்டி–ஆலக்குடி சாலை, வல்லம்–வல்லம்புதூர் சாலை, திருமலைசமுத்திரம்–முன்னையம்பட்டி சாலை ஆகிய ஒன்றியச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறைமூலம் அமைப்பது குறித்தும்;

19. ஆலக்குடி–சிவகாமிபுரம் வாய்க்கால் கரை சாலை, ஜெபமாலைபுரம்–ராகவேந்திரா ஆலயம் சாலை, உப்பரிகை மண்டபம்–சியாமளா கோவில் சாலை, மேலமானோஜிப்பட்டி–வடக்கு மானோஜிப்பட்டி சாலை ஆகிய ஒன்றியச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறைமூலம் அமைப்பது குறித்தும்;

20. வெண்டையம்பட்டி–சின்னகோட்டாரப்பட்டி சாலை, பெரிய காங்கேயம்பட்டி–சின்னகாங்கேயம்பட்டி சாலை, நாகை–கூடலூர் தேசிய நெடுஞ்சாலையில் பிரியும் புதுக்குடி சாலை ஆகிய ஒன்றியச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறைமூலம் அமைப்பது குறித்தும்;

21. தஞ்சாவூர் ஒன்றியம், வண்ணாரப்பேட்டை–மானோஜிப்பட்டி, கல்லணைக் கால்வாய்க் கரை சாலையைத் தார்ச் சாலையாக அமைப்பது குறித்தும்;

22. திருவையாறு முன்சீப் கோர்ட்–திருக்காட்டுப்பள்ளி சாலை வழி வளப்பக்குடி சாலையை நெடுஞ்சாலைத் துறைமூலம் அமைப்பது குறித்தும்;

23. வெண்ணாறு–வெட்டாறு இடது கரையில் அமைந்துள்ள அம்மன்பேட்டை–விண்ணமங்கலம் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்துவது குறித்தும்;

24. கல்லணைக் கால்வாய், தென்கரை வைரவப் பெருமாள்பட்டி– பூதலூர் செல்லும் மண்சாலையைத் தார்ச்சாலையாக அமைப்பது குறித்தும்;

25. கல்லணைக் கால்வாய், வலது கரை கல்விராயன் பேட்டை–அக்கரை சாலையைத் தார்ச் சாலையாக அமைப்பது குறித்தும்;

26. தஞ்சாவூர்–பெரிய காங்கேயம்பட்டி சாலை, விண்ணமங்கலம்–அம்மன்பேட்டை சாலை இணைக்கும் வகையில் தென்பெரமூர் கிராமம் அருகே வெண்ணாற்றின் குறுக்கே புதிய உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

27. சோழகம்பட்டி–மாரனேரி சாலையில் கல்லணைக் கால்வாயில் பழுதடைந்துள்ள பழைய பாலத்துக்குப் பதிலாகப் புதிய பாலம் அமைப்பது குறித்தும்;

28. மாத்தூர்–ஒத்தை வீடு இணைக்கும் வகையில் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே புதிய உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

29. வெட்டாற்றின் குறுக்கே உள்ள பழைய பாலத்திற்குப் பதிலாக நாகத்தி கிராமத்தில் புதிய உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

30. கல்லணைக் கால்வாய் ஆற்றின் குறுக்கே சின்னகாங்கேயம்பட்டி அருகே உள்ள நடை பாலத்திற்குப் பதிலாகப் புதிய உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

31. கல்லணைக் கால்வாய் குறுக்கே கல்விராயன்பேட்டை அருகே புதிய உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

32. திருவையாறு தொகுதி, சாத்தனூர் அருகே காவேரியின் குறுக்கே தடுப்பணைக் கட்டுவது குறித்தும்;





33. திருவையாறு தொகுதி, அணைக்குடி அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டுவது குறித்தும்;

34. கல்லணைக் கால்வாய் ஆற்றின் குறுக்கே சக்ரா வாய்க்கால் தலைப்பு அருகே தடுப்பணைக் கட்டுவது குறித்தும்;

35. திருவையாறு தொகுதி, பூதலூர் மற்றும் தஞ்சை ஒன்றியப் பகுதிகளில் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால்மூலம் பாசனம் பெறும் ஏரிகள் மற்றும் பாசன வடிகால்களைச் சீரமைப்பது குறித்தும்;

36. திருவையாறு தொகுதி, பூதலூர் ஒன்றியப் பகுதியில் உய்யக்கொண்டான் வாய்க்கால்மூலம் பாசனம் பெறும் ஏரிகளைத் தூர் வாரி, களிங்குகள், மதகுகள், பாசன வடிகால் வாய்க்கால்களைச் சீரமைப்பது குறித்தும்;

37. திருவையாறு தொகுதி, கள்ளப்பெரமூர் ஏரியைத் தூர் வாரிச் சீரமைப்பது குறித்தும்;

38. திருவையாறு தொகுதி, அள்ளூர் ஏரியைத் தூர் வாரிச் சீரமைப்பது குறித்தும்;

39. திருவையாறு தொகுதி, காவேரி ஆறு, குடமுருட்டி ஆறு, வெண்ணாறு, வெட்டாறு, கல்லணைக் கால்வாய் ஆறு மற்றும் அக்னி ஆறு பாசனப் பகுதிகளில் ‘அ’ பிரிவு வாய்க்கால்கள் தூர் வாருவது மற்றும் மதகுகளைச் சீரமைப்பது குறித்தும்;

40. இந்தலூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

41. சாத்தனூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

42. கோவிலடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

43. திருவையாறு 33/11 K.V. துணை மின் நிலையத்தை 110 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

[திரு. துரை. சந்திரசேகரன்] [*2018 ஜனவரி 12*

*44.* மேலத் திருப்பூந்துருத்தி பேரூராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

*45.* பெரமூர் ஊராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அமைப்பது குறித்தும்;

*46.* தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, செங்கிப்பட்டியில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

*47.* பூதலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

*48.* திருவையாறு வட்ட அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்கள் நியமித்து மருத்துவ உபகரணங்கள் வழங்கி கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

*49.* திருக்காட்டுப்பள்ளி வட்ட அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்கள் நியமித்து மருத்துவ உபகரணங்கள் வழங்கி கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

*50.* திருவையாறு தொகுதி, பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் *42* ஊராட்சிகள், திருவையாறு ஊராட்சி ஒன்றியத்தில் *8* ஊராட்சிகள் மற்றும் தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் *5* ஊராட்சிகள் உள்ளடக்கி இயங்கிவரும் காவேரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் குடிநீர்க் குழாய்கள் மாற்றி அமைப்பது குறித்தும்;

*51.* திருவையாறு தொகுதி, தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், சித்திரக்குடி முதல் பள்ளியேறி வரை *20*–க்கும் மேற்பட்ட ஊராட்சிகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

*52.* திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி மற்றும் மேலத்திருப்பூந்துருத்தி ஆகிய பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

*53.* திருவையாறு தொகுதி, பூதலூர் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;



*2018 ஜனவரி 12*] [திரு. துரை. சந்திரசேகரன்]

*54.* திருவையாறு தமிழிசை மன்றத்திற்கு ஆண்டுதோறும் அரசு உதவியாக ரூபாய் *5* இலட்சம் வழங்குவது குறித்தும்;

*55.* திருவையாறு தொகுதியில் வேளாண் கல்லூரி அமைப்பது குறித்தும்;

*56.* திருவையாறு தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

*57.* திருவையாறு தொகுதியில் பூதலூரில் நவீன அரிசி ஆலை அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு, இருக்கையில் இல்லை.

ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்திற்குப் பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் *12–05*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூறாண்டு பேசும் ஓராண்டு சாதனை; சாதனை புரிந்த ஈராண்டு; சரித்திரம் பேசும் பல்லாண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாண்டு ஆட்சி முழுமையான வளர்ச்சி; நாடு போற்றும் நான்காண்டு ஆட்சி; ஐந்தாண்டு ஆட்சி அளவில்லா மாட்சி. அதற்கு முத்தாய்ப்பாக *32* வருடங்களுக்குப் பிறகு மீண்டும் தொடர்ந்து மலர்ந்தது எங்கள் அம்மா அவர்களின் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) நல்லாட்சி நல்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2018 ஜனவரி 12*

பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துகள் மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நானே போடப் போறேன் சட்டம்,
பொதுவில் நன்மை புரிந்திடும் திட்டம்'
நாடு நலம் பெறும் திட்டம்'

*(மேசையைத் தட்டும் ஒலி)* என்று மாண்புமிகு பொன்மனச் செம்மல் மக்கள் திலகம், நூற்றாண்டு விழா நாயகர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நாட்டுக்கு நலம் பயக்கும் பல தொலைநோக்குத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் வழியில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'மக்களுக்காகவே திட்டங்கள்; திட்டங்களுக்காக மக்கள் அல்ல' *(மேசையைத் தட்டும் ஒலி)* என்று ஆட்சியாளர்களுக்கான புதிய இலக்கணத்தை வகுத்து அவ்வழியில் மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றிய அரசியல் வித்தகராகத் திகழ்ந்தார்கள்.

"இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்,
இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்"

*(மேசையைத் தட்டும் ஒலி)* என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வைர வரிகளுக்கு உயிர் கொடுத்த தங்கத் தாரகை; உழைக்கும் மக்களின் ஒப்பற்றத் தாய்; ஏழைகளின் துன்பங்களை நீக்கிய எங்கள் குலதெய்வம்; சரித்திரம் பேசும் சாதனைத் தலைவி; தனித்து நின்று களம் கண்ட புறநானூற்று காவியம்; *(மேசையைத் தட்டும் ஒலி)* விழி அசைவில் கோடி மக்கள் வாழ்வில் துன்பம் தீர்த்து, விரல் அசைவில் கோடி மக்கள் வாழ்வில் இன்பம் சேர்த்த மக்கள் தலைவி; உலக நாடுகளும், *(மேசையைத் தட்டும் ஒலி)* வரலாற்று ஏடுகளும் ஓயாது உச்சரித்த உயிரெழுத்து. அடைத்து கிடந்த காவேரியை விடுவிக்க



*2018 ஜனவரி 12*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

யார் வருவார் என காத்திருந்த தமிழ்நாட்டிற்கு துணிவு, ஆற்றல், விடாமுயற்சியால் காவேரியை மீட்ட காவேரித் தாய். *(மேசையைத் தட்டும் ஒலி)* முல்லைப் பெரியாறு முடங்கியபோது, எல்லைப் பகுதியில் ஏற்பட்ட பிரச்சினைகளின் பல்லைப் பிடுங்கிய சட்ட நாயகி; ஏங்கிய ஏழைகளின் பசி தீர்க்க *(மேசையைத் தட்டும் ஒலி)* விலையில்லா அரிசி தந்த ஈடு இணையற்ற தலைவி; 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்த வரலாற்று அதிசயம். *(மேசையைத் தட்டும் ஒலி)* அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தோடு தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் பீடு நடை போட வைத்த எங்கள் கலங்கரை விளக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)* நோக்குமிடம் எல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் எங்கள் அன்பின் வடிவம், ஆற்றலின் பிறப்பிடம், இணையில்லா நம்பிக்கை நட்சத்திரம், ஈகையின் அடையாளம், உழைப்பின் உருவம், ஊக்கத்தின் உதாரணம்; அன்றும், இன்றும், என்றென்றும் மக்களின் மனதைவிட்டு நீங்காத புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் வணங்குகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் *8–1–2018* அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு துணை சபாநாயகர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகுமாறன் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளை எடுத்துக் கூறியுள்ளனர். ஆக்கப்பூர்வமான கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். பாராட்டியவர்கள், குறை கூறியவர்கள் என அனைவருக்கும் எனது நன்றியினை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்றாற்போல், பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவில் பல வகை கலவை சாதமும், பெரியவர்களுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும் அம்மா உணவகம் அமைத்து பசியைப் போக்கியும், பிறந்த குழந்தைகளுக்கு 'அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம்' வழங்கியும், *(மேசையைத்*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2018 ஜனவரி 12*

தட்டும் ஒலி) அக்குழந்தைகள் நலனுக்கென தாய்ப்பால் வங்கிகள் ஏற்படுத்தியும், பள்ளிக்குச் செல்லும் வளரிளம் பெண்களுக்கு சானிட்டரி நாப்கின் வழங்கியும், பிணியைப் போக்கும் வண்ணம் மக்கள் நல்வாழ்வுத் துறையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் வழங்கியும், மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கு காக்கும் வகையில் காவல் துறைக்கு பல்வேறு வசதிகள் வழங்கியும், 'தமிழகமே எனது குடும்பம், தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் நலனே என் நலன்' எனக் கூறி மக்கள் மனதில் நீங்கா இடம்பெறும் வகையில் ஆட்சி செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் *12–10*

நாட்டின் வருங்காலமாக விளங்கும் பள்ளி மாணவர்களின் நலனில் அக்கறைக் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கி வந்த *2* இணைச் சீருடையை *4* இணையாக உயர்த்தியும், புத்தகங்கள், கணித உபகரணங்கள், மிதி வண்டிகள் உட்பட பல்வேறு விலையில்லா பொருட்களையும், அறிவியல் அறிவை மேம்படுத்திக்கொள்ள அவர்களுக்கு விலையில்லா மடிக்கணினியும் வழங்கினார்கள்.

தாலிக்குத் தங்கம், திருமண நிதியுதவி, இரண்டாவது பசுமைப் புரட்சிக்கு சிறப்பு வேளாண் தொகுப்புத் திட்டம், அதிக அளவில் பால் கொள்முதல் செய்து வெண்மைப் புரட்சி, கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தும் விலையில்லா கறவை மாடுகள், *4* ஆடுகள் வழங்கும் திட்டம், பெண்களின் வேலைப் பளுவினைக் குறைக்க விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி வழங்கும் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) போன்ற திட்டங்களால் தமிழ்நாட்டில் சமூக, பொருளாதார புரட்சியை ஏற்படுத்தியதோடு, பிற மாநிலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் செயல்படுத்தினார்கள்.

மின்சாரப் பிரச்சினையைக் கண்டு தமிழ்நாட்டிற்கே வரத் தயங்கிய முதலீட்டாளர்களின் நிலையை மாற்றி, 'மின் மிகை மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றியே தீருவேன்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று சபதமேற்று, பல்வேறு திட்டங்களின்மூலம் வெற்றிகண்டு தமிழ்நாட்டை மிளிரச் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



*2018 ஜனவரி 12*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தமிழ்நாட்டின் டெல்டா விவசாயிகளின் பாசன நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மாபெரும் சட்டப் போராட்டம் நடத்தி, காவேரி நதிநீர்ப் பங்கீட்டிற்கான ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட வைத்தார்கள். ஏறிவரும் விலைவாசி உயர்வை ஏழை எளியவர்களும் சமாளிக்க, 'பண்ணைப் பசுமை காய்கறி திட்டம்', ஊரகப் பகுதிகளின் முன்னேற்றத்தை உறுதி செய்ய, 'தாய்' திட்டம், பொது விநியோகத் திட்டத்தின்மூலம் அளிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தலைத் தடுக்கவும், முறையான விநியோகத்தை உறுதி செய்யவும் மின்னணு குடும்ப அட்டை வழங்குதல், அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா உப்பு, அம்மா குடிநீர், அம்மா சிமென்ட் (மேசையைத் தட்டும் ஒலி) போன்ற காலத்தால் அழியாத பல்வேறு திட்டங்களை அளித்து மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மா அவர்களின் அரசு, அந்தத் திட்டங்களையெல்லாம் தொடர்ந்து செயல்படுத்தி வருவதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் பல்வேறு புதிய அறிவிப்புகளையும், குடிமராமத்து போன்ற புதிய திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் கூறியதற்கேற்ப, நான் பதவியேற்றவுடன் *500* மதுபானக் கடைகளை உடனடியாக மூடவும், மீனவர்களுக்கென வீடுகள் கட்டுவதற்கு *85* கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கியும், பணிக்குச் செல்லும் பெண்களுக்கு அம்மா இரு சக்கர வாகனம் மானிய விலையில் வழங்கவும், அதற்கான மானியத் தொகையை உயர்த்தி வழங்கவும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகையை உயர்த்தியும், கர்ப்பிணிப் பெண்களுக்கான உதவித் தொகையை *12,000* ரூபாயிலிருந்து *18,000* ரூபாயாக உயர்த்தியும் உத்தரவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடும் வறட்சியால் பாதிப்புக்குள்ளான விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வறட்சி நிவாரணமும், சென்ற ஆண்டு சென்னையில் ஏற்பட்ட பெருமழையின் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து, அவர்தம் இன்னல்களைப் போக்க, தற்போதுள்ள வரம்புகளைத் தளர்த்தி, அதிகப்படியான நிவாரணத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டு வந்த போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதிய உயர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, பல ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையிலிருந்த ஓய்வுக்காலப் பலன்களை வழங்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், அவர்களது போராட்டமும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட 7–வது ஊதியக் குழுவின் திருத்திய ஊதியமாக வழங்க 14 ஆயிரத்து 719 கோடி ரூபாயினைக் கூடுதல் செலவினமாக ஒதுக்கீடு செய்து, வரலாறு காணாத வகையில் விரைந்து வழங்கியதன்மூலம் இந்த அரசின்மீதான அவர்களது நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

30 மாவட்டங்களில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா நடத்தப்பட்டு, அந்தந்த மாவட்ட மக்களுக்கு நன்மை பயக்கும் வளர்ச்சிப் பணிகளுக்கான அறிவிப்புகளை வெளியிட்டு, அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கு இந்த அரசின் சார்பில் 10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–15*

மக்களுக்குப் பயன் தரும் பல்வேறு கொள்கை முடிவுகளை எடுப்பதும், வளர்ச்சித் திட்டப் பணிகளைத் துரிதமாகச் செயல்படுத்துவதும் ஒரு மாநில முதலமைச்சரின் முக்கியப் பணியாகும். அதைச் செவ்வனே செய்யும்வண்ணம் கடந்த 10 மாதங்களில் மட்டும் 4,903 கோப்புகள் எனது பரிசீலனைக்குப் பிறகு உத்தரவிடப்பட்டுள்ளன என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றளவில் எனது அலுவலகத்தில் எந்தக் கோப்பும் நிலுவையிலில்லை என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மழை, வெள்ளம், புயல், வறட்சி போன்ற இயற்கைப் பேரிடர்கள், அரசியல் திருப்பங்கள், போராட்டங்கள் என எது வந்தாலும், அவற்றிற்கெல்லாம் திடமாகத் தீர்வு காண்பது மட்டுமின்றி, கடின உழைப்பையும் மாண்புமிகு அம்மா அவர்களிடம் கற்றுக்





கொண்டதன் பயனாக பல பிரச்சினைகளுக்கு நல்ல முடிவு எட்டப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலிருந்து ஓரடியும் பிறழாமல் இந்த அரசு வெற்றி நடைபோடுகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்கால இந்தியாவின் சிற்பிகளை உருவாக்குமிடம் பள்ளிக்கூடங்கள். எனவே, பள்ளிக் கல்வித் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. தமிழ்நாடு முழுவதும் 1,599 பள்ளிகள் கடந்த 7 ஆண்டுகளில் பல்வேறு நிலைகளில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை மாணவர்கள் பள்ளிக்குச் செல்வதற்கு இலவசமாகப் பேருந்து அட்டை முதல் கல்லூரிக்குச் செல்ல உதவும் மடிக்கணினி வரை பல்வேறு வகையிலான விலையில்லாப் பொருட்களை மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த இந்த அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் நலனுக்கு மேலும் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் வெளியிடப்பட்ட மதிப்பெண் அடிப்படையிலான தரப் பட்டியல் முறை ஒழிப்பு, குறுஞ்செய்திமூலம் தேர்வு முடிவுகள், ஆண்டின் தொடக்கத்திலேயே பொதுத் தேர்வுக்கான கால அட்டவணை, மேல்நிலைக் கல்வியின் தரத்தினை உயர்த்த 11 ஆம் வகுப்பிற்கும் பொதுத் தேர்வு, (மேசையைத் தட்டும் ஒலி) 12 ஆம் வகுப்பு வரையிலான அனைத்து பாடத் திட்டங்களையும் மாற்றியமைக்க குழு அமைத்தல் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சீர்திருத்த நடவடிக்கைகள் பள்ளிக் கல்வித் துறையில் பெரும் புத்துணர்வையும், புரட்சியையும் ஏற்படுத்தியது என்றால் அது அம்மா அவர்களின் அரசினால் மட்டுமே சாத்தியம். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கேற்கும் வகையில் அவர்களுக்குச் சிறப்பு பயிற்சிகள் வழங்குவதற்குப் பயிற்சி மையங்கள் துவங்கப்பட்டுள்ளன. இதுதவிர, பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு சிறப்பாகச் செயல்படும் பள்ளிகளுக்கு ‘புதுமைப் பள்ளி’ விருதும், குழந்தை சேர்க்கை மற்றும் பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களுக்கு ‘கனவு ஆசிரியர்’ விருதும் இந்த அரசு வழங்கவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜனவரி 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உயர் கல்விக்குக் கொடுத்த முன்னுரிமை மிகப் பெரிய பலன்களை அளிக்கத் தொடங்கிவிட்டது. இதை நான் சொல்லவில்லை; மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை சொல்கிறது. நாட்டிலேயே உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு 46.9 சதவிகிதம் என்ற அளவுடன் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது தேசிய சராசரியான 25.2 சதவிகிதத்தைவிட இரண்டு மடங்கு கூடுதலாகும்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய 6 ஆண்டுக் கால ஆட்சியிலே, 4 பொறியியல் கல்லூரிகள், 16 பாலிடெக்னிக் கல்லூரிகள், 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் என மொத்தம் 65 கல்லூரிகளைத் தமிழ்நாட்டிலே நிறுவியதன் விளைவுதான் இது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த இந்த அரசும் 8 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 3 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், 1 பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவற்றை நிறுவியுள்ளது.

தமிழ்நாட்டில் பின்தங்கிய மாவட்ட மக்களும் சட்டக் கல்வி பயில ஏதுவாக விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் புதிய சட்டக் கல்லூரிகள் 6.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்பட்டு, 2017–2018 ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட்டு வருகின்றன.

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் நலனில் அதிக அக்கறைகொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக கடந்த 10 மாதங்களில் மட்டும் 4,468 மருத்துவர்கள் உட்பட 6,438 பணியாளர்களைத் தேர்வு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதவிர, கடந்த ஓராண்டில் 620 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்பட்ட மருத்துவமனைக் கட்டடங்கள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் கிராமத்திலுள்ள ஏழை, எளிய மக்களுக்குக்கூட தரமான மருத்துவ வசதி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)



2018 ஜனவரி 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

ஒரு விபத்து மனித வாழ்க்கையையே புரட்டி போட்டுவிடுகிறது. விபத்தில் பாதிக்கப்பட்ட மனிதனின் உறுப்புகள் இன்னொரு மனிதனுக்கு வாழ்வளிக்கிறது. இத்தகைய மனித உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சையில் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அதிக அளவிலான உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 2015, 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளுக்கான முதன்மை மாநிலத்திற்கான தேசிய விருதை தமிழ்நாடு வென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதவிர, இங்கிலாந்திலிருந்து வெளியாகும் 'பிரிட்டிஷ் மெடிக்கல் ஜர்னல்' என்ற பத்திரிகை தமிழ்நாட்டின் உடல் உறுப்பு தான செயல்பாடுகள் பிற நாடுகளும் பின்பற்றத்தக்கதாக உள்ளன எனப் புகழாரம் சூட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய மருத்துவக் குழுமத்தின் புதிய சீரமைப்புகளுக்கு தமிழ்நாடு அரசு தன்னுடைய கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. இது தமிழ்நாட்டு மாணவர்களின் எதிர்காலத்தைக் கடுமையாக பாதிக்கும் என்பதாலும், மாநில அரசின் உரிமைகளைப் பறிப்பதாக உள்ளதாலும், இந்த புதிய சீரமைப்புகளுக்கு தமிழ்நாடு அரசு தன்னுடைய கடுமையான எதிர்ப்பைத் தொடர்ந்து தெரிவிக்கும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோகத் திட்டத்தைக் கணினிமயமாக்க 330 கோடி ரூபாய் செலவில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம் 1–4–2017 அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டது. தற்போது மொத்தமுள்ள 1.94 கோடி குடும்ப அட்டைகளில், 1.88 கோடி குடும்ப அட்டைகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இத்திட்டத்தின் மூலமாகப் போலி குடும்ப அட்டைகள் களையப்படுவதுடன், விநியோகத்திலிருந்த முறைகேடுகளைத் தடுப்பதிலும் இவ்வரசு வெற்றி கண்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, 12 இலட்சத்து 2 ஆயிரத்து 75 குறு, சிறு விவசாயிகள் பயன்பெறும்வண்ணம், அவர்கள் பெற்ற பயிர்க்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜனவரி 12

கடன், நடுத்தரக் கால வேளாண் கடன், பண்ணைசார்ந்த நீண்ட காலக் கடன் என 5 ஆயிரத்து 318 கோடியே 73 இலட்சம் ரூபாய் அளவிற்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பண மதிப்பு இழப்பு நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயிர்க் கடனை திரும்பச் செலுத்த ஏதுவாக, குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றி அமைத்ததோடு, 3 இலட்சத்து 48 ஆயிரத்து 323 விவசாயிகளுக்கு 1,640 கோடியே 79 இலட்சம் ரூபாய்க்கு புதிய பயிர்க் கடன் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி, விவசாயப் பெருமக்களின் வருமானத்தை இருமடங்காக உயர்த்திட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, வேளாண்மைத் துறைக்கு அரிய பல திட்டங்களைக் கொண்டுவந்தது. இதன் விளைவாக, மத்திய அரசின் அதிக விளைச்சலுக்கான ‘கிரிஷி கர்மான்’ விருதினை 2011–2012, 2013–2014, 2014–2015 மற்றும் 2015–2016 ஆகிய 4 ஆண்டுகளுக்கு தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் 140 வருடங்களில் இல்லாத வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டதனால், மாநிலம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டதோடு, 33 சதவிகிதத்திற்கும் அதிகமாக ஏற்பட்ட பயிர் இழப்புக்கு, இடுபொருள் மானியமாக 2 ஆயிரத்து 247 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, நேரடியாக 25 இலட்சத்து 35 ஆயிரம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் குறைந்த கால இடைவெளியில் மானியத் தொகை வரவு வைக்கப்பட்டது.

பிற்பகல் 12–25

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் பயனாக, சென்ற ஆண்டில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 15 இலட்சத்து 37 ஆயிரம் விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, மாநில அரசு தன் பங்காக 564 கோடியே 70 இலட்சம் ரூபாயை மானியமாக காப்பீட்டு நிறுவனங்களுக்கு உரிய நேரத்தில் வழங்கியது. இதனால் வறட்சியால் பாதிப்படைந்த 9 இலட்சத்து



2018 ஜனவரி 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

27 ஆயிரத்து 909 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 2 ஆயிரத்து 980 கோடி ரூபாய் காப்பீட்டு நிறுவனங்களால் வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 2 ஆயிரத்து 546 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவுக்கு விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக இத்தொகை வரவு வைக்க வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, அதிக அளவுக்கு இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்குப் பெற்று கொடுத்தது தமிழ்நாடுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பெருமையுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள தென்னை விவசாயிகளின் வருமானம் பெருகிட, அவர்களின் 50 ஆண்டுக்கால கோரிக்கையான, நீரா பானம் உற்பத்தி செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனுமதி வழங்கும் என 18–4–2017 அன்று நான் அறிவித்தேன். இதனைத் தொடர்ந்து, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டு, 21–12–2017 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. இந்த அறிவிக்கையின்படி அனுமதிக்கப்பட்ட தென்னை உற்பத்தியாளர் நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கம்மூலம் நீரா பானம் உற்பத்தி செய்ய உரிமம் வழங்கப்படும். தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் நீரா பானம் எளிதில் கிடைப்பதற்கும், ஏற்றுமதி வாய்ப்பினை உருவாக்குவதற்கும், மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியத்தின் ஒத்துழைப்புடன், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதன்மூலம் தென்னை விவசாயிகள் பலமடங்கு கூடுதல் வருமானம் பெற இயலும் என்பதோடு இளைஞர்களின் வேலைவாய்ப்புகளும் கூடும். (மேசையைத் தட்டும் ஒலி)

டெல்டா விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், 2017–2018 ஆம் ஆண்டில் 56 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டமும், 41 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. மானாவாரி விவசாயிகளின் நலனுக்காக தமிழ்நாட்டில் மற்றுமொரு சிறப்புத் திட்டமாக 802.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மானாவாரி சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுமட்டுமல்லாது, 40 இலட்சம் குறு, சிறு விவசாயிகளை ஒருங்கிணைத்து, கூட்டுப் பண்ணைய முறையை ஊக்குவிக்க முதற்கட்டமாக நடப்பாண்டில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் கூட்டுப் பண்ணையத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2018 ஜனவரி 12*

நுண்ணீர்ப் பாசனத்திற்கு இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவில் குறு, சிறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், பிற விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் வழங்க 2011–2012 ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உத்தரவிடப்பட்டு, இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து சிறப்புற செயல்படுத்தி வந்த காரணத்தினால், மத்திய அரசு இத்திட்டத்திற்கு 2016–2017 ஆம் ஆண்டில் வழங்கிய 110 கோடி ரூபாய் மானியத்தை 2017–2018 ஆம் ஆண்டில் 285 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்துடன், தமிழ்நாடு அரசு தனது பங்கான 518 கோடியே 75 இலட்சம் ரூபாயும் சேர்த்து 803 கோடியே 75 இலட்சம் ரூபாய் மானியத்தில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் வழங்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

மத்திய அரசு தற்போது அமல்படுத்திய ஜி.எஸ்.டி. வரி விதிப்பினால் நுண்ணீர்ப் பாசன அமைப்புகளின் விலையானது உயர்ந்துள்ளது. விவசாயிகள் இந்த விலை உயர்வினால் பாதிக்கப்படாமலிருக்க, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவெடுத்து, நுண்ணீர்ப் பாசன அமைப்பிற்கான ஜி.எஸ்.டி. வரி விதிப்பினால் விவசாயிகள் செலுத்தும் கூடுதல் நிதியினை தமிழ்நாடு அரசே ஏற்று அதற்கான ஆணையைப் பிறப்பித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், நுண்ணீர்ப் பாசன முறையினை அமைக்க முன்வரும் விவசாயிகளைக் கூடுதல் நிதிச் சுமையிலிருந்து இந்த அரசு பாதுகாத்துள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளையொட்டி 2011–2012 ஆம் ஆண்டு முதல் மரக் கன்றுகள் நடும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது, 2017–2018 ஆம் ஆண்டு மாபெரும் அளவில் 65 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் 31 மாவட்டங்களில் 69 இலட்சம் மரக் கன்றுகள் நடப்படும் திட்டமாகச் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்டிட, 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை இரத்து செய்து, இலங்கை அரசிடமிருந்து கச்சத் தீவை மீட்பதே நிரந்தரத் தீர்வாக அமையும் என்ற உறுதியான



*2018 ஜனவரி 12*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

நிலைப்பாட்டினை, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலேயே, மத்திய அரசிடமும், உச்ச நீதிமன்றத்திலும் தொடர்ந்து வலியுறுத்தும். மேலும், இந்த அரசின் இடையறாத முயற்சியின் காரணமாக, ஈரான் சிறையிலிருந்த 15 மீனவர்களும், இலங்கை சிறையிலிருந்த 263 மீனவர்களும் விடுவிக்கப்பட்டு, சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இலங்கை அரசால் கைப்பற்றப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களின் படகுகளை மீட்பதற்கு இந்த அரசு மத்திய அரசின் மூலமாக தனது நடவடிக்கையை தீவிரப்படுத்தும்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 30–11–2017 அன்று வீசிய 'ஒகி' புயலினால் கன்னியாகுமரி மாவட்டம் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த போர்க்கால நடவடிக்கைகளின் காரணமாகவும், முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு நிவாரணம் வழங்கியதாலும் குறுகிய காலத்தில் கன்னியாகுமரி மாவட்டம் இயல்பு நிலைக்குத் திரும்பியது.

'ஒகி' புயலினால் பாதிக்கப்பட்டோருக்குப் பல்வேறு நிவாரணங்களை அறிவித்திருந்தாலும், தற்போது இரப்பர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த குலசேகரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் புகைமூட்ட அறை ஒன்றினை 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திடவும், இதனை இரப்பர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்மூலம் செயல்படுத்திடவும் உத்தரவிட்டுள்ளேன். மேலும், தேவைக்கேற்ப பல்வேறு திட்டங்களை இரப்பர் விவசாயிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கவிருக்கிறது.

ஆழ்கடலுக்குச் சென்று நாளது தேதி வரை, கரை திரும்பாத கடைசி மீனவர் கிடைக்கின்ற வரையில் தேடுதல் பணி தொடர்ந்து நடைபெற மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் விலை மதிப்பில்லா உயிர்களை மீட்கும்பொருட்டு இதனை வலியுறுத்தி சமீபத்தில் கடிதம் எழுதியுள்ளேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜனவரி 12

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் நிதிநிலை பற்றி பல்வேறு சந்தேகங்கள், கருத்துகள் இம்மாமன்றத்தில் எழுப்பப்பட்டுள்ளன. மாமன்றத்திற்கு வெளியிலும் இதுபற்றி சில கருத்துகள் அவ்வப்போது தெரிவிக்கப்படுகின்றன.

நேற்றுகூட, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'ஆளுநர் உரை பத்தி 4–ல் மாநில நிதிநிலை சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது' என முதலில் கூறிவிட்டு, அதே பத்தியில் 'நிதி நெருக்கடி உள்ளதாகக் கூறியுள்ளது' முரண்பட்ட நிலை எனக் குறிப்பிட்டார். நேற்றே மாண்புமிகு துணை முதலமைச்சர் பதில் அளித்தபடி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் முழு பத்தியையும் பார்க்காமல் அவருக்குச் சாதகமான சில வார்த்தைகளை எடுத்துக்கொண்டு முரண்பாடு உள்ளதாகக் கூறினார். ஆளுநர் உரையில் 'வருவாய் வரவுகளின் வளர்ச்சி குறைந்து, வருவாய்ப் பற்றாக்குறை கடுமையாக உயர்ந்துவரும் நிலையிலும்கூட, நிதிப் பற்றாக்குறையையும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் விகிதத்தையும் வரையறுக்கப்பட்ட அளவிற்குள் இந்த அரசு தொடர்ந்து கட்டுப்படுத்தி வருகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு மாநிலத்தின் சிறந்த நிதி மேலாண்மைக்கு அளவுகோல் நிதிப் பற்றாக்குறையும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் அளவும்தான். அதைச் சீராகவும், சிறப்பாகவும் இந்த அரசு பராமரித்து வருகிறது. வருவாய்ப் பற்றாக்குறை உள்ள நிலையைத்தான் நிதி நெருக்கடி எனக் குறிப்பிட்டு, அந்த நிலையையும் சமாளித்து ஊதிய உயர்வு அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நிதி மேலாண்மை என்பது கடினமான நிதிநிலை சூழலில் எப்படிப் பராமரிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான். எனினும், திட்டங்களுக்கு உரிய நிதி வழங்கப்பட்டு வருகிறது என்றும், அது குறைக்கப்படவில்லை என்றும் ஆளுநர் உரையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

2016–2017 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதிப் பற்றாக்குறை 2.96 சதவிகிதமாக மதிப்பிடப்பட்டு, பின்னர் திருத்த மதிப்பீட்டில் 4.58 சதவிகித உயர்த்தப்பட்டது. 2016–2017 ஆம் ஆண்டில், 3 சதவிகித வரையறையைக் கடந்ததற்கு முக்கியக் காரணம், 'உதய்' திட்டத்தின்கீழ் 22 ஆயிரத்து 815



2018 ஜனவரி 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

கோடி ரூபாய் மின்சார வாரியத்தின் கடனை, மாநில அரசே ஏற்றுக்கொண்டதுதான். இதற்கென மத்திய அரசு நிதிப் பற்றாக்குறை வரம்புக்கு, 2016–2017 ஆம் ஆண்டிற்கு மட்டும் விலக்கு அளித்துள்ளது. 'உதய்' திட்டம் நீங்கலாக, நிதிப் பற்றாக்குறையைக் கணித்தால், அது திருத்த மதிப்பீட்டின்படி 2.88 சதவிகிதமாக இருந்தது. 2016–2017 ஆம் ஆண்டின் முதல் நிலைக் கணக்குகளின்படி, நிதிப் பற்றாக்குறை 56 ஆயிரத்து 171 கோடி ரூபாயாகவும், நிதிப் பற்றாக்குறைக்கான விகிதாச்சாரம் 4.19 சதவிகிதமாகவும், 'உதய்' திட்டத்தின்கீழ் ஏற்கப்பட்டுள்ள கடன் நீங்கலாக, நிதிப் பற்றாக்குறை 33,356 கோடி ரூபாயாகவும், நிதிப் பற்றாக்குறைக்கான விகிதாச்சாரம் 2.49 சதவிகிதமாகவும் இருந்தது.

நிதிப் பற்றாக்குறை 3 சதவிகித வரையறையைக் கடக்கும் என்பதை அறிந்து, தமிழ்நாடு நிதி மேலாண்மை மற்றும் பொறுப்புடைமைச் சட்டத்திற்கு 2016–2017 ஆம் ஆண்டிற்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. 2017–2018 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில், நிதிப் பற்றாக்குறை 2.79 சதவிகிதமாக, 3 சதவிகிதம் என்ற வரையறைக்குள் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12–35

மற்ற மாநிலங்களுடன் தமிழ்நாட்டை ஒப்பிடுகையில், 2017–2018 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தியில் மத்தியப் பிரதேசத்தில் 3.49 சதவிகிதமாகவும், தெலுங்கானாவில் 3.49 சதவிகிதமாகவும், உத்தரப் பிரதேசத்தில் 2.97 சதவிகிதமாகவும், கேரளாவில் 3.44 சதவிகிதமாகவும் உள்ளன. மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை, 2017–2018 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, 3.20 சதவிகிதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாட்டின் நிதிநிலை மத்திய அரசைக்காட்டிலும், மற்ற மாநிலங்களைக்காட்டிலும் கட்டுக்குள் நிருவகிக்கப்படுகிறது என்பது தெளிவாகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படியும், நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின்படியும், நிதிப் பற்றாக்குறை 2016–2017 ஆம் ஆண்டைத் தவிர்த்து, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் வரையறுக்கப்பட்டுள்ள 3 சதவிகிதத்திற்குள்ளாகவே கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, தமிழ்நாட்டில் நிதி நிருவாகம் சீராகவே நிருவகிக்கப்படுகிறது என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜனவரி 12

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஆளுநர் உரையை வரவு–செலவுத் திட்ட அறிக்கையைப்போல் எதிர்பார்த்து பேசியுள்ளார். ஆளுநர் உரை என்பது அரசின் திட்டங்களை கோடிட்டுக் காட்டும் ஒரு முன்னுரைதான். இதில் அரசு செயல்படுத்திவரும் திட்டங்களைக் குறிப்பிடுவது மரபு. ஆனால், புதிய திட்டங்களை ஆளுநர் உரையில் அறிவிக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. அதுவும் ஓரிரு மாதங்களில் வரவு–செலவுத் திட்ட அறிக்கை சமர்ப்பிக்க உள்ள நிலையில், ஆளுநர் உரையில் புதிய திட்டம் அறிவிப்பது தேவையற்றது. ஏனெனில், அதற்கான நிதி ஆதாரத்தை உடனடியாகத் தர இயலாது. அதனால்தான், பாரத பிரதமரின் ஊரக வீட்டு வசதித் திட்டம், முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டம் ஆகிய திட்டங்கள் ஊரகப் பகுதிகளில் ஏழைகளுக்கு விலையில்லா வீடுகளை வழங்குகிறது என்று கோடிட்டுக் காட்டி, நகர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களுக்கு சில விவரங்கள் தரப்பட்டுள்ளன. எல்லா திட்டங்களுக்கான சாதனைகளையும், செலவிட்ட தொகைகளையும், ஒதுக்கீடு செய்த நிதி பற்றிய விவரங்களையும் ஆளுநர் உரையில் குறிப்பிடுவது சாத்தியமில்லை.

மத்திய அரசிடம் நிலுவையாக உள்ள மானியத் தொகை என்று மாநில அரசு குறிப்பிட்டவை பெரும்பாலும் நடப்புத் திட்டங்களில்தான். அவற்றுக்கான நிதி அவ்வப்போது விடுவிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து தலைமைச் செயலாளர் அவர்கள் காலாண்டுக்கு ஒரு முறை ஆய்வு செய்து வருகிறார். இதில் ஏற்படும் நிலுவையை விடுவிக்க அவ்வப்போது மத்திய அரசை, இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தியும் வருகிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இந்த அரசு வெகு குறைவாகவே மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற்றுள்ளது என்று தெரிவித்திருந்தார். தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதியுதவிக் கோரி மாநில அரசு சமர்ப்பிக்கும் கோரிக்கைகளில், தற்காலிக நிவாரணத்திற்கு மட்டும்தான் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து விடுவிக்கப்படுகிறது. நிரந்தரப் பணிகளுக்கு திட்டங்களைச் சார்ந்துதான் நிதி பெறப்படுகிறது. அதனால்தான், நாம் கோரும் நிதியைவிட மத்திய அரசு விடுவிக்கும் நிதி குறைவாக இருக்கிறது. இதுபோலதான், தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் கோரிக்கை விடுத்த மொத்த நிதியையும் முழுமையாக எந்தக் காலத்திலும் பெற்றதில்லை. இதற்கு உதாரணமாக சொல்லவேண்டுமென்றால், 2008 ஆம் ஆண்டு



2018 ஜனவரி 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மத்திய அரசிடமிருந்து நிஷா புயலுக்காக ரூ.3,789 கோடி கோரப்பட்டதில் ரூ.570.17 கோடிதான் ஒதுக்கீடு பெறப்பட்டது. அதேபோன்று 2010 ஆம் ஆண்டில் வெள்ள நிவாரணத்திற்காக மத்திய அரசிடமிருந்து ரூ.1,929.21 கோடி கோரப்பட்டதில், ரூ.317.17 கோடிதான் ஒதுக்கப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டில் தானே புயலுக்காக மத்திய அரசிடமிருந்து ரூ.5,248 கோடி கோரப்பட்டதில், ரூ.638.13 கோடி ஒதுக்கீடு பெறப்பட்டது. 2013, 2014 ஆம் ஆண்டுகளில் என நிறைய உள்ளன. இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், நாம் மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கின்றோம். ஆனால் அவர்கள் அதில் குறிப்பிட்ட அளவைதான் விடுவிக்கின்றார்கள்.

பிற்பகல் 12–40

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 2008 ஆம் ஆண்டு ஏப்ரலில் அப்போது நிதியமைச்சராக இருந்த பெரியவர் மதிப்பிற்குரிய திரு. அன்பழகன் இதைச் சுட்டிக்காட்டுகின்றார்கள். 'மத்திய அரசிடம் 1,500 கோடி ரூபாய் அளவிற்கு இப்போது அண்மைக் காலத்திலே ஏற்பட்ட, கடந்த டிசம்பரில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பிற்கு நிதி கேட்டீர்களே, என்ன ஆயிற்று' என்று கேட்டிருக்கின்றார்கள். மத்திய அரசு அதைப் பரிசீலனை செய்துகொண்டிருப்பதாகத்தான் அறிகிறேன். ஆனால் பல பேர் என்ன எண்ணுகிறார்கள் 1500 கோடி ரூபாய் கேட்டால், 1,000 கோடி ரூபாய் தருவார்கள், 1,200 கோடி ரூபாய் தருவார்கள் என்று ஒரு கணக்கு வைத்துக்கொண்டு அவ்வளவு பெரிய தொகை வரவில்லையே என்று குறைபடும் ஒரு தவறான கண்ணோட்டம் இருக்கிறது. அது எந்தக் கட்சி ஆட்சியாக இருந்தாலும் இந்த இடர் அல்லது விபத்து, சீரழிவு ஏற்படுகின்றபோது அதற்கு வழங்குவதற்கென்றே ஒரு நிதி அந்தந்த மாநிலத்திற்கென்று ஆண்டொன்றுக்கு இவ்வளவு என்று முதலிலேயே ஒதுக்கப்பட்டு அது தீர்மானிக்கப்படுகிறது. அப்படி, ஏறத்தாழ 250 கோடி ரூபாய் தமிழகத்திற்கு உரியதாக இருக்கிறது. அந்த 250 கோடி ரூபாயில் 75 விழுக்காடு மத்திய அரசு தருகிறது. 25 விழுக்காடு மாநில அரசு பங்கு. அந்த நிதி அதற்கென்றே செலவிடப்படுகிறது. ஆனால், மத்திய அரசிடம் இயற்கை இடர்பாடுகளைக் களைவதற்காக அவர்களிடம் கேட்கிற நிதியிலே உடனடியாகச் செய்யப்பட வேண்டிய பணிகள் என்பதற்குத்தான் அவர்கள் நிதி தருவார்கள். நிரந்தரமாகச் செய்யப்பட வேண்டிய பணிகளெல்லாம் மாநில

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2018 ஜனவரி 12*

அரசின் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். மாநில அரசின் திட்டத் தொகையிலே அவை சேர்க்கப்பட வேண்டும். ரோடு போட வேண்டும், பாலம் கட்ட வேண்டும், அணை கட்ட வேண்டும் என்று இவையெல்லாம் ஒரு வேளை அதிலே சேருவதாக இருந்தால் அவை நிரந்தரப் பணிகள். அந்த நிரந்தரப் பணிகளுக்கு திட்டப் பணியிலே சேர்த்து அந்தந்த மாநிலங்கள் செய்துகொள்ள வேண்டும். ஆகவே, இப்போது இந்த ரூபாய் 1,500 கோடியில், அவர்களுடைய பரிசீலனைக்குள்ளதாக இருக்கக்கூடியது ரூ.500 கோடி மட்டுமே. அது உடனடிப் பணிகளுக்காக. அந்த உடனடி பணிகளைத்தான் ஏற்கெனவே 200 கோடி ரூபாய் அளவிற்கு அனுமதித்து செலவு செய்திருக்கிறோம். அந்த உடனடியாகச் செய்யப்படுகின்ற அந்தக் காரியங்களுக்கு எவ்வளவு நிதி தருவார்கள் என்பது தெரியாவிட்டாலும்கூட, எந்தக் கடமையும் நிறுத்திவைக்கப்படவில்லை. செய்யப்படவேண்டிய காரியங்கள் மாநில அரசினுடைய பொறுப்பிலே செய்யப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து செய்யப்படும் என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்'. இதனை எதற்காகச் சொல்கிறேன் என்றால், நேற்று சொன்னீர்கள் அல்லவா, அதற்காகத்தான் இந்த விளக்கம் சொன்னேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் அனைத்துத் திட்டங்களும் அனைத்து மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதே மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பமாகும். அவ்வாறு சென்றடைவதற்கு அரசு ஊழியர்களின் பணி இன்றியமையாத ஒன்றாகும். எனவே, காலிப் பணியிடங்களை நிரப்புவதில் இந்த அரசு மிகுந்த அக்கறைக் காட்டிவருகிறது. இதன் விளைவாக 16–2–2017 முதல் 30–11–2017 வரையிலான காலத்தில் 5,902 பணியாளர்கள் பல்வேறு துறைகளில் உள்ள பணியிடங்களுக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு முறை பற்றி மத்திய அரசு பாராட்டப்பட்டது, மாநில சுயாட்சிக்கு எதிராக உள்ளதாக சில கருத்துகள் கூறப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மறைமுகமாக வரிச் சீர்திருத்தம் மேற்கொள்ளும்போது, மாநிலத்தின் உரிமைகள் பறிபோய்விடக் கூடாது என்றும்,



*2018 ஜனவரி 12*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மாநில அரசுக்கு இழப்பு ஏற்படக் கூடாது என்றும்தான் வலியுறுத்தி வருகிறது. அந்தவகையில், மத்திய அரசு 1–7–2017 முதல் நடைமுறைப்படுத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு முறைச் சட்டமானது, வரைவு சட்டமுன்வடிவு நிலையில் இருந்தபோது, அதில் இடம் பெற்றிருந்த பாதகமான சில அம்சங்கள் குறித்துக் குரல் எழுப்பிய மாநிலங்களுள் தமிழ்நாடு முக்கிய மாநிலமாகும். அதனால்தான், மாநிலத்திற்குப் பாதகமான சில அம்சங்கள், நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் இறுதி வடிவில் களையப்பட்டது. உதாரணமாக, மாநிலங்களுக்கு ஏற்படக்கூடிய இழப்பீட்டை ஈடு செய்ய வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று, 2015–2016 ஆம் ஆண்டில் இந்த புதிய வரியில் இணைக்கப்பட்ட வரிகள்மூலம் பெற்ற வருவாயை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோர் ஆண்டிற்கும் 14 சதவிகிதம் வளர்ச்சி என்ற வீதத்தில் கணக்கிட்டு இழப்பீட்டுத் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டது. மேலும், பெட்ரோல், டீசல் மீதான வரியும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின்கீழ் கொண்டு வரப்படவில்லை. இதன்மீது மாநில அரசுதான், தொடர்ந்து வரிவிதித்து வருகிறது. இத்திருத்தங்களுக்குப் பின்னரே, தமிழ்நாடு அரசு அந்தச் சட்டத்திற்கு இசைந்தது. இதன் பின்னரே, மாநில அரசும், தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் சட்டம், 2017-ஐ சட்டமன்றத்தில் நிறைவேற்றி, சட்டம் 1–7–2017 முதல் நடைமுறைக்கு வந்தது. கடந்த ஆறு மாதங்களாக மத்திய அரசும் மாநிலத்திற்கு உரிய இழப்பீட்டுத் தொகையை வழங்கி வருகிறது.

மாநில ஜி.எஸ்.டி. (SGST) மற்றும் ஒருங்கிணைந்த ஜி.எஸ்.டி (IGST) மூலம் மாநில அரசுக்கு ஜூலை மாதம் 0.24 கோடி ரூபாயும், ஆகஸ்ட் மாதத்தில் 2,852.16 கோடி ரூபாயும், செப்டம்பர் மாதத்தில் 3,143.35 கோடி ரூபாயும், அக்டோபர் மாதத்தில் 3,089.66 கோடி ரூபாயும், நவம்பர் மாதத்தில் 2,874.29 கோடி ரூபாயும் மற்றும் டிசம்பர் மாதத்தில் 3,043.57 கோடி ரூபாயும் வரி வருவாயாக பெறப்பட்டது. மேலும், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதத்திற்கான இழப்பீட்டுத் தொகையாக, 614.10 கோடி ரூபாயும், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்திற்கான இழப்பீட்டுத் தொகையான 30.27 கோடிக்கு, இதுவரை 17.90 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 632 கோடி ரூபாயை இழப்பீட்டுத் தொகையாக மத்திய அரசு வழங்கியுள்ளது. நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான இழப்பீட்டுத் தொகையாக 422.24 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு பெற வேண்டியுள்ளது. இந்த

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜனவரி 12

நிலுவைத் தொகை விரைவில் விடுவிக்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, தமிழ்நாட்டின் வரி வருவாய் அளவும், உரிமையும் இதன்மூலம் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஜி.எஸ்.டி. கவுன்சில் நடத்தும் கூட்டங்களில் நமது மாநிலத்தின் சார்பில் பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டு அதிக அளவிலான பொருட்களுக்கு வரி விலக்கும், வரி குறைப்பும் செய்யப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–45*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் நீர்நிலைகளை மீட்டெடுப்பதற்கும், அவற்றுக்குப் புத்துயிர் அளிக்கவும், வேளாண் பெருங்குடி மக்களின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டம்தான் குடிமராமத்துத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் 2016–2017 ஆம் ஆண்டில் 30 மாவட்டங்களில் 1,492 பணிகள் 81 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவு பெற்றுள்ளன. மேலும், 2017–2018 ஆம் ஆண்டில் 331 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2,065 பணிகள் செயல்படுத்த நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் நீர்நிலைகள் தூர் வாரப்பட்டு எடுக்கும் வண்டல் மண் வேளாண் பெருமக்களின் விவசாய நிலத்தை வளப்படுத்தும் நோக்குடன் “வண்டல் மண் வழங்கும் திட்டம்” நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு முழுவதும் இதுவரை (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன், பின்னர் பேசுங்கள். (குறுக்கீடு) நான் பேசி முடித்த பிறகு, நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரையில் குறுக்கிட வேண்டாம். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றத்திலிருந்து நான் கேட்டு கொண்டிருக்கிறேன். ‘ஏரிகளைத் தூர் வாருவதற்காக 300 கோடி ரூபாய், 600 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறோம்’ என்று சொன்னீர்கள். நான் அப்பொழுதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ‘எந்தெந்த ஏரிகளை, எவ்வளவு தொகையில் நீங்கள்



2018 ஜனவரி 12] [திரு. துரைமுருகன்]

தூர் வாரும் பணியைச் செய்திருக்கிறீர்கள் என்ற பட்டியலை எங்களுக்குத் தர வேண்டும்’ என்று கேட்டேன். காரணம், என்னுடைய தொகுதியிலே அந்தப் பணிகள் நடந்ததா, இல்லையா என்பது எனக்கே தெரியாது. அந்தப் பணிகள் நடந்திருந்தால், அது செம்மையாக நடந்திருக்கிறதா என்று நான் போய் பார்க்க வேண்டும். எனவே, நீங்கள் எந்தெந்த ஊரில், எந்தெந்த ஏரியை, எவ்வளவு தொகையில் தூர் வாரியிருக்கிறீர்கள் என்ற விவரத்தை எங்களுக்குத் தர வேண்டுமென்று சென்ற முறை கேட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது படிக்கிறார்கள். இன்றைக்காவது அந்த விவரங்களைத் தருவார்களா அல்லது எங்கள் வீட்டிற்காவது அனுப்புவார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எவ்வளவு ஏரிகள் தூர் வாரப்பட்டிருக்கின்றன என்ற வினாவை எழுப்பியிருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 1,519 ஏரிகள் தூர் வாருவதற்காகத் திட்டமிடப்பட்டது. இது விவசாயிகளின் பங்களிப்போடு நிறைவேற்றப்படுகின்ற திட்டம். அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகளை, பாசன ஏரிகளுக்குட்பட்டு பாசனம் பெறுகின்ற விவசாயிகளை இணைத்து செயல்படுத்துகின்ற திட்டம்தான் குடிமராமத்து திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்தத் திட்டம், ஒரு முன்னோடியான திட்டம். இது முழுக்க, முழுக்க விவசாயிகளே நிறைவேற்றுகின்ற திட்டம். விவசாயிகளே நிறைவேற்றுகின்ற திட்டமாக இருந்தால்தான், அங்கே முழுமையான பணிகள் நடைபெறும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, குடிமராமத்து திட்டம் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்கின்ற விவரங்களை நான் அவர்களுக்குக் கடிதம்மூலம் தருகின்றேன். அதுமட்டுமல்ல, மேலும் (குறுக்கீடு) தருகிறேன். நானே இப்பொழுது விளக்கம் சொல்லியிருக்கிறேன். அதில் யாரும் ஏமாற்ற முடியாது. விவசாயிகளிடம்தான் அந்த பில்லே போகும். Cheque–ஐ விவசாயிகளுக்குத்தான் கொடுப்பார்கள். மற்றவர்கள் யாரும் அதை வாங்க முடியாது. அதனால் எங்கே தவறு நடந்தாலும் அதைக் கண்டுபிடித்துவிடலாம். ஏனென்றால், இப்படிப்பட்ட

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] *[2018 ஜனவரி 12*

தவறுகள் நடைபெறக் கூடாது என்பதற்காகத்தான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பதிவு செய்யப்பட்ட விவசாயக் குழு, அந்தந்தப் பாசன ஏரிகளுக்குட்பட்ட விவசாயக் குழுவிற்குத்தான் இந்தப் பணி ஒப்படைக்கப்படுகிறது. அதில் மாற்றுக் கருத்தே கிடையாது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அது எந்தக் குழுவாக இருந்தாலும் சரி, இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்ற பாகுபாடே கிடையாது. ஆகவே, அந்தக் குழுவில் இடம்பெறுகின்ற விவசாயிகளுக்கு இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது அற்புதமான திட்டம். அதில் ஏதாவது குறைபாடு இருந்தால் நீங்கள் அதைச் சுட்டிக்காட்டினால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–50*

*2017–2018* ஆம் ஆண்டில் *331* கோடியே *68* இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் *2,065* பணிகள் செயல்படுத்த ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்போது ஏரிகளில் எல்லாம் தண்ணீர் இருப்பதால் அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை. இப்போது நடைமுறைப்படுத்தவுள்ளோம். எந்தெந்த ஏரிகள் என்ற விவரத்தையும் இப்போது உங்களுக்குக் கொடுத்துவிடுகிறேன். இந்தத் திட்டத்தின் மூலமாக நீர்நிலைகள் தூர்வாரப்பட்டு எடுக்கும் வண்டல் மண் வேளாண் பெருமக்களின் விவசாய நிலத்தை வளப்படுத்தும் நோக்குடன் "வண்டல் மண் வழங்கும் திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுவதும் இதுவரை *5,11,694* விவசாயிகளுக்கு, *5,54,84,351* கன மீட்டர் வண்டல் மண் அளிக்கப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இது சாதாரணமான விஷயம் அல்ல. ஏனென்று சொன்னால் நீங்களும் விவசாயி, நானும் விவசாயி. நிலத்திற்கு இயற்கை எரு தேவை. அந்த இயற்கை எரு இந்த வண்டல் மண் மூலமாக விவசாயிகளுக்குக் கிடைக்கிறது. அதனால் விளைச்சல் பெருகுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட உன்னதமான திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடைமுறைபடுத்தியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)* நான் பேசி முடித்தபிறகு நீங்கள் உங்களுடைய கருத்துகளைச் சொல்லுங்கள். *(குறுக்கீடு)* நான் பேசி முடித்துவிடுகிறோன். அதற்குப்பிறகு நீங்கள் கேளுங்கள்



*2018 ஜனவரி 12]* [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அவற்றிற்கும் நான் பதில் அளிக்கிறேன். *(குறுக்கீடு)* பதிலுரையாற்றிக் கொண்டிருக்கும்போது இப்படி குறுக்கிடலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் நீங்கள் உங்களுடைய பதிலுரையைத் தொடர்ந்து பேசுங்கள். இது புதிய வழிமுறையாகிவிடும். நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு முதலமைச்சர் பதிலுரையாற்றும்போது இதற்கு முன்னர் யாராவது இப்படி குறுக்கிட்டிருக்கிறார்களா?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பேசுங்கள் என்று சொல்லிவிட்டார். சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்காது என்பது போல் சொல்கிறீர்களே! அது நல்ல திட்டம். அதை நான் இல்லையென்று சொல்லவில்லை. எல்லோரும் அந்தத் திட்டத்தின் மூலமாக மண் எடுக்கிறார்கள். யார் வேண்டுமானாலும் மண் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லும்போது செங்கல் சூளை வைத்திருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மண்ணை எடுத்துவிடுகிறார்கள். அந்தப் பகுதி மேடாக இருந்தால் அதில் மண் எடுக்கும்போது பள்ளம் ஆகிவிடுகிறது. தண்ணீர் வந்தால் அங்கே நிற்கிறது. ஏரியில் தண்ணீரைப் பார்க்க முடியவில்லை. ஆகையினால், பொதுப் பணித் துறை அல்லது உள்ளூரில் வசிப்பவர்கள் வசம் இந்தப் பணிகளைக் கொடுத்து இந்த இடத்தில் இப்படித்தான் மண் எடுக்க வேண்டுமென்று ஒரு direction கொடுக்க வேண்டும். ஏனென்றால் பெரும் பகுதி மண்ணை செங்கல் சூளை வைத்திருப்பவர்கள்தான் எடுக்கிறார்கள். விவசாயிகள் தங்களுக்கு *4* வண்டிகளில் மண் இருந்தால் போதுமானது என்று நினைக்கிறார்கள். அவர்களிடம் இருப்பதோ *8* ஏக்கர்; அதற்கு இவ்வளவு மண்தான் போட முடியும். ஆனால், செங்கல் சூளை வைத்திருப்பவர்கள் மணலை எடுத்துக் கொண்டுபோய் விற்றுவிடுகிறார்கள். எனவே, மதகுகளுக்குத் தண்ணீர் சரியாக செல்வதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஏதாவது

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜனவரி 12

ஒரு சம்பவம் நடைபெற்றது என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவரும்பட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு முக்கியமான திட்டம். முழுக்க முழுக்க விவசாயிகளுக்குப் பயனளிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் குடிமராமத்து திட்டத்தையே கொண்டு வந்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, விவசாயிகளுடைய பங்களிப்புடன் நடைபெறுகிற திட்டம். இந்தத் திட்டத்தில் எந்தத் தவறும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் விவசாயிகளின் 10 சதவிகித பங்களிப்போடு, மீதமுள்ள 90 சதவிகித பங்களிப்பை அரசு வழங்கி வருகிறது. ஆகவே, விவசாயிகளை இணைத்து நடைபெறுகிற இந்தத் திட்டம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்பதுதான் அரசினுடைய எண்ணம். ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஏதாவது சம்பவங்கள் இருக்குமானால், அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவையும் விரைந்து அமைக்க வேண்டுமென்ற தமிழ்நாட்டின் நியாயமான, நீண்டகால கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அதுமட்டுமல்ல, இப்படி தவறாக, யாராவது செங்கல் சூளைக்கென்று ஏரியிலிருந்து மண் எடுக்கும்பட்சத்தில், அவர்கள்மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, வாகனங்களையும் பறிமுதல் செய்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த விவரத்தையும் தங்களுக்கு வழங்குகிறேன்.

நதிநீர் இணைப்புத் திட்டத்தின்கீழ் கோதாவரியிலிருந்து வெளியேறும் உபரி நீரினைத் திருப்பி, கோதாவரி–கிருஷ்ணா–பெண்ணாறு–பாலாறு–காவேரி நதிநீர் இணைப்புத் திட்டத்தின்கீழ் காவேரியில் கல்லணைக்கு அருகில் 125 டி.எம்.சி. அடி நீர் தமிழ்நாட்டிற்குக் கிடைக்க மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்படும்.



2018 ஜனவரி 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர்மட்ட அளவான 152 அடிக்கு நீரை தேக்குவதற்கு தேவையான, எஞ்சிய பலப்படுத்தும் பணிகளைச் செய்யும் நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. கேரள அரசு இப்பணிகளைச் செய்ய தேவையான சட்டபூர்வமான அனுமதியைப் பெறுவதற்கு ஒத்துழைக்காமலும், தமிழ்நாடு பொதுப் பணித் துறையின் பொறியாளர்கள் அணைப் பகுதியில் பணிகளைச் செய்வதற்கு இடையூறுகளை ஏற்படுத்தியும் வருவதால், தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் 2–3–2017 அன்று ஒரு நிறைவேற்றல் மனுவை தாக்கல் செய்துள்ளது என்பதையும், தமிழ்நாட்டு மக்களின் நலனை உறுதிப்படுத்தும் வகையிலும், உச்ச நீதிமன்றத்தின் உத்தரவினை நடைமுறைப்படுத்தவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதியான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களின் போக்குவரத்துப் பயன்பாட்டிற்குப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியுள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அதைச் செவ்வனே செயல்படுத்த, சாலை வசதி மிகவும் இன்றியமையாதது என்பதை நன்கு அறிந்துள்ளது. எனவே, சென்ற ஆண்டில் மட்டும் சென்னை வியாசர்பாடி, திருவொற்றியூர் மாட்டுமந்தை உட்பட ஐந்து இடங்களில் புதிய பாலங்கள் 196.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) நபார்டு வங்கி நிதியுதவியுடன் 48 பாலங்கள் 105.87 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீரங்கம்–கொள்ளிடம் ஆற்றுப் பாலம் 83 கோடி ரூபாய் செலவிலும், திருச்சி நகர், எம்.எஸ்.பி. கேம்ப் சந்திப்பில் 81.40 கோடி ரூபாய் செலவில் இரயில்வே மேம்பாலமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. சேலம் மாநகரில் ஐந்து சாலை சந்திப்பில் 320 கோடி ரூபாய் செலவில் ஈரடுக்கு மேம்பாலம் கட்டப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கோவை மாநகர் காந்திபுரத்தில் டாக்டர் நஞ்சப்பா சாலை மற்றும் டாக்டர் சின்னசாமி சாலை ஆகியவற்றில் 194.57 கோடி ரூபாய் மதிப்பில் சாலை மேம்பாலங்கள் மற்றும் சேலம் நகரத்தில் குரங்குசாவடி மற்றும் ஏ.வி.ஆர். ரவுண்டானா சாலை சந்திப்புகளில்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜனவரி 12

111.40 கோடி ரூபாய் மதிப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

கோயம்புத்தூர்–அவினாசி சாலையில் உப்பிலிபாளையம் முதல் விமான நிலையம் வரை 950 கோடி ரூபாய் செலவில் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இது தவிர, போரூர் மற்றும் அமைந்தகரையில் சுமார் 65.10 கோடி ரூபாய் செலவில் சாலை மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சாலைப் போக்குவரத்து, கடல்வழிப் போக்குவரத்து மற்றும் துறைமுகங்கள் துறைகளில் தமிழ்நாடு அடைந்து வரும் முன்னேற்றத்தினைக் கண்டு, தமிழ்நாடு அரசின் திட்டங்களை மேலும் ஊக்கப்படுத்தும் விதத்தில், மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் சுமார் ஒரு இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை நடைமுறைப்படுத்த பரிசீலிப்பதாக தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ், இந்தியாவிலேயே அதிக அளவிலான திட்டக் கருத்துகளை அனுப்பியதிலும், கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நகர்ப்புற ஏழையெளிய மக்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்துவதற்கான நிதியைத் திரட்ட, தமிழ்நாடு அரசு உறைவிட நிதியை உருவாக்கியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையைப் பொறுத்தமட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் இருப்பதிலிருந்தும், மொத்த தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் முதல் இடத்தில் இருப்பதிலிருந்தும், இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கியப் பங்களிப்பு ஆற்றி வருவது விளங்கும்.

தமிழ்நாட்டில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015–ன்மூலம் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு இதுவரையில் 61 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 62 ஆயிரத்து 738 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் துரிதமாக நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் இதுவரை 96 ஆயிரத்து 341 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.



2018 ஜனவரி 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

2015 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாடு வெற்றியைத் தொடரும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இந்த ஆண்டு இறுதியில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை நடத்த ஏற்பாடு செய்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பன்னாட்டு மற்றும் உள்நாட்டு பெருந்தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டின்மீது கொண்டுள்ள நம்பிக்கையினை எடுத்துக்காட்டும்விதமாக விரைவில் நடைமுறைக்கு வரவுள்ள முதலீடுகளின் விவரங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, சுமார் 5,000 கோடி ரூபாய் முதலீட்டில் டயர்கள் தயாரிக்கும் சியட் நிறுவனத்தின் தொழிற்சாலை; (மேசையைத் தட்டும் ஒலி) 3,000 கோடி ரூபாய் முதலீட்டில் கார் அசெம்பிளி மற்றும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி சேவை ( R & D) அமைக்க உள்ள பிரான்ஸ் நாட்டு நிறுவனத்தின் தொழிற்சாலை; 5,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஹூண்டாய் நிறுவனத்தின் விரிவாக்க தொழிற்சாலை என பல்வேறு முக்கிய முதலீடுகள் இறுதி செய்யப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இவைதவிர, மேலும் 15 நிறுவனங்களுடன் மொத்தம் சுமார் 25,000 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளுக்கு பேச்சுவார்த்தை உயர்மட்ட அளவில் நடந்து வருகின்றது. இவை விரைவில் நடைமுறைக்கு வரும் என்றும் தமிழ்நாடு தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும் என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகள் பெறப்படுவதை மேலும் ஊக்குவிக்கும் விதமாக, “தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம்” இன்று இந்த மாமன்றத்தின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனுமதிகள் அனைத்தும் உரிய காலத்திற்குள் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படுவதை எளிமையாக்கும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஒருங்கிணைந்த இணையதள வழி ஒற்றைச்சாளர தகவினை 2–11–2017 அன்று நான் துவக்கி வைத்துள்ளேன். காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் வல்லம்–வடகால் தொழிற்பூங்காவில் சுமார் 245 ஏக்கர் பரப்பளவில் “வானூர்தி பூங்கா”

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜனவரி 12

ஒன்றினை அமைக்க 25–10–2017–ல் நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். மேலும், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் சிறந்த சுற்றுப்புறச் சூழல் உத்திகளைச் செயல்படுத்தியமைக்கான விருது மற்றும் சிறந்த எரிசக்தி மேலாண்மைக்கான விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளது. சர்க்கரை ஆலைகள் கரும்பிற்கான மாநில அரசு பரிந்துரை விலையினை விரைவில் வழங்க இந்த அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 859 பட்டாசுத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. பட்டாசு உற்பத்தியில் சுமார் இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் நேரடியாகவும், பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனை சார்ந்த உபதொழில்களில் சுமார் 4 இலட்சம் தொழிலாளர்கள் மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டில் மாண்பமை உச்ச நீதிமன்றத்தால் புதுடெல்லி மற்றும் NCR பகுதிகளில் தீபாவளிப் பண்டிகையையொட்டி, பட்டாசு விற்பனை மற்றும் உபயோகத்தைத் தடை செய்து இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக இந்தியா முழுவதும் பட்டாசு விற்பனை மற்றும் உபயோகத்தினைத் தடை செய்யக் கோரிய இரு வழக்குகள் மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், பட்டாசு உற்பத்தி செய்து அதனை விற்க இயலாத சூழ்நிலை ஏற்படும் அபாயம் உள்ளதால், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பட்டாசுத் தொழிற்சாலைகளும், உச்ச நீதிமன்றத்தின் கவனத்தினை ஈர்க்கும் விதமாக, 26–12–2017 முதல் உற்பத்தியை நிறுத்தி, காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. பண்டிகைக் காலங்களில், ஓரிரு நாட்கள் மட்டுமே பட்டாசு வெடிக்கப்படுவதால், அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பினைக் குறுகிய கால நிகழ்வாகக் கருதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகள், 1986–ன் விதி 3 (b)–ன்கீழ், விலக்கு அளித்து, உரிய திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர்களின் கோரிக்கையினைக் கருத்தில்கொண்டு, இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணும்பொருட்டு, பட்டாசுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகள், 1986–ன் விதி 3 (b) –ன்கீழ் விலக்கு அளிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மத்திய அரசை வலியுறுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி)



2018 ஜனவரி 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தொழில் துறையின் பங்கு மிக அதிகம். அந்தத் தொழில் துறை தங்குதடையின்றி முன்னேற, தங்குதடையில்லாத மின்சாரம் மிக மிக அவசியம். இதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, நடப்பாண்டில் இதுவரை 871 மெகா வாட் கூடுதல் மின் நிறுவுத் திறனை தமிழ்நாட்டின் மின் கட்டமைப்புடன் இணைத்துள்ளது. இதன்மூலம் கடந்த ஆண்டைப்போலவே, இந்த ஆண்டிலும், தமிழ்நாடு மின் மிகை மாநிலமாகத் தொடரும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2016–2017 ஆம் ஆண்டில் எரிசக்தித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைக்காட்டிலும், 2017–2018 ஆம் ஆண்டில் கூடுதலாக 3 ஆயிரத்து 72 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2011 முதல் 2017 வரையிலான 6 ஆண்டுக்காலத்தில் 365 துணை மின் நிலையங்களும், 87 ஆயிரத்து 187 மின் மாற்றிகளும் தமிழ்நாடு, முழுவதும் நிறுவப்பட்டுள்ளன. உயர் அழுத்த மின் பாதை அமைப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் இடத்தையும், துணை மின் நிலையங்களின் மின் திறனை அதிகப்படுத்துவதில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 38 ஆயிரத்து 904 பசுமை வீடுகளுக்கும், 4 ஆயிரத்து 612 நெசவாளர் குடியிருப்புகளுக்கும் சூரிய சக்தி மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுக்கு நவீன போக்குவரத்து வசதி அளித்திடும்வண்ணம், ஏற்கெனவே சென்னை மெட்ரோ இரயில் திட்டம்–கட்டம் 1–ல் அனைத்து உயர்த்தப்பட்ட வழித்தடங்களில் பயணிகள் சேவையினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் அம்மா அவர்களின் அரசு, மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக மேலும் 3 மெட்ரோ இரயில் வழித்தடங்களை 107.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஏற்படுத்துவதற்காக 79 ஆயிரத்து 962 கோடி ரூபாய்க்கு அயல்நாட்டு நிதியுதவி பெறும்பொருட்டு, மத்திய அரசின் பரிந்துரைக்கு அனுப்பியுள்ளது. மேலும், கோயம்புத்தூர் மாநகரத்தில் போக்குவரத்து நெரிசலைக்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜனவரி 12

குறைப்பதற்காக மெட்ரோ இரயில் திட்டத்தினைச் செயல்படுத்த, விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கையினைத் தயாரிக்கும் பணியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் தமிழ்நாடு அரசு ஒப்படைத்துள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–05*

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு விவரங்களின் அடிப்படையில் உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டி தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாணையம், தனது கால அட்டவணையில் 28–2–2018–க்குள் உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுவரையறை செய்யும்பொருட்டு, இட ஒதுக்கீடு குறித்த தனது பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பி இறுதி அறிவிக்கை வெளியிடும் திட்டத்தை வெளியிட்டுள்ளது. மறுவரையறை ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் உள்ளாட்சித் தேர்தல்கள் தமிழ்நாட்டில் விரைவில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுக்குத் தங்குதடையின்றி குடிநீர் வழங்கும் அவசியத்தினைக் கருத்தில் கொண்டும், நகரமயமாகும் நிலையைக் கருத்தில் கொண்டும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 2017–2018 ஆம் ஆண்டு 13 ஆயிரத்து 996 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

அம்ரூத் திட்டத்தின்கீழ், 2016–2017 ஆம் ஆண்டில் 4 குடிநீர்த் திட்டங்களும், 6 பாதாளச் சாக்கடைத் திட்டங்களும் 24 நகரங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் 1 நகராட்சி, 6 பேரூராட்சிகள் மற்றும் 5 ஆயிரத்து 482 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 25.46 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் 1,373.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் 377 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 2.89 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 140.40 கோடி ரூபாய் மதிப்பிலான 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அரியலூர், பெரம்பலூர் நகராட்சிகளில் விடுபட்ட பகுதிகள் மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சியில் பாதாளச்



2018 ஜனவரி 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

சாக்கடைத் திட்டம் மற்றும் கருங்குழி பேரூராட்சியில் கசடு மேலாண்மைத் திட்டம் ஆகியன 55.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வரலாறு காணாத வறட்சியிலும், குடிநீர்ப் பிரச்சினை தமிழ்நாட்டில் எங்கும் இல்லை என்ற நிலைமையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதி செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டதன் பயனாக, திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தில் சிறந்த செயல்பாட்டிற்கான தேசிய விருது பேரூராட்சிகள் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மற்றும் இதர கடலோர மாவட்டங்களில் வடகிழக்குப் பருவ மழையால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சீரமைக்கவும், இனி சென்னைக்கு வெள்ளத்தால் பாதிப்பு ஏதும் ஏற்படாதவாறு நிரந்தர சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் 4,047 கோடி ரூபாய் மத்திய அரசு வழங்க வேண்டுமென இவ்வரசு கோரியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுக்குத் தரமான கேபிள் டிவி. சேவையை குறைந்த செலவில் வழங்குவது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி. நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். மாண்புமிகு அம்மா அவர்களின் இடைவிடாத முயற்சிகளின் காரணமாக, மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் 17–4–2017 அன்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி. நிறுவனத்திற்கு டிஜிட்டல் உரிமம் வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே மாநில அரசின் நிறுவனத்திற்கு டிஜிட்டல் உரிமம் வழங்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும் என்பதை இம்மாமன்றத்திற்குப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளபடி, அரசு கேபிள் நிறுவன இணைப்பு பெற்றவர்களுக்கு விலையில்லா செட்டாப் பாக்ஸ் கடந்த செப்டம்பர் மாதத்திலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையில் 13 இலட்சம் குடும்பங்கள் இந்த விலையில்லா செட்டாப் பாக்ஸ்களைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) 125 ரூபாய் செலவில் 208 சேனல்கள் டிஜிட்டல் தரத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2018 ஜனவரி 12*

*தமிழ்நாட்டிலுள்ள 12 ஆயிரத்து 524 கிராம ஊராட்சிகளைக் கண்ணாடி ஒளி இழைமூலம் இணைத்து அனைத்து அரசின் சேவைகளைத் தங்கள் கிராமங்களிலிருந்து இணையம்மூலம் பெற ஏதுவாக, ஒரு திட்டத்தினை மத்திய அரசின் பங்களிப்புடன் தமிழக அரசே செயல்படுத்தும் என மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருந்தார்கள். இதன்படி, ஒரு விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலும் பெறப்பட்டு, இதற்கென 1,230 கோடியே 90 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் பெறப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைத் துரிதமாகச் செயல்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், சமீபத்தில் மின் ஆளுமையின்மூலம் மக்கள் மேலும் பல சேவைகளைப் பெறுவதற்கு ஏதுவாக, புதிய மின் ஆளுமைக் கொள்கை ஒன்றினை முதன்முறையாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–10*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள் சுயமரியாதையோடும், தன்னம்பிக்கையோடும் வாழ வழி செய்யும் பொருட்டு, அவர்களுக்கு அரசு பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள், குழுமங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் 3 சதவிகிதமாக இருந்த இட ஒதுக்கீட்டினை, 4 சதவிகிதமாக உயர்த்தி அமல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*சிறுபான்மையினர் நலனில் மாறாத அக்கறைக் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, 'முத்தலாக்' முறையில் முஸ்லிம் பெண்களை விவாகரத்து செய்யும் ஆண்களுக்கு சிறைத் தண்டனை என்ற சட்டப் பிரிவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்தக் கருத்தை வலியுறுத்தி மத்திய அரசுக்கு அனுப்பியும், இக்கருத்தையே மக்களவையில் வலியுறுத்தியும் உள்ளது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*தற்போது நடைமுறையில் உள்ள நேரடி நியமன முறையில் நிரம்பாத இடங்களில், ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு உள்ள முன்கொணர் முறையை பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் வகுப்பினருக்கும் நீட்டித்து வழங்க உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*



*2018 ஜனவரி 12*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டில் எப்பொழுதும் ஆர்வம் காட்டிவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, பழங்குடியினர்களின் கல்வி மேம்பாட்டிற்கென திருச்சி மாவட்டம், துறையூர் மற்றும் செங்காட்டுப்பட்டி மாணாக்கர்களுக்கு விடுதிகள், பச்சமலை மற்றும் தென்புற நாட்டில் இரண்டு சமுதாயக் கூடங்கள், ஜவ்வாது மலையில் இரண்டு உண்டு உறைவிட மாதிரிப் பள்ளிகள் மற்றும் ஆசிரியர் குடியிருப்புகள் 30.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் அறிஞர்கள் மற்றும் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு சிறப்புச் செய்தவர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பெருமைப்படுத்தி வருகிறது. அதன்படி, அறிவியல் தமிழறிஞர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களின் பெயரில் புதியதாக ஒரு விருது தோற்றுவிக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோருக்கு 1.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மணிமண்டபங்கள் அமைக்கப்பட்டு 31–12–2017 அன்று என்னால் துவக்கிவைக்கப்பட்டன. மேலும், திருச்செந்தூரில் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனாருக்கு மணிமண்டபம் கட்டப்படும் என தூத்துக்குடி மாவட்டத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) 22–11–2017 அன்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவின்போது நான் அறிவித்திருந்தேன். இதுதவிர, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு 2.80 கோடி ரூபாய் மதிப்பில் நினைவு மண்டபம் அமைத்து 1–10–2017 அன்று திறந்து வைக்கப்பட்டது. சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய கலைவாணர் அரங்கம் 62.73 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் பெருமை சேர்த்த பலருக்கு பல்வேறு விருதுகளை வழங்கியும், மணிமண்டபம் மற்றும் நினைவு மண்டபங்களைக் கட்டியும் பெருமை சேர்த்த மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நினைவு மண்டபம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2018 ஜனவரி 12*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குடியிருந்த வேதா நிலையத்தை அரசுடைமையாக்கி, அவர்தம் நினைவையும், புகழையும், மேன்மையையும், சிறப்பையும், (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்து வரும் தலைமுறையினர் தெரிந்து கொள்வதற்காக ஒரு நினைவுச் சின்னமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டையொட்டி சென்னை, காமராஜர் சாலையில் ஒரு மாபெரும் நினைவு வளைவு அமைக்கப்படவுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இம்மாமன்றத்திற்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாவுக்கு உகந்த இடமாகத் தமிழ்நாடு உள்ளது என்பதற்குச் சான்றாக கடந்த மூன்று ஆண்டுகளாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் பெற்று வருகிறது.

பக்தர்களின் நலனில் மிகுந்த அக்கறைகொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கடந்த ஆண்டில் 30 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது. 655 திருக்கோயில்களுக்குத் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–15

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு 1–11–2017 அன்று பழமை மாறாமல் திருப்பணி மேற்கொண்டதற்கு யுனெஸ்கோ நிறுவனம் விருது வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு 2–10–2017 அன்று தூய்மை இந்தியா விருது மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) சிவகங்கை மாவட்டம், கீழடியில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையின்மூலம் 55 இலட்சம் ரூபாய் செலவில் விரிவான அகழாய்வு மேற்கொள்ள மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)



*2018 ஜனவரி 12*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா ஓர் ஆண்டு முழுவதும் கொண்டாடப்பட வேண்டும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணப்படியும், 2–5–2017 அன்று அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவின்படியும், 2017 டிசம்பர் வரை 30 மாவட்டங்களில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தந்த மாவட்டங்களில் மக்கள் பயன்பெறும் வகையில் 521 புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டும், 3,200 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டும், 2,329 முடிவுற்ற திட்டங்கள் திறந்து வைக்கப்பட்டும், பல்லாயிரக்கணக்கான பயனாளிகளுக்கு அரசின் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டும் சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு பல்வேறு துறைகளின் சார்பில் பல்வேறு நலத் திட்டப் பணிகளை இந்த அரசு மேற்கொண்டு வருவதுடன், சட்டப் பேரவை விதி 110–ன்கீழும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, அதன் மீதான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் நடப்பு 2017–2018 ஆம் நிதியாண்டில் சட்டமன்றத்தில் விதி எண் 110–ன்கீழ் நான் 102 அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறேன். அவற்றில் 76 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) 8 அறிவிப்புகளுக்கான பணிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டும், 68 பணிகள் நடைபெற்றும் வருகின்றன. 23 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் தொடங்குவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 3 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற மற்றும் பணியிலிருக்கும் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பல்வேறு நிலுவைத் தொகைகளான மொத்தம் 2 ஆயிரத்து 174.6 கோடி ரூபாயினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியுள்ளது. இதுதவிர, நான் இப்பேரவையில் 10–1–2018 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன்கீழ் அறிவித்த 750 கோடி ரூபாயும், வரும் பொங்கல் பண்டிகைக்கு முன்னரே வழங்க ஆணையிட்டுள்ளேன். (மேசையைத்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] *[2018 ஜனவரி 12*

*தட்டும் ஒலி)* மேலும், போக்குவரத்துக் கழகங்களின் செயல் திறனை மேம்படுத்தும் வகையில், 416 புதிய பேருந்துகள் இயக்கப்படும். கண்ணகி நகர், பெரும்பாக்கம், செங்கம், சாத்தான்குளம், பவானி மற்றும் ஆத்தூர் ஆகிய 6 இடங்களில் புதியதாகப் பணிமனைகள் தொடங்கப்படவுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தின் சட்டம்-ஒழுங்கை சீரிய முறையில் தொடர்ந்து பராமரித்து வருவதுடன், குற்றங்களில் ஈடுபடுவோர் மற்றும் குண்டர்கள்மீது கடுமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து, மாநிலத்தில் குற்றங்கள் நடப்பதைப் பெருமளவில் காவல் துறையினர் குறைத்துள்ளனர். மேலும், மாநிலத்தில் சாதி, சமய வெறியர்கள் மற்றும் சமூக விரோதிகள்மீது அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் காரணமாக சாதி, சமய பூசல்கள் ஏதுமின்றி, மாநிலம் ஓர் அமைதிப் பூங்காவாகத் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

கடந்த 2017 ஆம் ஆண்டு இம்மானுவேல் சேகரன் நினைவு தினம், முத்துராமலிங்க தேவர் குருபூஜை, விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள், இமாம் அலி நினைவு நாள் மற்றும் பாபர் மசூதி இடிப்பு தினம் உட்பட பல்வேறு தலைவர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு தினங்களின்போது இவ்வரசு திட்டமிட்டு மேற்கொண்ட சிறப்பான பாதுகாப்பு நடவடிக்கைகளின் காரணமாக அந்நிகழ்ச்சிகள் எந்தவொரு சிறு சம்பவமுமின்றி அமைதியாக நடந்து முடிந்துள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் எங்கே சுதந்திரமாக இருக்கின்றார்களோ அங்கேதான் உண்மையான சுதந்திரம் உள்ளது. தமிழ்நாட்டில் சட்டம்—ஒழுங்கு மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருவதன் காரணமாகத்தான் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின்படி அகில இந்திய அளவில் உள்ள பெரிய மாநிலங்களில் பெண்கள் பாதுகாப்பாக வாழ உகந்த முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தியாவிலேயே பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான பெருநகரங்களில் கோயம்புத்தூர் முதலாவதாகவும், மெட்ரோ நகரங்களில் சென்னை மாநகரம் முதலாவதாகவும் உள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*



*2018 ஜனவரி 12]* [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

பிற்பகல் 1–20

கடந்த 2016 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் மொத்த குற்றங்களில் பெண்களுக்கு எதிரான குற்ற விகிதம் 10.7 ஆகும். இதனை தேசிய சராசரியான 51.4 சதவிகிதத்துடன் ஒப்பிடும்போது 40.7 புள்ளிகள் குறைவாக உள்ளது.

இந்திய தர நிர்ணயக் குழு ஒன்றல்ல, இரண்டல்ல, 80 பல்வேறு விதமான காரணிகளின் அடிப்படையில் மதிப்பீடுகள் அளித்து, இந்தியாவிலுள்ள 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவல் நிலையங்களில் மிகச் சிறந்த பத்து காவல் நிலையங்களைத் தேர்ந்தெடுத்து, அதில் இந்தியாவிலேயே கோவை மாநகரில் உள்ள ஆர்.எஸ். புரம் காவல் நிலையம் முதல் காவல் நிலையமாகவும், *(மேசையைத் தட்டும் ஒலி)* சென்னை மாநகரில் உள்ள அண்ணா நகர் காவல் நிலையம் 5–வது காவல் நிலையமாகவும் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் பெற்றுள்ளன.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் கடந்த ஓராண்டில் மட்டும் 12,535 இரண்டாம் நிலைக் காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் மொத்தம் 21,919 பணியிடங்களை நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாடு காவல் துறையில்தான் திருநங்கைகள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். *(மேசையைத் தட்டும் ஒலி)* 33 துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர். *(மேசையைத் தட்டும் ஒலி)*

காவல் துறையில் முதல் நிலைக் காவலர் முதல் காவல் துறை இயக்குநர் வரையிலான பல்வேறு பதவிகளில் மொத்தம் 5,235 பணியிடங்கள் பதவி உயர்வுகள்மூலம் நிரப்பப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு 244.32 கோடி ரூபாய் செலவில் 2,047 காவலர் குடியிருப்புகளும், 51.53 கோடி ரூபாய் செலவில் 85 காவல் நிலையங்களும், 83.85 கோடி ரூபாய் செலவில் 56 இதர காவல் துறை கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மக்கள்தொகை அதிகரிப்பு, வளர்ந்து வரும் பொருளாதாரம், சமூக சூழ்நிலை மற்றும் நகரமயமாகுதல் ஆகியவற்றால் குற்ற நிகழ்வுகள் ஒவ்வோர் ஆண்டும் அதிகரிக்கும் என்பதுதான் உலகெங்கும் பொதுவான நடைமுறை என்றாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலே காவல்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2018 ஜனவரி 12*

துறையினருக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ள காரணத்தால் பொது அமைதி பாதுகாக்கப்பட்டு, தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் மத்திய அரசின் நிறுவனங்களான மத்திய கரும்பு ஆராய்ச்சி நிலையம், வாழை ஆராய்ச்சி நிலையம், மத்திய உவர் நீர் மீன் ஆராய்ச்சி நிலையம் மற்றும் கோயம்புத்தூரிலுள்ள மத்திய அச்சகம் ஆகியவற்றை நிருவாக ரீதியாக மூடுவதற்கும் பிற மாநில கிளைகளுடன் இணைப்பதற்கும் மத்திய அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக அறிந்து, தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி அவற்றை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு அடிபணிந்து செயல்பட்டு தமிழ்நாட்டின் நலன்களை விட்டுக்கொடுக்கிறது என்பது போன்ற ஒரு தவறான பிம்பத்தை சில கட்சிகள் உருவாக்க நினைப்பதை மக்கள் ஒருகாலத்திலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது உறுதி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்திய மருத்துவக் கழகத்தின் புதிய சீரமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தமிழ்நாட்டிலுள்ள மத்திய அரசின் நிறுவனங்களை இங்கிருந்து மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நெடுவாசல், கதிராமங்கலம் மற்றும் கச்சத் தீவு போன்ற தமிழ்நாட்டின் நலன்களை பாதிக்கக்கூடிய பிரச்சினைகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து மத்திய அரசுக்குத் தனது எதிர்ப்பைத் தெரிவித்தும் வருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு அம்மா அவர்கள் கோரிய திருத்தங்களை மத்திய அரசு ஏற்றுக்கொண்டதால்தான் ஜி.எஸ்.டி., உணவுப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் உதய் திட்டம் போன்றவற்றை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒப்புக்கொண்டது. மேலும், தமிழ்நாட்டின் திட்டங்களுக்காகவும், வளர்ச்சிக்காகவும் போதிய நிதிகளைப் பெறும்பொருட்டுதான் மத்திய அரசுடன் தமிழ்நாடு இணக்கமாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் உரிமைகளை எந்த விதத்திலும் இம்மியளவுக்கூட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விட்டுக்கொடுக்கவில்லை *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



*2018 ஜனவரி 12*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு இயற்கை இடர்பாடுகளுக்கும், வளர்ச்சித் திட்டங்களுக்கும் மத்திய அரசிடம் நிதி கோரி வருகிறது. மாநில அரசு கோரிய நிதியை முழுமையாக அளிக்காவிட்டாலும், அளித்த நிதிக்கு நன்றி சொல்வது என்பது தமிழ் பண்பாடாகும், ஜனநாயக மரபாகும். இவ்வாறு நன்றி சொல்வதைக்கூட கொச்சைப்படுத்துவது என்பது நாகரிகமான ஜனநாயகம் அல்ல என்பதை இப்பேரவையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியால் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஒரு வருடத்திற்குள்ளேயே பல வருடங்களுக்கான திட்டங்களைத் தீட்டி நூறாண்டு பேசும்படி பல சாதனைகளைச் செய்திருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களைச் செம்மையாகத் தொடர்வதிலும், புதிய திட்டங்களை விரைவாகத் தொடங்குவதிலும் இந்த அரசு எந்தவித விளம்பரமோ, ஆர்ப்பாட்டமோ இல்லாமல் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் கடைக்கோடி மக்களுக்கும் சிந்தாமல், சிதறாமல் எங்கள் திட்டங்கள் முழுமையாகச் சேர வேண்டும் என்பதில் நாங்கள் விழிப்பாக இருக்கின்றோம். பயனாளிகளின் மன நிறைவும், நிம்மதியும்தான் எங்கள் ஆட்சிக்குக் கிடைக்கும் வெற்றியாக நாங்கள் கருதுகிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று இங்கு பேசும்போது, அவர்களது ஆட்சிக் காலத்தில் மத்திய அரசுடன் கூட்டணியில் இருந்தபோது தமிழ்நாட்டிற்காகச் செயல்படுத்திய திட்டங்களைப் பட்டியலிட்டு இங்கே கூறினார்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அவர்கள் வழியில் செயல்படும் அம்மா அவர்களின் அரசும், மத்திய அரசில் அங்கம் வகிக்காவிட்டாலும், மத்திய அரசிடம் புதிய திட்டங்களுக்காக அதிக நிதியைப் பெற்றும், மத்திய அரசு பங்களிப்புத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதனால் கூடுதல் நிதியைப் பெற்றும், தமிழ்நாட்டு மக்களுக்காக இத்திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றது. அவற்றில் ஒரு சில திட்டங்களை இந்த மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜனவரி 12

கடந்த 23–11–2017 அன்று சென்னையில் மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை, கப்பல் போக்குவரத்து, நீர் ஆதாரம், நதிகள் மேம்பாடு மற்றும் கங்கை நதி புனரமைத்தல் துறை அமைச்சர் மரியாதைக்குரிய மாண்புமிகு திரு. நிதின் கட்காரி அவர்களுடன் நடைபெற்ற கூட்டத்தின்போது தமிழ்நாட்டின் நலனுக்காகப் பல்வேறு சாலை மற்றும் துறைமுக மேம்பாட்டுத் திட்டங்களுக்காக சுமார் ஒரு இலட்சம் கோடி ரூபாய் நிதிக்கு ஒப்புதல் அளித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றில் குறிப்பிடத்தக்கவை:

1. 40,000 கோடி ரூபாய் செலவில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள்.

2. சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, 2,250 கோடி ரூபாயில் தாம்பரம்–செங்கல்பட்டு உயர்மட்டச் சாலை, மேலும், 1,500 கோடி ரூபாயில் பூந்தமல்லி–மதுரவாயல் உயர்மட்டச் சாலை (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் 1,000 கோடி ரூபாயில் திருவள்ளூர் உயர்மட்டச் சாலை.

3. 20,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை–பெங்களூரு விரைவுச் சாலை. (மேசையைத் தட்டும் ஒலி)

4. 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயம்பேடு–பூந்தமல்லி–வாலாஜாபேட்டை சாலை விரிவாக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

5. 4,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சி–சிதம்பரம் சாலை மேம்பாடு. (மேசையைத் தட்டும் ஒலி)

6. 6,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விழுப்புரம்–நாகப்பட்டினம் சாலை மேம்பாடு. (மேசையைத் தட்டும் ஒலி)

7. 2,300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேசிய நெடுஞ்சாலையில் சாலை பாதுகாப்புப் பணிகள். (மேசையைத் தட்டும் ஒலி)

8. 3,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூத்துக்குடி துறைமுக மேம்பாட்டுப் பணிகள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை**

1. 1,244 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சுகாதார திட்டம்–1 செயல்படுத்துதல். (மேசையைத் தட்டும் ஒலி)



2018 ஜனவரி 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

2. 2,686 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல். (மேசையைத் தட்டும் ஒலி)

3. பிரதம மந்திரி ஸ்வஸ்திய சுரக்ஷா யோஜனா திட்டத்தின்கீழ் தலா 150 கோடி ரூபாய் என 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உயர் சிறப்பு மருத்துவமனை அமைத்தல் (மேசையைத் தட்டும் ஒலி) போன்ற பல திட்டங்களுக்கு மொத்தம் 6 ஆயிரத்து 343 கோடி ரூபாய் இதுவரை மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் கடந்த ஜூலை மாதம் 27 ஆம் தேதி இராமேஸ்வரத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. அப்துல் கலாம் அவர்களின் நினைவகத்தைத் திறந்து வைத்துப் பேசும்போது, பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், ஏழைகளுக்கு வீட்டு வசதி அளிக்க, தமிழ்நாடு அரசு எவ்வளவு வீடுகள் கோரினாலும், அனைத்துக்கும் ஒப்புதல் வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) நிதி ஒதுக்கீடு செய்யத் தயாராக இருப்பதாக அந்த நிகழ்ச்சியில் தெரிவித்தார்கள்.

**காவல் துறை**

காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தில் குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்காணிக்கும் வலைப் பின்னல் திட்டத்தின்கீழ் (CCTNS) 105.48 கோடி ரூபாய்; நவீன தொலைதொடர்புச் சாதனங்கள், தளவாடங்கள், வாகனங்கள் போன்ற வசதிகளுக்காக 367.87 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

1. 11,498.46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அட்டல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டப் பணிகள்.

2. 8,891.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீர்மிகு நகரங்கள் திட்டத்திற்கான பணிகள். (மேசையைத் தட்டும் ஒலி)

3. 4,790 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றுப் பணிகள். (மேசையைத் தட்டும் ஒலி)

4. 3,831 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பணிகள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] *[2018 ஜனவரி 12*

*5. 1,439.26* கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜெர்மன் நாட்டு வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் நகர்ப்புற உட்கட்டமைப்புப் பணிகள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–30*

*6. 226.59* கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டாம் கட்ட அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டப் பணிகள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*7. 1,560* கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதல்களை தழுவல் திட்டப் பணிகள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*8.* பாக் ஜலசந்தி பகுதியில் உள்ள மீனவர்கள் பயன்பெறும் வகையில் *200* கோடி ரூபாய் மதிப்பீட்டில் *500* இழுவை வலைப் படகுகள் ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றும் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

*9. 194.62* கோடி ரூபாய் மதிப்பீட்டில் குளச்சல் மற்றும் சின்னமுட்டம் ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் கட்டி முடிக்கப்பட்டு *(மேசையைத் தட்டும் ஒலி) 2016*–ல் செயல்பாட்டிற்கு வந்துள்ளன.

*10. 359.90* கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேங்காய்ப்பட்டினம், பூம்புகார், முக்கையூர் ஆகிய மூன்று இடங்களில் புதிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு மீனவர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*11. 147.22* கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் புனரமைக்கப்பட்டு செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*12. 250* கோடி ரூபாய் மதிப்பீட்டில் *50* மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காகச் செயல்படுத்தி வருவதை பட்டியலிட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*2018 ஜனவரி 12]* [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரை மகிழ்ச்சியின் முதிர்ச்சியான ஆனந்தக் கண்ணீரைப் போன்றது. ஆனந்தக் கண்ணீருக்கும், அழுத கண்ணீருக்கும் வித்தியாசம் தெரியாமல் ஊசி முனையிலே மூன்று குளம் வெட்டியதாக *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒரு பாடலை நேற்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சபையிலே கூறினார். மாண்புமிகு ஆளுநர் உரை மகிழ்ச்சியும், மனநிறைவும் தருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் பாணியிலேயே நாட்டுப்புறப் பாடல் வாயிலாக நானும் பதிலளிக்க விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

"அடித்தஅடி தாளாமல்
தம்பி அழுதகண்ணீர்
ஆறாகப் பெருகி
ஆனை குளத்தேறி,
குளமாகத் தேங்கி
குதிரை குளத்தேறி,
வாய்க்காலாய் ஓடி,
வழிப்போக்கர் வாய்கழுவி,
இஞ்சிக்குப் பாய்ந்து
எலுமிச்சை வேரோடி,
தாழைக்குப் பாய்கையிலே
தளும்பியதாம் கண்ணீரும்,
வாழைக்குப் பாய்கையிலே
வற்றியதாம் கண்ணீரும்"

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியின்மீது சுமத்தப்படும் குற்றங்களையும், குறைகளையும், வெற்றிக்கான படிக்கட்டுகளாகப் பயன்படுத்தி, *(மேசையைத் தட்டும் ஒலி)* மென்மேலும் முன்னேறுவோம். மாண்புமிகு அம்மா அவர்களின் விசுவாசிகளான மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் என்னுடன் துணை நின்று, அல்லும் பகலும் அயராது உழைத்து, மக்கள் பணியாற்றுவதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின்மீது பாசமும் பற்றும் கொண்ட தமிழ் மக்கள், இந்த ஆட்சிக்கு எப்போதும் ஆதரவாகவும், உறுதுணையாகவும் இருப்பார்கள் என்று நம்புகிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2018 ஜனவரி 12*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இந்தப் பதிலுரை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் திருப்தி அளித்திருக்கும் என நான் நம்புகிறேன். எனவே, இந்த பதிலுரையை ஏற்றுக்கொண்டு மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுத்த திருத்தங்களை உறுப்பினர்கள் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நீடாமங்கலத்தில் பெரிய railway crossing. அதை cross செய்து ஒரு பக்கம் போனால் கும்பகோணம், இன்னொரு பக்கம் போனால் திருவாரூர். மறுபக்கம் போனால் மன்னார்குடி. போக்குவரத்து அதிகமாக இருப்பதால் மிகப்பெரிய அளவில் congestion இருக்கும் இடம். பாலம் கட்ட திரு. டி.ஆர். பாலு அவர்கள் அமைச்சராக இருந்த காலத்திலேயே மத்திய சர்க்கார் sanction செய்தது. முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள்கூட விதி 110–ன்கீழ் அறிவித்தார்கள். ஆனால், இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன்.

*பிற்பகல் 1–35*

எத்தனையோ மேம்பாலங்களைக் கட்டுவதாக இப்போது நீங்கள் அறிவித்தீர்கள். ஆகவே, உடனடியாக இந்தப் பாலத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், ஏற்கெனவே முன்னாள் முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்தது. விதி 110–ன்கீழ் அறிவித்ததை நீங்கள் execute செய்கிறீர்கள். இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, I have not given any notice to the Hon'ble Chief Minister. கொடுக்கவில்லையென்றாலும் நான் இப்போது சொல்கிறேன். சில நேரங்களில் நீதிமன்றங்களில் அவர்களாகவே சில case–களை எடுத்துக்கொண்டு decide செய்வார்கள்.



*2018 ஜனவரி 12*] [திரு. துரைமுருகன்]

அதுமாதிரி என்னுடைய appeal–ஐ நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். காட்பாடி over bridge கீழே விழுந்துவிடும் அளவிற்கு மிகவும் மோசமான நிலைக்கு வந்துவிட்டது. அதை நான் சென்று பார்த்தேன். Central Government மற்றும் State Government அதிகாரிகள் வந்து பார்வையிட்டிருக்கின்றனர். ஆகையினால், நான் இந்த மன்றத்தில் கேட்டுக்கொண்டதற்கிணங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதை personal ஆக எடுத்து அந்தப் பாலத்தைச் சீர் செய்ய வேண்டும். ஏனென்றால், ஆந்திராவையும், தமிழ்நாட்டையும் இணைக்கின்ற ஒரே பாலம் அதுதான். அந்தப் பாலம் இல்லையென்றால் யாரும் ஆந்திராவிற்கே செல்ல முடியாது. மேற்கொண்டு மும்பைக்கும் செல்ல முடியாது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த இரண்டு இரயில்வே மேம்பாலங்களையும் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள் நீங்கள். *(குறுக்கீடு)* திரு. ஆஸ்டின், நான் உங்களைப் பேசுவதற்கு அழைக்கவில்லை. *(குறுக்கீடு)* நான் உங்களைப் பேசுவதற்கு அழைக்காமல் நீங்கள் எழுந்திருக்கக் கூடாது. *(குறுக்கீடு)* நீங்கள் ஒன்றும் இந்த உரையில் பேசவில்லை. *(குறுக்கீடு)* நீங்கள் பேசவில்லை. *(குறுக்கீடு)* நான் எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற முறையில் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தேன். *(குறுக்கீடு)* ஆளுநர் உரையில் பேசியவர்களுக்குத்தான் நான் இப்போது பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடு)* அவர் ஆளுநர் உரையில் பேசியிருக்கிறார். வாய்ப்புக் கேட்கிறார். நான் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். *(குறுக்கீடு)* உட்காருங்கள் நீங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருக்கும் நான் அப்படி வாய்ப்புத் தர முடியாது.

**திரு. எ.வ. வேலு:** உணவுப் பொருட்கள் சுத்தமாகவும், தரமாகவும் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் பாதுகாக்கப்பட்ட கவரில் சீல் போட்டு வழங்கப்படுகிறது. அதற்கு 5 சதவிகிதம் G.S.T. வரி போடப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர்

[திரு. எ.வ. வேலு] [2018 ஜனவரி 12

அவர்கள் G.S.T. Council–ல் எடுத்துச் சொல்லி இந்த 5 சதவிகித வரியை நீக்கினால் மக்களுக்கு நலமாக இருக்கும். 2017–2018 ஆம் நிதியாண்டு முடிகின்ற சூழ்நிலையில் SC/ST மாணவர்களுக்கு scholarship இன்னும் வந்து சேரவில்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, இந்த மாதத்திலேயே சென்ற ஆண்டுக்குரிய scholarship மாணவர்களுக்கு சென்று சேருவதற்கு முயற்சிப்பாரா, பணத்தை அளிப்பாரா என்பதை உங்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள். (குறுக்கீடு) அது ஒரு முன்னுதாரணமாகிவிடும். நான் ஏற்கெனவே rulings கொடுத்துவிட்டேன். ஆளுநர் உரையில் பேசிய உறுப்பினர்களுக்குத்தான் வாய்ப்புத் தருவேன் என்று சொல்லிவிட்டேன்.

**திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட ஒகி புயல் பாதிப்பு பற்றி இங்கு இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரையில் அங்கு இருக்கக்கூடிய விவசாயப் பெருமக்களுக்கும், மீனவப் பெருமக்களுக்கும் என்ன செய்யப் போகிறோம் என்பது குறித்து எதுவுமில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையிலே நான், நேரமில்லா நேரத்தைப் பயன்படுத்தி ஒரு பிரச்சினையை எழுப்பியபோது, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். தொடர்ந்து இன்றைக்கு அவருடைய பதிலுரையிலும் அதைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதாவது, காணாமல் போன கடைசி மீனவரைக் கண்டுபிடிக்கும் வரை மீட்பு நடவடிக்கைகளைத் தொடர இந்த அரசு உறுதிபூண்டிருக்கிறது என்று கவர்னர் உரையிலும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே அவர் அதை மீண்டும் சொல்லியிருக்கிறார். நேரமில்லா நேரத்தில் நான் இதை எழுப்பியபோதும் அதைச் சொல்லியிருக்கிறார்.



2018 ஜனவரி 12] [திரு. மு.க. ஸ்டாலின்]

நான் கேட்க விரும்புவது, மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் மீனவர்களைத் தேடுகின்ற பணி முழுமையாக நிறுத்தப்பட்டுவிட்டது என்று தெளிவாக செய்தியாளர்களிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஆகவே, ஆளுநர் உரையில் எடுத்துச் சொல்லப்பட்டிருப்பதன் அடிப்படையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் எடுத்துச் சொன்னதன் அடிப்படையிலும், கடைசி மீனவரைக் கண்டுபிடிக்கும் வரை மீட்புப் பணியில், தேடும் பணியில் ஈடுபடுவோம் என்று சொல்வது எந்த நிலையில் இருக்கிறது என்பதை நான் இந்த அவையின் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றையதினமே விளக்கமாகக் குறிப்பிட்டேன். மத்திய அரசுக்கு நாங்கள் அழுத்தம் கொடுத்திருக்கின்றோம். கடைசி மீனவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் வரை நீங்கள் அந்தப் பணியை நிறுத்தக் கூடாது என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். பாரதப் பிரதமருக்குக் கடிதமும் எழுதியிருக்கின்றோம். மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் இதைக் கேட்டுக்கொண்டுள்ளோம். மேலும், நம்முடைய மீனவர்களைக் கொண்டு, மீனவர்களின் படகுகளை வைத்து, அவர்களுக்குத் தேவையான எரிபொருள் மற்றும் உணவினைக் கொடுத்து, மீனவர்களைத் தேடுகின்ற பணி முடுக்கிவிடப்பட்டிருக்கின்றது. ஆகவே, அந்தப் பணி நிறுத்தப்படவில்லை. மத்திய அரசால் மீனவர்களைத் தேடும் பணி நிறுத்தப்பட்டுவிட்டதாக நீங்கள் சொன்னீர்கள். ஆனால், நம்முடைய மீனவர்களைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, நம்முடைய மீனவர்கள் தாங்களாகவே (மேசையைத் தட்டும் ஒலி) 'நாங்கள் காணாமல் போன மீனவர்களைத் தேடி கண்டுபிடிக்கின்றோம்' என்று முன்வந்த காரணத்தினால் அவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், அவர்களுக்கு எரிபொருள், உணவைக் கொடுத்து மீனவர்களைத் தேடுகின்ற பணி, மாநில அரசின் மூலமாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] *[2018 ஜனவரி 12 பிற்பகல் 1–40*

அதுமட்டுமல்ல, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இரண்டு பாலம் வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதையும் அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும். அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேஷ் ராஜன் அவர்கள் இங்கே ஒரு விளக்கத்தைக் கேட்டார். ஒகி புயலால் கடுமையாக கன்னியாகுமரி மாவட்டம் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். அதற்குண்டான மீட்பு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அதற்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு தொடர்ந்து முயற்சிகளை எடுத்து வருகிறது. அதுமட்டுமல்ல, மாநில அரசின் மூலமாகவும் அந்தப் பகுதி மக்களுக்கு இழப்பீடுகளும், பல்வேறு நிவாரணங்களும் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** சரி, சுருக்கமாகச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரையில், ஒகி புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் அல்லாத விவசாயிகளுக்கும், கரையைச் சார்ந்தவர்களுக்கும் ரூ.20 இலட்சம் இழப்பீட்டுத் தொகை–அந்த equal amount–வழங்குவீர்கள் என்ற அறிவிப்பை மிகவும் எதிர்பார்த்திருந்தேன். நேற்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரிடமும் remind செய்தேன். கொஞ்சம் ஏமாற்றமாக இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

என் தொகுதியில் குறிப்பாக zero point இடத்திலே நூற்றுக்கணக்கான வீடுகள் முழுமையாக அழிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகளுக்கு எப்போதும் தருகிற amount தான் தருகிறீர்கள்.



*2018 ஜனவரி 12]* [திருமதி எஸ். விஜயதரணி]

அது போதாது. அது முழுவதும் இடிந்து போயிருக்கிறது. அதற்கு அதிக amount தரவேண்டும். இல்லையென்றால் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கான ஏற்பாடுகள் ஏதாவது செய்து தரவேண்டும்.

அடுத்தபடியாக, ஒகி புயலினால் பாதிக்கப்பட்டுள்ள குறிப்பாக இரப்பர், வாழை மரங்களுக்கான மதிப்பீட்டை கொஞ்சம் உயர்த்தித் தரவேண்டுமென்று request செய்திருந்தேன். அதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனையில் எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக சாலைகள் முழுவதுமாகவே அரித்துக்கொண்டு போய்விட்டன. எனது தொகுதியில் சாலைகளே கிடையாது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் அந்த சாலைகளை அமைப்பதற்கான அறிவிப்பையும் விரைவில் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியபோது, பட்டாசுத் தொழிலுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகள், 1986, விதி 3(b)–ன்கீழ், முற்றிலுமாக விதிவிலக்கு பெறுவதற்கு மத்திய அரசை வலியுறுத்துவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மகிழ்ச்சி. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இப்போது விருதுநகர் மாவட்டத்தில், சிவகாசி மற்றும் சுற்றுவட்டாரத்திலுள்ள பட்டாசுத் தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால், டிசம்பர் 12 ஆம் தேதியிலிருந்து அங்கு தொழில் நடக்கவில்லை. அதனால், அவர்களுடைய அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு அவர்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்பொருட்டு, அவர்களுக்கு ஏதேனும் ஒரு வகையிலே நிவாரணம் வழங்குவதற்கு முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

***மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கான பொன்னான வாய்ப்பினைத் தந்தமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். கொங்கு மண்டலத்தினுடைய ஒட்டுமொத்த விவசாயிகளுடைய வேண்டுகோளான, பரம்பிக்குளம்–ஆழியாறு பாசனத்தில் விடுபட்டுப்போன ஆனைமலையாறு–நல்லாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக உயர்மட்டக் குழு அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோவையிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவிலே அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தை கேரள மாநில அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி விரைந்து முடித்துக்கொடுக்க கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலம் 340 மெகா வாட் புனல் மின்சாரம் பெற முடியும் என்று நிபுணர்கள் குழு சொல்லியிருக்கிறது. மேலும், பரம்பிக்குளம்–ஆழியாறு பாசனம் முழுவதையும் இஸ்ரேல் சொட்டு நீர்ப்பாசன முறையாக மாற்றித் தரவேண்டும். அதற்கான பணியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். அதன்பின்னர் கடைசியாக ஒட்டுமொத்தமாக நீங்கள் பதில் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணத்தைப் போன்றே விவசாயிகளுக்கும் equal amount வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். இதில் அரசு வேறுபாடு காட்டவில்லை. All are equal before law. சட்டத்தின்முன் அனைவரும் சமம். இந்திய நாட்டின் குடிமகன்கள் அனைவரும் சமம். அதை அரசு உணர்ந்திருக்கின்றது. மீனவர்களுக்கு அரசு சார்பிலே வழங்கப்படுகின்ற நிவாரணம் 10 இலட்சம் ரூபாய்தான். மீதி 10 இலட்சம் ரூபாய் மீனவர் நல வாரியத்தின் மூலமாக வழங்கப்படுகின்றது. இதுதான் நிதர்சனமான உண்மை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.

பிற்பகல் 1–45

**திரு. வி.வி. இராஜன் செல்லப்பா:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரைக்கு விளக்கம் அளித்தும், பதிலளித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அற்புதமான உரையை வழங்கியிருக்கிறார்கள். அந்த உரையில் அனைவர் கேட்ட கோரிக்கைகளையும் நிறைவேற்றும் வகையில் மத்திய அரசிடம் வாதாடி, போராடி அனைத்தையும் பெறுவோம் என்றும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக, உறுதியாக தன்னுடைய நிலையிலிருந்து மாறாது என்பதைத் தெளிவுபடுத்தியும், மத்திய அரசு கொடுக்கின்ற நிதிக்கு நன்றி தெரிவிக்கும் என்று அறிவித்தாலும், எல்லா வகையிலும் தமிழகம், தமிழகமாகவே இருக்கும் என்றும், அண்ணாவின் பூமியாக, அண்ணாவின் கொள்கையோடு கச்சத் தீவைத் திரும்பப் பெறுவோம் என்ற உயர்ந்த கொள்கையை மீண்டும், மீண்டும் வலியுறுத்தியும், மொழியுணர்வுக்காக நாம் அளிக்கிற நிதியை அதிகப்படுத்திக் கொடுக்கிற வகையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.

***திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீதான விவாதத்தில் நேற்று உரையாற்ற எனக்கு வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றி சொல்ல முடியாததால், இன்றைக்கு நன்றியைச் சொல்கிறேன். நேற்று நான் பேசிய 20 நிமிட உரைக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக 25 நிமிடங்கள் உரையாற்றினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன், இல்லை, நேற்றைக்குக் கூடுதல் நேரம் இல்லை.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** நான் கேட்ட கோரிக்கை என்னவென்றால், இந்த அரசாங்கம் துணிச்சலாக, பலத்துடன் நம்முடைய உரிமைகளைக் காப்பாற்றும் வகையிலும்,

[திரு. பழனிவேல் தியாக ராஜன்] [*2018 ஜனவரி 12*

பொருளாதாரத்தைக் காப்பாற்றும் வகையிலும், மத்திய அரசை எதிர்த்துப் போராட வேண்டும் என்றுதான். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் என்னென்ன செய்தார்களென்று 20 நிமிடங்களுக்கு ஒரு வரலாறு சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன், நீங்கள் இவ்வாறெல்லாம் சொல்லக் கூடாது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் விளக்கம்தான் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் இப்படிப் பேசுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உரையை நல்லபடியாக முடியுங்கள். உரையை நன்றாக முடிக்கவேண்டும்.*

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** நான் என்னுடைய உரையை நல்லபடியாக முடிக்கிறேன். நான் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. நன்றாக என்னுடைய பேச்சை முடிக்கிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று 20 நிமிடங்களில் எந்தளவிற்கு விளக்கம் கொடுத்தார்களோ, முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் எந்தளவிற்கு துணிச்சலாக, தயவுசெய்து அந்தளவுக்கு துணிச்சலாக இந்த அரசாங்கம் போராடி, தமிழ்நாட்டின் உரிமைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் பேசப் போகிறீர்களா? ஏதும் கேட்கப் போகிறீர்களா? (குறுக்கீடு) பெயரைச் சொல்லலாம், நீங்கள் கையை உயர்த்தினால்தானே, பெயரைச் சொல்வதற்கு? (குறுக்கீடு) சரி, சரி, என்னவென்று சொல்லுங்கள்.*

**திரு. ஜெ. அன்பழகன்:** என்னுடைய பெயரைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சந்தோஷம். ஒன்றுமில்லை, சபை நல்லபடியாகப் போய்க்கொண்டிருக்கிறது. நல்லபடியாக முடித்துக்கொடுங்கள். (சிரிப்பு)*

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீதான விவாதத்தில் முதன்முதலில் பேசியதே நான்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதனால்தான் உங்களை இறுதியாகப் பேச அழைத்திருக்கிறேன். நல்லதுதான். இறுதியாக, எனக்கு நல்லபடியாக சபையை முடித்துக்கொடுங்கள்.*



*2018 ஜனவரி 12*]

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கோரிக்கைதான். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் காவல் துறை குறித்து நான் பேசுகிறபோதுதான், எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆயுள் தண்டனைக் கைதிகள், பத்தாண்டுகளுக்கு மேல் சிறையிலிருக்கும் கைதிகளை விடுதலை செய்வது பற்றிய என்னுடைய கோரிக்கையை வைத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்பொழுதே அதுகுறித்துப் பரிசீலிக்கிறேன் என்று அறிவித்தார்கள். பிறகு, வெளியில் பொதுக் கூட்டங்களில் பத்தாண்டுகளுக்குமேல் சிறைத் தண்டனை பெற்றவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று அறிவித்திருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா இந்த மாதம் இறுதியில் முடியவிருக்கிறது. ஆக, எந்தத் தேதியில் சிறைக் கைதிகளை விடுதலை செய்வீர்கள்? ஏனென்றால், சிறையிலிருக்கும் பல கைதிகள், இதுகுறித்த அறிவிப்பை எதிர்பார்த்து ஆவலாக பல எதிர்க்கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து, அவையிலே நேற்று பெரிய விவாதம் நடைபெற்றது. சில பேரை விடுதலை செய்யக் கூடாது, சில பேரை விடுதலை செய்யலாம் என்ற அந்த விவாதத்திற்குள்ளே நான் செல்லவில்லை. பத்தாண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருக்கிற கைதிகளை அரசாங்கம் விடுதலை செய்வது குறித்துப் பரிசீலிக்கிற நடவடிக்கைக்கு மேலாக, அவர்களை எப்போது விடுதலை செய்வீர்கள் என்ற அறிவிப்பையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆயுள் தண்டனை பெற்று சிறையிலிருக்கும் சிறைக் கைதிகளை விடுவிப்பதைப் பற்றி மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கைகளை ஏற்று இன்றைக்கு அதுகுறித்து அறிவித்திருக்கின்றார்கள். தற்போது உச்ச நீதிமன்றம் சில தீர்ப்புகளை வழங்கியிருக்கின்றது. அந்தத் தீர்ப்புகளுக்குட்பட்டு, சிறை விதிகளுக்குட்பட்டு, புதிய மாதிரி

[திரு. சி.வி. சண்முகம்] [*2018 ஜனவரி 12*

*சட்ட வரைவு விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, விதிமுறைகள் வகுக்கப்பட்டு, அனைத்து சிறைத் துறைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு, விரைவிலே சிறைவாசிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் பட்டாசுத் தொழிலில் இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றி குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே அவர்கள் பேசுகின்றபோதே நான் சொன்னேன். அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் வருகின்றபோது, மூத்த வழக்கறிஞர்களை வைத்து வாதாடி, அவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு கொடுப்பதற்கான ஒரு வழிமுறையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்படுத்தும். மேலும், அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். அதுகுறித்தும் மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி, சட்டத் திருத்தத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதுகுறித்து, கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி, அதனை முடிவுக்கு கொண்டுவரவேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே, அதுகுறித்தும் ஒரு நல்ல முடிவு எட்டப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–50*

*மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிடம் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் கவனத்துடன் பரிசீலித்து, உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*



*2018 ஜனவரி 12*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருங்கள். *(குறுக்கீடு)* பேசியவர்கள் பட்டியலில் இன்னும் கேட்காமல் இருப்பது திரு. முருகுமாறன் மட்டும்தான். அவரும் பேச வாய்ப்புக் கேட்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைமீதான விவாதத்தை வழிமொழிந்து பேசுவதற்கு வாய்ப்பளித்த தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், மா. ஆதனூருக்கும், நாகை மாவட்டம், குமாரமங்கலம் கிராமத்திற்கும் இடையே கொள்ளிடத்தில் தடுப்பணைக் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவிப்பு செய்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்கள், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் நடைபெற்ற கழக நிறுவனர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் அந்தத் தடுப்பணை விரைவில் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதை அமைத்துத் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தாய்மொழியாம் நம் தமிழ் மொழியினை ஆதிக்க இந்தியிடமிருந்து காப்பாற்ற தமது தேக்கு மர உடலில் துப்பாக்கிக் குண்டுகளை ஏந்தி, மண்ணில் விழும்போதும் 'தமிழ் வாழ்க' என ஓங்கி குரல் கொடுத்து, தன் இன்னுயிரையும் ஈந்த மொழிப்போர் தியாகி ராஜேந்திரன் அவர்களின் பெயரினை சிதம்பரம் இரயில் நிலையத்திற்குச் செல்கின்ற அந்த உயர்மட்டப் பாலத்திற்கு மொழிப்போர் தியாகிகளை நினைவுகூறும் இந்த நல்ல வேளையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சூட்டிட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நண்பர்களெல்லாம் இங்கே இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் பேசுகின்றபோது, ஏதோ தமிழகத்தினுடைய உரிமையை விட்டுக் கொடுப்பதைப்போல, அம்மா இருக்கின்றபோது அந்த உரிமையைக் காப்பாற்றியதைப்போல, இப்போது இருக்கின்ற அரசு அந்த உரிமையையெல்லாம் விட்டுக் கொடுத்ததுபோல பேசியிருக்கின்றார். ஏதாவதொரு உரிமையை விட்டுக்கொடுத்ததை நீங்கள் சொல்லுங்கள். இந்த உரிமையை நீங்கள் விட்டுக்கொடுத்துவிட்டீர்கள், அதனால் இந்த அரசு மத்திய அரசோடு அடிபணிந்து போகின்றது என்று நீங்கள் சொல்லுங்கள். ஏதோ குற்றச்சாட்டு இல்லாமல் பேசுகின்றமாதிரி, மத்திய அரசோடு நீங்கள் இணைந்து செல்கிறீர்கள், உரிமையை விட்டுக் கொடுத்துவிட்டீர்கள், உரிமைகள் இனிமேல் பாதுகாக்கப்பட வேண்டுமென்று 20 நிமிடங்கள் பேசினார்கள். ஆனால், அதைப் பற்றிப் பேசவில்லை என்றும் கூறுகிறீர்கள். 24 மணிநேரமும் தமிழகத்தினுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கின்றது. எந்தவிதத்திலும், யாருக்கும் அடிபணிகிற அரசாக இந்த அரசு இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையை சுட்டிக்காட்டுகின்றபோது, எந்த உரிமையை விட்டுக்கொடுத்ததாகக் கேட்கிறார்கள். ** அதைத்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆளுநர் குறித்துப் பேசியதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) ஆளுநரைக் குறித்து தயவுசெய்து நீங்கள் எதுவும் பேச வேண்டாம். (குறுக்கீடு) ஏற்கெனவே அதற்கான விதியையும் நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அது வேண்டாம், விட்டுவிடுங்கள். அதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். அவ்வளவுதான். (குறுக்கீடு) அதை விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) அது வேண்டாம், விடுங்கள். (குறுக்கீடு) இல்லை, ஆளுநர் உரை சரி. ** என்று நீங்கள் சொன்னீர்கள். நான் பேசியது உட்பட அது வேண்டாம். (குறுக்கீடு) ஆளுநர் உரையோடு நாம் நிறுத்திக்கொள்ளலாம்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

*இல்லை, ஆளுநர் உரையோடு நாம் நிறுத்திக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, வேண்டாம், விடுங்கள். (குறுக்கீடுகள்) நல்லபடியாக முடியட்டும். அதை விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) சரி, வேண்டாம் விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) அதை விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து, அதில் மேற்கொண்டு விவாதம் வேண்டாம். (குறுக்கீடுகள்) இல்லை, வேண்டாம் விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, ஆளுநர் உரை. (குறுக்கீடுகள்) பயம் ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) ஆளுநர் என்பவர் மதிக்கப்பட வேண்டியவர். மேதகு ஆளுநர் அவர்கள் இங்கு வந்து உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றி சொல்கிறோம். (குறுக்கீடுகள்) சரி, அதோடு விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) அது வேண்டாம், விட்டுவிடலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் சுருக்கமாகப் பேசிவிடுகிறேன். நான் பேசினால் கொஞ்சம் contest செய்கிறீர்கள். ஆக, எந்தச் சட்டத்தில் ** இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வேண்டாம், அதை விட்டுவிடுங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சரி, அதை விட்டுவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடத்திலும் கேட்டுக்கொள்கிறேன். அது வேண்டாம் விட்டுவிடுங்கள். வேறு சப்ஜெக்ட்டுக்குப் போகலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ** சட்டத்தில் இல்லை. அதைப் பற்றித்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு சப்ஜெக்ட்டுக்குப் போகலாம். (குறுக்கீடுகள்) அதோடு விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) நாங்கள் ஒன்றும் பயப்படவில்லை. (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் நீங்கள் பேசக் கூடாது.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள் தடுப்பணை கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது என்று இங்கே கேட்டார்கள். அந்தத் தடுப்பணைக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, விரைவில் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணி துவங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், சிதம்பரம் பாலத்திற்கு மொழிப்போர் தியாகி ராஜேந்திரன் அவர்கள் பெயர் சூட்டி புகழ் சேர்க்க வேண்டுமென்ற இன்னொரு கோரிக்கையையும் முன்வைத்தார்கள். அவருடைய கோரிக்கையை ஏற்று, (மேசையைத் தட்டும் ஒலி) மொழிப்போர் தியாகி அவர்களுக்குப் புகழ் சேர்க்கின்றவிதமாக, சிதம்பரம் பாலத்திற்கு ராஜேந்திரன் அவர்களின் பெயர் சூட்டப்படும் என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(திருத்தங்கள் வலியுறுத்தப் பெறவில்லை.)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 ஜனவரி 12] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.—

"2018 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 8 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்களால் 9–1–2018 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது, மேசையைத் தட்டும் ஒலி)

## 5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2018), 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2018) மற்றும் 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2018) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

*[2018 ஜனவரி 12*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2018), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

---

@ 12–1–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



*2018 ஜனவரி 12]* [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2018 ஜனவரி 12

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2018) பேரவையில் ஆய்வு செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவை தெரிவித்துள்ளார்கள்.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

## 9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2018), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2018 ஜனவரி 12]

“2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துகளை இந்த அவையில் நான் எடுத்துவைக்க விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளம் ரூபாய் 55,000/–ஐ ரூ.1,05,000/– ஆக உயர்த்திக் கொடுத்திருப்பது என்பது, அதாவது 100 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது தேவையில்லாதது. தற்சமயம் மாநிலம் கடுமையான நிதி நெருக்கடியிலே சிக்கியிருக்கின்ற நேரத்தில், இப்படி ஒரு சம்பள உயர்வு, அதுவும் மக்கள் பிரநிதிகளுக்குத் தேவையா என்பதை இந்த அரசு கவனமாக யோசித்துப் பார்க்கவேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** கடுமையான நிதி நெருக்கடியில் மாநில அரசு திணறிக் கொண்டிருக்கின்றது என்று நிதிநிலை அறிக்கையிலும், இங்கே சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆளுநர் உரையிலும் திரும்பத் திரும்ப நீங்களே கூறிவிட்டு, இப்படி ஒரு சம்பள உயர்வை நாமே உயர்த்திக்கொள்ள வேண்டுமா? அதுமட்டுமல்ல, போக்குவரத்து ஊழியர்கள் வெறும் 0.13 சதவிகிதம் ஊதிய உயர்விற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நிதி நெருக்கடியால் இந்த ஊதிய உயர்வை வழங்க முடியாது என்று அரசுத் தரப்பிலே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் நீதிமன்றம் இப்போது தலையிட்டு, இடைக்காலத் தீர்வைக் காணக்கூடிய முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. எனவே, நான் அந்தப் பிரச்சினைக்குள் போகவில்லை.

---

@ 10–1–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்கூட சில தினங்களுக்கு முன்பு ஒரு வார்த்தையைச் சொன்னார். 'மனம் இருக்கிறது, ஆனால் அரசிடம் பணம் இல்லை' என்று ஒரு பொது நிகழ்ச்சியிலே அவர் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். எனவே, இதுபோன்ற சூழ்நிலையிலே, மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும் நாமெல்லாம் மற்றவர்களுக்கு ஓர் உதாரணமாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையிலே, இந்தச் சம்பள உயர்வை திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையாக எதிர்க்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் இதை ஒன்றாக எதிர்க்கிறோம். எனவே, இதுகுறித்து நாங்கள் விளக்கமாக எழுதி, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கையொப்பமிட்டு மாண்புமிகு சபாநாயகர் அவர்களிடத்திலே வழங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவை எதிர்த்து நான் அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒகி புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அவர்கள் எண்ணுகின்ற நிவாரணத்தை நம்மால் வழங்க முடியவில்லை. போக்குவரத்துத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டப் பிரச்சினையிலே, நிதி நிலையின் காரணமாக, அவர்கள் கோரும் ஊதிய உயர்வை அரசால் கொடுக்க முடியவில்லை. நிதிப் பற்றாக்குறையால் இந்த அரசு பல பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறது. நிலைமைகளைப் புரிந்தும், தற்போது நீங்கள் சம்பள உயர்வைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். இந்த நிலையிலே, சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பள உயர்வு என்பதை காங்கிரஸ் கட்சி ஏற்கவில்லை. அதை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் பேசுகிறார். மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடந்த சட்டமன்றக் கூட்டங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன சில கருத்துகளின்





அடிப்படையில், கோரிக்கைகளின் அடிப்படையில்தான் இந்தச் சம்பள உயர்வு கொண்டுவரப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

19–7–2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. ச. பாண்டி உட்பட பல்வேறு உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்றுதான் இந்தச் சம்பள உயர்வு வழங்கப்படுகிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றையதினமே சுட்டிக்காட்டியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–05

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1996 முதல் 2000 வரையிலான காலத்தில் ஆண்டுதோறும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகள் 5 முறை உயர்த்தப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அதாவது 2001 ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு 16 ஆயிரம் ரூபாயாக இருந்த சம்பளம் மற்றும் இதர படிகள் 2006 முதல் 2011 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 5 ஆண்டு காலத்தில் 4 முறை உயர்த்தப்பட்டு 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. 19–07–2017 அன்று நடைபெற்ற மாநிலச் சட்டமன்றம் குறித்த மானியக் கோரிக்கையின்மீது தி.மு.க.–வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. திராவிடமணி மற்றும் திரு. மதிவாணன் ஆகியோர் சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தினை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்துள்ளனர். இதர சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு உதவியாளர் நியமனம் செய்ய வேண்டும் என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருந்தார்கள். தற்போது வழங்கப்படும் சம்பள உயர்வின்மூலம் இத்தகைய கோரிக்கைகளை அவர்கள் நிறைவேற்றிக்கொள்ளலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் மற்றும் இதர படிகள் வழங்குகின்ற வரிசையில் நமது மாநிலம் பத்தாவது இடத்தில் இருக்கின்றது. 9 மாநிலங்கள் நம்மைவிட அதிகமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) 19–07–2017 அன்று இந்தச் சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டு, இன்றையதினம் சட்டமுன்வடிவு சட்டமாக்கப்படவுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 ஜனவரி 12

கடந்த 6 மாதக் காலமாக இதுகுறித்து நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அனைவரும் எந்தவிதமான கருத்துகளையும் இதில் தெரிவிக்காத சூழ்நிலையில், இப்போது மட்டும் இதனை எதிர்ப்பது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் அரசியல் ஆதாயம் அடைய முடியாதா என்ற ஏக்கத்தின் காரணமாகத்தான் இவ்வாறு எதிர்க்கின்றார்கள் என்று நான் கருதுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கின்ற அனைவரும் மிகுந்த பணபலம் உடையவர்கள் என்று கருதிட முடியாது. உதாரணத்திற்காக நம்முடைய ஏற்காடு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இன்றும் தொகுப்பு வீட்டில்தான் வசித்துக்கொண்டிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு மூன்று குழந்தைகள். அந்த 3 குழந்தைகளும் உயர் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அவர் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கின்றார். அதுபோல தங்களுடைய கஷ்டங்களைச் சொல்ல முடியாத நிலையில் பல சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். உங்கள் அனைவருடைய கோரிக்கைகளையும் ஏற்றுத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சம்பள உயர்வினைத் தந்திருக்கின்றார்கள்.

நிதிப் பற்றாக்குறையை ஒரு காரணமாகச் சொல்லியிருக்கின்றீர்கள். இந்த நிதிப் பற்றாக்குறையானது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலிருந்து இன்றுவரை அந்த 3 சதவிகித வரையறை அளவிற்குள்தான் இருக்கின்றது. ஒரே ஒரு வருடம் மட்டும், 2016–2017–ல் கொஞ்சம் கூடியது. அதற்கான காரணத்தை இன்றைய பதிலில்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார். 22,815 கோடி ரூபாய் TANGEDCO– மின்சார வாரியத்தினுடைய கடனை மாநில அரசே ஏற்றுக்கொண்டதனால் வந்த விளைவு. மற்ற அனைத்து வருடங்களிலும் மாநிலத்தின் ஒட்டுமொத்த உற்பத்தியில் 3 சதவிகித நிதிப் பற்றாக்குறை அடக்கி வாசிக்கப்பட்டு இன்றைக்கு இந்தியாவிலேயே நிதிப் பற்றாக்குறையை வருடா வருடம் ஒழுங்காகக் கடைபிடிக்கின்ற மாநிலமாகத் தமிழகம் இருந்துகொண்டிருக்கின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் உடல்நலம் பாதிக்கப்படும் சூழ்நிலையில், அவர்களுடைய



2018 ஜனவரி 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மருத்துவப் படிகள் உயர்த்தப்பட வேண்டுமென்று ஒவ்வொரு வருடமும் வேண்டுகோள் வைக்கின்றனர். ஓய்வூதியங்கள், குடும்ப ஓய்வூதியங்கள் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்துக்கொண்டிருக்கின்றனர். இவையெல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக கணக்கில் எடுத்துக்கொண்டுதான் சம்பளங்களை, ஓய்வூதியங்களை, குடும்ப ஓய்வூதியங்களை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கைகளையெல்லாம் தீவிரமாக பரிசீலனை செய்து அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இன்றைக்கு சம்பளம் கூட்டப்பட்டிருக்கின்றது என்பதனை நான் பணிவோடு தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சம்பள உயர்வைப் பற்றி துணை முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஏதோ அரசியல் ஆதாயத்திற்காக எதிர்க்கின்றார்கள் என்று கூறியிருக்கின்றார். அரசியல் ஆதாயத்திற்காக யார், யார் என்னென்ன செய்தார்கள் என்று சொல்ல ஆரம்பித்தால் அது வேறு பாதையில் போய்விடும். நான் அந்தப் பிரச்சினைக்குக்கூட போகவில்லை. அரசியல் ஆதாயத்திற்காக உங்களுடைய நிலைமைகள் எல்லாம் எப்படி இருந்தன என்பது பற்றி உங்களுடைய மனசாட்சிக்கே தெரியும். ஆகையினால் அதை நான் விட்டுவிடுகின்றேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் சம்பள உயர்வு நடந்திருக்கின்றது. நான் அதை இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால், அது எத்தனை சதவிகிதம் உயர்த்தப்பட்டது. இப்போது எத்தனை சதவிகிதம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. அதைக்கூட நான் பெரிதுபடுத்த விரும்பவில்லை. நாங்கள் உங்களிடத்தில் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறோம். தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் அனைவரும் உங்களிடம் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறோம். இன்றைக்கு இருக்கக்கூடிய போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய பிரச்சினை தீருகிற வரையிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கான சம்பள உயர்வு தேவைதானா? நீங்கள் அதைத் தீர்த்துவைத்துவிட்டு (குறுக்கீடுகள்) இல்லை, நான் பேசி முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன்.

[2018 ஜனவரி 12

பிற்பகல் 2–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆதாயம் தேடுகின்ற முயற்சிதான். இதற்கும் அதற்கும் முடிச்சு போடக் கூடாது. ஏதோ மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுபோடுவதுபோல் இருக்கிறது நீங்கள் சொல்வது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அழகாகச் சொல்லியிருக்கிறார். இது நம்முடைய சக சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணங்கள். அதை நாம்தான் புரிந்துகொள்ள வேண்டும். நாமே புரிந்துகொள்ளவில்லையென்றால் அவர்களை யார் காப்பாற்றுவது? (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, நாம் மனசாட்சியின்படி நடந்துகொள்ள வேண்டும்.

இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பது சாதாரண விஷயம் அல்ல. எவ்வளவோ பிரச்சினைகளைச் சந்திக்கின்றோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அனுபவம் வாய்ந்தவர். இங்கிருக்கின்ற பல சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். அனைவரும் வெவ்வேறு கட்சிகளில் இருந்தாலும்கூட, பல நிகழ்வுகளுக்குச் செல்கின்றோம். அப்பொழுதெல்லாம் பல்வேறு பிரச்சினைகளை நாம் காண்கின்றோம். எவ்வளவு செலவாகின்றது என்பதை நாம் அறிவோம். ஒரு பிரச்சினையென்றால் உடனடியாக அந்த இடத்திற்குச் சட்டமன்ற உறுப்பினர்களை அழைப்பார்கள். அந்த இடத்திற்குச் செல்ல வேண்டும். போதிய வசதிகள் இருந்தால்தான், அந்தப் பணிகளை மேற்கொள்ள முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொள்ள வேண்டும். ஏதோ ஒரு சிலர் வசதி வாய்ப்புடன் இருப்பதை எண்ணி மற்றவர்களை compare செய்யக் கூடாது. அதைத்தான் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அழகாகச் சொன்னார். ** ஏழ்மையில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் தங்களுடைய சேவையின் காரணமாக மக்களிடத்தில் நம்பிக்கையைப் பெற்று, அந்தக் கட்சிக்கு விசுவாசமாக இருப்பதால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்றைக்குப் பணியாற்றிக்கொண்டிருக்கின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 ஜனவரி 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அவர்களுடைய சேவை மேலும் தேவை என்ற காரணத்தினாலும், மக்களுக்கு அவர்களுடைய சேவை முழுமையாகச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும், இப்படிப்பட்ட ஓர் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது.

தற்போதுள்ள போக்குவரத்துத் தொழிலாளர்கள் பிரச்சினைக்கிடையே இதனைத் தயவுசெய்து வைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, 7th Pay Commission–ன் பரிந்துரைப்படி, எந்த அளவிற்குச் சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கின்றது என்பதையும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன். சுமார் 14,700 கோடி ரூபாய் அளவிற்கு இன்றைக்கு உயர்த்தியிருக்கிறோம். அரசு ஊழியர்களை மதிக்கக்கூடிய அரசு, அவர்கள் உழைப்புக்குத் தேவையான, தக்க ஊதியத்தை வழங்கக்கூடிய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார். ஆகவே, அவர் இதையும் அதையும் அருள்கூர்ந்து ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாம். அவர் மற்றவர்களுக்கு வாதாடுவதை விட்டுவிட்டு, அவர்களுக்குப் பாதகமாகப் பேசுவது எந்தவிதத்தில் நியாயம் என்பது எனக்குத் தெரியவில்லை என்பதையும் தங்கள் வாயிலாகப் பதிய வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையை, இலட்சியத்தை எடுத்துச் சொல்லும் வகையில்தான் நாங்கள் இந்தப் பிரச்சினையை இங்கு எழுப்பியிருக்கிறோமே தவிர, ஏதோ அரசியல் ஆதாயத்திற்காக அல்ல. இன்றைக்குப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவதற்கு பணம் இல்லை, நிதி ஆதாரம் இல்லை, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மு.க. ஸ்டாலின்:** போதுமான அளவிற்கு நிதி இல்லை என்று. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசாமல் இருங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** அரசே சொல்லிக்கொண்டிருக்கிறது. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதி, அமைதி.

**திரு. மு.க. ஸ்டாலின்:** எனவேதான் நாங்கள் தங்களிடத்தில் எழுதிக் கொடுத்திருக்கும் கடிதத்தில்கூட உயர்த்தியிருக்கக்கூடிய இந்த சம்பளத்தை எங்களுக்கு வழங்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெளிவாக நாங்கள் அதில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறோம். ஆகவே, அதற்கு ஒரு முடிவு கட்டுங்கள். முடிவு கண்டதற்குப் பிறகு, நான் நீங்கள் சொன்னவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை உருவாகும் ஒரு நிலை வரும். ஆனால் அதுவரையில், உறுதியாக, போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய பிரச்சினை தீருகிற வரையில், நீங்கள் உயர்த்தியிருக்கக்கூடிய சம்பளத்தைப் பெறுவதில்லை என்ற முடிவிலிருந்து நிச்சயமாக நாங்கள் பின்வாங்க மாட்டோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசியபோது ** என்று குறிப்பிட்டேன். அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவற்றை நீக்கிவிடலாம். அவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சின்ன யோசனை. அதை ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் உங்களுடைய விருப்பம். கடந்த 8–4–2005 ஆம் நாளன்று இந்தப் பேரவையில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் சம்பளத்தை உயர்த்தி மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தபோது, அன்றைய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த உறுப்பினர் இந்த ஊதிய உயர்வு, படிகள் எங்களுக்கு தேவையில்லையென்று தெரிவிக்க, அதற்குப் பதிலளித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்படியென்றால் அதனை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கே வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நானும் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதை வழிமொழிய விரும்புகிறேன். எந்தெந்த உறுப்பினர்கள் இந்த ஊதிய உயர்வின் பலன் எங்களுக்குத் தேவையில்லையென்று கருதுகிறார்களோ, அவர்கள் தயவுசெய்து, தயவுசெய்து, தயவுசெய்து (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு உயர்த்தப்பட்ட தொகையை எடுத்துக்கொள்ளச் சொல்லி, கைப்பட எழுதித்தர கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) திரு. அன்பழகன், நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள், உட்காருங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அரிய கருத்தை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதை மனப்பூர்வமாக நான் ஏற்றுக்கொள்கிறேன். போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய பிரச்சினைத் தீரவில்லை என்று சொன்னால், நிச்சயமாக உங்களுக்குப் போதுமான அளவிற்கு நிதி தேவைப்படக்கூடிய ஒரு சூழ்நிலையிலே, நீங்கள் கேட்பதைப்போல முதலமைச்சர் நிவாரண நிதியிலேகூட அதைச் சேர்ப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் எந்தக் கருத்து மாறுபாடோ, வேறுபாடோ கிடையாது. எங்களுடைய கொள்கை, எங்களுடைய குறிக்கோள் போக்குவரத்துத் தொழிலாளர்கள் கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய, கோரிக்கை வைத்திருக்கக்கூடிய ஊதிய உயர்வை வழங்க வேண்டும் என்பதிலே நாங்கள் கவனமாக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு அதிக அக்கறையோடு செயல்படுவதாக இங்கே தெரிவித்திருக்கின்றார். 2011 ஆம் ஆண்டு உங்களுடைய ஆட்சிக்குப் பிறகு, அம்மா அவர்களுடைய ஆட்சி மலர்ந்தது. அப்பொழுது ஓய்வு பெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை 922 கோடி ரூபாயை நீங்கள் பாக்கி வைத்துவிட்டுச் சென்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, ஏழையெளிய, சாதாரண போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய ஓய்வூதியத்தை நீங்கள் ஏன் வழங்கவில்லை? இவ்வளவு அக்கறை கொண்ட நீங்கள் அவர்களுக்கு அப்பொழுதே அதை வழங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, அந்த நிலுவைத் தொகையையும் அம்மா அவர்களுடைய அரசுதான் இப்பொழுது வழங்கியுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமில்லை, நிறைய பேசியாகிவிட்டது போதும். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) அவருக்கு அனுமதி கொடுத்தால் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அனுமதி கொடுக்க வேண்டியிருக்கும். எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற முறையிலே நான் மதித்து, உங்களைப் பேச அனுமதிப்பது என்பது வேறு. சட்டமுன்வடிவில் எல்லோரும் எவ்வளவு நேரம் பேசமுடியும்? மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. கே.என். நேரு, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழக ஊழியர்களுடைய ஊதிய உயர்வில், ஊதிய உயர்வு பிரச்சினையல்ல. தொழிற்சங்கங்கள் தங்களுடைய சங்கங்களை வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்திலேதான் போக்குவரத்துத் துறையோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மக்கள் அறிவார்கள். போக்குவரத்துக் கழக ஊழியர்களும் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், 20 முதல் 25 சதவிகித ஊதிய உயர்வு. . . (குறுக்கீடு)



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும், பின்னர் நீங்கள் பேசலாம்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** 20 முதல் 25 சதவிகித ஊதிய உயர்வை வழங்கியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசான மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) 20 முதல் 25 சதவிகித ஊதிய உயர்வை நாங்கள் வழங்கியிருக்கிறோம். போக்குவரத்துக் கழகத்தினுடைய வரலாற்றிலே இது அதிகபட்சமான உயர்வு என்பது போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு நன்றாகவே தெரியும். முதலிலே 2.35 மடங்கு என்ற அளவிலே பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதன் பிறகு sub committee–அதிகாரிகள் மட்டத்திலே 2.44 மடங்கு என்ற அளவில் பேச்சுவார்த்தை நடைபெறும்பொழுது, அவர்கள் வைத்த ஒரே ஒரு கோரிக்கை என்னவென்றால், ஊதிய உயர்விற்கான பேச்சுவார்த்தை 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை என்பதை நீங்கள் அதிகப்படுத்த வேண்டாம், குறைக்க வேண்டும் என்பதுதான். 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தை என்பது தொடர்ந்து இருக்கட்டும் என்பது. 2.44 மடங்கு என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்றுதான் கூறினார்கள். ஆனால், அவற்றையெல்லாம் விட்டுவிட்டு 2.5 மடங்கு அளவில் ஊதிய உயர்வு வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது 1,000 கோடி ரூபாய் அளவிற்கு ஊதிய உயர்வை வழங்கியிருக்கக்கூடிய அரசு, அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களைத் திசை திருப்பி, அவர்களுடைய நலனிலே அக்கறை இருப்பதைப்போல காட்டிக்கொண்டு சில தொழிற்சங்கங்கள், தங்களுடைய சங்கங்களை வளர்க்க வேண்டுமென்று, போடப்பட்ட ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டுமென்பதுதான் அவர்களுடைய முதல் கோரிக்கை. நீதிமன்றத்திலே, நீதியரசர் உங்கள் மனசாட்சிப்படி நீங்கள் செயல்படுகிறீர்களா என்று கேட்டிருக்கிறார். அவையெல்லாம் பத்திரிகைகளிலே செய்தியாக வரவில்லை. அதிகப்படியான ஊதியம் வழங்கியிருக்கிறோம். . .

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். நீதிமன்றத்திலே நேற்றைக்கு ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. நீதிமன்றத்திலே இருக்கும் வழக்குக் குறித்து தயவுசெய்து விவாதிக்க வேண்டாம். நீங்கள் உங்களுடைய பிரச்சினையைப் பற்றி பேசினீர்கள். அதோடு முடித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** நீதிமன்றத்திலே நீதியரசர் ஒருவரை நியமித்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பை நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நேரு, உட்காருங்கள். Front bench–ல் உள்ளவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். நேரமில்லை. நீங்களே மாறி, மாறி பேசிக்கொண்டிருந்தால் எப்படி? சட்டமுன்வடிவு, சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை உயர்த்துவது குறித்தது. (குறுக்கீடு) இடையில் மாறி, போக்குவரத்துத் தொழிலாளர்களின் பிரச்சினைக்குப் போய்விட்டது. (குறுக்கீடு) இன்னும் நான் 13 சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றியாக வேண்டும். மணி இப்போது 2–20 ஆகிவிட்டது. எனக்கு ஒத்துழைப்புக் கொடுத்து, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொருவரையும் சட்டமுன்வடிவின்மீது பேச நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) எதிர்க்கட்சி வரிசையில் முன்னால் இருப்பவர்களை மட்டும் நான் பேச அனுமதிக்கிறேன்.

*பிற்பகல் 2–20*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்தப் பிரச்சினையிலும் தலையிட விரும்பவில்லை. ஒரே ஒரு கருத்தை மட்டும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு



2018 ஜனவரி 12] [திரு. துரைமுருகன்]

போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்ததில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. அது அவருடைய இலாகா. ஆனால், தொழிற்சங்கங்கள் என்பது எல்லாக் கட்சிகளிலுமே இருக்கின்றன. தொழிலாளர்களை மதிப்பவர்கள் நாம். ஆனால், தொழிற்சங்கங்கள் தங்களை வளர்ப்பதற்காகத்தான் இந்தப் போராட்டத்தை நடத்துகிறார்கள் என்று சொல்வது அவர்களை கொச்சைப்படுத்துவதுபோல் இருக்கிறது. தயவுசெய்து அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு பேர் பேசிய கருத்துகளும் அவைக் குறிப்பில் இருக்கட்டும்.

**திரு. துரைமுருகன்:** அதை எடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதற்குத் தெரிவித்த பதிலையும் நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால் என்ன? இரண்டு பேர் பேசியதுமே இருக்கட்டும். (குறுக்கீடு) நீங்கள் அதற்குரிய பதிலையும் பேசி விட்டீர்கள். (குறுக்கீடு) உங்களுடைய பதிலையும் நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** பதிவு செய்வதைப்பற்றி நான் குறிப்பிடவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு பேர் பேசியதும் அப்படியே இருக்கட்டும். அதில் ஒன்றும் மாற்றம் தேவையில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) விவாதம் வேறு திசையில் சென்று கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு, எக்காரணத்தைக் கொண்டும் உங்களை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்தபோது, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சம்பளத்தை 55,000/– ரூபாயிலிருந்து 65,000/– ரூபாயாக உயர்த்தித் தந்தார்கள் என்பது உண்மை.

அதற்குப் பிறகு, உங்களுடைய அ.தி.மு.க. ஆட்சி அம்மையார் அவர்கள் தலைமையில் பொறுப்பேற்ற நேரத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக, உயர்த்திய சம்பளத்தை இரத்து செய்தது. பொருளாதாரம் ஏற்றம் பெற்ற பிறகு, சம்பள உயர்வு தரப்படும் என்று இதே சட்டசபையில் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் பேசியதையும் நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். இதோடு இந்தப் பிரச்சினையை முடித்துக்கொள்ளலாம். *(குறுக்கீடு)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வதோடு தயவுசெய்து இந்தப் பிரச்சினையை முடித்துக்கொள்ளலாம். எனக்கு நேரமில்லை. *(குறுக்கீடு)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், அவர்களுடைய தொழிற்சங்கங்களைப்பற்றி சொல்லும்போது கோபம் அடைந்தார்கள். நேற்றையதினம் இரவு தொழிற்சங்க பிரச்சினைகளெல்லாம் நீதிமன்றத்தின்மூலம் தீர்க்கப்படும் என்று நீதிபதி, ஓய்வுபெற்ற நடுநிலை நீதிபதி ஒருவரை நியமித்திருக்கிறார். இதுசம்பந்தமாக, உங்களுடைய தொ.மு.ச. பொதுச் செயலாளர் மரியதைக்குரிய திரு. சண்முகம் அவர்கள் பேட்டி கொடுக்கும்போது, "எங்களுடைய தலைவர் இந்தச் சம்பள விகிதத்தை எதிர்த்திருக்கிறார். அதற்கு நன்றி தெரிவிக்கிறேன்" என்று அந்தப் பேட்டியில் தெரிவித்திருக்கிறார். அந்தப் பேட்டியை நீங்கள் பார்த்தீர்களோ இல்லையோ நான் பார்த்தேன். எல்லா ஊடகங்களிலும் நான் பார்த்தேன். அதுமட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் இந்தப் பிரச்சினைக் குறித்து எங்களுடைய தலைவர் கேட்டு அறிந்து கொள்கிறார் என்ற அந்தக் கருத்தையும் அவர் தெரிவித்திருக்கிறார். ஆகவே, சந்தேகங்கள் வருகின்ற காரணத்தினால், அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அப்படிச் சொன்னார்களேயொழிய, தொழிற்சங்கங்களைக் கொச்சைப்படுத்தி பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, உங்களுடைய தொழிற்சங்கத்தினுடைய பிரதிநிதிதான் அப்படிப் பேசினார். (குறுக்கீடு) சம்பள விகிதத்தை எதிர்க்கின்றவர்கள் நீங்கள். அந்தக் கருத்தை நேற்று இரவே அவர் முன்மொழிந்து பேசியிருக்கிறார். உங்களுடைய தொ.மு.ச. பொதுச் செயலாளர்*



*திரு. சண்முகம் நேற்று பேசியிருக்கிறார். (குறுக்கீடு) அந்தச் சந்தேகத்தின் அடிப்படையில்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பேசியதெல்லாம் அவைக் குறிப்பில் பதிவாகியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *அதுமட்டுமல்ல, அவர் சொல்கின்றபோது, வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோது ஒவ்வொரு நாளும் காலையில் அவரோடு தொடர்பு கொண்டு பேசியிருக்கின்றேன் என்ற செய்தியையும் அவர் தெரிவித்திருக்கிறார். அப்படியென்றால் என்ன அர்த்தம்? வெட்ட வெளிச்சமாகவே தெரிகிறது என்பதை மட்டும் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இந்தப் பிரச்சினையை இதோடு முடித்துக்கொள்ளலாம். *(குறுக்கீடு)* மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள். *(குறுக்கீடு)* இல்லை. நீங்கள் கேட்ட அளவுக்கு நான் வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். *(குறுக்கீடு)* இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவ்வாறு தெரிவிக்கவில்லை. *(குறுக்கீடு)* அப்படிச் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவரை அப்படிச் சொல்லவேயில்லை. *(குறுக்கீடு)* இல்லை, இல்லை. *(குறுக்கீடு)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட வார்த்தையை நான் பதிவு செய்யவில்லை. ஒவ்வொரு நாளும் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறேன் என்ற கருத்தை அவர் சொல்லியிருக்கிறார். அந்தக் கருத்தைத்தான் நான் இப்போதும் சொல்கிறேன். அவர் ஊடகங்களில் என்ன கருத்தைச் சொன்னாரோ அந்தக் கருத்தைத்தான் தங்கள் மூலமாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்தேன். அந்தப் பிரச்சினையில்தான் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் அப்படி ஒரு கருத்தைச் சொன்னார்களேயொழிய வேறொன்றும் இல்லை. உங்களுடைய தொ.மு.ச. பொதுச் செயலாளர் அவர்கள் தெரிவித்த கருத்தைத்தான் இங்கே நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இதோடு இந்தப் பிரச்சினையை முடித்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.



2018 ஜனவரி 12]

பிற்பகல் 2—25

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (குறுக்கீடு)

## (இ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 13 சட்டமுன்வடிவுகள் உள்ளன. (குறுக்கீடு) நீங்கள் ஏற்றுக்கொண்டாலும் நான் முறையாக பதிவு செய்தாக வேண்டும்.

2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2018), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 11–1–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈ) தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2018), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 ஜனவரி 12

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 12–1–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2018 ஜனவரி 12] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (உ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2018), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2018 ஜனவரி 12

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 2—30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 11—1—2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2018 ஜனவரி 12] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஊ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2018), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2018)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 அக்டோபர் திங்களுக்குப் பின்னால் மூன்றாவது முறையாக தனி அலுவலர்களுக்கான பதவி நீட்டிப்பு என்பது இன்றைக்கு சட்டத் திருத்தமாக வந்திருக்கிறது. ஏற்கெனவே அந்தச் சட்டத் திருத்தங்கள் வந்தபோது இட ஒதுக்கீட்டைச் சரிசெய்திட வேண்டும், வாக்காளர் பட்டியலைச் சரிபார்த்திட வேண்டும் என்கின்ற காரணங்களையெல்லாம் சொல்லி, இரண்டு முறை ஆறு மாத காலங்கள் தனி அலுவலர்களுக்கான கால நீட்டிப்பு தரப்பட்டது. ஆனால், இப்போது வார்டுகளின் எல்லைகளை மறுவரையறை செய்திட வேண்டும், அதற்கான கால அவகாசம் தேவைப்படுவதால் 6 மாதக் காலம் தனி அலுவலர்களின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட வேண்டும் என்கின்ற காரணத்தின் அடிப்படையில் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். உண்மையிலேயே இதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த 8, 9 ஆண்டுகளில் தான் தமிழகத்தில் 6 மாநகராட்சிகள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. கடந்த 8, 9 ஆண்டுகளில் புதிதாக உருவான 6 மாநகராட்சிகளில் எல்லை வரையறை என்பது தேவையில்லாத ஒன்று. அதேபோல், கடந்த 2011–ல் நடைபெற்ற தேர்தலின்போது ஏற்கெனவே இருந்த சென்னை உள்ளிட்ட 6 மாநகராட்சிகளுக்கு எல்லை விரிவாக்கம் முழுமையாகச் செய்யப்பட்டு விட்டது. இந்நிலையில் மீண்டும் வார்டுகளின் எல்லை வரையறை என்பது காரணத்தைத் தேடிக் கண்டுபிடித்து தேர்தலைத் தள்ளி வைப்பதற்காக செய்யப்பட்ட ஒரு நிலையாகவே நாங்கள் கருதுகிறோம்.

சென்னையை பொறுத்தவரை, ஏற்கெனவே சென்னையில் இருந்த 155 வார்டுகளை 107 வார்டுகளாகச் சுருக்கி, திருவள்ளூரிலிருந்து 62 வார்டுகளையும், காஞ்சிபுரத்திலிருந்து 31

@ 11–1–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2018 ஜனவரி 12] [திரு. மா. சுப்பிரமணியன்]

வார்டுகளையும் இணைத்து 200 வார்டுகளாக ஆக்கினார்கள். அந்த வார்டுகளின் எல்லை அப்போது சரியாக வகுக்கப்பட்டு 7 ஆண்டுகளுக்கு முன்னால்தான் அவை நடைமுறைக்கு வந்தன. ஆனால், இப்போது நீதிமன்றத்தில் தமிழகத்திலே இருக்கிற 12 மாநகராட்சிகளின் வார்டுகளை மறுவரையறை செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இதிலே என்ன புதிதாக செய்ய இருக்கிறார்கள் என்கின்ற ஒரு செய்திகூட இதுவரை பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை, 200 வார்டுகளிலும் 33,000 மக்கட்தொகை எண்ணிக்கைக்கு ஒரு வார்டு என்று கணக்கிட்டுச் செய்யப் போகிறோம் என்று சொன்னார்கள். நாங்கள் நிருவாகிகளோடு ஆணையரைச் சந்தித்து 33,000 மக்கட்தொகை எண்ணிக்கைக்கு ஒரு வார்டு என்ற வரையறையை நீங்கள் எடுத்துக் கொண்டால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், நீங்கள் மிகவும் விளக்கமாக இதில் பேச முடியாது.

**திரு. மா. சுப்பிரமணியன்:** இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்க்கிறீர்கள் என்பதை இரண்டொரு வார்த்தைகளில் சொல்லி முடியுங்கள்.

பிற்பகல் 2–35

**திரு. மா. சுப்பிரமணியன்:** இதன் நோக்கக் காரணத்தை நீங்கள் சொல்லியிருக்கும்போது நாங்கள் சொல்ல வேண்டுமல்லவா? இரண்டே நிமிடங்களில் சொல்லி விடுகிறேன். ஆணையர் சொன்னது மாதிரி 33,000 மக்கட்தொகைக்கு ஒரு வார்டு என்று எடுத்துக் கொண்டால் வெறும் 134 வார்டுகள்தான் வரும். 200 வார்டுகள் வைத்துக்கொள்ளப் போகிறீர்களா? அல்லது 134 வார்டுகள் வைத்துக்கொள்ளப் போகிறீர்களா என்று நாங்கள் அப்போது கேட்டோம். இல்லை, நாங்கள் மறுவரையறை ஆணையரிடம் பேசி சரி செய்கிறோம் என்று சொன்னார்கள். தற்போது ஒரு முடிவெடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். மாதவரம் தொகுதிக்கு 15 ஆயிரம் மக்கட்தொகை, திருவொற்றியூர் தொகுதிக்கு 20 ஆயிரம் மக்கட்தொகை, சென்னைக்கு 33 ஆயிரம் மக்கட்தொகை என்ற

[திரு. மா. சுப்பிரமணியன்] [2018 ஜனவரி 12

வரையறையின்படிதான் ஏற்கெனவே பிரிக்கப்பட்டுள்ளது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 4 மாநகராட்சிகள், அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தஞ்சாவூர், திண்டுக்கல் ஆகிய 2 மாநகராட்சிகள் என கடந்த 8, 9 ஆண்டுகளில் புதிதாக மாநகராட்சிகள் உருவாக்கப்பட்டன. இம்மாநகராட்சிகள் உருவாக்கப்படும்போதே ஏற்கெனவே இருந்த 6 மாநகராட்சிகளுக்கும் மறுவரையறை செய்யப்பட்டு, எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. 8, 9 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு 12 மாநகராட்சிகளுக்கும் மறுவரையறை தேவையா? இது உள்ளாட்சித் தேர்தலைத் தள்ளி வைப்பதற்காக செய்யப்பட்டிருக்கிற ஒரு சூழ்ச்சியே தவிர வேறொன்றும் இல்லை. எனவே, தனி அலுவலர்களின் பதவிக் கால நீட்டிப்பைத் தவிர்த்து, உடனடியாக உள்ளாட்சித் தேர்தலை நடத்தி, தமிழகத்தின் உள்ளாட்சிக்கு ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். தமிழகத்தில் இருக்கிற சுகாதார சூழ்நிலை, திடக் கழிவு மேலாண்மை, தொடர்ந்து வரும் டெங்கு, மலேரியா போன்ற பல்வேறு சூழல்களை உள்ளாட்சி நிருவாகிகள் இருந்தால்தான் முறைப்படுத்திட முடியும் என்பதை இங்குள்ள அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். எனவே, உடனடியாக உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கு நாம் ஒத்துழைக்க வேண்டும். இந்த அரசு அதற்காக உத்தரவிட வேண்டும். ஏற்கெனவே தேர்தல் ஆணையம்கூட, "அரசு ஒத்துழைக்காததால்தான் எங்களால் தேர்தலை நடத்த முடியவில்லை" என்று நீதிமன்றத்தில் வாக்குமூலம் தந்திருக்கிறது. எனவே, அந்த நிலையை அகற்றி, உடனடியாக உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்றும், தனி அலுவலரின் பதவி நீட்டிப்பை தவிர்த்திட வேண்டுமென்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2018) என்ற இந்தச் சட்டமுன்வடிவு தனி அலுவலர் பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடிய வகையில், 3–வது முறையாகக் கொண்டு வரப்பட்டுள்ள ஒரு சட்டத் திருத்தம் ஆகும். உள்ளாட்சித் தேர்தலை இரண்டு ஆண்டுகளாக நடத்தவில்லையே என்ற வருத்தம் மக்கள் மத்தியில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை நினைவூட்ட



2018 ஜனவரி 12] [திருமதி எஸ். விஜயதரணி]

விரும்புகிறேன். குறிப்பாக, எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தை 'ஒகி' புயல் தாக்கியபோது, உள்ளாட்சி உறுப்பினர்கள் இருந்திருப்பார்களேயானால், ஒவ்வொரு வார்டுகளிலும் அவர்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து பணிகளை செய்வதற்கு முன்வந்திருப்பார்கள் என்ற ஓர் உணர்வு மக்கள் மத்தியில் இருந்தது. உள்ளாட்சி உறுப்பினர்கள் இல்லாதபோது யார் field–களில் இறங்கி வேலை செய்தாலும், அது ஒரு கேள்வியாக மாறிவிடுகிறது. "எங்களால் சீரமைப்பு பணிகள் செய்ய முடியவில்லை" என்று ஏற்கெனவே இருந்த உறுப்பினர்கள் வருத்தத்தோடு கூறியதை இந்த நேரத்தில் நான் நினைவுக்கூர விரும்புகிறேன். ஆகையால், இதுபோன்ற பேரிடர்கள் வரும்போது மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஒரு சாதாரண பைப் உடைந்து போய்விட்டது என்றால்கூட, அதைச் சரி செய்வதற்கு BDO, SO ஆகியோரிடம் சென்று, மக்கள் போராடி, சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எடுத்துச் சொல்லி சரி செய்ய வேண்டியுள்ளது. வார்டு உறுப்பினர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாகக்கூட இருக்கலாம், அவர்கள் இன்னும் சுறுசுறுப்பாக நம்முடன் இணைந்து அந்தப் பணிகளைச் செய்வதற்கு எளிதாக இருக்கும். ஆகையால், உள்ளாட்சித் தேர்தலை நடத்தாமல் இருப்பதால், மத்திய அரசிடமிருந்து நம்முடைய மாநிலத்திற்கு வர வேண்டிய கிட்டத்தட்ட ரூபாய் 15 ஆயிரம் கோடி RDPR நிதி தடுக்கப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் நீங்கள் நினைவில் எடுத்துக்கொண்டு, உள்ளாட்சித் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும்; தனி அலுவலர் பதவிக் கால நீட்டிப்பு என்பது அவசியமற்றது; அதை இந்த முறை நீட்டிக்க வேண்டாம். உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கான நடைமுறைகளை பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தனி அலுவலர் பதவி நீட்டிப்பு மற்றும் உள்ளாட்சித் தேர்தலை ஒத்தி வைத்துக்கொண்டே போகும் இந்தத் தன்மையை காங்கிரஸ் கட்சியின் சார்பில் நாங்கள் எதிர்க்கிறோம். அதற்காக, இந்தச் சட்டமுன்வடிவிற்கு நாங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்தின்

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2018 ஜனவரி 12

அறிவுரையின்படி, பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தப்படும் வரை தனி அலுவலர்கள் அமர்த்தப்பட்டனர். அவர்களுடைய பதவிக் காலம் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதியுடன் முடிவுற்றது. உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் நிலுவையில் இருப்பதாலும், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கான தனி அலுவலர்களின் பதவிக் காலம் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதியுடன் முடிவுற்றதைக் கருத்திற்கொண்டும், நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களில் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும், அதன் பணிகளை மேற்கொள்வதற்கும் ஏதுவாக தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதி வரை மேலும் 6 மாதங்களுக்கு அல்லது உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்குப் பிறகு முதலாம் கூட்டம் நடைபெறும் வரை, இவற்றில் எது முந்தையதோ அதுவரையில் நீட்டிப்பதற்கு அரசை இயல்பிக்கும் வகையில் இச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் மூன்றாம் திருத்த அவசரச் சட்டம், தமிழ்நாடு அவசரச் சட்டம் 9/2017 மாண்புமிகு ஆளுநர் அவர்களால் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28 ஆம் நாளன்று பிறப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது. அப்போது சட்டமன்றம் கூட்டம் நடைபெறாததால், தற்போது இச்சட்டமுன்டிவு கொண்டுவரப்பட்டுள்ளது.

பிற்பகல் 2–40

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னை மேயராக இருந்தவர். மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்களும் இங்கே பேசியிருக்கிறார்கள். தேர்தலைப் பொறுத்த அளவிற்கு இந்த வழக்கே இல்லாமல் இருந்திருந்தால் 2016–லேயே உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் எல்லாம் முடிந்து எல்லோருமே பதவிக்கு வந்திருப்பார்கள். இந்த வழக்குதான் தேர்தல் நின்றதற்குக் காரணம். இதற்கு யார் காரணம் என்று சொல்லி பல முறை பேசியிருக்கிறோம். திரும்ப, திரும்ப வாதம் செய்திருக்கிறோம். முதலில் இந்த வழக்குத் தொடர்ந்தது யார்? இந்த வழக்கு எப்படி வந்தது? ஏன் தேர்தல் நின்றது? இதுதான் முதல் பாயின்ட். அதற்குப் பிறகு மறுவரையறை நடந்துகொண்டிருக்கிறது. தேர்தல் நடத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு



2018 ஜனவரி 12] [திரு. எஸ்.பி. வேலுமணி]

தயாராக இருக்கிறது. அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்தது நீங்கள்தான். அதன்படிதான் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, தேர்தல் நடத்துவதற்கு நாங்கள் தயாராகயிருக்கிறோம். கண்டிப்பாக, வெற்றிகரமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவில் தேர்தல் நடத்தும். அதில் எந்த மாற்றமும் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது மத்திய அரசிடமிருந்து நிதி வரவில்லை என்று சொன்னார்கள். பதினான்காவது நிதிக் குழு நிதிகூட மற்ற மாநிலங்களில் வாங்க முடியாமல் இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் தமிழ்நாட்டில் இந்த மாதிரி சூழ்நிலை வந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் எடுத்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அந்த நிதியைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள்.

சென்னையில் 2015–ல் வெள்ளம் வந்தது. அப்போது கவுன்சிலர் இருந்தபோது பொதுவாக என்ன சொன்னார்கள். கவுன்சிலர்கள் எல்லாம் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்று சொன்னார்கள். மாறி மாறி பேசுகின்றார்கள். அப்படியில்லை. ஒவ்வோர் இடத்திற்கும் தனி அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாநகராட்சி வரையறை பற்றிப் பேசினீர்கள். ஒவ்வொரு பக்கமும் ஒரு சூழ்நிலையிருக்கிறது. 3 விதமாக வரையறை அறிவித்திருக்கிறார்கள். அந்த மாதிரியான சூழ்நிலையிருக்கிறது. அதேபோல திருப்பூர் நகராட்சியாக இருந்து, மாநகராட்சியாகி மொத்தம் 27 வார்டுகள்தான் இருந்தன. இன்றைக்கு முறையாக 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள், 12,524 ஊராட்சிகள் எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரியான மறுவரையறை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக, வேகமாக தேர்தல் நடத்துவதற்கு முடுக்கிவிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு தேர்தல் ஆணையம் சிறப்பான முறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறது. எந்தக் கவலையும் வேண்டாம். வெற்றிகரமாக உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) சரி, அதில் ஏதாவது விளக்கம் இருந்தால் கேளுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் பேசியதற்குப் பிறகு, பதில் சொல்கின்ற நேரத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தவறான தகவலைத் திரும்ப, திரும்ப இந்த அவையிலே பதிய வைத்துக்கொண்டிருக்கிறார். அதற்குத் திரும்ப, திரும்ப நானும் இதே அவையிலே பல விளக்கங்களைத் தொடர்ந்து தந்து கொண்டிருக்கிறேன். உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாததற்கு ஏதோ தி.மு.க.–தான் காரணம் என்று (குறுக்கீடு) அப்படியானால் நீங்கள் என்றால் என்ன அர்த்தம் சொல்லுங்கள். எங்கள் உறுப்பினர் பேசியிருக்கிறார். பிறகு நீங்கள், நீங்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம். சொல்லுங்கள். தேர்தலை முறையாக நடத்த வேண்டுமென்று நாங்கள் நீதிமன்றத்தை நாடினோம். முறையாக நடத்துவதற்கு இந்த அரசு முன்வரவில்லை. முறையாக நடத்திட வேண்டுமென்ற அடிப்படையிலேதான் நீதிமன்றம் தடை உத்தரவு போட்டது. அதற்குப் பிறகு தேர்தல் ஆணையத்திற்குப் பல விதிமுறைகளையெல்லாம் வகுத்துக்கொடுத்து முறையாகத் தேர்தல் நடத்த வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறது. ஆனால், தேர்தல் ஆணையம் நீதிமன்றத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்று சொன்னால், அரசாங்கம் போதுமான ஒத்துழைப்பை எங்களுக்கு வழங்கவில்லை, அதனால்தான் முறையாக நடத்துவதற்கான வாய்ப்பு எங்களுக்கு ஏற்படவில்லை என்று அவர்களே அபிடவிட் தாக்கல் செய்திருக்கிறார்கள். ஆக, இந்த உண்மையையெல்லாம் மூடி மறைத்து ஏதோ நீங்கள்தான் இதற்குக் காரணம், நீங்கள்தான் இதற்குக் காரணம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது தவறானது என்பதை நான் இந்த அவையிலே உங்கள் முன்னால் எடுத்துவைக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தில் நீங்கள் வழக்கு தொடுத்தபோது ஆதி திராவிடர், மலைவாழ் மக்களுக்கான ஒதுக்கீடு குறைவாக இருக்கிறது என்று சொன்னீர்கள். ஆனால், கடந்த முறையைவிடக் கூடுதலாக இருக்கின்றது என்று எடுத்துச் சொல்லி உயர் நீதிமன்றம் ஒத்துக்கொண்டது. அந்த மாதிரி நிலையில் நீங்கள் வழக்கிற்குப் போனீர்கள். எல்லாமே முறைப்படிதான் நடந்தது. அரசியல் சூழ்நிலை காரணமாகத்தான் வழக்கிற்குப் போனீர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முழுமையாக எல்லா பக்கங்களிலும் வெற்றிபெறும். அந்த மாதிரி ஒரு சூழ்நிலையில் மீண்டும் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். அரசியல் சூழ்நிலையைத்தான் இதற்கு முன்பு பேசியிருக்கிறோம். அதற்குள்ளே போக வேண்டாமென்று நான் பேசினேன். எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதால் சொல்கிறேன். கண்டிப்பாக அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, சரியான முறையிலே, நேர்மையான முறையிலே தேர்தலை நடத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மறுவரையறை எல்லாம் சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. தேவையான கால அவகாசம் கொடுத்திருக்கிறோம். பொதுமக்கள், அரசியல் கட்சிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோருடன் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பான முறையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 15 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 15 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (எ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2018), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2018)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 11–1–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2018 ஜனவரி 12

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2018 ஜனவரி 12] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஏ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2018), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

***திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முதல்வர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு நேரடித் தேர்தல் என்ற அளவிலே உருவாக்கி, திரும்பவும் 2001 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றபோது அந்த ஐந்தாண்டுகளிலும் நேரடித் தேர்தல்களாக இருந்து, முடிவுபெறுகிற நேரத்தில், மறைமுகத் தேர்தலாக அதை மாற்றி, மீண்டும் இப்பொழுது பத்து

---

@ 11–1–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஆண்டுகளுக்குப் பிறகு நேரடித் தேர்தல் என்ற வகையிலே கொண்டுவந்திருக்கிறீர்கள். இந்தச் சட்டத்தை முழுமையாக நாங்கள் ஏற்கெனவே கேட்டிருக்கிறோம். நேரடித் தேர்தலாகத்தான் வேண்டுமென்றும், இதிலே பல தவறுகள் நடைபெறாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் இந்தச் சட்டத்தைக் கேட்டிருக்கிறோம். இதிலே குறிப்பாகப் பார்த்தால், மாநகராட்சிப் பகுதியிலே நேரடித் தேர்தல், பேரூராட்சியிலே நேரடித் தேர்தல், நகராட்சியிலே நேரடித் தேர்தல், ஆனால், ஒன்றியங்களிலே வருகின்றபோது நேரடித் தேர்தல் இல்லாமல் மறைமுக தேர்தல் என்ற அளவிலேதான் இன்றைக்கும் இருக்கிறது. நான் 1986 ஆம் ஆண்டு ஒன்றியத்திலே பொதுமக்களால்தான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். பஞ்சாயத்து ராஜ் சட்டம் வந்த பிறகுதான் 2 tier system என்பது 3 tier system ஆக மாறியது. ஊராட்சியிலே இருக்கிறவர்கள் ஊராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் நேரடியாக ஒன்றியத்திற்கும், ஒன்றியத்திலே பெருந்தலைவராக இருப்பவர் நேரடியாக மாவட்ட ஊராட்சிக்கும் வரும் அந்த நிலை இருக்குமானால், இன்னும் சிறப்பாக இருக்கும். மக்கள் நேரடியாக ஊராட்சித் தலைவரை ஒன்றியத்திலும், ஒன்றியத்திலே இருக்கிற ஒன்றியப் பெருந்தலைவர் நேரடியாக மாவட்ட ஆட்சியர் அலுவலர் கூட்டத்திலேயும் கலந்துகொள்ள இயலும். ஆனால், இன்றைக்கு 3 tier system என்று வருகின்றபோது ஐந்தாயிரம் மக்கட்தொகைக்கு ஒரு தேர்தல், ஐம்பதாயிரம் மக்கட்தொகைக்கு ஒரு தேர்தல் என்று ஐந்து கட்டங்களாக வருகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2 tier system ஆகக் கொண்டு வருவதற்கு முடியுமானால், அதைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டு அமைகிறேன்.

*பிற்பகல் 2—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2018) என்ற இந்தச் சட்டத்தின்மூலம் நேரடியாகத் தேர்தல் நடத்தக்கூடிய ஒரு நடைமுறையை பல ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இந்த அரசு எடுத்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. முன்னாள் பாரதப் பிரதமரும், எங்கள் தலைவருமாகிய திரு. இராஜீவ் காந்தி அவர்கள் இதுபோன்ற





ஒரு நடைமுறையைத்தான் பரிந்துரை செய்திருந்தார். பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை தலைவர் இராஜீவ் காந்தி அவர்கள் முதலில் கொண்டு வந்து கட்டாயத் தேர்தல் முறையை உருவாக்கி, நேரடித் தேர்தல்களுக்கான ஒரு சாத்தியக்கூறுகளை உருவாக்கினார்கள். Self governance என்ற ஒரு தீர்மானத்தை எடுத்து கீழ்வரை, கடைசி மனிதன் வரை அந்த அதிகாரம் சென்று சேர வேண்டும். இந்தியாவின் எந்தக் கோடியிலும் அதிகாரம் இல்லாத ஒரு மனிதன் இருக்கக் கூடாது என்பதற்காக இந்தச் சட்டத்தை அவர் கொண்டு வந்தார். அந்த அடிப்படையில் நேரடித் தேர்தல்தான் அதில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. தமிழ்நாட்டில் சில மாற்றங்கள் இடையே ஏற்பட்டாலும்கூட, தற்பொழுது மீண்டும் ஒரு மறுமலர்ச்சி ஏற்படக்கூடிய அளவிற்கு நேரடித் தேர்தலை இந்த அரசு முன் வைத்திருப்பதை நாங்கள் மனமார வரவேற்கிறோம். ஒன்றியங்களைப் பொறுத்தவரை அதுவும் தலைவர் இராஜீவ் காந்தி அவர்கள் காலத்தில் Chairman–க்கு மட்டும் அந்த particular category–ல் மறைமுகத் தேர்தல் அறிவுறுத்தப்பட்டது. ஆனால், மற்ற அனைத்து category–க்கும் நேரடித் தேர்தல்தான் இருந்தது. அதேபோன்ற ஒரு நடைமுறையைத்தான் நீங்கள் பின்பற்றுவீர்கள் என்று நான் கருதுகிறேன். அந்தவகையில், Chairman பதவிக்கு நேரடித் தேர்தல் அவசியமேற்படின் அதை மாற்றியமைப்பதற்குக்கூட நீங்கள் முயற்சி எடுக்கலாம். சில மாநிலங்களில் 3 tier system, 2 tier system என இரண்டு முறைகளை பின்பற்றினாலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஆரம்பத்திலிருந்து நாம் இந்த முறையைத்தான் follow செய்து கொண்டிருக்கிறோம். ஆகையால், என்னைப் பொறுத்தவரையில் இந்த நேரடித் தேர்தலுக்கான வாய்ப்பை இந்தச் சட்டம் உருவாக்கி இருக்கிறது. அதை காங்கிரஸ் கட்சியின் தரப்பில் மனமார வரவேற்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்களும் பேசுகிறீர்களா? இல்லை, சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய செய்திதான். பஞ்சாயத்து தலைவருக்கு நேரடித் தேர்தல், ஐந்தாயிரம் மக்கட்தொகைக்கு நேரடித் தேர்தல், ஐம்பதாயிரம் மக்கட்தொகைக்கும் நேரடித் தேர்தல், மாநகராட்சி, பேரூராட்சி எல்லாவற்றிற்கும் நேரடித் தேர்தல். ஒரேயொரு

[திரு. துரைமுருகன்] [2018 ஜனவரி 12

இடத்தில் இந்த யூனியனில் மட்டும் நெருக்கிவிட்டீர்கள். ஏனென்று தெரியவில்லை எனக்கு. (குறுக்கீடு) யூனியன், பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி இல்லை. மாவட்ட ஊராட்சித் தேர்தலை நீங்கள் ஏன் நடத்தக்கூடாது என்கிறேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களை விளக்கம் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி மேயர், நகராட்சிகள், பேரூராட்சிகள் அனைத்திற்குமே நேரடித் தேர்தலை வரவேற்றீர்கள். 1986–ல் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது அந்தமாதிரி இருந்தது. 1994–ல் பஞ்சாயத்து ராஜ் சட்டம் முன்னாள் பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களால் கொண்டு வரப்பட்டது. இப்போது அனைத்து மாநிலங்களிலும் அப்படித்தான் இருக்கிறது. யூனியனில் Chairman, அதேபோல் District Panchayat–ல் Chairman பதவி இருக்கிறது. மற்றது எல்லாம் நாம் மாற்றிக்கொள்ளலாம். அதாவது direct தேர்தலாக மாற்றிக்கொள்ளலாம். 1986–ல் Chairman பதவி நேரடித் தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அதற்குப் பிறகு 1994–ல் பஞ்சாயத்து ராஜ் சட்டம் திரு. இராஜீவ் காந்தி அவர்களால் கொண்டுவரப்பட்ட பின்னால், இந்த முறை இருக்கிறது. எல்லா இடங்களிலும் அப்படி இருக்கிறது. மொத்தமாக இந்தியா முழுவதும் இந்த முறை இருக்கிறது. அதுதான் நான் சொல்ல வருகிறேன். District Chairman, Union Chairman அந்த இரண்டு மட்டும் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



2018 ஜனவரி 12] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 28 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 28 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2–55

## (ஐ) தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2018), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. செங்குட்டுவன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2018) என்ற இந்தச் சட்டமுன்வடிவின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின்

@ 11–1–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





சார்பிலே சில கருத்துகளை நான் முன்வைக்க விரும்புகிறேன். 2011 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் வார்டுகள் வரையறுக்கப்படுவதாகச் சொல்லி, இன்றைக்கு அவை வரையறுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலே என்ன பிரச்சினை இருக்கிறது என்று சொன்னால், ஏற்கெனவே இருக்கக்கூடிய வார்டுகளின் எண்ணிக்கையை 2011 ஆம் ஆண்டைய மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி—நகராட்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் என்று சொன்னால் 5,000 மக்களுக்கு ஒரு கவுன்சிலர் என்ற அடிப்படையில் ஒரு வார்டு என்று சொன்னால், அந்த வார்டுக்குள்ளாக இருக்கக்கூடிய அந்த ஒன்றியத்தினுடைய ஒட்டுமொத்த மக்கட்தொகையை, ஒட்டுமொத்தமாக 20 வார்டுகள் என்று சொன்னால், 20 வார்டுகளாக வகுத்து, அவற்றில் வரக்கூடிய மக்கட்தொகையைக் கணக்கில்கொண்டுதான் நீங்கள் வார்டுகளைப் பிரித்திருக்கிறீர்கள். அதற்குமேலே (+) or (–) 10% வரலாம் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.

இதில் என்னென்ன குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொன்னால், உதாரணத்திற்கு, இந்த வார்டு வரையறை செய்யும்போது, அதிகாரிகள் மட்டும்தான் அந்தப் பணியைச் செய்திருக்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் யாரும் செல்லவில்லை. அந்த வார்டு அமைந்துள்ள பகுதி குறித்த அனுபவம் எந்த அளவுக்கு அதிகாரிகளுக்கு இருக்குமென்று உங்களுக்கே தெரியும். ஒப்புக்காக எங்களையெல்லாம் கருத்து கேட்க வேண்டுமென்ற முறையில் கருத்து கேட்டார்கள். இதில் என்ன குளறுபடி நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், நீங்கள் zigzag என்ற ஒரு முறையை வைத்ததன் அடிப்படையில் ஏற்கெனவே ஒன்றாவது வார்டில் இருந்த கிராம ஊராட்சிகள் இப்போது ஏழாவது வார்டுக்கு போயிருக்கின்றன. ஏழாவது வார்டில் இருந்த கிராம ஊராட்சிகள் 12–வது வார்டுக்கு போயிருக்கின்றன. ஆகவே, இதில் மிகப் பெரிய குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆக, இதுவொரு மிகப் பெரிய குழப்பத்திற்கு வழிகோலியிருக்கிறது. இது ஒன்று. இரண்டாவதாக, தூத்துக்குடி மாநகராட்சியில் இருக்கக்கூடிய மாநகராட்சி வார்டை ஒட்டப்பிடாரம் தொகுதியிலிருக்கக்கூடிய ஒன்றியத்தில் கொண்டு ரூபாய் சேர்த்திருக்கிறார்கள். அதைப்போல, கொடைக்கானலில் இருக்கக்கூடிய 50,000 மக்களுக்கான கவுன்சிலர் இருக்கக்கூடிய அந்த ஊராட்சிகள் ஆத்தூர் தொகுதியில் கொண்டு போய் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், கிருஷ்ணகிரி நகராட்சியிலோ அல்லது ஊராட்சியிலோ இருக்கக்கூடிய

[திரு. டி. செங்குட்டுவன்] [2018 ஜனவரி 12

ஊராட்சிகளை 50,000 மக்களுக்கான கவுன்சிலர் இருக்கக்கூடிய, 5,000 மக்களுக்கான கவுன்சிலர் இருக்கக்கூடிய பகுதியில் 25 கி.மீ. தொலைவில் கொண்டு சென்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இதில் மிகப் பெரிய குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் குழப்பத்தைத் தீர்க்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.

பஞ்சாயத்து ராஜ் சட்டப்பட்டி 5,000 மக்களுக்கான கவுன்சிலர் இருக்கக்கூடிய ஊராட்சிகளுள் இருக்கக்கூடிய வார்டுகள் பல்வேறு வார்டுகளில் கொண்டு போய் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஓர் ஊராட்சியில் இருக்கக்கூடிய வார்டுகளைப் பிரித்து பல்வேறு வார்டுகளில்கொண்டுபோய்சேர்க்கப்பட்டிருக்கின்றது.ஏற்கெனவே இருக்கக்கூடிய வார்டுகளுக்கும், ஊராட்சிகளுக்கும் பஞ்சாயத்து ராஜ் சட்டப்படிதான் நிதி ஒதுக்கப்படுகின்றது. பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி நிதி ஒதுக்கப்படுகின்றபோது, வார்டுகளைப் பிரித்து பல்வேறு ஊராட்சிகளுடன் சேர்ப்பதால், அந்த ஊராட்சிக்கோ அல்லது ஒன்றியத்திற்கோ ஒதுக்கப்படும் நிதிகளில் பல்வேறு குறைபாடுகள், குழப்பங்கள், பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, தற்போது வரையறை செய்யப்படும் முறையை மாற்றி, (+) or (–) 10% என்று சொல்லக்கூடியதை 25% என்ற அளவிலே வைத்தால் அந்தந்த ஊராட்சிகளில் இருக்கக்கூடிய வார்டுகள், அந்தந்த ஊராட்சிகளிலேயே தொடர்ந்து இருக்கும். அந்தந்த ஒன்றியக் கவுன்சிலில் இருக்கக்கூடிய ஊராட்சிகள் அந்தந்த ஒன்றியக் கவுன்சிலிலேயே தொடர்ந்து இருக்கும்.

பிற்பகல் 3–00

50000 மக்கட்தொகைக்கான வார்டுகள் இருக்கக்கூடிய அந்த ஊராட்சிகள் அப்படியே இருக்கும். அப்படி இல்லையென்று சொன்னால் இதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படும். குறிப்பாகச் சொல்லப்போனால், நகராட்சிகளில் 1–வது வார்டில் இருக்கும் 4 தெருக்களைக் கொண்டுபோய்.. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. செங்குட்டுவன், சுருக்கமாக முடியுங்கள். இன்னும் நிறைய சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. டி. செங்குட்டுவன்:** 1-வது வார்டில் இருக்கும் 2 தெருக்களைக் கொண்டுபோய், 10-வது வார்டில் சேர்க்கிறீர்கள். 10-வது வார்டில் இருக்கக்கூடிய 4 தெருக்களைக் கொண்டுபோய் 15-வது வார்டில் சேர்க்கிறீர்கள். காவேரிப்பட்டினம் பேரூராட்சியில் ஒரேயொரு சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் compact ஆக இருந்தார்கள்.



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்குட்டுவன், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** இப்போது அந்தச் சமுதாயத்தினரைப் பிரித்து வேறிடத்தில் சேர்த்திருக்கிறீர்கள். உண்மையிலேயே உள்ளாட்சித் தேர்தலை நடத்தி மக்கள் பிரதிநிதிகளை அந்த மன்றத்திலே கொண்டு வந்து அமர வைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு நீங்கள் செய்வதாக இருந்தால், நாங்கள் கொடுக்கின்ற திருத்தங்களை நீங்கள் ஏற்றுக்கொண்டு செயல்படுத்த வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2018).

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை குறிப்பாக, மறுவரையறை என்பதே தேவையில்லை என்று நான் நினைக்கிறேன். இந்த மறுவரையறை செய்யாமலேயே இந்தத் தேர்தலை நடத்தியிருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். சீக்கிரமாகவாவது தேர்தல் நடந்திருக்கும். அந்த வகையில் இப்போது மறுவரையறை செய்வதால் குழப்பங்கள் வந்துவிட்டன. இந்தக் குழப்பங்களால் தனி அலுவலரின் பதவிக் காலத்தை இன்னும் இரண்டு முறை நீட்டிக்க வேண்டியிருக்கும். அப்படியே நீட்டித்துக் கொண்டே போனால், இந்த 5 வருடங்களில் தேர்தல் நடக்கவே நடக்காது. ஆகையால், மறுவரையறை செய்வதால் ஏற்பட்டுள்ள குழப்பத்தைப் போக்கவே இன்னும் 4 முறை தனி அலுவலர் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டிய நிலை வந்துவிடப் போகிறது. இது எங்கு போய் முடியும் என்று நினைத்து எங்களுக்கெல்லாம் வருத்தமாக இருக்கிறது. ஆகையால், மறுவரையறையே செய்ய வேண்டாம் என்று நான் கருதுகிறேன். அந்த அளவில் மறுவரையறைச் சட்டத்தையே கைவிட்டுவிட்டு நீங்கள் அடுத்த அலுவல்களைக் கவனிக்கலாம். இப்போது இருக்கின்ற நிலையிலேயே தேர்தலை நடத்தி, உள்ளாட்சிப் பிரதிநிதிகளைக் கொண்டு உள்ளாட்சிகளுக்கான நிதிகளைப் பெற்று நல்லபடியாக வழிநடத்திச் செல்லலாம் என்பது என்னுடைய கருத்து. அந்த வகையில் மறுவரையறையைச் சரியாகச்

[திருமதி எஸ். விஜயதரணி] [*2018 ஜனவரி 12*

செய்ய முடியுமா என்று மீண்டும் ஒருமுறை ஆளுங்கட்சித் தரப்பிலே ஆலோசித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மறுவரையறை செய்தலில் மிகுதியான குழப்பங்கள் இருந்தால் அது சாதாரண விஷயம் இல்லை. என்னுடைய தொகுதியில், ஒரு ஊராட்சியிலிருந்து இன்னோர் ஊராட்சிக்கே மக்கள் சென்று விட்டனர். மாறி, மாறி சென்று கொண்டிருக்கிறார்கள். ஊராட்சிலிருந்து பேரூராட்சி வார்டுக்கு சிலர் வந்துவிட்டனர். இவ்வாறெல்லாம் குழப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. என் தொகுதியை விட்டு வெளியே சென்றுவிடுவார்களோ என்ற பயமே எனக்கு வந்துவிட்டது. என்னுடைய மாவட்டத்தில் எந்தப் பகுதியாக இருந்தாலும் எனக்குப் பிரச்சினையில்லை. நான் ஓட்டு வாங்கிவிடுவேன். என்னை ஒன்றும் சாய்க்க முடியாது. அந்த வகையில் எனக்குப் பிரச்சினை இல்லை. ஆனால், எனது வருத்தம் என்னவென்றால், வார்டுகள் மாறிக்கொண்டே இருப்பதால், மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்படுகிறது. அவர்கள் விலாசத்தில்கூட குழப்பம் ஏற்படுகிறது. வன்னியூர் ஊராட்சியில், பக்கத்து ஊராட்சியின் பெயர் போட்டு விலாசத்தைச் சொல்லும் நிலை ஏற்படுகிறது. இவ்வாறெல்லாம் குழப்பங்கள் ஏற்படுவதால், இந்தக் குழப்பம் மேலும் தீவிரமடைந்து மறுவரையறையே ஒரு தவறான விஷயமாக மாறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஆகையால், இந்த மறுவரையறைச் சட்டம் வேண்டாம் என்பது என்னுடைய கருத்து. அதையும் மீறி இச்சட்டத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் மறுவரையறையை சிறப்பாக, சீராக, துல்லியமாக இப்போது இருக்கக்கூடிய வகையிலேயே அமைத்துக் கொடுத்தாலே போதும் என்று நான் நினைக்கிறேன். அந்த வகையில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, போதும். நல்ல கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அதுகுறித்துப் பரிசீலிப்பார். உட்காருங்கள். (குறுக்கீடு) கருத்துதான், பரவாயில்லை. உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே மக்கட்தொகையில் (+) or (–) 10% அதிகம் அல்லது குறைவு இருந்தாலும்கூட சில இடங்களில் குறிப்பாக, சென்னையில் சிறப்பு நேர்வாக சிலவற்றைக்



*2018 ஜனவரி 12*] [திரு. எஸ்.பி. வேலுமணி]

கடைப்பிடிக்கிறார்கள். அதேபோல, சில ஊராட்சிகளில் ஒரு வார்டில் 3,000 ஓட்டுகள் இருக்கின்றன. பக்கத்து வார்டில் 15,000 ஓட்டுகள் இருக்கின்றன. இதற்கு முன்பு 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது மறுவரையறை செய்து ஒரு முறை மாற்றி அமைத்தார்கள். ஒரு வார்டில் 4000 மக்கட்தொகை இருந்து, மற்றொரு வார்டில் 15000 மக்கட்தொகை இருந்தால் அதை மாறுதல் செய்யத்தான் வேண்டும். மறுவரையறை செய்ய வேண்டிய நிலை வரத்தான் செய்யும். அதில் மாற்றுக் கருத்து இல்லை. நான் விளக்கமாகவே சொல்கிறேன்.

2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடைபெறுவதாக இருந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தலை 1991 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் வரும் உள்ளாட்சி வார்டுகளின் அடிப்படையில் நடத்துவதற்காக 2006 மற்றும் 2011–ல் உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டதைப்போன்று 2016 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. உள்ளாட்சித் தொகுதிகளை மறுவரையறை செய்து, அதன் பின்னர் தேர்தல் நடத்தக்கோரி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் 2016 ஜூன் 1–ல் வழக்கு தொடுக்கப்பட்டது. அவ்வழக்கு 21–9–2016–ல் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்தத் தீர்ப்பினை எதிர்த்து தி.மு.க. சார்பிலும், வேறு சிலரும் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்திற்கு சென்றிருக்கின்றனர். மேல் முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நாளதுவரை நிலுவையில் உள்ளது.

*பிற்பகல் 3–05*

உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவிக் காலம் 2016 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதி முடிவடைந்துவிட்டது. சென்னை உயர் நீதிமன்ற நீதிப் பேராணை மனு எண் 33984/2016–ல் வழங்கிய ஆணையின் அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்களில் அதிகாரங்களைச் செலுத்துவதற்கு மற்றும் அதன் பணிகளை மேற்கொள்வதற்கு தனி அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டனர். உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வார்டு மறுவரையறை செய்தல் குறித்த மேல் முறையீட்டு வழக்கினைத் தவிர, பொதுமக்களிடமிருந்து உள்ளாட்சி வார்டுகளைச் சீரமைக்க வேண்டுமென பல்வேறு கோரிக்கை மனுக்கள் அரசாங்கத்திலும், மாநில தேர்தல் ஆணையத்திலும் பெறப்பட்டன.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2018 ஜனவரி 12

உள்ளாட்சி வார்டுகளை 2011 ஆம் ஆண்டு மக்கட்தொகை அடிப்படையில் சீரமைப்பதற்கு எல்லை வரையறை ஆணையம் Delimitation Commission அமைப்பதற்குப் புதிய சட்டம் இயற்றப்பட்டு அதன்படி 21–7–2017 அன்று எல்லை வரையறை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. எல்லை வரையறை ஆணையமானது தனது பணிகளை 25–7–2017 முதல் தொடங்கியது. உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகள் சீரமைக்கப்பட்டு 27–12–2017 அன்று வரைவு எல்லை வரையறை செய்யப்பட்ட வார்டுகளின் விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வரைவு வரையறை கருத்துருவின்மீது பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் தங்கள் கருத்துகள் மற்றும் ஆட்சேபணைகளை 2–1–2018 அன்று வரை தெரிவிக்க காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதன்பின் பொதுமக்கள், சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளின் வேண்டுகோளை ஏற்று அந்த கால அவகாசம் 5–1–2018 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. பெயரளவில்தான் கேட்டார்கள் என்று சொன்னீர்கள். பின்னர், எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளினை ஏற்று, மீண்டும் கால அவகாசம் 12–1–2018 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. கோரிக்கைகளை முடிவு செய்து (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**திரு. துரைமுருகன்:** நாங்கள் அங்கு சென்று மாற்றிக் கொடுத்து வந்திருக்கின்றோம். இப்போது நீங்கள் இன்றைக்குதான் கடைசி நாள் என்கின்றீர்கள். நாங்களெல்லாம் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். என்ன செய்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை? ஆகையினால், நாங்கள் பொங்கல் முடிந்த பிறகு சென்று பார்ப்பதுமாதிரி 20 ஆம் தேதி வரை கொடுங்கள். நாங்கள் சென்று பார்க்கிறோம். ஒன்றும் அவசரம் இல்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், போதும் விடுங்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லி முடிக்கட்டும் விடுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சியில் பேசியாகிவிட்டது, உட்காருங்கள் நீங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 ஜனவரி 12] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் பதில் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, எனக்கு நேரமில்லை. (குறுக்கீடு) இல்லை, எனக்கு நேரமில்லை. நீங்கள் ஆளாளுக்கு எழுந்து பேசிக் கொண்டிருந்தால் நான் எப்போது சபையை முடிப்பது? (குறுக்கீடு) நீங்கள்தான் உங்கள் கட்சியின் சார்பாகச் சொல்கிறீர்கள் அல்லவா? ஒவ்வொரு கட்சியிலும் 10 பேர் பேசினால் நான் எப்படிச் சபையை நடத்துவது? என்ன ஒரு மரபைக்கூட பின்பற்றமாட்டேன் என்கிறீர்களே? மிகவும் வருத்தமாக இருக்கிறது திரு. இராமசாமி. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது நீங்கள் குறுக்கே எழுந்து பேசினால் எப்படி? மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மூத்த உறுப்பினர், எல்லாம் அறிந்தவர். அவர் ** என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனை நீக்கிவிடலாம் விடுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** 27–12–2017 அன்றுதான் விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல 2–1–2018 வரை கால அவகாசம் வழங்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் முதலில் 5–1–2018 வரையிலும், பின்னர் 12–1–2018 வரையிலும் காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு) அதற்குப் பிறகு நான் வருகிறேன். 12–1–2018 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. கோரிக்கைகளின் அடிப்படையில் வார்டுகள் சீரமைக்கப்பட்டு 31–1–2018–க்குள் வரையறை ஆணையமானது தனது அறிக்கையினை அரசுக்கு சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வார்டுகள் எல்லை வரையறை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளில் 16–8–2017 அன்று நடைபெற்ற விசாரணையின்போது, 2011 ஆம் ஆண்டு மக்கட்தொகையின் அடிப்படையில் வார்டு வரையறை செய்ய தமிழ்நாடு வரையறை ஆணையச் சட்டம் மற்றும் ஏற்கெனவே 1991 ஆம் ஆண்டு மக்கட்தொகையின் அடிப்படையிலுள்ள வார்டுகளின் அடிப்படையில் தேர்தல் நடத்தும் சட்டப் பிரிவு ஆகிய இரண்டும் நடைமுறையில் உள்ள நிலையில், எதன் அடிப்படையில் தேர்தல் நடத்த அரசு உத்தேசித்துள்ளது என உச்ச நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. அதேபோல, கால அவகாசம் குறித்து கேட்டீர்கள். 32 மாவட்டங்களையும் 7

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2018 ஜனவரி 12

மண்டலங்களாகப் பிரித்து மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் ஆய்வுக் கூட்டங்களை நடத்துவார்கள். அதில் திரும்பவும் கருத்து கேட்கப்படும். தேர்தல் ஆணையரே வந்து நடத்துவார்.

பிற்பகல் 3—10

சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையிலிருப்பதால் இதுநாள் வரை உள்ளாட்சி மன்றங்களுக்கான சாதாரண தேர்தல்களை நடத்த இயலவில்லை. மேலும், இந்திய அரசமைப்புச் சட்ட உறுப்பு 243—C உடன் இணைந்த உறுப்புகள் 243—F, 243—Q மற்றும் 243—P—ன்படி மக்கட்தொகை விவரத்தைக் கண்டறிந்து வெளியிடப்பட்டுள்ள கடைசி முறை கணக்கெடுப்பின்படி, மக்கட்தொகை அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டம் பலன் அளிக்கும் வகையில் தமிழ்நாடு வரையறை ஆணையச் சட்டம், 2017—ன்படி உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல்களை நடத்துவதற்கும், தமிழ்நாடு சட்டம் 23/2017—ன்கீழ் அமைக்கப்பட்ட வார்டு எல்லை வரையறை செய்தல் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சமீபத்திய மக்கட்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலான வார்டுகளின் அடிப்படையில் வரையறை செய்வதற்கும் ஏதுவாக 1991 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் இருந்துவரும் உள்ளாட்சி வார்டுகளின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என 2006—2011 மற்றும் 2011—2016 ஆம் வருடங்களில் உள்ளாட்சிச் சட்டங்களில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களை இரத்து செய்யலாமென்று இவ்வரசு முடிவெடுத்தது. அப்போது மாநிலத்தில் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறாததால் மேற்சொன்ன முடிவுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பிப்பது தேவையானதாயிற்று. அதன்படி 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்கள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2017) ஆளுநரால் 2017 ஆண்டு செப்டம்பர் 3 அன்று பிறப்பிக்கப்பட்டு, அது 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் 3 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது. இந்த அவசரச் சட்டத்தினை இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் வைத்து சட்டமாக



2018 ஜனவரி 12] [திரு. எஸ்.பி. வேலுமணி]

பிறப்பிக்கப்பட முடிவு செய்யப்பட்டது. ஆகவே, இது சிறப்பான முறையில் இருக்கிறது. இதற்குப் பின்னால் 32 மாவட்டங்களை 7 மண்டலமாகப் பிரித்து தமிழ்நாடு தேர்தல் ஆணையமும் கருத்துக் கேட்கும். அதற்குப் பிறகுதான் முடிவு செய்யப்படும். திரும்பவும் கருத்துகள் கேட்கிற வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஒ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2018), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





"*2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2018)*@ *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி, சொல்லுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 69 பஞ்சாயத்துகள் உள்ள ஒன்றியங்கள் இருக்கின்றன. எனது தொகுதியான திருவண்ணாமலைக்கு அருகில் வேங்கிக்கால் ஒன்றியத்தில் 35,000 பேர் வசிக்கிறார்கள். ஆட்சித் தலைவர் அலுவலகம் அங்கு இருக்கிறது. அதை 3 கவுன்சிலராகப் பிரிக்கிறார்கள். அது நகராட்சியாகவோ அல்லது பேரூராட்சியாகவோ மாற்றப்பட வேண்டும். அதேபோல, இன்றைக்கு ஆதார் அட்டை கொடுக்கப்பட்ட அந்த வார்டுகள் எல்லாம் மாறக்கூடிய நிலை இருக்கிறது. இதையெல்லாம் இந்த மறுவரையறையிலே கவனத்திலேகொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், சட்டமன்றத் தொகுதியைப் பிரிக்கும்போது, டெல்லியிலே எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.–கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு எல்லா மாவட்டங்களிலும் கருத்துகள் கேட்கப்பட்டு, அதனடிப்படையில்தான் சட்டமன்றத் தொகுதி பிரிக்கப்பட்டது. ஆகவே, இந்தப் பணியிலும் எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.–கள் கொண்ட குழு அமைத்து அதைச் சிறப்பாகச் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்ணல் காந்தியடிகள் சொன்னார்கள், 'கிராம ராஜ்யம்தான் இராம ராஜ்யம்' என்று. கிராமங்களிலே இன்றைக்கு மின் விளக்கு, குடிதண்ணீர் வசதி கிடைப்பதெல்லாம் மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே, உள்ளாட்சித் தேர்தல் மிக அத்தியாவசியமான ஒன்று என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த நீடிப்பை நாங்கள் கடுமையாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி விஜயதரணி, சொல்லுங்கள். திரும்பவும் அதையேதான் சொல்லப்போகிறீர்கள். சொல்லுங்கள்.

---

*@ 11–1–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

**திருமதி எஸ். விஜயதரணி:** இல்லை, திரும்ப அப்படி இல்லை. கொஞ்சம் வித்தியாசமாகச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2018). ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் (குறுக்கீடு) சட்டத்தை முதலில் சரியாகச் சொல்ல வேண்டும். அதற்குப் பிறகுதான் அதுபற்றிப் பேச வேண்டும். அப்படியே படிக்கிறேன் என்று சொல்லாதீர்கள். நான் பேசுவதைக் கவனியுங்கள். (குறுக்கீடு) சகோதரர், இப்படி comment அடிக்கிறீர்கள். அதாவது இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை தனி அலுவலர் பதவிக் காலத்தை நீட்டிப்பு (குறுக்கீடு) நான் நன்றாகப் படித்துக் கொண்டு வருகிறவள். Comment அடிக்காதீர்கள்.

பிற்பகல் 3–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இங்கே பாருங்கள். (குறுக்கீடு) சற்று பொறுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** எனக்கு சற்று வருத்தமாக இருக்கிறது. வேறு ஒன்றும் இல்லை. யாராக இருந்தால் என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அவர்களுக்கு சட்டமுன்வடிவின் நகல்கள் அனுப்பப்பட்டால், அதனைப் படித்துவிட்டுத்தான் அவைக்கு வருவார்கள். மற்ற உறுப்பினர்களைப் பார்த்து அவ்வாறெல்லாம் சொல்லாதீர்கள். சரி, பேசுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** என்னைப் பார்த்து comment அடித்தால், யாராக இருந்தாலும் எனக்கு வருத்தமாக இருக்கிறது. அந்த இடத்தில், நான் அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று பார்க்கமாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் உங்களைச் சொல்லவில்லை. நீங்கள் பேசுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** நான் அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று பார்க்கமாட்டேன். அந்த இடத்தில் யாராக இருந்தாலும், நான் கண்டித்து விடுவேன். (குறுக்கீடு) சகோதரர்கள்தான், அன்பாகக் கண்டிக்கலாம். தவறு இல்லை. ஊராட்சிகளைப் பொறுத்தவரையில், இந்தச் சட்டமுன்வடிவு





தனி அலுவலர் பதவிக் காலம் நீட்டிப்பு சம்பந்தமாக இருந்தாலும்கூட, இதில் குறிப்பாகப் பார்த்தீர்களென்றால், ஊராட்சிகள் பிரியும்போது, ஒவ்வொரு ஊராட்சியிலும் அஞ்சல் முகவரி மாற்றம், ஆதார் பிரச்சினை போன்ற பிரச்சினைகள் வருகின்றன. அண்ணன் திரு. பிச்சாண்டி அவர்கள் அந்தப் பிரச்சினைப் பற்றி சொன்னார்கள். ஆனால் ஒன்றியம் என்று வரும்போது, கவுன்சிலர்கள் பிரச்சினைத் தீவிரமாக இருக்கிறது. கவுன்சிலர்களைத் தீர்மானிக்கக்கூடிய இடத்தில், மறுவரையறை செய்யப்பட்ட பிறகு, distance மிகவும் அதிகமாகப் போகிறது. பிரச்சாரம் என்பது மிகவும் impracticable ஆகிறது. இன்றைக்கு விளவங்கோடு தொகுதியில் பிரச்சாரம் செய்யவேண்டிய நான், நாகர்கோவில் தொகுதிவரைக்கும் போய்விட்டு வரவேண்டும் என்றால் அது மிகவும் சிரமம். அந்தச் சட்டமன்றத் தொகுதியில் இந்த மாதிரியொரு mindset–ல் பிரச்சாரம் செய்ய வேண்டும். மேலும், ஊராட்சிகளில், ஊராட்சி ஒன்றியங்களில் இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆகையால், அதுகுறித்து கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். கவுன்சிலர்கள், ஊராட்சி பிரதிநிதிகள், Ward Members என அனைவரும் சேர்ந்துதான் ஒவ்வொரு கட்சியிலும் பிரச்சாரம் செய்வோம். அப்படியிருக்கும்போது, 25 கிலோ மீட்டர் தள்ளி council–ன் எல்லையை நீட்டித்துக்கொண்டே போகும், மறுவரையறை என்பது தவறான ஒன்று. ஆகையால் இந்த மாதிரி மறுவரையறையை அரசு செய்துவிட்டு ஊராட்சிகளில் நாம் elections நடத்தும்போது, கடுமையான சிரமத்திற்கு ஆளாகி, பேரூராட்சிகள், நகராட்சிகளைத் தாண்டி சென்று நாம் பிரச்சாரம் செய்யவேண்டியதாக இருக்கிறது. ஆகையால், இதுபோன்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். தீர்த்து வைக்க முடிந்தால், மறுவரையறை செய்யுங்கள். இல்லையென்றால், மறுவரையறையையே செய்யாதீர்கள். மீண்டும் அதைத்தான் நான் சொல்கிறேன். அந்த வகையில் மறுவரையறை இல்லாமலேயே உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்த வேண்டும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில் இன்னும் சில கூறுகள் இருக்கின்றன. ஆனால், தாங்கள் தற்போது எனக்குப் பேச மேலும் நேரம் தரமாட்டீர்கள். எனவே, நான் அவற்றை எழுத்துப்பூர்வமாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கடிதத்தைக் கொடுத்துவிடுகிறேன். மற்ற

[திருமதி எஸ். விஜயதரணி] [*2018 ஜனவரி 12*

details–களையெல்லாம் அரசு கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். மறுவரையறைச் சட்டமுன்வடிவு உட்பட, இந்தச் சட்டமுன்வடிவை முடிந்தால் சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட concerned Select Committee–க்கு ஆய்வுக்கு அனுப்பி அரசு நிறைவேற்ற முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி சட்டமுன்வடிவுக்கு சொன்ன பதிலைத்தான் ஊராட்சி சட்டமுன்வடிவுக்கும் நான் சொல்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ஒரு பஞ்சாயத்தைத் தாண்டி, ஒரு பேரூராட்சியைத் தாண்டிச் சென்று ஓட்டு கேட்பது மாதிரி சொல்கிறார். இப்பொழுது இருக்கிற சூழ்நிலையைப் பார்த்தீர்களென்றால், 2011–ல் சட்டமன்றத் தொகுதிகளைப் பிரித்தபோதுகூட கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி, என்னுடைய தொண்டாமுத்தூர் தொகுதியின் அருகில் இருக்கிறது. அங்குள்ள கிட்டத்தட்ட மூன்று ஊராட்சிகளுக்கு மட்டும் என்று பார்த்தால், கிட்டத்தட்ட நிறைய தூரம் இருக்கிறது. Map–ஐ அடிப்படையாக வைத்து தொகுதியைப் பிரித்திருக்கிறார்கள். தொகுதியின் எல்லை மலைகளிலெல்லாம் வருகிறது. ஆனால் road என்று வரும்போது, பிரிந்துதான் வரும். இதற்கு முன்பு, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளையும் அப்பொழுது நாம் நீட்டித்திருக்கிறோம். தற்போது, அதைத்தான் மறுவரையறை செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் ஓர் இடத்திற்குச் சென்றார்களென்றால், அந்த வார்டுக்கு, அந்த ஊராட்சிக்கு என்று அப்படி போய்தான் ஓட்டு கேட்கவேண்டிய சூழ்நிலை இருக்கும். அதை அப்படியே மறுவரையறை செய்கிறோம். இருக்கிற சூழ்நிலையில் ஒருசில இடங்களில் அவ்வாறு அமையும். பெரும்பாலும் அவ்வாறு இல்லாமல் மறுவரையறை செய்யப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இத்தகைய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில் ஊராட்சி அமைப்பின் தனி அலுவலர் பதவிக் காலம் நீட்டிப்பு சம்பந்தப்பட்டது மட்டும்தான். எனவே, இச்சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.



*2018 ஜனவரி 12*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 3 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 3 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

[2018 ஜனவரி 12

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–20

## (ஓ) தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2018), மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 12–1–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 35 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 35 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. எம்.சி. சம்பத்] [2018 ஜனவரி 12

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஔ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2018), மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 11–1–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2–ல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2018 ஜனவரி 12

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அ,அ) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2018), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 10–1–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2–ல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்] [2018 ஜனவரி 12

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–25

## (அ.ஆ) தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2018), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 10–1–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2018 ஜனவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2–ல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2018 ஜனவரி 12]

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு அரசு கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சியின் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும்



2018 ஜனவரி 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

புத்தாண்டு வாழ்த்துகள் மற்றும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சட்டமன்ற உறுப்பினருக்கும், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் முதலமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்கள் சிகிச்சை பெற்றுவருகிறார்கள். அவர்கள் இந்த மாமன்றத்தின் உறுப்பினராகவும் இருக்கிறார்கள். அவர்கள் பூரண குணமடைந்து வருகின்ற காலங்களில் இந்தச் சட்டப் பேரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்ற என்னுடைய அவாவினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25 (1)—ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தெரிவித்ததுபோல், இந்த ஐந்து நாட்களும் இந்தச் சபையை நல்ல முறையில் நடத்தி பல்வேறு நிகழ்வுகளை விவாதிப்பதற்கு, பல தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்புக் கொடுத்த அனைத்து உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் மற்றும் கொறடாக்கள் என அனைவருக்கும் என்னுடைய நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன். நான் என்னுடைய பொங்கல் வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவருக்கும் தெரிவித்து, என்னுடைய நன்றியோடு பேரவை

[பேரவைத் தலைவர்] [2018 ஜனவரி 12

மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது என்று கூறி, அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 3–29 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.*

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*16. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*17. 1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் நலச் சட்டத்தை செயல்படுத்துவதில் நிகழ்நிலை குறித்த 2012–2013 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் (சமவாய்ப்பு, உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1996) 65(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*18. 1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் நலச் சட்டத்தை செயல்படுத்துவதில் நிகழ்நிலை குறித்த 2013–2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் (சமவாய்ப்பு, உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1996) 65(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*19. 1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் நலச் சட்டத்தை செயல்படுத்துவதில் நிகழ்நிலை குறித்த 2014–2015 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் (சமவாய்ப்பு, உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1996) 65(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*20. 1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் நலச் சட்டத்தை செயல்படுத்துவதில் நிகழ்நிலை குறித்த 2015–2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் (சமவாய்ப்பு,*



2018 ஜனவரி 12]

*உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1996) 65(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*21. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*22. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் முப்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*23. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 323(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*24. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*25. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் ஐம்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*13. 2017–2018 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

---